Ilampirai

ரு ரூபா

# இளம்பிறை

மீலாத் மலர் * ஜூன் 1969



*Quality . . . .*

## Our Watchword

*It ensures that every Cup of Darleys Golden Blend Tea is as good as the one previous. Make sure that your next cup is made with Darleys Golden Blend Tea.*

*You are sure to notice the difference*

# DARLEYS GOLDEN BLEND TEA

MEMBER OF THE DARLEYS GROUP

Darleys

# DARLEYS

482 1/A, DARLEY ROAD, COLOMBO

பி. ந. ... 24

# இளம்பிறை

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

## ஐந்தாம் ஆண்டு மலர்

— 1969, மீலாத் மலரும் இணைந்தது —


நிர்வாக ஆசிரியர்:
எம். ஏ. ரஹ்மான்

★

திங்கள் வெளியீடு

★

அலுவலகம்:
இளம்பிறை,
231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13
இலங்கை.
தந்தி: அரசு

★

Office:
**Ilampirai,**
231, Wolfendhal Street,
Colombo-13 (Ceylon)
Cable: **ARASU**



இளம்பிறையில் வெளிவருங் கதைகளிலுள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. கட்டுரைகளில் வெளிவருங் கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.


உள்ளே....


மஹாகவி
பத்து இதழ்கள் 9

அட்டாளைச்சேனை
ஆசிரியர் பயிற்சிக்
கலாசாலை 14

நபி கதை
பத்து இதழ்கள் 23

கதை
மூன்று இதழ்கள் 41

உரைச் சித்திரம்
ஒற்றைப் பூ 65

கல்லூரி மன்றம்
மூன்று இதழ்கள் 93

கவிதைக் கா
மூன்று இதழ்கள் 106

இலக்கிய விமர்சனம்
மூன்று இதழ்கள் 113

காலிப் நூற்றுண்டு-
ஒரு மலர் வளையம் 147

அரசியல் 156

# ஜாமிஉல் அழ்பர் பள்ளிவாசல்

கொழும்பு மாநகரின் வியாபாரக் கேந்திரமான புறக்கோட்டையில் எழில் சிந்தி நடுநாயகமாக எழும்பிக் கம்பீரக் காட்சிதரும் ஜாமிஉல் அழ்பர் பள்ளிவாசலின் தோற்றத்தை அட்டையில் தாங்கி இவ்வாண்டு மீலாத் மலர் மலர்ந்திருக்கிறது. இப்பள்ளிவாசலை 'சம்மாங்கோட்டுப் பள்ளி' என்றும் அழைப்பார்கள். அக்காலத்தில் 'சம்மான்கள்' என்று அழைக்கப்பட்ட இந்திய முஸ்லிம்களின் விவகாரங்களை விசாரித்து அவற்றுக்கு மத்தியஸ்தம் செய்யும் கோடு ஒன்று இங்கு இருந்த காரணத்தினால் 'சம்மான்கோடு' என்ற பெயர் ஏற்பட்டதாக ஒரு சாராரும், சம்மான்கள் கூடிவாழ்ந்த இடமானதினால் 'சம்மான் கோட்டை' என இவ்விடம் அழைக்கப்பட்டதாகப் பிறிதொரு சாராரும், இப்பெயர் தோன்றுவதற்கான காரணத்தைக் கற்பிக்கின்றனர். இரு கூற்றுக்களும் ஒரு நாணயத்தின் இரு முகங்களென நாம் கொள்ளலாம்.

இப்பள்ளியின் நிலத்தை நன்கொடையாக வழங்கி இப்பள்ளியின் நிர்மாண வேலைகளுக்கு முன்னின்று உழைத்தவர்கள் அதிராம்பட்டணம் கொ. முஹம்மது அப்துல்லா ஆலிம் ஸாஹிபு, கொ. செய்கு அப்துல் காதிர் ஆலிம் ஸாஹிப் ஆகிய இரு சகோதரர்களாவர். அவர்களுடன் காயல்பட்டணம் P. S. K. V. பல்லக் லெப்பை, P. B. உம்பிச்சி ஆகிய தனவந்தப் பிரபுக்களும் இப்புனித மார்க்க கைங்கரியத்தில் ஊக்கமுடன் உதவினார்கள். பெரும்பாலும் தென்னிந்திய முஸ்லிம்களின் பொருளுதவியினாலேயே இப்பள்ளிவாசல் கட்டப்பட்ட தென்றாலும், இலங்கைவாழ் முஸ்லிம்கள் சிலரும் மனமுவந்து உதவ முற்பட்டதால், அவர்களுடைய உதவியும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்பள்ளியின் தர்மச் சொத்து இதனை நிர்வகிக்கப் போதுமானது. அதன் வருவாயினால் மேலும் நிலபுலன்கள் வாங்கக் கூடியதாக இருப்பதாகவும் அறியும் பொழுது இப்பள்ளிவாசலை நிறுவியர்களுடைய தாராள மனப்பான்மை நன்கு தெரிகின்றது.

அறுபத்தோர் ஆட்டை நிறைவுற்ற இப்பள்ளியின் தோற்றம் இன்றும் புதுமையும் பொலிவும் ததும்பக் காட்சிதருகின்றது. இப்பள்ளியின் நுழைவாயில் சென்றதும், வலதுகைப் புறமுள்ள சுவரில், இப்பள்ளியின் சிற்பியின் பெயரும் ஆண்டும் இவ்வாறு குறிக்கப்பட்டுள்ளன:

H. L. SAIBOO - LEBBE ARCHITECT 1908

இதன் பரிபாலன சபையில் K. K. முஹம்மது அப்துல்லா ஆலிம் சாஹிப், P. S. K. V. அப்துல் காதர் ஹாஜியார், M. H. இஸ்மாயில் அன்கோ பாட்சா ஆகியோர் பணியாற்றுகின்றனர். இச்சபையின் செயலாளராக A. S. M. ஹாஜியார் அன்கோவின் M. முஹம்மது அப்துல்லா சாஹிப் கடமையாற்றுகின்றார். அத்துடன் 35 பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டியும் இயங்குகின்றது. புறக்கோட்டையின் ஜும்ஆப் பள்ளியாகவும் திகழும் இப்பள்ளியின் வண்ணப்படத்தினை இம்மலரில் வெளியிடுவதில் 'இளம்பிறை' உவகையும் பெருமிதமும் கொள்ளுகின்றது.

---

புகைப்படம்: K ராஜப்பன் வண்ண அமைப்பு: H. ஜினதாச

# நம்பிக்கையின் குரல்

அரசியலா? அங்கு கலப்பட வியாபாரிகள் மலிந்து விட்டார்கள். விரசம் என்னவென்றால், அதனை நுண்கலை யென்று சாதிப்பவர்களும் இருக்கிறார்கள்.

ஆட்சியாளர் மத்தியிலே கலப்படகாரர்களுக்கு யோகம் சித்திக்கின்றது. அதனை அவர்கள் தமது திறமையெனப் பாராட்டு கிறார்கள்.

இலக்கியமா? கலப்படகாரர்களினாலேதான் இத்துறையிலும் ஆதாயமாக வாழ முடிகின்றது.

ஈதலறமா? 'ஸக்காத்' கொடுப்பதைக்கூடச் சிலர் விளம்பரக் கலையாக மாற்றிவிட்டார்களே!

உணவு—உடையெனத் தொடர்ந்து, கல்வி-கலாசாரம் வரை இப்பட்டியலை நீட்டலாம். அதனைத் தவிர்ப்போம். ஆனால்—.

ஊனகமன்று, ஆனாலும்—.

எத்தனை பெரிய ஆனல் வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம்.

சமய ஆசாரங்களைப் பேணுவதிலாவது நெறி - ஒழுங்கு - சாதனை-மரபு-தூய்மை ஆகியன பேணப்படல் வேண்டாமா? இந்த ஒரு துறையிலேனும் இந்தகு பஞ்ச முறைமைகள் பயிலப் படுமேயானால், ஏனைய துறைகளிலே புகுந்துள்ள கலப்பட விவ காரங்கள் காலப்போக்கிலே களையப்படலாம் என நம்புவதற்கு ஏது உண்டு.

இத்துறையில் முன்னணியிலே தலைமை தாங்கத்தக்க பெற்றி யர் முஸ்லிம்களே என்பது நமது நம்பிக்கை. இது பெருமைக்குரி யது. அந்தப் பெருமையை நிலைநாட்ட வேண்டியது நமது கடமை.

மழலைப் பருவங் கழித்துப்
பள்ளிப் பருவம் அடைந்துள்ள
'இளம்பிறை'க்கு

'அரசு வெளியீடு' நிறுவனத்தினரின்
அன்பு கெழுமிய சகோதர
வாழ்த்துக்கள்.

Premier Publishers of Tamil Books
in the field of Creative literature.

உலகிலே தோன்றிய இறுதி இறைதூதர் முஹம்மது நாயகம் (ஸல்) அவர்களே. அவருடைய தூதின் சித்திப்பாகப் பரம்பிய இஸ்லாம் மட்டுமே, புராணீகச் சடங்குகளினாலும், சிலைவழிபாட்டினாலும் சிதைவுறாது, சரித்திர உண்மைகளிலே எழுந்து நிற்கின்றது. அது மதமாக மட்டுமல்லாமல், சாந்தி மார்க்கமாகவும், நம்பிக்கை பூண்டோரின் வாழ்க்கை முறைமையாகவும் அமைந்துள்ளது. இத்தகைய விழுமிய பாரம்பரியத்திற்குச் சம்பத்துடையவர்கள், பிற மதச் சம்பிரதாயங்களையும் தமது மதக் கொண்டாட்டங்களிலே கலப்படம் செய்தல் கண்டிக்கத் தக்கது. 'இளம்பிறை' இப்போக்கினை 1965-ம் ஆண்டிலிருந்து கண்டித்து வந்திருக்கின்றது. அவ்வாண்டில், வெசாக் பண்டிகையைப் பின்பற்றி மீலாத் விழாக்களிலே புகுத்தப்பட்டுள்ள தோரணங்கள்-பந்தல்கள்-தீபாலங்காரங்கள் ஆகியன தவிர்க்கப்படல் வேண்டுமெனத் தலையங்கம் தீட்டினோம். 'பக்தி கலவாத, நம்பிக்கை இழையாத, அகம் ஒன்றாத; எந்தப் படாடோபச் சம்பிரதாயத்தையும் இஸ்லாம் ஏற்றுக்கொள்ளமாட்டாது' என்பதைப் பிறிதொரு தலையங்கத்திற் சுட்டிக் காட்டினோம். மார்க்க சம்பந்தமான விழாக்களிலும், கூட்டங்களிலும் அரசியல் கலக்கப்படுவதையும், 'இளம்பிறை' வன்மையாகக் கண்டித்தே வந்துள்ளது. 'உண்மை சுடும்' என்ற திருக் குர்ஆன் மலர்த் தலையங்கம் இதற்குச் சான்று. 'இளம்பிறை' தன்னந் தனியாக வித்திய சரியான கருத்துக்கள், இப்பொழுது முஸ்லிம்கள் மத்தியிலே பெரியதொரு தாக்கத்தினையும், மனமாறுதலையும் ஏற்படுத்தி வருதல் உவகைக்குரியது.

'மக்கள் மத்தியிலே சகோதரத்துவத்தையும், ஐக்கியத்தையும் வலியுறுத்திய எம்பெருமானாரின் பிறந்ததினக் கூட்டங்களிற் கட்சி அரசியற் கொள்கையைக் கருத்திற்கொண்டு பேசுவது கண்டிப்பாகத் தவிர்க்கப்படல் வேண்டும்' என்று இலங்கை முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் எம். ஸி. எம். கலீல் அண்மையில் அறிக்கையொன்றினை வெளியிட்டார். அவ்வாறே, 'மீலாத் விழாக்களில் மாத்திரமன்றி, மத சம்பந்தப்பட்ட சகல விடயங்களிலும் கட்சி அரசியல் பேசுவதும், அதே கொள்கையுடன் செயற்படுவதும் உடன் தீர்க்கப்படல் வேண்டும்' எனச் சோனக சங்க உபதலைவர் ஐ. ஏ. காதரும், 'மத விவகாரங்களில் நாம் அரசியலைப் புகுத்திக் கொண்டால் அது நமக்கே தீமையாக முடியும்' என இலங்கை வை. எம். எம். ஏ. மகாநாட்டுத் தலைவர் எம். எம். பஹாவுத்தீனும் கருத்துக்கள் வெளியிட்டுள்ளார்கள்.

இந்தத் தலைவர்களுடைய கருத்துக்களை 'இளம்பிறை' பெரிதும் வரவேற்கின்றது. பிறிதொரு வகையிற் சொல்வதானால், 'இளம்பிறை' முன்வைத்த கருத்துக்களை இவர்கள் வரவேற்று

ஆதரிப்பதற்கு நன்றி. மார்க்க விடயங்களிலே கட்சி அரசியலைக் கலந்ததற்காக அமைச்சர் எம். எச். முஹம்மதுவைக் கண்டிக்க நேர்ந்தது. இவ்வளவு காலந் தாழ்த்தியாவது, 'இளம்பிறை'யின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் சுருதியில், 'நபிகள் நாயகம் பிறந்த விழா ஒன்றில் அரசியல் வேண்டாம்' என அவரே கருத்துத் தெரிவித்துள்ளார். கூஜா தூக்கிகளின் 'நச்சரிப்பு' இன்றி அமைச்சர் சுயமாகச் சிந்திக்கும் பொழுது சமுதாயப் பற்றுடைய முஸ்லிமாகச் செயலாற்றுகின்றார் என்பதற்கு இது தக்க எடுத்துக் காட்டாகும். அமைச்சர் 'இளம்பிறை'யின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி. கட்சி அரசியலைப் போட்டுக் குழப்பாமல்,

## சத்திய வழி

வழக்கமான பழக்கம். 180 பக்கங்களிலே மலரும் இப்பாரிய வேலைகளைக் குறுகிய கால எல்லைக்குள் இரவு-பகலாக நோன்பியற்றும் பான்மையில் கவனித்தும், சிரமப் பரிகாரம் தீர்ப்பதற்கு முன்னர், இவ்வுப தலையங்கத்தினை எழுத அமர்கின்றேன். இத்துடன் இம்மலரின் என் பணிகள் முடிவடைகின்றன. சுவைப்பு உங்களுடையது.

கனவுக்கும் நனவுக்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் கடந்த ஐந்து ஆண்டுகளையும் இரைமீட்டி, அசை போட்டுப் பார்க்கின்றேன். எத்தனையோ வேதனைகளைச் சகித்து, துயர்களை ஏற்று, எதிர்ப்புகளை எதிரிட்டு, ஏமாற்றங்களைத் தாங்கி, இடர்களை அநுபவித்து, செங்குத்து விழுக்காடு கண்டு மனம் பேதலிக்காமல், கரு முகிலிற் றோன்றும் மின்னலன்னத் தோற்றிய வெற்றிகளைக் கண்டு தலையை இழக்காமல், கடந்த ஐந்து ஆண்டுகளாக 'இளம்பிறை'யை வெளியிட்டு வருகின்றேன்.

பதினைந்து ஆண்டுகள் என் மனத்திலே மனைகோலிய கனவின் பலிதமாக, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், 'இளம்பிறை'யின் முதலாவது இதழை வெளியிட்டேன். பன்னிரண்டு பூக்களை வெளியிட்ட பின்னர் 'நனவு நிலை' என்ற மகுடத்திலே, ஓர் இலக்கிய சஞ்சிகைத் தொடர்ந்து நடத்துவதிலுள்ள சிரமங்களை உங்களுடன் பங்கிட்ட போதிலும், 'இளம்பிறை'யைத் தொடர்ந்து வெளியிடும் பணி தொடர்ந்தது. சென்ற ஆண்டு மீலாத் மலரில், 'இலட்சியப் பயணம்' என்ற தலைப்பில், 'இளம்பிறை

இஸ்லாமிய நெறி வலியுறுத்தும் அரசியலை அமைச்சர் முஹம்மது பயிலுவாராயின் 'இளம்பிறை' அவருடைய கரங்களைப் பலப் படுத்தத் துடிப்புடன் முன்நிற்கத் தயங்கமாட்டாது.


அடுத்த ஆண்டிலாவது, பிற மதச் சடங்குகள் நுழையாத, அரசியல் கலவாத, இஸ்லாத்தின் தனித்துவத்தையும் மேன்மை யையும் பேணும் வகையில் மீலாத் விழாக்கள் கொண்டாடப் படும் சூழ்நிலைகளை உருவாக்கச் சகல முஸ்லிம்களும் உழைப்பார் களென 'இளம்பிறை' நம்புகின்றது.

பெரிய மூலதனத்தில் வேறூன்றியதில்லை. சத்தியத்திலும், இலக்கியப் பற்றிலுமே வேர் கொண்டது. இதுவே இலட் சியப் பயணத்தின் தொடர்ச்சிக்கும் காரணமாக அமைந் தது' எனக் குறித்தேன். சத்திய வழியிலே, இளம்பிறை இலட்சியப் பயணம் இயற்றுகின்றது என்பதைச் சுய குரோத காரணங்களினுல் நம்மீது பகைமை பாராட்டு வோரும் ஒப்புக் கொள்ளுவர். ஆனுலும், சிறு திருத்தம் ஒன்றினை இங்கு குறித்து வைக்க விழைகின்றேன். சுயம்பு வான இலக்கியப் பற்றுடன் மட்டுமே 'இளம்பிறை' வெளி வந்து கொண்டிருக்கின்றது என்பது உண்மையின் முழு வடிவமல்ல. மனிதன் சமூகப் பிராணி. எனவே, சமு தாயப் பற்று அவனுக்கு இயல்பாக அமைந்த குணங் களுள் ஒன்ருகும். எனவே, இளம்பிறை சமுதாயப் பற்றிலும் தன்னைப் பிணைத்துள்ளது. குறுகல் மனம் கொண்டவர்கள் இதனை அரசியல் என்று கூறலாம். அர சியல் என்பது சமூதாய வாழ்க்கையின் ஓர் அம்சம் என 'இளம்பிறை' கருதுகின்றது.

ஈழத்தில், முஸ்லிம் சஞ்சிகையொன்று இத்தனை பக் கங்களிலே ஓர் ஆண்டு மலர் வெளியிட்டது இதுவே முதல் தடவையாகும். வரலாற்றுப் பெருமை நாட்டி ஞேம் - சாதனை ஒன்று இயற்றிஞேம் என்று சுய விளம் பரஞ் செய்யக் கூச்சமாக இருக்கின்றது.

அத்தனையும் எல்லாப் புகழுக்குமுரிய அல்லாஹ்வுக்கே!

# தமிழ் வளர்க்கும் வள்ளல்கள்



**தை** மாதம். வெளியூர் நண்பர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். சிவகாசியில் அச்சிடப்பட்ட கவர்ச்சிப்படங்கள் உட்பட, இருபது கலண்டர்கள் வரை அவர் மேஜையிலே பரப்பிக்கிடக்கின்றன. உள்ளே இருந்து என் நண்பரின் தாயார் குரல் வருகின்றது. 'இந்தக் கலண்டர்களை எல்லாம் மூலையிலே போட்டு விட்டு, மெய்கண்டான் திருக்குறட் கலண்டர் ஒன்று வாங்கி வந்து ஒழுங்காகச் சுவரிலே மாட்டிவை!' தைமாதத்தில், மரபு பேணும் இத்தகைய தாய்மைக் குரல்கள் தமிழ் இல்லங்களிலே ஒலிக்கின்றன. 'கலண்டர் என்றால் மெய்கண்டான், மெய்கண்டான் என்றால் கலண்டர்' என்ற அளவிற்கு வீடு தோறும் பயிலப்படும் புகழ்மிக்க கலண்டரை வெளியிடும் அச்சக அதிபர் தான நாகலிங்கம் இரத்தின சபாபதி அவர்கள். தமிழ் மூலம் உழைத்ததின் ஒரு பகுதியைத் தமிழுக்கே செலவு செய்ய விழையும் பெற்றியர். சில ஆண்டுகளுக்கு முன்னர் மூதூரில் நடைபெற்ற இரண்டாவது தமிழ் விழாவில் மக்கள்கவிமணி மு. இராமலிங்கம் அவர்களுக்குத் தங்கப் பதக்கம் ஒன்றினை உபகரித்து உதவினார். புதிய தமிழ் நூல்களின் முதற்பிரதியைப் பெருந் தொகைக்கு வாங்கி, ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதிலும் இவர் முந்தி நிற்கின்றார். இன்று, பிறிதொரு வகையிலும் ஈழத்தின் சகல மக்கள் மத்தியிலும் கௌரவமும், பெருமையும் அடைந்து வருகின்றார். இதற்குக் காரணம் ஈழத்தின் தேசிய வீரருள் ஒருவரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்கு உரிய முறைப்படி சிலைநாட்டல் வேண்டுமென்று அவர் செய்துகொண்ட வீர சபதமாகும். நாவலர் விழாக்குழுவின் பொருளாளராக அமர்ந்து, அதன் இயக்க இயந்திரத்தை நற்கதியிலும் நற்பாதையிலுஞ் செலுத்துகின்றார். ஒருவர் வள்ளலாகவும், நிதி சேர்க்கும் தொண்டனாகவும், நிரம்பிய நாணயஸ்தராகவும், நிதான நிர்வாகியாகவும் விளங்குதல் அபூர்வம். இக்காரணிகளினாலே தான் நாவலர் விழாக் குழுவிற்குத் தேவைப்படும் பொருள் வந்து குவிகின்றது. யாழ்ப்பாணத்தில், முப்பத்தாறு மணி நேரத்தில் பதினாறாயிரம் ரூபா நிதி சேர்த்துள்ளார் எனில் இவர் ஆற்றல்தான் என்னே! தமிழையும் சைவத்தையும் இருகண்களாகப் போற்றும் இவர், நல்லூர்க் கந்தனிலும், கதிர்காமக் கந்தனிலும் ஆராத பக்தி கொண்டவர். அக்கோயில்களின் உற்சவ காலங்களில் 'மெய்கண்டான்' பிரசுரங்கள் இலவசமாக வழங்கப்படுதல், அண்மைக் காலத்தில் மரபாக அமைந்தது. நா. இரத்தின சபாபதி அவர்கள் நீடு வாழ்க! வளர்க அவர்தம் தமிழ்த் தொண்டு.

# மஹாகவி

## பத்து இதழ்கள்

'மஹாகவி' நாடறிந்த மூத்த கவிஞராவர்.
'குறும்பா' என்ற
பாவகையைத் தமிழுக்கு
அறிமுகப் படுத்திக்
கவிதை வளத்திற்குச்
செழுமையூட்டியவர்.
அவர் இயற்றிய குறும்பாக்கள்
பல இளம்பிறைப்
பூக்களுக்கு மணமூட்டின.
பின்னர், அவர் சமைத்த
குறும்பாக்கள் நூறு, நமது சகோதர
நிறுவனமான 'அரசு வெளியீடு'வின்
நூலாக வெளிவந்தது.

காதலையும். தமிழுணர்ச்சியையும்
விட்டால் தமிழ்க்
கவிதைக்குக் கருப்பொருள்
கிடையாது என
மருளும் இளங் கவிஞர்களை
ஆற்றுப் படுத்தும்
வகையிலும், 'எப்பொருளும்
கவிதைக்கு
அந்நியமாக மாட்டாது;
கூர்ந்து நோக்குங்கள்;
செழிமையுடன் சிந்தியுங்கள்'
எனச் சுட்டும் வகையிலும்,
மஹாகவியின் பொருணூறு என்னும்
கவிதை நூலை
மஹாகவி அமைத்துள்ளார்.
அந்நூலில்
இடம் பெற்றுள்ள
100 கவிதைகளுள்
பத்துக் கவிதைகள் இனி வரும்
பக்கங்களிலே
மணமூட்டுகின்றன.

## ஒன்று: அகப்பை

அகப்பையே செங்கோல் ஆக, என் வீட்டில்
அரசியல் புரியவந் தடைந்த மடந்தாய்!
சிவப்பதோ நின் முகம்? சினத்தை அடக்கு.
நினது
பச்சடி என்னைப் பச்சடி ஆக்கினும்,
இரசமோ எனது முரசை அரிப்பினும்,
குழம்போ உடனே எழும்படி செய்யினும்
காதலுக் கிவையெலாம் கடிய
சோதனை கொல்வோ? சுவைக்கும் உன் உடலே.

## இரண்டு: செய்மலர்

செய் மலர்க் கொத்தை ஓர் செம்பிலே இட்டு,
மைவிழி கூடத்தில் வைத்தனள், மகிழ்ந்தாள்.
சிரித்த படியே அச் செய் மலர் இருந்தது.
நெடுநாட்,
சிரித்தபடியே அச் செய் மலர் இருந்தது.
வருத்தமுற் றவள் நாய் ஒரு நாள் மரித்தும்,
சிரித்த படியே அச் செய்மலர் இருந்து,
கோடியில் உள்ள தோர் குப்பைக்
கூடையில் உடனே கொட் டுண்டதுவே.

## மூன்று: சிலை

அரசவை ஏறி அதிகம் பேசியும்,
பிரசவ விடுதி பெறப் பல முயன் றும்,
கரிசனை யோடெமைக் காத்தும் நின்றதால்,
ஒரு சிலை
சந்தியில் நட்டவர் சாதனை போற்றினோம்.
காகம் எப்படி அவர் கனம் கண்டனவோ,
வந்த திற் குந்தியும், எச்சம்
சிந்தியும் தங்கள் அஞ்சலி செலுத்தலே?!

## நான்கு: கூரை

கூரையின் கீழே குடியிருக் கின்றேன்.
அதுதான்,
மாரியும் வெயிலும் மறைக்கும்: ஆயினும்,
பாகலும் அதன்மிசை படர்தல்
ஆகுமோ, கறிசெய் தவள் அளித்திடவே?

## ஐந்து: கப்பல்

கப்பல் ஒன்று கடலிலே மிதந்தது.
முப்பதி ஞயிரம் மூட்டை அரிசியொடும்,
உப்பு நீர் கிழித் தோடிச் சென்றது.
மாலுமி
பல்லுக் குத்திய மெல்லிய ஊசியை
வீசினன். வீசவும், விழுந்த
ஊசியோ கடலின் உள் அமிழ்ந்ததுவே.

## ஆறு: கை வண்டி

கையினைக் காட்டிக் கவலைகள் தடுக்கும் உன்
செய் வினைப் பயனுல், சீர் நேராக
ஒற்றை வழியிலே ஓடும் ஓர் வண்டி.
உய் வினைக்
காட்டா நெறிகளைக் காட்டி நிறுத்த,
நாட்டிலே நம்மவர் நடுவில்
நாட்டுதும், நாட்டுதும் நாம் உன் கிளைகளே!

## ஏழு: சேலை

மேனியை மூடி மெல்லிய பருத்திச்
சேலையை உடுக்கும் சிற்றிடைச் சிறுமீ!
நாரியிற் கிடக்கும் நெளிவையும், மார்புக்
கூர்களிற் கிடக்கும் குமிழ்வையும் மறைக்கும்
கொள்கையோய்!
பழத்தினை மூடும் தோல் போல், பைய
உரிப்பதற் குள்ள உன் உடைகள்
விருப்பினுக் கொரு புதுவேகம் கொடுக்குமே!

எட்டு:

## உடுப்புப் பெட்டி

அடுப்புப் புகைபட்ட கண் ஆறுக,
உடுப்புப் பெட்டி ஒன்று கேட்டனே.
உடனே-
வாங்கி வந்து வண்டியில் இறக்கினேன்;
ஆம், களி கொண்டனே. அனைத்தையும் அதனுள்
அடுக்கி வைத்தனே. ஆயின், என் அழகீ,
இடுப்பிலே இன்னும் ஒன் றெஞ்சிக்
கிடப்பதைக் கண்டு கெஞ்சும் என் நெஞ்சே.

ஒன்பது:

## கட்டில்

வேலை முடிந்ததும் வீடு திரும்பிக்
காலை நீட்டிக் கட்டிலிற் படுத்தேன்;
சட்டென எனக் கொரு சத்தியம் தெரிந்தது.
கட்டில் எனக்கு மட்டுமா சொந்தம்?
பூமி தோன்றிய தென் பொருட்டே ஆகுமா?
சாமீ,
என்னிரு புறத்தும் ஏறிக் கடித்த
மூட்டைகள் நான் நிலை முதிரக்
காட்டின! அவைக் கென் கரம் குவிப்பேனே.

பத்து:

## ஜோதி

விளக்கை மனை விளக்கு விளக்குகின்றாள்.
பழப்புளி சாம்பல் பட்டதும், கண் முன்னே
பித்தளை விரைவிற் பத்தரை மாற்றுத்
தங்கமாம்.
கூடத்தில் வைத்துக் கொளுத்தினாள். சுடர்ந்தது.
நீறிட்டுக் குங்குமம் நெற்றியில் இட்டுக்,
குனிந்தனள்; இரண்டு கை குவித்தாள்.
இருந்த அத்திருவிளக் கொளி இழந்ததுவே.




பெருக்கல் வாய்பாடு தெரியவில்லையே என்று சோர்வடைய வேண்டாம். 26 சதப்படி 18 முட்டைகளை விற்கும் கன்னங்குடா மனுஷிகூட, கணக்கை மனக்கணிதமாகச் செய்து, பணத்தைச் சரியாக வசூலித்துக் கொள்ளுகிருள். வாய்பாடின்றிப் பெருக்கலா? ஆம். 15 × 12 என்பதைக் கணிக்க வேண்டுமா? பின்வரும் வழியைப் பின்பற்றுங்கள்.

இந்த வழியைப் பின்பற்ற இரண்டால் பெருக்கவும், வகுக்கவும் தெரிந்தாற் போதும். பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும். இடப் பக்கத்திலுள்ள எண்ணை இரண்டால் வகுக்கவும், அதே சமயம் வலப்பக்க முள்ள எண்ணை இரண்டாற் பெருக்கவும். இடப் பக்கத்திலே இறுதியாக ஒன்று என்ற எண் வரும்வரையில் இந்தப் பிரித்தல், பெருக்கல் கிரியை தொடர வேண்டும். இடப்பக்கத்து எண்ணைப் பிரிக்கும் பொழுது மிச்சம் வந்தால் என்ன செய்வது என்று கேட்கின்றீர்களா? அதனைப்பற்றிக் கவலை வேண்டாம்! விட்டுவிடுங்கள். முடிந்ததா? இன்னுமொன்று. இடப்பக்கத்தில் இரட்டை எண்கள் வருகின்றனவா? அதனையும், அதற்கு நேராகவுள்ள வலப்பக்க எண்ணையும் வெட்டிவிடுங்கள் முடிந்ததா? இனி வலப்பக்கத்திலுள்ள எண்களைக் கூட்டுங்கள். சரியான விடை கிடைக்கும்.

உதாரணம்

| | |
|---|---|
| 15 × | 12 |
| 7 | 24 |
| 3 | 48 |
| 1 | 96 |
| | 180 |

நம்பிக்கை வேண்டுமென்றால்
இன்னேர் உதாரணம்

| | |
|---|---|
| 11 × | 12 |
| 5 | 24 |
| ~~2~~ | ~~48~~ |
| 1 | 96 |
| | 132 |

[இரட்டை எண்களையும் அவற்றிற்கு எதிரே எதிரே உள்ள எண்களையும் வெட்டி விடுக.]

இது பூர்வீகமுறை. Computer பற்றியும் அதன் துரித கணிப்புப் பற்றியும் பேசப்படும் இந்நாளில், பூர்வீக முறை எதற்காக என்று கேட்கலாம். ஆனல், இந்த 'இரண்டாற் பெருக்கி இரண்டால் வகுக்கும்' முறையையே Computer ரும் கையாளுகின்றது. இதனை Binary System என்றழைப்பர். நாம் உபயோகிப்பது Decimal System. அதாவது பத்தின் அடுக்குகள். இரண்டின் அடுக்குகளே Binary System. எமது கைகளிற் பத்து விரல்கள் இருப்பதினல் பத்தின் அடுக்குகளை மனிதன் இயல்பாக ஏற்றுக் கொண்டான் போலும். விரல்கள் இன்றி இரண்டு கைகள் மட்டுமிருந்திருந்தால் அவன் இரண்டின் அடுக்கு முறையையே ஏற்றிருப்பான் என ஊகிப்பதற்கு இடமிருக்கிறது.

— ஆர். பாலகிருஷ்னன்

# அட்டாளைச்சேனை

## ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

ஓர் இனம் உயிர்ப்புடன் இயங்கவும், ஜீவ துடிப்புடன் முன்னேற்றங் காணவும் கல்வீப் பயிற்சி மிக அவசியமாகும். இக்கல்வி இயக்கத்திற்கு ஆசிரியர்களின் பங்கு மகத்தானது என்பதை யாவரும் அறிவர். இத்தகைய விழுமிய தொண்டு புரியும் பண்புமிகு ஆசிரியர்களை உருவாக்கும் உன்னத கலைக்கூடமே ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையாகும்.

ஈழம் வாழ் தொல்குடி மக்களுள் முஸ்லிம் இனமும் ஒன்றாகும். இவர்கள் ஈழத்தில் வாழும் மற்றும் இரண்டு பெரிய இனங்களைப் போல பல காலமாகக் கல்வித்துறையில் முன்னேறாது தேங்கிக் கிடந்தனர்.

'பிற மதச் செல்வாக்கும், பிற இன நாகரீகம் கலந்திடாத, சுதந்திரமான ஒரு சூழ்நிலையில், முஸ்லிம்களுடைய கலாசாரமும் பண்பாடும் வளர்க்கப்படும் வகையிலும், முஸ்லிம்களுடைய தனித்துவ அம்சம் பேணப்படும் வகையிலும், முஸ்லிம்களுடைய கல்வி வளர்ச்சி அபிவிருத்தி செய்யப் படல் வேண்டும்' என்பதை முஸ்லிம் பெரியார்கள் உணர்ந்தார்கள். இதனைக் காரிய சாணையாக்க உதவி நன்கொடைபெறும், தனித்தியங்கும் பாடசாலைகளும் - ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளும் நிறுவப்படல் வேண்டு மென்பதைத் தெளிந்து ஏற்ற நடவடிக்கைகள் எடுத்தார்கள். முஸ்லிம் பெரியார்கள் தொடர்ந்து நடத்திய இயக்கத்தின் பெறுபேறாக 1941 ஆம் ஆண்டில் முஸ்லிம்களுக்கான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் இரண்டு இலங்கையில் நிறுவப்பட்டன. ஆண்களுக்கான கலாசாலை உதய சூரியனைக் கண்டுகளிக்கும் கிழக்கு மாகாணத்திலுள்ள அட்டாளைச்சேனையிலும், பெண்களுக்கான கலாசாலை தென்மேற்குக் கரையில் அமைந்துள்ள அளுத்கமையிலும் அமைக்கப்பட்டன. இனிவரும் பக்கங்களிலே அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பற்றி விசேட செய்திகள் இடம் பெறுகின்றன.

## ஆசிரிய கலாசாலை போதனை ஆசிரிய சங்கக் காரியதரிசியின்

# ஆசியுரை

நாகரீக மற்றுக் கிடந்த அரேபிய நாட்டுமக்களை, சிறப்புறு சன் மார்க்க சீலராய் வாழ்விக்கத் தோன்றினர் அண்ணல் நபி (ஸல்). பண்பு மிகு இஸ்லாமும் பாரெலாம் பரவியது. சத்தியத்திலுத் இலக்கியப்பற்றிலும் வேர் கொண்டு, ஐந்தாண்டுகளைப் பூர்த்தி செய்யும் 'இளம் பிறை'யின் அழகுமலர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவதரித்த திருநாளை நாம் கொண்டாடும்போது, எம் கைக்கெட்டுவது சாலப் பொருந்தும்.

இஸ்லாமிய கொள்கைகளிலூறி, முஸ்லிம் கலாசாரத்தையும் பண்பாட்டையும் ஈழம் முழுதும் பரப்பும் முழு நோக்குடன் தொண்டாற்றும், அட்டாளைச்சேனை முஸ்லிம் ஆசிரிய கலாசாலையைப் பற்றிய சிறப்புக் கட்டுரைகள், இம்மலரில் வெளிவருவது கண்டு, இக்கலைக் கூடத்துடன் தொடர்புள்ள அனைவரும் அளவிலா மகிழ்ச்சியடைகின்றனர்.

ஈழத்து இளம்பிறையே! இஸ்லாமிய சமூகத்தை முன்னேற்றும் நற்பணியில் பல்லாண்டு காலம் நீ தளராது உழைக்க, அளவற்ற அருளும், நிகரற்ற அன்புடையோனுமாகிய ஆண்டவன் நல்லருள் பாலிப்பானாக.

இங்ஙனம்,
கௌரவ காரியதரிசி.

# அதிபர்கள்

[அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பின்வருவோர் அதிபர்களாகக் கடமையாற்றினர்]

வி. நல்லையா, (1941-1943)
வி. ரி. ஞானசூரியம். (1944-45)
எஸ். கந்தசாமி (1945-46)
ஏ. ஏ அஹ்மத் ஜிப்ரி (1946-)
ஐ. எல். எம். சுஹைப்
ஐ. எல். எம். மஷ்ஹூர் (1951-1962)
ஏ. ஏ. அஹ்மத் ஜிப்ரி (1963-இற்றை வரை)

## கலாசாலைப் பிரதமரின்
# ஆசிச் செய்தி

ஐயா,

இன்று இலங்கையில் எத்தனையோ பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெளியாகின்றன. அவற்றில் முஸ்லிமிகளுக்காக முன்னின்று உயர் கருத்துக்களை அள்ளிவீசி வீறு நடை போட்டுச் செல்லும் ஒரே ஒரு சஞ்சிகை இளம் பிறை என்றால் அது மிகையாகாது.

கடந்த நாலு வருடங்களாக அயராது பணி செய்து வரும் இளம்பிறை அடுத்த மாதம் தனது வயதை ஐந்தாக்கிக் கொண்டு புத்தம் புது மலராக வெளிவர இருக்கிறது என்பதை எண்ணும் போது எங்கள் இதயம் பூரிப்படைகின்றது அதன் வளர்ச்சி குறித்து எங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் மீலாத் மலராகவும் முஸ்லிம் ஆசிரிய கலாசாலை மலராகவும் உருவெடுத்து எங்களை மகிழ்விக்கவரும் இளம்பிறைக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

எம். எச். எம். மன்சூர்.

அட்டாளைச்சேனை.

## மஹ்மூதும்

அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் கல்வி அமைச்சராகப் பதவி வகித்த காலத்திலேதான் முஸ்லிம் ஆசிரியர் சமூகம் மிக அதிகமான நன்மைகள் பெற்றது. அதனை பொற்காலம் என வர்ணிக்கலாம். அக்காலத்தில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் வருடாவருடம் 200 ஆசிரியர்களும், அளுத்கமை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 150 ஆசிரியைகளும் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டார்கள். அத்துடன் கண்டி, காலி ஆகிய பிரதான நகரங்களில் மேலதிகமாக இரண்டு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் முஸ்லிம்களுக்காக நிறுவப்பட்டன.

ஆனால், அல்ஹாஜ் எம். எச். முஹம்மது அமைச்சராக உள்ள தற்காலத்தில், கண்டி, காலி ஆகிய இடங்களிலே நிறுவப்பட்ட மூஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் மூடப் பட்டுவிட்டன. அத்துடன். அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் சுமார் 100 ஆசிரியர்களும். அளுத்கமை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு சுமார் 10 ஆசிரியைகளுமே தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

காலம் பின் நோக்கி ஓடுகின்றதோ என அஞ்சவேண்டி இருக்கின்றது.

## முஹம்மதும்

இவ்வாறு சொற்பொழிவில் குறிப்பிட்டவர் அரசியல் வாதியல்லர்; முஸ்லிம் கல்விமான்.

# கலாசாலை நிர்வாகத்தில் எமது பங்கு

—H. A. A. ஸனூன்

பரிதி தோன்றும் வேளையிலிருந்து, இரவு பத்து மணி வரை, சகல ஆசிரிய மாணவர்களுக்கும் பற்பல பணிகள் இருக்கின்றன. படிப்பும் பயிற்சியும் தவிர ஏனைய தேவைகளும் பிரச்சினைகளும் திருந்தரம் எழுகின்றன. இவைகளுக்குத் தீர்வு காணுதல் அதிபர்-போதனாசிரியர்கள் ஆகியோருடைய அலுவல்கள் மட்டுமேயானால், பணி சிரமசாத்தியமானதாக அமையும். எனவேதான், பயிற்சியாசிரியர்களின் நலனைக் கவனிக்கவும், தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அவர்களுக்குள் சிறந்தவர்களை அவர்களே தெரிவு செய்து கொள்ளும் முறையொன்றை இங்கு ஏற்படுத்தியுள்ளார்கள். இந்த முறையினால் பயிற்சியாசிரியரின் சுயதேவைகள் நிறைவேறுவதுடன், கலாசாலையின் திருந்தர அலுவல்களும் செவ்வனே நிறைவேறுகின்றன. அத்துடன், இந்த ஏற்பாடு ஆசிரியர்களை நிர்வாகத் திறமையுள்ளவர்களாகவும் ஆக்கிவிடுகின்றது. இந்த அரிய திட்டத்தை முதன் முதலில் வகுத்தளித்தவர் முன்னைய அதிபர் மஷ்ஹூர் அவர்களே யாவரென சொல்லப்படுகின்றது.

ஓரளவு ஜனநாயகம் பேணும் தேர்தல் முறையொன்றினைப் பயின்று, இறுதி வருட ஆசிரிய மாணவர்களுள் அதிக வாக்குகளைப் பெற்ற ஒருவரை அழைத்து, கலாசாலைப் பாராளுமன்ற ஜனபதிபதியான அதிபர் அவர்கள் பிரதமராக நியமிப்பார். தேர்தலில் போட்டியிட்டு ஜெயித்த இரண்டாம் பருவத்தவர்களுள் இன்னும் எட்டுப் பேரைத் தெரிந்து அமைச்சர்களாக நியமிக்கும் பொறுப்பு பிரதமரைச் சாருகிறது. போட்டியில் பத்தாம் இடத்தைப் பிடித்துக் கொண்டவர் சபாநாயகராவது மரபு. இங்கு எதிர்க்கட்சி கிடையாது. பிரதமருக்கு உதவி அமைச்சர் இல்லை. ஏனைய அமைச்சர்கள், தேர்தலில் ஜெயித்த முதலாம் பருவத்தினர் எண்மரில் விரும்பிய ஒவ்வொருவரைத் தமது உதவி அமைச்சர்களாகத் தெரிந்து கொள்வார்கள். இரண்டாம் வருடத்தவர்களுக்கு அமைச்சர்கள் பொறுப்பாக இருப்பது போன்று, முதலாம் வருடத்தவர்களுக்கு உதவி அமைச்சர்கள் பொறுப்பாயிருப்பார்கள். தற்போதைக்கு இந்த ஏற்பாடே திருப்திகரமாகச் செயற்படுகின்றது.

## தற்போதய ஆளுமன்றம்

மகாதேசாதிபதி:

**ஜனுப். A. A. A. ஜிரீப் (அதிபர்)**

சபாநாயகர்:

**ஜனுப். A. P. S. ஹமீத்**

பிரதமர்:

**M. H. M. மன்சூர்**

| அமைச்சு | அமைச்சர்கள் | உதவி அமைச்சர்கள் |
|---|---|---|
| கலாசாரம்: | ஜனுப் M. A. M. சிகிதி | ஜனுப் M. M. றியால் |
| கல்வி: | ... H. L. M. ஹனிபா | ... A. W. M. உவைஸ் |
| தபால், போக்குவரத்து: | ... A. M. அன்வர் | ... A. S. M. மொயீன் |
| சம்பளம்: | ... M. மீராசாஹிப் | ... M. I. M. நஸீம் |
| சுகாதாரம்: | ... A. H. M. உசைன் | ... M. S. A. தாஹிர் |
| உள்விவகாரம்: | ... M. சஹீத் | ... S. முத்துமீரான் |
| விளையாட்டு: | ... M. செயில் ஆப்தீன் | ... S. M. நஸீர் |
| சமயம்: | ... M. சமீக் | ... M. B. M. உமர் |

## ஆளுமன்ற அலுவல்

கலாசாரம்: இஸ்லாமிய கலை, கலாசாரப் பண்பாடுகளைப் பேணுதல், சஞ்சிகை வெளியிடுதல்.

கல்வி : கலை விழாக்கள், கூட்டங்கள், நடத்துதல். கல்வி விருத்தி சம்பந்தமாக ஆவன செய்தல். நூல் நிலைய வளர்ச்சிக்கு உதவுதல்.

தபால், போக்குவரத்து: தபால், தந்திகளைக் கவனித்தல். சுற்றுப் பிரயாண ஒழுங்குகள் செய்தல். புகையிரத இலவசச்சீட்டு வழங்கவும் போக்குவரத்துச் செய்யவும் வசதி செய்தல்.

சம்பளம் : மாதாந்தச் சம்பள விநியோகம்.

சுகாதாரம்: நோயாளர் விடுதி, சயன கூடம், உணவறை, மலசலகூடம் முதலியவற்றின் சுகாதாரத்தைப் பேணுதல். தொற்று நோய் தடுப்பு வசதி, முதலுதவிப் படை ஒழுங்கு, வைத்திய சிகிச்சை முதலியவற்றைக் கவனித்தல்.

உள்நாட்டு விவகாரம்: கலாசாலை ஒழுங்கை நிலை நாட்டல், நீர், மின்சாரத், தளபாடவசதிகள் செய்தல்.

விளையாட்டு: உடற்பயிற்சி, விளையாட்டுப் பிரிவுகளைக் கவனித்தல், விளையாட்டுப் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

சமயம் : கலாசார விழாக்கள், தொழுகை வசதிகளைக் கவனித்தல், 'ராத்தீப்' போன்ற மார்க்க கைங்கரியங்களை நடாத்துதல்.

அட்டாளைச்சேனை

# எழில்மிகு சூழல்

—ஏ. எஸ். எம். மொயீன்

உதய சூரியனிலே குளித்து நித்திய யௌவன ஓதையை எழுப்பும் வங்காள விரிகுடாவைக் கிழக்கு எல்லையாகவும்; பச்சைப் பசுமை மிகுந்த மருத நிலங்களையும், முல்லைக் காடுகளையும் மேற்கு எல்லையாகவும்; நர்த்தகியின் லாவண்யத்துடன் நகரும் மகாவலி கங்கை காதலனைக் கண்டு கரம் நீட்டும் வாக்கில் கிளைவிட்ட வெருகல் கங்கை வடக்கு எல்லையாகவும்; சல சலத்தோடும் குமுக்கன் ஓயாவைத் தென் எல்லையாகவும் கொண்ட கவின் மிகு வளமார் பிரதேசத்தையே மட்டக்களப்புறு மாந்தர் 'மீன்பாடும் தேனகம்' என அழைத்து மகிழ்கின்றனர். இந்த மீன்பாடும் தேனகத்தில் அமைந்துள்ள அழகுமிகு கிராமமே அட்டாளைச்சேனையாகும்.

மட்டக்களப்பின் எழுவான் கரையைப் பிளந்து, கல்லடி பாலத்தை ஊடறுத்து, அறுகம்பை குடாவரை, நீண்ட பெரிய கருநாகம் போன்று நெடுஞ்சாலையொன்று கிடக்கிறது. இவ்வீதியின் 25 ஆவது மைலில் உள்ள கல்முனையைக் கடந்ததும், படுவானில் செழிப்பு மிகு வயல் வெளிகளைத் தரிசித்துச் செல்கின்றது. எழுவான் கரையில் ஆங்காங்கு தென்னஞ் சோலைகள் வனப்பூட்டுகின்றன. கிழங்கிலங்கை வயல்களிலே 'சிறுவால்' சகிதம் ஆண்களும், முககாடு மறைப்பில் பெண்களும் நடையும்வேலையும் பயிலுகின்ற காட்சி கண்ணுக்குப் பெருவிருந்தாகும். இந் வயல் வெளிகளிலே குமிழ்ந்த கற்பனை ஊற்றுகளே செவிக்கினிய நாட்டார் பாடல்களாகப் பயிலப்பட்டு வருகின்றன. மழைக்குக்கூட பாடசாலையிலே ஒதுங்காத, கல்வியறிவு இல்லாத, மட்டக்களப்பு முஸ்லிம் பெண்கள் எதுகை-மோனையும், ஓசைச் சிறப்பும், கருத்து வீறும் கொண்ட நூற்றுக் கணக்கான நாட்டார் பாடல்களை இயற்றிய பெண்பாற் புலவர்களாகவும் திகழ்ந்திருக்கிறார்கள் என்ற செய்தி நம்மை மலைப்பில் ஆழ்த்துகின்றது. அத்துடன், விவசாயத்திலே ஈடுபட்டிருக்கும் ஆண்களும் - பெண்களும் இஸ்லாமிய கலாசாரத்தினை முற்றிலும் பேணும் வகையிலே உடை அணிந்து காட்சிதருதல், அவர்களுக்கு மரபிலும் மார்க்கத்திலுமுள்ள பற்றுதலைத் துல்லியமாகக் காட்டுகின்றது. வீடுகளையும், தோட்டத்தையும் தென்னோலை வேலிகளால் அரண் செய்து வைக்கின்றார்கள். முஸ்லிம் கன்னியரை வீதிகளிலோ, பொது இடங்களிலோ காண்பது மிகவும் அரிது. இஃது இப்பகுதி மக்களின் சீலநிலை வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாகவும் அமைகின்றது.

மாலை வேளையில், மேற்கிலே கிடக்கும் மரகத வயல்களின் பகைப் புலத்தில் செம்பரிதிக் கோளம் அஸ்தமிக்கும் வேளையிலே மேகக் கூட்டம் அணி வகுத்து வருவதும், வறுமை விரட்டியடித்துச் செழுமையை நிலைநாட்டிக் 'கோவி ராஜா'க்களாக விவசாயிகள் வீடு திரும்புவதும் மனத்தை நெகிழ வைக்கும் காட்சிகளாம்.

இத்தகைய சூழலில், மட்டக்களப்பிலிருந்து 37 ஆவது மைலில் அட்டாளைச்சேனை அமைந்துள்ளது. தெற்கு அயலிலுள்ள அக்கரைப்பற்றினை அட்டாளைச்சேனையின் பிரதான கடைத்தெரு எனக்கொள்ளலாம்.

அட்டாளைச்சேனைக் கிராமத்தில், பதினெட்டு ஏக்கர் நிலப்பரப்பில், கவினுறு கட்டிடங்களிலே நமது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கம்பீரமாக எழுந்து நிற்கின்றது. கலாசாலை வளவிலே நூற்றுக்குமதிகமாக ஒட்டு மாமரங்களும், தென்னைகளும், வாழைகளும் அழகு சேர்ப்பதுடன், பயனுந் தருகின்றன. வேப்ப மரங்களும், மருத மரங்களும் நிழல் விரித்து இன்புறுகின்றன. இவற்றின் மத்தியில் அழகாக அமைக்கப் பட்டுள்ள பூம்பொழில் தென்றிலே நறுமணம் கலந்து சுகிக்கின்றன.

ஆசிரிய மாணுக்கர் தங்குவதற்கு சகல வசதிகளுங் கொண்ட விடுதிகள் உள. தற்கால கட்டிடக் கலையின் வசதிகள் பொருந்தப் பரந்து கிடக்கும் விடுதிகள் தொடுத்துங் காணப்படுகின்றன. விளையாட்டு உற்சாகத்தினைப் பெருக்கும் முகமாகவும், தோழமைப் போட்டியினை ஊக்கும் முகமாகவும் இல்லங்களும் அமைக்கப் பட்டுள்ளன. இஸ்லாமிய உலகந் தந்த பெரும் கவிஞர்கள்-தத்துவ ஞானிகளாகிய இக்பால், உமர், ரூமி, கஸ்ஸாலி ஆகியோருடைய நாமங்களிலும், ஈழத்து முஸ்லிம் பெரியார்கள் சித்தி லெப்பை, காதர் (மறைந்த போதனாசிரியர்) மசூர் (முன்னாள் அதிபர்) ஆகியோருடைய நாமங்களிலும் விடுதிகளும், இல்லங்களும் பெயர் சூட்டப்பட்டுள்ளன.

எந்த ஒரு கலாசாலைக்கும் இல்லாத தனிச் சிறப்பாக, கவினும் தூய்மையும் ஒருங்கே அமைந்த கலாசார நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்துடன், ஆராதனை மண்டபம்-கட்புல செவிப்புல மண்டபம்- சலனப்பட கூடம்-விஞ்ஞான ஆய்வுகூடம்—நூல் நிலையம்-விளையாட்டரங்கு ஆகியனவும் பெற்ற நமது கலாசாலை முழுமை பெற்று விளங்குகின்றது. கூட்டுறவுச் சங்கக்கடை, சிற்றுண்டிச்சாலை, தொழிலாளர் விடுதி, தையற்காரார் அறை முதலியனவும் உள. இவை எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யும் சேவைகளாக அமைந்துள்ளன.

இங்கு உணவுப் பண்டங்கள் மலிவாகக் கிடைக்கின்றன. மின்சாரம், குழாய்நீர் வசதி ஆகிய நவீன வசதிகளும் கொண்டிருப்பதால், கிராமச் சூழலிலே நெடிதுயர்ந்து நிற்கும் ஒரு தனி நகரம் போல நமது கலாசாலை விளங்குன்கிறது.

# அதிபரும் போதனாசிரியர்களும்

ஜனாப். A. A. A. ஜிப்ரி : (அதிபர்)
இவர் களுத்துறையைப் பிறப்பகமாகக் கொண்டவர். உளவியல், ஆங்கிலம், சிங்களம் முதலிய பாடங்களைப் போதிக்கிறார்.

திரு. N. கனகேஸ்வரன்: (உதவி அதிபர்)
இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் முதலிய பாடங்களைப் போதிக்கிறார்.

ஜனாப். M. S. M. ஹரீஸ் (கலாமன்றத் தலைவர்; போதனாசிரியர் சங்கத் தலைவர்)
இவர் காலி மாநகரைச் சேர்ந்தவர். தமிழ், உளவியல், சரித்திரம் முதலிய பாடங்களைப் போதிக்கிறார்.

ஜனாப். M. M. A. வதூத் : (கூட்டுறவுச் சங்கத் தலைவர்)
இவர் தர்கா நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். படிப்பித்தல் முறை, மொழி, ஆங்கிலம் முதலியவற்றைப் போதிக்கிறார்.

ஜனாப். J. M. பதுருத்தீன் மௌலானா :
இவர் அட்டாளைச்சேனையைச் சேர்ந்தவர். இலக்கியம், எண்கணிதம் முதலிய பாடங்களைப் போதிக்கிறார்.

ஜனாப். A. M. M. கௌஸ் ஹாஜியார் : (கலாசாரப் பகுதித் தலைவர்.)
இவர் வெலிகாமத்தைச் சேர்ந்தவர். இஸ்லாம், சிங்களம் முதலிய பாடங்களைப் போதித்து வருகிறார்.

திரு. A. F. ராஜசிங்கம். : (முதலுதவி, சாரணர்படை பொறுப்பாசிரியர்)
இவர் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். சுகாதார உடல் நலவியல் - விளையாட்டு - தேகாப்பியாசம் முதலிய பாடங்களைப் போதித்து வருகிறார்.

ஜனாப். M. S. A அஸீஸ் :
இவர் திருகோணமலையைச் சேர்ந்தவர். சித்திரம் முதலிய பாடங்களை போதிக்கிறார்.

ஜனாப். M. H. M. ஜவ்பர் :
இவர் வெலிகாமத்தைச் சேர்ந்தவர். தொழிலுக்கு வழிகாட்டல், கல்வி, ஆங்கிலம் முதலிய பாடங்களைப் போதிக்கிறார்.

திரு. ஆர் .பாலசுப்ரமணியம் : (போதனாசிரியர் சங்கக் காரியதரிசி சாரணர் படைப் பொறுப்பாசிரியர்)
விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் முதலிய பாடங்களைப் போதிக்கிறார்.

திரு. புலேந்திரன் : பூமிசாஸ்திரம், ஆங்கிலம் முதலிய பாடங்களைப் போதிக்கிறார்.

திரு கே. சுந்தரம் : (இளைஞர் விவசாயக் கழகத் தலைவர்) விவசாயம், தோட்டவேலைமுதலிய பாடங்களைப் போதிக்கிறார்.

திரு C. சிவஞானப்பிள்ளை : சங்கீதம்

திரு. S. ராமலிங்கம் : (பகுதி நேரம்) கைப்பணி


திரு W. S. பொன்னுந்து : (பகுதி நேரம்)

ஜனாப். M. H. அக்பர் ஹஸன் : விடுதிக் கண்காணிப்பாளர்



அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையைப் பற்றி 16 பக்கங்கள் அடங்கிய தனி அநுபந்தம் ஒன்றினைச் சேர்க்கத் திட்டமிட்டிருந்தோம். நாம் எதிர்பார்த்த ஒத்துழைப்பினைச் சுறுசுறுப்புடனும், உவப்புடனும் அளிக்கச் சிலர் தயங்கினர். ஈழத்தில் வெளிவரும் ஒரே யொரு முஸ்லிம் கலை-இலக்கியச் சஞ்சிகையான 'இளம்பிறை' இந்த அசமந்தத்தினை அதிகம் பாராட்டாத போதிலும் கலாசாலைக் கட்டுரைகளுக்கு ஒதுக்கிய பக்கங்களை மனமின்றிச் சுருக்க நேர்ந்தது.

சிலர் மிகுந்த ஒத்துழைப்பினைத் தந்தார்கள். அவர்களுள் முதலாவதாகக் குறிப்பிடத் தக்கவர் பாணந்துறை
**ஏ. எஸ். எம். மொயின் சமீன்**
ஆவர்.



மற்றவர் கலாசாலைப் பாராளுமன்றப் பிரதமர்
**எம். எச். எம். மன்சூர்**
ஆவர்.

இருவருக்கும் நமது நன்றிகள்.

# நபி கதை

## பத்து இதழ்கள்

தமிழ் வாசகர்களுக்குப் பொதுவாகவும்,
முஸ்லிம் வாசகர்களுக்குக் குறிப்பாகவும்,
இலக்கிய விருந்தாக அமையும்
புதிய தொடர் அம்சம் ஒன்றினை
எழுதி உதவும்படி
மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்
'வீரகேசரி' ஆசிரியர் என்னை
வேண்டினார், நானும்
இசைவு தெரிவித்தேன்.

இதன் பயனாக 27 - 2 - 66 தொடக்கம்,
'வீரகேசரி' வாரவெளியீட்டில்
'இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்'
என்ற மகுடத்தில், நபி நாயகம் (ஸல்)
அவர்களுடைய வாழ்க்கையிலும்,
நேர்வழி வந்த கலிபாக்களுடைய
வாழ்க்கையிலும் நடைபெற்ற
நிகழ்ச்சிகளை மையமாக வைத்துக்
கதைகள் புனையலானேன்.
'தமிழ் இலக்கியத்திலே ஓர்
அருமையான புது முயற்சி' என்று
பலரும் அக்காலத்திற்
பாராட்டினார்கள். அத்துடன் இத்தகைய
கதைகள் எழுதும் ஒருவகை 'மோகம்'
முஸ்லிம் அறிஞர்களையும்-எழுத்தாளர்களையும்
பற்றிக் கொண்டது. இத்தகைய
போக்கு உருவாக்கப் பட்டதை
உன்னி மகிழ்ந்தேன்.
பின்னர், நபிநாயகம் (ஸல்) அவர்களுடைய
வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை
மட்டும் 'நபி கதைகள்' என்ற
மகுடத்தில் நூலாக்கும் எண்ணம்
மனதைக் கோலியது. அந்நூலுக்காக எழுதிய
நபிகதைகளுள் பத்து என் மீலாத்
வாழ்த்தாக இங்கு பிரசுரமாகின்றது.

எம். ஏ. ரஹ்மான்

*With best Compliments from*

**V. V. RAMASAMY PILLAI & SONS**

MANUFACTURERS OF

# R-V-G

BEEDIES

**47, Beach Road,**

**JAFFNA.**

T'grams: **ARVEIGIE** T'phone: **230**

## திருப்தி

நபி கதை: ஒன்று

பாத்திமா நாயகி நபிபெருமானாரின் இனிய மகளாராவர். அவர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைக் கணவராக அடைந்து இல்லறம் இயற்றினார்கள். இல்லறத்தில் எதிர்ப்பட்ட சகல பாரங்களையும் நாயகியார் பொறுமையுடன் தாங்கினார்கள்.

இஸ்லாத்தைப் பரப்ப இறுதி இறை தூதராக இவ்வுலகில் அவதரித்து, அதி உன்னத பதவியிலே அவர்கள் வீற்றிருந்தபோதுகூட, பிரிய மகள் பாத்திமா மிகச் சாதாரண குடிமகளாகவே வாழ்ந்து வந்தார். விசேட சலுகைகளையோ, ஆடம்பரங்களையோ அநுபவித்தாரல்லர். வீட்டுப் பணிகள் முழுவதையும் அவரே தமது கைப்படச் செய்தார்.

திரிகையிலே அரைத்து அவருடைய கைகளிலே கொப்புளங்கள் ஏற்பட்டன. தோற் பையிலே தண்ணீர் சுமந்து, மார்பகத்தில் கயிறு அழுத்திய தழும்பு ஏறியது. வீட்டினைத் துப்புரவு செய்து ஆடைகள் அழுக்காயின.

இல்லறத்தைச் செவ்வனே இயற்ற நாயகியார் அல்லும் பகலும் அநுபவிக்கும் இன்னல்களையெல்லாம் பார்த்துப் பெருமானாரின் மருகரான அலீ (ரலி) மனம் புழுங்குவார்கள். ஒரு வேலையாள் இருப்பின் பாத்திமாவுக்கு உதவியாக இருக்குமேயென எண்ணுவார்கள். ஆனால், அவர்களுடைய பொருளாதார நிலையோ இந்த வசதியை ஏற்படுத்திக் கொள்ள இடந்தரவில்லை. இதனை உன்னி ஹஸ்ரத் அலீ (ரலி) வருந்தினார்கள்.

மதீனமாநகரே அக்காலத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் தலைநகராகத் திகழ்ந்தது. இஸ்லாமிய எல்லை விஸ்தரிப்பில் அடிக்கடி யுத்தங்களும் நிகழ்ந்தன. யுத்த வெகுமதியாகப் பொன்னும் பொருளுங் கிடைத்தன. கைதிகளும் கிடைத்தனர். அவற்றை நபிகள் நாயகம் (ஸல்) தோழர்களுக்கும் எளியவர்களுக்கும் பகிர்ந்தளிப்பார்கள்.

ஒரு சமயம் பெருமானாரிடம் கைதிகள் சிலர் கொண்டு வரப்பட்டனர். இதையறிந்த ஹஸ்ரத் அலீ (ரலி) தம் உத்தம பத்தினியும், பெருமானாரின் பிரிய மகளுமான பாத்திமா நாயகியை அழைத்து, தந்தையிடஞ் சென்று தம்முடைய நிலையை விளக்கி, ஒரு யுத்தக் கைதியை வேலையாளாகப் பெற்று வருமாறு பணித்தார்கள். தமது நாயகரின் வேண்டுதலுக்கு இணங்க பாத்திமா நாயகியும் பெருமானாரின் இருப்பிடஞ் சென்றார்கள். தமக்கென வாழா இயல்பினரான பாத்திமா நாயகி (ரலி) மாதர்க்குரிய அருங்குணங்களான அச்சம் - மடம் - நாணம் - பயிர்ப்பு ஆகியன நிரம்பப் பெற்றவராகத் திகழ்ந்தார். இதனால், தம் தந்தை முஹம்மது (ஸல்) அவர்களிடம் வந்த விடயத்தைக் கூறக் கூச்சப்பட்டவராக வீடு திரும்பினர்.

ரசூலே கரீம் முஹம்மது (ஸல்) தமது பிரிய மகளார் தம் சமுகம் வந்ததையும், யாதொன்றும் பேசாது திரும்பியதையும் அறிந்தார்கள். மறுதினமே மகளாரின் இருப்பிடஞ் சென்று மேற்படி செயலுக்கான காரணத்தை உசாவினர்கள். அப்பொழுதும் பாத்திமா நாயகியார் மௌனமே சாதித்தார்.

நபி பெருமானருக்கும், அவர்தம் பிரிய மகளாருக்குமிடையில் மௌனச் சுவர் வளர்வதை அவதானித்த ஹஸ்ரத் அலீ (ரலி) அதனைக் கலைத்து, 'அல்லாஹ்வின் தூதரே! திரிகையில் அரைப்பதாலும், தண்ணீர் சுமப்பதாலும் பாத்திமாவின் கைகளிலும், மார்பகத்திலும், தழும்புகள் படிந்துவிட்டன... நேற்றைய தினம் தங்களிடம் கைதிகள் வந்திருந்தார்கள். அவர்களுள் ஒருவரை வேலையாளாகப் பெற்று வந்தால் நன்றாக இருக்குமே என்று அவரிடங் கூறி நானே அனுப்பி வைத்தேன்...' என நடந்தேறிய வர்த்தமானத்தைச் சாற்றினர்கள்.

அலீ (ரலி) கூறியவற்றை அமைதியாகச் செவி மடுத்துக் கேட்ட பெருமானார் (ஸல்) மகளைப் பார்த்துப் பொறுமையாக இருக்கும்படி கூறி, முன் வந்த நபி மார்களின் பொறுமையையும் சீல வாழ்க்கையையும் உதாரணமாகக் காட்டி உபதேசித்தார்கள்.

> 'மகளே பாத்திமா! பொறுமையாய் இரு. அல்லாஹ் ஒருவனுக்குப் பயந்து, அவன் கட்டளைகளுக்குக் கீழ்ப் படிந்து நடந்துகொண்டு, வீட்டுப் பணிகளையும் ஒழுங்காகச் செய்வீராக!...

துயிலுமுன் தியானத்திலீடுபடுவீராக! தியானம் வேலைக்காரன் ஒருவனைக் காட்டிலும் சிறப்பு வாய்ந்தது.'

நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் உபதேசத்தைக் கேட்ட அருமை நபியின் திருமகளார் பாத்திமா நாயகி (ரலி) அவர்கள் முக மலர்ச்சியுடன், 'அல்லாஹ்வின் ரசூலே! நான் அல்லாஹ்வையும் அவனது தூதரையுங் கொண்டு திருப்தியடைகின்றேன்' என்றார் நிறைவுடன்.

○

## பொறுமை

நபி கதை: இரண்டு

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிகாலையிலேயே தொழுகைக்குச் செல்வது வழக்கம்.

கிழவி ஒருத்திக்கு அவர்கள் நடாத்திய இஸ்லாமிய பிரசாரம் அறவே பிடிக்கவில்லை. இதனால், பெருமானாரின் மீது பகைமை பாராட்டினாள். தினந்தோறும் குப்பையையும், சாம்பலையுங் கரைத்து அவர்கள் தலைமீது கொட்டி மகிழ்ந்து வரலானாள்.

ஆனால், இறுதி இறை தூதர் நபி (ஸல்) அவர்கள் இப்புன்செயலைப் பொறுமையுடனேயே சகித்தார்கள். அவளைச் சினக்கவுமில்லை; வெறுக்கவுமில்லை.

ஒரு நாள். திடீரென்று கிழவியின் 'அபிஷேகம்' கிட்டவில்லை. மறுநாளும் இல்லை. அதற்கு அடுத்த நாளும் இல்லை. பெருமானாருக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

கிழவியைப் பற்றி விசாரித்தார்கள். அவள் நோய் வாய்ப் பட்டிருப்பதை அறிந்தார்கள். உடனே அவளுடைய வீட்டிற்கு விரைந்தார்கள். அக்கிழவிக்கு மிக்க ஆறுதல் மொழி கூறியதுடன், அவளுடைய உடல் நலத்திற்காகப் பிரார்த்தித்தார்கள்.

எம்பெருமான் நபி (ஸல்) அவர்களின் பொறுமையையும் அருளையும் கிழவி நேரிலே கண்டாள். தன் சிறுமைச் செயலுக்காக மனம் மிக வருந்தினாள்.

அவளுடைய விழிகள் நீர்த்தாரை சொரிந்தன.

○○

## தத்துவம்

நபி கதை: மூன்று

முஹம்மது நபி (ஸல்) பல போர்க் களங்களைப் பார்த்திருக்கிறார்கள். பல போர்களிலே அஞ்சா நெஞ்சினராக அறஞ் சேர்ந்த மறச் செம்மலாகப் பங்கு பற்றியிருக்கின்றார்கள். வெற்றியைக் கண்டு மமதை கொள்வதோ, தோல்வியைக் கண்டு சோர்வு கொள்வதோ அவர்களுடைய சுபாவமன்று. நெஞ்சை உருக்கும் எத்தனையோ நிகழ்ச்சிகளை நெஞ்சத் திடத்துடன் ஏற்றுக் கொண்டார்கள்.

யுத்த களத்திலே கூடச் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் நிலைநாட்டிய ஒரு நிகழ்ச்சி உஹத் யுத்த களத்திலே நிகழ்ந்தது.

உஹத் யுத்த களமே இரத்தக் காடாகக் காட்சி தந்தது. கால் வேறு - தலைவேறு - அங்கங்கள் வேறாக்கப்பட்ட, இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முஸ்லிம் மாவீரர்களுடைய பிணக் குவியல்! உஹத் யுத்தத்தின் இறுதி வெற்றியின் விளிம்பிலே நின்ற முஸ்லிம்கள் வெற்றியின் சோதனையாக, அன்று கடுஞ் சேதத்திற்குள்ளானார்கள். இந்தச் சேதங்களின் சிகரமாக அமைந்தது ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மரணம்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாவர். பல்வகையிலும் நபி பிரானுக்கு உதவியாக இருந்தவர். திட நெஞ்சினர். உத்தம செயல் வீரர். பத்று யுத்தத்தின்போது, குறைஷிக் காபிர்களின் பிரசித்திபெற்ற தலைவனான உத்பா பின் ரபீஆ என்பானைத் தன்னந் தனியாக எதிர்த்து வென்றவர். அவர் வீரமரணம் அடைந்த பின்னர் அவருடைய உடலுக்கு நடந்த சிதைவு கோரக் காட்சியாகும். அதற்குக் காரணமாக இருந்தவள் ஒரு பெண். அவள் பெயர் ஹிந்து. குறைஷிக் காபிர் தலைவர்களுள் ஒருவரான அபூஸுப்யானின் மனைவி. பத்று யுத்தத்தில் குறைஷிக் காபிர்களின் தலைவர்கள் பலர் கொல்லப்பட்டார்கள். மாண்டு போனவர்களுக்காகப் பழிவாங்க வேண்டும் என்ற கூட்டம், போரிலே உயிர் துறந்தோரின் சுற்றத்தாரையுங் கூட்டிவந்து அபூஸுப்யானிடமே முறையிட்டது. அவரும் இணங்கவே உஹத் போரிலே பழிவாங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. பழிவாங்கவேண்டுமென்பதில் மிகவுந் தீவிரமானவள் ஹிந்து. பெருமானார் (ஸல்) அவர்களின் போதனைகளும், இஸ்லாமும் பரவுவதை அறவே வெறுத்

தாள். அத்துடன், வஞ்சந் தீர்க்கும் வெறியும் அவளுடைய மனத்திலே உறைந்திருந்தது.

உஹுத் யுத்த களத்திலே ஹம்ஸா (ரலி) இறந்து பட்டுக் கிடக்கும் இடந்தேடி வந்தாள். ஹம்ஸா (ரலி) வின் பிணத்தைச் சிதைத்தாள். கை - கால் - காது ஆகிய அவயவங்களைத் துண்டித்தாள். கண்களைத் தோண்டி எறிந்தாள். நெஞ்சைப் பிளந்து ஈரலை எடுத்தாள். பழிவாங்கும் வெறியில் அதனைத் தின்ன முயன்ருள். முடியாது போகவே துப்பினுள். ஹம்ஸா (ரலி) அவர்களின் சடலம் இந் நிலையிலே கோரப்பட்டிருந்த காட்சியைக் கண்ணுற்று பெருமானுரும், நாயகத் தோழர்களும் வருந்தினுர்கள்.

ஹம்ஸா (ரலி) அவர்களின் மரணச்செய்தி மதீனு வெங்கும் பரவியது. பெருமானுரின் அத்தையாரும், ஹம்ஸா (ரலி) வின் சகோதரியுமான ஸபிய்யா அம்மையார் தம் சகோதரரைக் காண யுத்த களத்திற்கு விரைந்தார்கள். ஸபிய்யாவுடன் பெண்கள் கூட்டமும் தொடர்ந்தது.

ஹம்ஸா (ரலி) அவர்களின் பிரேதத்தை நோக்கிப் பெண்கள் வருவதை அவதானித்த பெருமானுர் (ஸல்) பக்கத்தில் நின்ற ஸுபைரை நோக்கி, பெண்கள் யாரையும் இங்கு வர விடாதவாறு நிறுத்தும்படி பணித்தார்கள்.

நாயகத்தின் கட்டளையை நிறைவேற்ற ஸுபைர் முன்னுக்கு விரைந்தார். பெண்களைத் தடுத்து நிறுத்தினுர். இப் பெண் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி வந்த ஸபிய்யா ஸுபைருடைய தாயாராவர். அவர் தம் மகனைத் தள்ளி விட்டு முன்னேற விழைந்தார்.

'தாயே! பெண்கள் அங்கு செல்லக்கூடாதென்று உத்தர விட்டுள்ளார்கள். இது பெருமானுரின் கட்டளை' என்று ஸுபைர் அமைதியாகச் சொன்னுர்.

இந்த வாசகம் கேட்டு அங்கேயே தரித்த ஸபிய்யா அம்மையார், 'மகனே, என் சகோதரரின் அவல நிலையை நான் அறிவேன். இருப்பினும், யுத்தகளத்திலே நான் அழவோ, அவலக் குரல் எழுப்பவோ வரவில்லை. சகோதரரின் பிழைகளைப் பொறுக்குமாறு இறைவனிடம் இறைஞ்சி விட்டு, அவருக்குக் கபனிட (பிணத்தை ஆடையால் போர்த்துதல்) வந்திருக்கின்றேன். கபனுக்கான போர்வைகளையுங் கொண்டு வந்திருக்கின்றேன்' என்று தெளிவாகவும், அமைதியாகவும் சொன்னுர்.

தாயார் தெரிவித்த விபரத்தை ஸுபைர் பெருமானுரிடங் கூறினுர். பெருமானுர் ஸபிய்யா அம்மையார் வருவதற்கு அனுமதி வழங்கினுர்கள். பிணக் குவியல்களின் மத்தியிலே, உருக் குலைக்கப்பட்டு

அலங்கோலமாகக் கிடந்த தன் சகோதரரின் சடலத்தைக் கண்டார்கள். துயரம் மேலிட இறைவனிடம் பிரார்த்தித்தார்கள். தம்முடன் கொண்டு வந்த கபனிடுவதற்கான இரு போர்வைகளையுங் கொடுத்து விட்டு மீண்டார்கள்.

ஹம்ஸா (ரலி) அவர்களுக்குப் பக்கத்தில் மதீனு வாசியான ஹஸ்ரத் ஸுஹைலும் சித்திரவதை செய்யப்பட்டு, ஹம்ஸா (ரலி) அவர்களைப் போன்றே அலங்கோலமாகக் கிடந்தார். ஹம்ஸா (ரலி), ஸுஹைல் (ரலி) ஆகிய இருவரின் பிரேதங்களுக்கும் கபன் இட்டு நல்லடக்கஞ் செய்யும்படி பெருமானுர் பணித்தார்கள்.

ஸபிய்யா தம் சகோதரருக்காகக் கொண்டுவந்து கொடுத்த இரண்டு போர்வைகளும் பரிசீலனை செய்யப்பட்டன. அப்பொழுது ஒன்று பெரியதாகவும், ஒன்று சிறியதாகவும் இருக்கக் காணப்பட்டது. தன் சிறிய தந்தையார் என்ற காரணத்தினுல் ஹம்ஸா (ரலி) வின் பிரேதத்தைப் பெரிய போர்வையால் மூடும்படி கூற நபி பெருமானுரின் மனம் ஒப்பவில்லை. அல்லாஹ்வின் சித்தத்தை அறிய சீட்டுப் போட்டுப் பார்த்தார்கள். ஹம்ஸா (ரலி) வுக்குச் சிறிய போர்வையே கிடைத்தது.

ஹஸரத் ஸுஹைல் (ரலி) அவர்களைக் கபனிட்டு நல்லடக்கஞ் செய்த பின்னர் ஹம்ஸா (ரலி) அவர்களின் உடல் சிறிய போர்வையால் மூடப்பட்டது. அவர்களுடைய உயரத்திற்குப் போர்வை போதவில்லை. சிறிதாக இருந்தது. கால் பகுதி மறைக்கப்பட்டால் முகம் மறைக்கப்படவில்லை. முகம் மறைக்கப்பட்டால் கால் மறைக்கப்படவில்லை. ஈற்றில், முகத்தைத் துணியால் மறைத்து, கால்கள் இலைதழைகளால் மறைக்கப்பட முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

மனம் வெதும்பிய அந்நிலையிலும், அந்தக் கோர யுத்த களத்திலும், இஸ்லாம் போதிக்கும் சமத்துவம் - சத்தியம் - சகோதரத்துவம் ஆகியவைகளைக் கடைப்பிடிப்பதில் பெருமானுர் சிறிதும் தயங்கவில்லை.

ooo

## உவமை

நபி கதை: நான்கு

இறுதி இறை தூதர் முஹம்மது நபி நாயகம் (ஸல்) தமது போதனைகள் மக்கள் மனத்திலே ஆழப் பதிய வேண்டும் என்பதற்காக, ஈசா நபி (அலை) யைப் போன்று தக்க உவமைகளை

யும் ஆங்காங்கு நயமுடன் கையாண்டிருக்கிருர்கள். கதைக் கரு ஒன்றினைச் சில வேளைகளில் அவ்வுவமைகள் கொண்டிருந்தன.

திருமக்காவிலுள்ள கஃபத்துல்லாஹ் முஸ்லிம்களுக்கு மிகவும் புனிதமானது. ஹஜ் பெரு நாளை அண்டி, பல்லாயிரக் கணக்கான இஸ்லாமியப் பெருமக்கள் அங்கு கூடுவது வழக்கம். கஃபத் துல்லாவை முன்னேக்கித் தொழ வேண்டும் என்ற அல்லாஹ்வின் கட்டளை இறங்கியதும் நபி பெருமானுர் அதனை வெளியிட்டார்கள்.

ஆனுலும், அண்ணலாரின் தோழர்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது அவர்கள், 'அல்லாஹ்வின் திருத்தூதரே! வெள்ளிக் கிழமை தோறும் நடைபெறும் ஜுூம்ஆ தொழுகைக்கு இங்குள்ள சகலரும் வந்தால், இந்த மஸ்ஜிதில் இடமில்லாதிருக்கும் பொழுது, ஹஜ் காலத்தில் உலகின் நாலு பகுதிகளிலுமிருந்து இங்கு குழுமும் இலட்சக் கணக்கான மக்கள் இங்கு தமது ஜுூம்ஆ தொழுகையை நிறைவேற்றக் குழுமினுல், இப்பள்ளியிலுள்ள இடவசதி போதுமா?' எனக் கேட்டார்கள்.

தமது தோழர்களுடைய சந்தேகங்களைப் பெருமானுர் பின்வரும் அற்புத உவமை ஒன்றின் மூலம் விளக்கினுர்கள்.

> பெண் ஒருத்தியினுடைய வயிறு அவளுடைய வேளைக்கேற்ற ஆகாரத்தைக் கொள்ளக் கூடியதாகவே இருக்கின்றது. ஆயினும், அவள் சூலுற்றுல், அவளுடைய வயிறு அந்தச் சிசுவுக்கும் ஆகாரத்திற்கும் இடங் கொடுக்கிறதல்லவா? அன்றியும், பெண்கள் சிலருக்குச் சில சமயங்களில் இரண்டு மூன்று சிசுக்கள் கருவுற்று விடுகின்றன, அல்லவா? அப்பொழுதும் அவளுடைய வயிற்றில் அச்சிசுக்களுக்கும், அவளுடைய ஆகாரத்திற்கும் போதுமான இடம் இருக்கிறதல்லவா? இவ்வளவு அற்புதங்களையும் நிகழ்த்தும் அல்லாஹ் வினுல் ஜுூம்ஆ தொழுகைக்கு இப்பள்ளியில் இடமளித்தல் அசாத்தியமான காரியமா?

பெருமானுரின் கூற்று உவமைச் சிறப்புடையது மட்டுமன்று; நித்திய உண்மையாகவும் வாழ்கின்றது. கஃபத்துல்லாஹ் வெனும் அச்சிறு பள்ளிவாயிலும், அதைச் சுற்றியுள்ள மைதானமும் ஆண்டு தோறும் இலட்சக்கணக்கான விசுவாசிகளுக்கு இடமளித்துக் கொண்டிருக்கின்றது.

OOOO

# மூவர்

நபி கதை: ஐந்து

மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவி என்னும் பள்ளியில் முஹம்மது நபி(ஸல்)அவர்கள் தம் தோழர்களுடன் அமர்ந்திருந்தார்கள்.

அப்பொழுது தோழர்களை விளித்து, 'உங்கள் ஒவ்வொருவருக்கும் சகோதரர் மூவர் உண்டென்பதை அறிவீர்களா?' எனக் கேட்டார்கள்.

'சகோதரர் மூவரா? அல்லாஹ்வின் திருத்தூதரே! அவர்கள் யாவர்?' என விநயமுடன் வினவினார்கள்.

அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"ஒரு மனிதன் மரணப்படுக்கையிற் கிடந்தான். தான் இறக்கப் போவதை அவன் உணர்ந்தான். அப்பொழுது தன் சகோதரர் மூவரையும் அழைத்துப் பேச விரும்பினான். அதனைப் பூர்த்தி செய்ய விழைந்தனன். 'என் நிலை உனக்குத் தெரியும் சகோதரா! இந்த வேளையில் நீ எப்படி எனக்கு உதவுவாய்'' என முதலாவது சகோதரனை அழைத்துக் கேட்டான்.

''அவன் ஒரு கணம் யோசித்துவிட்டு, 'உங்களுக்குத் தேவையான வைத்திய சிகிச்சைகள் முழுதும் செய்விப்பேன். இறை விருப்பப்படி நீங்கள் இறையடி சேர்ந்தீர்களானால், உங்கள் சடலத்தை உரிய முறைப்படியும், அழகிய வகையிலும் நீராட்டி, நறுமணம் பூசி, கபன் (புதிய ஆடை) அணிவித்து, என் தோழின் மீது சுமந்து சென்று, உங்களுடைய ஜனாசாவை நல்லடக்கஞ் செய்வேன். அதன் பின்னரும் உங்களுடைய நற்குணங்களைப் பாராட்டி உலகத்தாருக்குப் பேசிக்கொண்டேயிருப்பேன்' எனப் பதிலளித்தான்.

''அதன் பின்னர், இரண்டாம் சகோதரனை அழைத்து, முதலாமவனிடம் கேட்ட அதே கேள்வியைக் கேட்டான்.

''அவனும் சற்று யோசித்துவிட்டு, 'நீங்கள் வாழும்வரை உங்கள் கூடவே இருப்பேன். அல்லாஹ் கிருபையால் நீங்கள் இறைவனடி சேர்ந்தால், நம் தொடர்பு அற்றுவிடும். நான் வேறிடஞ் சென்று வாழ்வேன்' எனக் கூறினான்.

“அதேபோன்று மூன்றுவது சகோதரனையும் தனியாக அழைத்து விசாரித்தான்.

“அப்பொழுது அவன், ‘நான் இப்பொழுது உங்களுடன் இருப்பது போலவே, நீங்கள் இறந்த பின்னரும் உங்கள் கப்றில் உங்கள் கூடவே இருப்பேன். இறுதித் தீர்ப்பு நாளிலும் உங்கள் கூடவே இருப்பேன். நீங்கள் உலகிலே செய்த நன்மை—தீமைகள் யாவும் நீதித் தராசில் நிறுக்கப்படும் பொழுது, நான் நன்மைத் தட்டிலே அமர்ந்து உங்கள் நன்மைகள் பெரியன என நிரூபிப்பேன்’ எனக் கூறினுன்.”

இதனைச் சொல்லி நபிநாயகம் அவர்கள் தமது பேச்சை நிறுத்தினுர்கள். தோழர்களுக்கு சகோதரர் மூவர் பற்றிய உவமை உடன் விளங்கவில்லை. எனவே, பெருமானுர் மீண்டும் வருமாறு விளக்க வேண்டியதாயிற்று.

“முதலாவது சகோதரன் உங்கள் உற்றுர் உறவினர். இரண்டாவது சகோதரன் உங்கள் பணமும் ஐசுவரியங்களும். மூன்றுவது சகோதரன் உங்களுடை அமல் (நற்செய்கைகள்).”

இப்படி விளக்கிய பின், ‘இந்த மூன்று சகோதரர்களுள் நமக்கு மிகவும் வேண்டிய சகோதரன் யார்?’ என நாயகத் தோழர்களிடம் வினவினுர்கள்.

அப்பொழுது, ‘சந்தேகத்திற்கு இடமின்றி மூன்றும் சகோதரனே மிகவும் பயனுள்ளவன்’ என அமைதியாக அவர்கள் பதிலளித்தார்கள்.

ooooo

## தீர்ப்பு

நபி கதை: ஆறு

நபி பிரான் (ஸல்) அவர்கள் மிக இளவயதிலிருந்தே நாணயத்தைச் சத்தியமாக ஒழுகி வரலானுர்கள். எனவேதான், அவர்கள் ‘அல் அமீன்’ (நம்பிக்கைக்குரியவர்) என மக்கா வாசிகளால் அழைத்துப் பாராட்டப் பட்டார்கள். நபித்துவம் கிடைப்பதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த ஒரு சம்பவம் அவர்களுடைய நாணயத்திற்கும் சமரச சாதுர்யத்திற்கும் எடுத்துக் காட்டாக அமைந்தது:

மக்காவிலுள்ள புனித ஸ்தலமாம் கஃபா வெள்ளத்தால் பழுதடைந்திருந்தது. குறைஷிகளும் மற்றுங் குலத்தாரும் பொருள் சேகரித்து, பழைய சுவர்களுக்குப் புதிய சுவர்கள் எழுப்பிப் புனர்நிர்மாண வேலைகளை இயற்றினர். ஆனால், கஃபதுல்லாஹ்வின் கட்டட வேலைகள் முடிவடையுந் தறுவாயில், சச்சரவு ஒன்று அவர்கள் மத்தியிலே தோன்றியது.

'ஹஜ்றுல் அஸ்வத்' என்னுங் கறுப்புக் கல்லை அக்கட்டட முகப்பில் யார் பதிப்பது என்பது பற்றியே சர்ச்சை எழுந்தது. ஹஜ்றுல் அஸ்வத் புனிதமான கல். அது பன்னெடுங் காலமாகவே நபிமார்களினாலே பதிப்பிக்கப்பட்டு வந்தது. குறைஷிகளின் நான்கு பெருந்தலைவர்களும் தனித் தனியே அதைப் பதிக்கும் உரிமை தமக்கே தரப்படவேண்டுமெனப் பெருமை பாராட்டினார்கள். ஒவ்வொரு தலைவரும் தம்முடைய பெருமையையும் கௌரவத்தையும் விட்டுக் கொடுக்க முடியாதென முரண்டு பிடித்தார்கள். சர்ச்சை நீண்டதேயொழிய சமரசம் பிறக்கவில்லை. நாளும் அஸ்தமித்து, இரவு நீண்டது.

இப்பிரச்சினையை நம்பிக்கையும் நாணயமுமுள்ள ஒருவரிடம் விடுவதென்றும், அவருடைய சமரசத் தீர்ப்புக்கு இசைய நடப்பதென்றும் நான்கு தலைவர்களும் தீர்மானித்தார்கள்.

'அல் அமீன்' எனச் சிறப்புற்று விளங்கும் முஹம்மது என்னும் வாலிபரே நாணயமாகவும், நடுநிலைமையாகவும், தீர்ப்பளிக்க வல்லவரென நான்கு தலைவர்களும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டார்கள்.

மறு நாட் காலையில் நான்கு தலைவர்களும் முஹம்மது அவர்களைச் சந்தித்துத் தமது பிரச்சினைக்குத் தீர்ப்பளிக்கும்படி வேண்டினர். அவர்களை ஒரு துப்பட்டி கொண்டு வரும்படி பணித்தார்கள். அத் துப்பட்டியிலே தமது திருக்கரங்களினால் ஹஜ்றுல் அஸ்வத் கல்லை எடுத்து வைத்தார்கள். ஒவ்வொரு பெருந்தலைவரையும் துப்பட்டியின் ஒவ்வொரு மூலையிற் பிடித்துத் தூக்கும்படி பணித்தார்கள். அவ்வாறு நான்கு தலைவர்களாலும் தூக்கிவரப்பட்ட அக் கல்லை, அவர்களே கஃபாவின் சுவரிலே பதித்தார்கள். இத் தீர்ப்பு நான்கு தலைவருக்கும் திருப்தியாக அமைந்தது. அத்துடன், மக்காவாசிகளும் மகிழ்ந்தார்கள்.

○○○○○○

# தூது

நபி கதை: ஏழு

முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் மதீனாவிலே வாழ்ந்து கொண்டிருந்த பொழுது, மக்கமா நகரத்தில் வாழ்ந்து கொண்டிருந்த குரைஷிகளின் தூதாக ஒருவன் வந்தான். அவன் ஓர் அடிமை. பெயர் அபூராபிஃ. பெருமானாரின் சமுகத்திற்கு வந்து தன்னை அறிமுகப்படுத்தினான். அவன் இஸ்லாத்தை எதிர்ப்பவர்களுள் முன்னணியில் நிற்பவன்.

இப்பொழுது மக்கத்தின் குறைஷிகளின் தூதாகப் பெருமானாரின் சன்னிதானத்தில் நிற்கின்றான். நிமிர்ந்து, பெருமானாரின் திருவதனத்தைப் பார்க்கின்றான். அக் கணமே அவன் மனத்திலே ஒரு மாறுதல் நிகழ்கின்றது. அவர்கள்மீது பக்தி மீதூர, பிரக்ஞை இழந்து கீழே விழுகின்றான்.

மயக்கந் தீர்ந்து எழுந்த பொழுது, பெருமானார் தன்னைக் கவர்ந்து விட்டதாகவும், தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகவும், இனி, தான் குறைஷிக் காபிர்களிடம் திரும்பிப் போக விரும்பவில்லை யென்றும் அபூராபிஃ விளக்கினான்.

இவற்றை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அல்லாஹ்வின் இறுதித் தூதராம் எம் பெருமான் (ஸல்) அவர்கள் அபூராபிஃவை நோக்கி வருமாறு மொழிந்தார்கள்:

> "நான் வாக்குறுதிக்கு மாறாக நடக்கும் வழக்கத்தினல்லன். தூதுவனாக வந்த நீர், தூதுவனாக மக்கா செல்லக் கடவீர். அங்கு சென்று உமது தூதை நிறைவேற்றிய பின்னரும், உமது உறுதி நிலைத்திருக்குமேயானால் மீண்டும் நீர் மதீனாவிற்கு வரலாம்."

இஸ்லாத்திற்குத் திரும்பிய அவனை ஏற்றுக் கொள்வதைப் பார்க்கிலும், தூதுவர்களைக் கௌரவித்துத் திருப்பியனுப்பும் மரபினைப் பேணுதலே தலையாய கடமை என்பதை எம்பெருமானார் (ஸல்) நிறுவினார்கள். உறுதி இருக்குமானால், தூதினை முடித்து அபூராபிஃ மதீனா திரும்பி வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வான் என எதிர்பார்த்தார்கள். அவர்களுடைய நம்பிக்கை வீண் போகவில்லை!

OOOOOOO

# அருள்

நபி கதை: எட்டு

பெருமானுர் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் தமது நாற்பதாம் வயதில் இஸ்லாமியப் பிரசாரஞ் செய்யத் தொடங்கினுர்கள். அப்பொழுது மக்கா வாசிகளினுல் அவர்கள் அநுபவித்த இன்னல்கள் கொஞ்சமன்று. குறைஷிக் குலத்தவர்களே எதிர்த்தார்கள். மக்கா நகரில் நிம்மதியாக வாழமுடியவில்லை. இருப்பினும், பொறுமைக் குன்றென அவர்கள் தமது பிரசாரத்தைத் தொடந்தார்கள்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மக்கமா நகரை விட்டு வெளியேறி, பக்கத்திலுள்ள தாயிப் என்னும் நகரத்தில் சிறிது காலம் வாழ்ந்தார்கள். அப்பொழுதும் தம்முடைய இஸ்லாமியப் பிரசாரத்தை தொடர்ந்து நடத்தினுர்கள். தாயிப் நகரத்தாரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. சிறுவர்களை ஏவி பெருமானுருக்கு கல்மாரி பொழிந்தார்கள். இதனுல், நபி (ஸல்) அவர்களின் திருப்பாதங்களில் இரத்தம் வழிந் தோடியது. இரு கால்களும் வலுவிழந்தன. ஒரு தோட்டத்தின் மருங்கில் அமர்ந்தார்கள்.

இவற்றையெல்லாம் நேரிலே பார்த்துக் கொண்டு பெருமானுருடன் இருந்த நாயகத் தோழர் ஜைத் என்பவர், "நாயகத் திலகமே! இந்த அநியாயக்காரர்களைச் சபியுங்கள்" என வேண்டிக் கொண்டார்.

"ஜைத்! நான் இவர்களைச் சபிக்கமாட்டேன்.... 'இறைவா, இவர்களுக்கு நல்ல அறிவைக் கொடு' என்றுதான் பிராத்தித்துக் கொண்டிருக்கின்றேன். எனப் பொறுமையுடன் கூறினுர்கள்.

எதிரிகளுக்குக்கூட அருளும் அந்த அதியற்புத பாசம் அவர்களுடைய வார்த்தைகளிலே மிளிர்ந்தது.

## அதிதி

நபி கதை: ஒன்பது

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தமது நண்பர்கள் சூழ வீற்றிருந்த ஒரு சமயம், மக்காவைச் சேர்ந்த அறபிகள் சிலர் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்களனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள்—காபிர்கள்! விருந்தாளியாக எவர் வந்தாலும் — அவர் தீயவராக இருந்தாலுஞ் சரியே—அவரை உபசரிக்கும் வழக்கத்தைப் பெருமானார் கொண்டிருந்தார்கள். பெருமானாரின் வழக்கங்களையும் செயல்களையும் அப்படியே பின்பற்றிப் பயிலும் இயல்பினர் தோழர்கள். எனவே, அந்த விருந்தாளிகளான மக்காவாசிகளை ஆளுக்கொருவராகப் பொறுப்பேற்றனர். ஆனால், ஒரேயொருவனைமட்டும் யாருமே பொறுப்பேற்க முன்வரவில்லை. 'அவன் மகா கொடியவன்; பெருந்தீனிக்காரன்' என்பன தோழர்களுடைய தயக்கத்திற்குக் காரணிகள்.

அவனை உபசரிக்கும் பொறுப்பை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஏற்று, தானே அவனுக்குப் பணிவிடை செய்யப் போவதாக அறிவித்தார்கள்.

தோழர்கள் எல்லாரும் விருந்தாளிகளுடன் தத்தமது இல்லங்கள் ஏகினார்கள். பெருமானாரும் தமது அதிதியான அம்முரட்டு அறபியைத் தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

வயிறு நிறைய உணவு படைத்தார்கள். அவன் கொடியன் மட்டுமல்லன்; வெகு போஜன பிரியனுங்கூட, ஏனையோருக்கு வைத்திருந்த ஆகாரங்களையுஞ் சேர்த்துப் புசித்தான். அவன் படுப்பதற்காக அறை ஒன்றை ஒதுக்கி, நல்ல விரிப்பும் கொடுத்து அன்புடன் படுக்கவைத்தார்கள் நபி (ஸல்) அவர்கள்.

மிதமிஞ்சிய உணவால் அவனுக்கு அஜீரணக் கோளாறு ஏற்பட்டது. இரவு முழுவதும் அறையின் பல பகுதிகளிலும் மலங் கழித்தான். வெட்கந் தாழாது விடியுமுன்னே எழுந்து அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டான் அந்த அவசரத்தில் தன் விலையுயர்ந்த வாளை அவ்வறையிலே விட்டுச் சென்றுவிட்டான்.

அதனைப் பற்றிய ஞாபகம் வந்ததும், அவன் பெருமானாரின் இல்லம் நோக்கி வந்தான். தான் செய்த செய்கையால் ஏற்பட்ட அவமானமும், வெட்கமும் அவன் நடையைப் பின்

தள்ளின. மெதுவாகப் பதுங்கிப் பதுங்கி வந்தான். அங்கு அவன் கண்ட காட்சி அவனை வியப்பிலாழ்த்தியது.

பெருமானாரைச் சுற்றி நண்பர் நிற்கின்றார்கள். அக்காட்டறபியினால் அசௌசப்படுத்தப்பட்ட துணிகளைப் பெருமானார் கழுவிக் கொண்டிருக்கிறார்கள். நண்பர்கள் தாங்கள் அப்பணியைச் செய்ய விழைந்த பொழுது, தமது விருந்தாளியின் பணிவிடைகளனைத்தையும் தாமே செய்வதாக அறிக்கையிட்டதை ஞாபகப்படுத்தி, அவர்களைத் தடுத்துத் தாமே மேற்படி பணியை இயற்றினார்கள்.

இஸ்லாம் மார்க்கத்தை மானிடருக்குப் போதிப்பதற்கென்றே இறைவனால் அனுப்பப்பட்ட இறுதி நபி — கையசைத்தால் இவர் இடும் பணியைச் செய்ய ஆயிரமாயிரவர் போட்டி போட்டுச் செய்யக் காத்திருக்கவும் — சாதாரண விருந்தாளியான தன்னுடைய அசௌசத்தைத் தமது கைகளாற் சுத்தஞ் செய்வதைக் கண்டதும் அக்காட்டறபியின் கண்கள் கலங்கின.

நபி (ஸல்) அவர்கள் அக்காட்டறபியைக் கண்டதும், சலனமற்ற முகத்துடன் வரவேற்று, தாம் பாதுகாப்பாக எடுத்து வைத்திருந்த வாளை அவனிடம் கொடுத்தார்கள். இச் செயல் அவனை மேலும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியது; அவன் உள்ளத்தை உருக்கியது. பெருமானாரின் பெருந்தன்மையையும்; உயரிய சீலத்தையும், அளவற்ற கருணையையுங் கண்டு வெட்கித் தலை குனிந்தான்; வருந்தினான்.

இச் சம்பவம் நிகழ்ந்த காலத்தில், நபி பெருமானார் முஸ்லிம் உலகின் ஏக சக்கிராதிபதியாக வாழ்ந்தார்கள். இஸ்லாத்தின்பால் மக்கள் நம்பிக்கை கொண்டு, அவர்களின் தூதினை ஏற்றிருந்தார்கள். இப்படியாக ஓங்கு புகழ் பெற்றிருந்த காலத்தில், தன் தூதினை ஏற்றுக் கொள்ளாத காபிர் ஒருவனுக்காக இப்படியும் நடந்து கொள்ள முடியுமா என்பதை அவனால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. அவனை அறியாமலே அவனுடைய மனத்திலே அற்புத மாற்றம் ஒன்று நிகழ்ந்தது.

'நாயகமே! தாங்களே, உண்மையான நபி. இனி, வாழ்நாள் முழுவதும் தங்களின் நண்பனாகவே — ஊழியனாகவே வாழத் தீர்மானித்து விட்டேன்' என அக்காட்டறபி* தழுதழுத்த குரலிலே கூறினான்.

*அவன் ஒரு யூதன் என்றும் சொல்லப்படுகின்றது.

மழலை

நபி கதை: பத்து

'குழந்தைகளை நேசிப்பவர்களும், குழந்தைகளின் சேவை செய்வோரும், ஆண்டவனுடைய அருள் பெற்று நரக நெருப்பிலிருந்து விடுதலை அடைகிறார்கள்' என்பது நபிமொழிகளுள் ஒன்றாகும். தமது போதனைகளின் படியே வாழ்ந்துகாட்டிய எம் பெருமானார் குழந்தைகளை மிக மிக நேசித்தார்கள். ஒரு தடவை போரிலே குழந்தைகள் இறந்து விட்டதை அறிந்து நபி அவர்கள் மிகுந்த வியாகூலம் அடைந்தார்கள். அவர்களைத் தேற்றும் முகமாக, 'நாயகமே, இறந்த குழந்தைகள் முஸ்லிம் குழந்தைகளல்லர்' என்றார் ஒருவர். அப்பொழுது, 'குழந்தை குழந்தைதான். எல்லாக் குழந்தைகளும் நேசத்திற்கு உரியனவே' என்றார்கள்.

ஒரு சமயம் காலித் பின் ஸயீத் என்பார் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பார்க்க வந்திருந்தார். அவர் கூட அவருடையபெண் குழந்தையும் வந்திருந்தது.

எம்பிரானும், காலித்தும் உரையாடலில் ஈடுபட்டிருந்தார்கள்.

குழந்தைக்கு இயல்பான குறுகுறுப்பும், குறும்புத்தனமும் முளைவிட்டன.

மெதுவாக நழுவி, பெருமானாரின் முதுகுப் பக்கமாக வந்தது. பெருமானாரின் முதுகிலே முத்திரை போன்று தசை வளர்ந்திருப்பது அதற்கு ஆச்சரியத்தை ஊட்டியது. அதனைத் தொட்டுப் பார்க்கும் ஆசை முற்றியது. குழந்தை எல்லாவற்றையும் மறந்து, அந்தத் தசையைத் தொட்டு விளையாடத் தொடங்கியது.

எதிரிலிருந்து இதைக்கவனித்த காலிதுக்குக் கோபம் வந்துவிட்டது. 'நபிநாயகத்துடன் விளையாடுகிறாயா?' எனக் கேட்டுக் குழந்தையின் அந்தக் குழந்தைத்தனமான செயலைத் தடுக்க விழைந்தார்.

அப்பொழுது, 'குழந்தை விளையாடட்டும். அதைத் தடுக்கவேண்டாம்!' எனக் கூறி காலித்தின் கோபத்தை மறைமுகமாக நபி (ஸல்) அவர்கள் கண்டித்தார்கள்.

OOOOO
OOOOO

மீலாத் வாழ்த்துக்கள்!

# காதர் பீடி

புவியில் அவதரித்து
புகைத்து இன்புற்று
புளகாங்கிதம் அடைய
புகையுங்கள் இன்றே

காதர் பீடியை!

தயாரிப்பாளர்கள்:

காதர் பீடி
36, பன்னல வீதி,
தன்கொட்டுவ.

மீலாத் வாழ்த்துக்கள்!

மகாராஜா போன்று
புகையின்பம் சுவைக்க

# லோட் பீடி

புகையுங்கள்

லோட் பீடி

பீடிகளுள் பிரபு

லோட் பீடி கம்பேனி
நாம்புளுவ,
பஸ்யலே.

# கதை

## —மூன்று இதழ்கள்

இந்தப் பூவிலே
கணே, வெளி, வேலி
ஆகிய மூன்று கதைகள்
இடம் பெறுகின்றன.
ஈழத்துக்
கதைஞர் வரிசையில்,
வேகமாக முன்னேறி வரும்
வை. அஹ்மத்
பாணந்துறை - மொயின் சமீன்
எஸ். எல். எம். ஹனிபா
ஆகிய மூன்று
இளைஞர்கள்
இக்கதைகளை
இம்மலருக்காகவே
எழுதித் தந்துள்ளார்கள்.
மூன்று
கதைகளிலும்
நிறைவேறுக் காதலே
கதைப்
பொருளாக
வந்துள்ளது. இது வேண்டு
மென்றே புகுத்தப்பட்ட
ஒருமைப்பாடாகும்.
ஆனால்,
இந்தக் கதைப்
பொருளைச் சித்திரிப்
பதற்குக் கதைஞர்கள்
தேர்ந்தெடுத்துள்ள
முஸ்லிம்
சமுதாயத்தின் நிலைக்களன்கள்
முற்றிலும் வேறுபடுவன.
இந்த வேறுபாடு
கதைகளின்
உயிர்ப்பாக இருத்தல்
சுவைஞர்களுக்கு
விருந்தாக
அமைந்துள்ளது.



# கணை

பஞ்சபாணன் எய்த கணையிலே மல்லிகையின் சுகந்த மணம் பரவியது. அந்த மணத்தைச் சுகிக்க விழைந்தவனுக்கு எதிராக விதி கணை ஒன்று தொடுத்தது! முடிவு?

அந்த இயந்திரத்தின் ஒரே சீரான இயக்கம், "டக்கு . டக்கு டக்கு ." என்று சுருதி கூட்டுகின்றது. அதன் ஓசை லயத்தில் தன்னை மறந்து இலயிப்பவன் போலத் தலையை ஆட்டி, கரங்களை அசைத்து அவன் அபிநயம் பிடிக்கிறான். அப்படிப் பாவனையில் இறங்கி விடுவது அவனுடைய பொழுது போக்கு...

பொழுது போக்கு என்றா சொன்னேன்?

—வை. அஹ்மத்

அதன் இயக்கம், அதனுடைய இரைச்சல், அவனோடு தொடர்பான அவலம்...

அவனுடைய ஜீவகளையை மிகவும் சிதறடித்து...வாழ்க்கையையே மூழியாக்கி, அவனுடைய சகல இயக்கங்களையும் கொன்று, பொழுது போக்காகச் செய்துவிட்டது,

நீண்ட பட்டி, பெரிய சக்கரத்தில் சுழற்சி வேகத்தில் அங்குமிங்குமாய்ச் சுழல, எண்ணை சக்தியாகி, மிச்சில் புகையாகி, 'குப், குப்' பென வெளிவர அது இயங்கும். வாயை அகட்டி விரிந்து கிடக்கும் வழியூடாக, நெல்மணிகளை வாளி வாளியாகக் கொட்ட, மற்றொரு வழியால் அரிசியும், தவிடும் உமியுமாய் சின்னா பின்னாப் படுத்தப்பட்டு வெளியே வர அது...

உழைப்பின் இயந்திரமான அதனோடு, உழைக்கும் இயந்திரமான அவன் இயங்கி இருக்கிறான்.

அந்த இயந்திரத்தின் ஆறுதற் கருவியாக அவள் வருவாள். அவனுக்கான உணவு 'முடிச்சி' அவள் கையில் இருக்கும். உள்ளம் நிறைந்து பூரிக்க அவன் இயந்திரத்தின் இயக்கத்தை நிறுத்துவான்.

அவள் அந்த 'மில்' முதலாளியின் வீட்டில் வேலை செய்தாள்.

அங்கிருந்து அவனுக்கு உணவு கொண்டு வருவது அவளுடைய பொறுப்பு. பாலியப் பருவம் தொடங்கிய வேலை. காலம் அவள் மேனியில் யௌவனக் கோலத்தை இழைத்துப் பன்னி விட்ட போதும் அது தொடர்ந்தது......

அவள்; ஜஸ்மின். ஓ! எவ்வளவு இனிமையான பெயர்.

அந்த இனிமையில்......

காலத்தின் கொடுங்கரங்கள் இணைந்து செயற் பட்டு விட்டனவே!

"இன்றைக்கு மல்லிகையின் மணம் கம கமக்கிறதே" என்று பீடிகையுடன் ஒரு தடவை அவளை வரவேற்ருன் தஸ்லீம்.

"என்ன, மல்லிகையா? எங்கே பூத்துக்கிடக்கு? எனக்கு மல்லிகை என்ருல் பிடிக்குமே" என்று அடுக்கிக் கொண்டே உணவுடன் வந்துசேர்ந்தாள். அவளுடைய கையில் இருந்த உணவு முடிச்சைப் பெற்றுக்கொண்டே, "இதோ" என்று அவளைச் சுட்டினுன்.

அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

"மல்லிகைப் பெண் என்ருல் மல்லிகை பிடிக்குந்தானே?" என்று சொல்லிக் கொண்டு, அவன் எஞ்சின் அறைக்குச் சென்ருன். அதனை நிறுத்தினுன்.

"என்ன புதுமையான கதை?" என்று கேட்டவாறு அவனுக்குப் பின்னுல் வந்து நின்ருள்.

"அப்படியொன்றும் புதுமையில்லை, இதோ பார்.. உனக்காக தான் மல்லிகை கொண்டு வந்து இருக்கிறேன்" என்று கூறித் தான் எடுத்து வைத்திருந்த மல்லிகைக் கொத்தை நீட்டினுன்.

அவள் தயங்கினுள்.

"என்னது?"

"இதுவா... ஜஸ்மின்."

"பைத்தியம், மல்லிகைப்பூ!" என்று கல கலவெனச் சிரித்தாள்.

"ஓ! ஜஸ்மின் என்ருல் மல்லிகைதான்."

"வேடிக்கையாயிருக்குதே யார் சொன்னுர்கள்?" என்று கூறி விட்டு மல்லிகைக் கொத்தைப் பெற்று மோந்தாள்.

"மௌலவிடம் ஜஸ்மின் என்ற அறபுச் சொல்லுக்கு என்ன அர்த்தமென்று கேட்டேன். அவர் மல்லிகை என்ருர்.....அது தான் மல்லிகை; ஜஸ்மின்."

அவள் நாணம் கலந்த பாவனையோடு பார்த்தாள்.

''ஜஸ்மின் இனி உன்னை மல்லிகை என்றே அழைக்கப் போகி றேன்'' என்று வேடிக்கையாகக் கூறினான் தஸ்லீம்.

''என்னவோ.... போ!'' என்று சொன்னவள், மல்லிகைக் கொத்தை அவன்மீது வீசி அடித்தாள்.

அவன் அவளைப் பார்த்துக் நின்றான்.

அவள் பாத்திரத்துடன் தண்ணீர் எடுத்து வரக் கிணற்ற டிக்குப் போனாள். அவன் வாய் ''மல்லிகை'' என்று முணு முணுக்க, கண்கள் அவளின் உருவத்தில் மொய்த்திருந்தன.

இன்னொரு தடவை......

காலை உணவுடன் அவள் வந்தாள்.

''மல்லிகை'' என்று அவளை அழைத்து நெருங்கினான், தஸ்லிம்.

''இனி அப்படிக்கூப்பிட்டா எனக்கு கோபம் வரும்'' என்று பொய்க் கோபத்துடன் அவன் நெஞ்சில் கையை வைத்து ஊன்றித் தள்ளினாள் ஜஸ்மின். அவன் தடுமாறி நின்றான்.

''ஏன் அப்படி...?''

''அப்படித்தான்!'' என்று கடு கடுத்தாள்.

''ஜஸ்மின்......''

''ம்......''

''ஜஸ்மின்!'' அவன் சற்று அதட்டினான்.

''தஸ்லீம்!'' பதிலுக்கு அவளும் அதட்டினாள்.

''ம்......'' அவன்.

''தஸ்லிம் நீ, என்னை ஏமாத்தப் பார்க்கிறாய்.''

உண்மையான கவலை அவள் முகத்திலே படிந்தது.

''ஏன் அப்படி சொல்கிறாம்?''

"எனக்கு வீட்டில இருக்கப் பிடிக்கல்ல... உன்னையே நினைச்சு நினைச்சு தூங்கிப் போயிடறதால, இராத்திரி முழுக்க நீதான் கனவில வந்துக்கிட்டிருக்கிறாய். உன்னால பெரிய தொல்லையாய்ப் போயிட்டுது. இனி, உன்னோடைய இருந்துடப் போறன்......"

"இருந்திடன்......"

"இருந்திடன் என்று சும்மா சொன்னாப் போதுமா?"

"அப்போ என்ன சொல்லணும்......"

"ம்..."

"உன்னை நான் கல்யாணம் கட்டிக்கிறதாக முடிவுபண்ணி யிருக்கிறன், போதுமா . ?"

அவள் அவனை ஏறிட்டு நோக்கினாள். அவளுடைய உதடு களில் புன்னகை மின்னலெனப் பூத்து மறைய, அவள் தலை குனிந்தாள்.

"நீ, மட்டும் முடிவெடுத்தாப் போதுமா?"

"இல்ல... நீயும் முடிவெடுத்துக் கொள்ளன்."

"நான் அவங்கிட்ட கேட்டுத்தான் சொல்வேன்."

"எவங்கிட்ட?"

"அதுதான் முதலாளிக்கிட்ட..."

"ஓ !" என்று விளித்தவன் அவளுடைய கன்னத்தில் ஒரு கிள்ளு வைத்தான்.

"போக்கிரி " என்று கூறி, அவன் கையைத் தட்டி விட்டுத் துள்ளி ஓடி மறைந்தாள்.

திருமண முடிவோடுதான் அவள் வருவாள் எனக் காத் திருந்தான். சில நாள்களாக அவள் வரவேயில்லை. ஏதோ, ஒரு சாட்டில் அவள் ஒரு பையனிடம் அவனுக்குச் சாப்பாடு அனுப்பி வைத்தாள்.

ஜஸ்மின் என்று அவள் பெயரை செபித்துக் கொண்டிருக் கையில் திடீரென ஒரு நாள், அவள் வந்தாள்.

அவன் 'மெசி'னை இயக்கிக் கொண்டிருக்கும் போது, 'எஞ்சின்' அறைக்குள் அவள் நுழைந்தாள். அவனுக்கு மல்லிகையின் மணம்; மனத்திலே குறு குறுப்பு.

இயந்திரத்தை முடுக்கி விட்டு, அப்படியே தாவி, அவளைப் பிடித்து, அவள் இதழோடு இதழ் பொருத்தி......

அந்தக் கணத்தில் அவள் தடுமாறிப் போக, அவளை அப்படியே விட்டு விட்டு அவன் வெளியே வந்து விட்டான். அவளுக்குப் பொத்துக்கொண்டு வரும் கோபத்தைப் பார்க்க விரும்பவில்லை, அவன்.

ஜஸ்மின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு எழும்புவதற்குள், அவளுடைய சேலைத் தலைப்பு 'மெசின் சிலிண்டரில்' கொழுவிக் கொண்டது. அதன் சுழற்சி வேகத்திலே சேலை உரிய, கையைப் போட்டு இழுக்க முனைந்தாள், அவள்.

விதியின் கொடுங்கரங்கள் அவளை அந்த இயந்திரத்தோடு இணைத்து விட்டது. அவளுடைய போராட்டம் ஓய்ந்தது.

"தஸ்லீம்..." என்று அவள் அலறிய போது, அவன் தன் நினைவே இழந்தவனாக, அங்கே ஓடி வந்தான். இயந்திரம் "டக்... டக்கு... டக்கு..." என்று இயங்கிக் கொண்டிருந்தது. அதன் ஓலம் அவன் செவியை அடைத்து விட்டது.

அவன் 'மெசின்' இயக்கத்தை நிற்பாட்டி முடிக்கு முன்னே ஒரு கை திருகுப்பட்டு முறிந்து, கிழிந்த நிலையில் அவள் தரையில் வீழ்ந்தாள்...

அவனை அந்தக் காட்சி உலுக்கிப் பிழிந்தது.

"ஜஸ்மின்" என்று அவன் போட்ட பேய்க் கூச்சல் அந்த வட்டாரத்தையே உலுக்கி விட்டது.

அதன் பிறகு தஸ்லிம் அந்த இயந்திரத்தை இயக்க வில்லை, அவனும் இயங்க வில்லை...... ...அவனுடைய உள்ளம் உடைந்து, உடல் சோர்ந்து, நினைவுகள் அழிந்து அவன் நடைப்பிணமானான்.

அந்த இயந்திரத்தின் ஓசை மட்டும், எப்போதும் அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டிருகிறது.

"டக்கு... டக்கு... டக்கு..." என்ற ஒரே சீரான ஓசை.

**கை** நிறையப் பனி நிறைந்த மல்லிகைக் கொத்து. காலை யிளம் வெயில் பட்டு மினு மினுக்கிறது. அவளையே சுமந்து செல்வதான எண்ணம் அவனுக்கு. அதைச் சுமந்து செல்லும் போது அவனுடைய ஆத்மா அமைதியுறுகிறது.

சம்பிரதாயமான அமைதியில் ஆழ்ந்து, பயங்கரமாகக் கிடக்கிற, அந்த மைய வாடியின் மையக் குழி யொன்றில் அவனுடைய நடை தடைப்படுகின்றது.

மையக் குழியின் மேலே குவிந்து கிடந்த மண் மேட்டில் காட்டு மல்லிகைச் செடிகள் பூத்துச் சிரித்த வண்ணம் அவனை வரவேற்றன. வெண்மையும், தூய்மையும், இளஞ் சிவப்பும், செழுமையும் ஆன வண்ணக் கலவைகள்......

அந்த அழகிய வண்ண மலர்ச் செடிகளின் கீழேதான் அவனுடைய மல்லிகையும் புதையுண்டு கிடக்கிறாள்......

'பிரோஸா குழந்தையா? பெரியவளா? அவள் உள்ளத்திலே துளிர்ந்தது அன்பா? காதலா?' இப்படியொரு புதிர் என்னும் நாரிலே, உணர்ச்சி அலைகள் என்னும் மலர்கள் தொடுக்கப்படுகின்றன...

# வெளி

பாணந்துறை—
மொயீன் ஸமீன்

'பிரோஸா' எவ்வளவு இனிய பெயர்? பூரண நிலவிலே கடைந்ததைப் போன்றது அவள் கவின் வதனம்! சதா ஓர் அரும்பு இளநகை அவளுடைய இதழ்க் கோடியிலே சுழிந்த வண்ணம் இருக்கும். அவளது குரலில் இன்னும் மழலையின் மெல்லியதொரு கீறல். தலைமயிர் சுருண்டு கருமையும் மினு மினுப்பும் கொண்டிருந்தது. புருவக் கீற்றுக்கள் வளைந்து ஒடிந்து இயற்கை எழிலை உமிழ்ந்தன. கண்கள் அகன்று, கருமணிகள் கறுத்த கவர்ச்சிக் கொத்து! ஈரலிப்பான சூழலுக் கேற்ப அங்க அவயவங்கள் மாந்தளிர் போன்று ஒளி சிந்துகின்றன. கன்னக் கதுப்புகள் செவ்வானத்தின் வழவழப்புப் பெற்றிருந்தன.

அது ஒரு சிறு கிராமம். அந்தப்பாடசாலைக்கு இடமாற்றம் கிடைத்தபோது ஆரம்பத்தில் கண்களைக் கட்டி நடுக்காட்டில் விட்டாற்போல பிரமை தட்டியது. நல்லவேளை எனக்கு பிரோஸாவின் வீட்டிலேயே தங்குவதற்குக் குடியிருப்புக் கிடைத்தது. அவளது அழகை அநுபவித்துக் கொண்டு ஆவிபரியந்தம்வரை அங்கு இருந்தாலும் எனக்கு அலுப்பு ஏற்படாது என்ற நிறைவு.

நான் அந்தப் புதுப் பாடசாலைக்கு ஆசிரியராகப் போய்ச் சேர்ந்து சில நாள்களாக என்னைப் பற்றிய விமர்சனங்கள் வெளி வரத் தொடங்கின.

"புதிய ஸேர் பெரிய 'ஸ்டைல்'காரர்; ஆனால், நல்லவர்."

"அந்தப் ரோசுக்குட்டி அவரோட கையைப் புடிச்சிக் கிட்டு கொஞ்சிக் கொஞ்சி சுத்துறு........."

இவ்விதமான விமர்சனங்களுக்கு அளவே இல்லை.

பக்கத்துப் பள்ளிவாசலில் இருந்து சுபஹூத் தொழுகைக்காக வாங்கொலிக்கும் போதே நான் எழுந்து கொள்வேன். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு தொழுவேன். தொழுது முடிந்ததும் பிரோஸா கோப்பிக் கோப்பையும் கையுமாக வந்து நிற்பாள். நான் அதை பிரீதியுடன் பெற்றுக் கொண்டு அவளது அதரங்களில் அன்புப் பரிமாற்றம் செய்வேன். அப்பொழுது அவள் முகம் கனியும். நான் அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து விட்டுப் படிப்பேன். அவள் குறும்புத்தனமாக இடை

மீலாத் வாழ்த்துக்கள்!

நங்கையர் விரும்பும்
நவநாகரீக நகைகளுக்கும்
மின்னும் வைரங்களுக்கும்
சிறந்த நிறுவனம்

## கே. என். எம். மீரான் சாஹிப்

தங்கப்பவுண் நகை மாளிகை

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 585

நவீன பொருள்கள்
அலுமினியம் - எனுமல் பாத்திரங்கள்
எழுது பொருள்கள் - கருவிகள்
சாய்ப்புச் சாமான்கள் முதலியவற்றிற்கு

நம்மையே முதலில் நினைவு வைத்துக் கொள்ளுங்கள்

## என். எம். சுல்தான் முகைதீன் ஹாஜியார் & சகோதரர்

123, 125 & 143, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம் - (இலங்கை).

தொலைபேசி: 531 தந்தி: ENEMES

யூறு செய்வாள். பாவம்! தந்தைப் பாசத்தையோ, சகோதர பாசத்தையோ கண்டறியாதவள். அவளது இதயம் புண்படாத விதத்தில் நான் நடந்து கொள்வேன்.

பிரோஸா ஒரு துடுக்குக்காரி. பெரிய வாய்க்காரி. எவருக்கும் சரமாரியாகப் பதில் சொல்லுவாள். யாராவது அதட்டினுல் போதும், முகத்தை உப்பி வைத்துக் கொண்டு கைவிரல்களால் வக்கணை காட்டிக் காட்டி 'அழகு' செய்வாள். யாராவது துரத்தி வந்தால், 'ஸேர், ஸேர்' என்று என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு புகலிடம் தேடுவாள்.

பாடசாலை இடைவேளை மணி அடித்ததும் அவள் வீட்டுக்கு விரைந்தோடுவாள். தேநீர் கொண்டு வருவாள். நான் அருந்திப் பாதியை அவளுக்குக் கொடுப்பேன். அதை அவள் பிரியமுடன் பருகுவாள்.

களைப்பு மிகுதியால் எனது முகத்தில் குறு வியர்வை அரும்பியிருக்கும். அவள் தனது பெட்டியில் பக்குவமாக மடித்து வைத்திருக்கும் மெல்லிய கைலேஞ்சியை எடுத்து எனது முகத்தை ஒத்தித் துடைத்து விடுவாள். புத்தக இடுக்கில் பதுக்கி வைத்திருக்கும் பவுடர் பொடியை தனது சின்னஞ் சிறு கைகளில் தேய்த்து உதறிவிட்டு மெதுவாக எனது முகத்தில் பூசுவாள். எஞ்சியதைத் தனது முகத்தில் அப்பிக் கொள்வாள். ஆரம்பத்தில் இச் செய்கை எனக்கு வெட்கமாக இருந்தது. நான் தடுத்தும் அவள் விட்டுக் கொடுத்தாளில்லை. ஆனுல், இப்போ எனக்கு இவ்விதமான செய்கைகள் பழகிப் போய் விட்டன.

நாள்கள் நகர நகர, எங்கள் இருவருக்கிடையிலும் குரு-சிஷ்ய அபிமானத்தை மீறிய ஒரு பாசம் வலுத்துவிட்டது. அவள் எனக்குக் குழந்தையாகி, காதலியாகி, தாயாகி, பாட்டியுமாகிவிடுவாள். சோறு பிசைவதிலிருந்து துணி தோய்ப்பது வரை— ஏன்? பாட்டுச் சொல்லித் தூங்க வைப்பது வரை— அவள் ஈடுபாடு காட்டி வந்தாள்!

பாடசாலை விட்டதும் பொழுது போக்குக்காக நானும். அவளும் 'கெரம்' அல்லது பந்து விளையாடுவோம். எதை எடுத்தாலும் திறமையாகச் செய்து முடிக்கும் ஓர் ஆற்றல் அவளுக்கு இருந்தது. படிப்பிலும் அவள் திறமைசாலி. விளையாட்டில் என்னை தோற்கடித்துவிட்டு குதூகாலத்துடன் கைதட்டிச் சிரிக்கும்போது அழகு பரிபூரணமாக விகசிக்கும்.

"அடேயப்பா நீ ரொம்பப் பஸிந்துக்காரி மட்டுமல்ல; பெரிய கெட்டிக்காரியுந் தான்..." என்று நான் புகழ ஆரம்பிப்பேன். அப்போ அவள் குமரிப் பெண் போன்று தலையைக் கவிழ்த்துக் கொண்டு, "சும்மா போங்க ஸேர் .. இந்த! ஸேரக் காட்டேலா ஒரே கொலப்பியதான்..." என்று கோணக் கண்களால் நோக்கிச் சிணுங்குவாள்.

மாலை வேளையில் ஆற்றங்கரையில் உலாவி இயற்கை அழகை இரசிப்பது எனது வழக்கம். அவளும் என்னுடன் வரத் தவற மாட்டாள். அழகின் உந்துதலால் நான் பாட்டுப் பாடுவேன். அவளும் ராகம் இழுத்து என்னுடன் சேர்ந்து பாடுவாள். அப்பொழுது எனக்குச் சினிமாவில் வரும் காதல் காட்சிகள் நினைவிற்கு வரும். காதற் கட்டங்களையே கண்டு கேட்டறியாத அவளின் நிலையை எண்ணி நான் சிந்தனையில் ஆழ்வேன். அவள் நீரை அள்ளி வீசி எனது சிந்தனையைக் குலைப்பாள். நான் பொய்க் கோபத்துடன் நிமிர்ந்து நோக்குவேன். அவளும் இமைக்காமல் பார்த்துக் கொண்டு சிரிப்பாள். அந்தப் பார்வையில், குளிர்ச்சியான சிரிப்பில், எனது இதயம் தணிந்து, பணிந்துவிடும்.

சர்வகலாசாலைப் பிரவேசத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக எனக்குக் கடிதம் வந்தது. நான் அந்தக் குக்கிராமத்தை விட்டுப் புறப்பட வேண்டியதாயிற்று. பள்ளிக்கூடத்தில் தலைமையாசிரியரிடம் சொல்லி இராஜினாமாக் கடிதத்தையும் சமர்ப்பித்தேன். பிரோஸாவின் பிஞ்சு உள்ளம் இந்தச் செய்தியைத் தாங்கமாட்டாது; அவளுக்கு மிகுந்த ஆறுதல் கூறி விடை பெற வேண்டுமென்று நினைத்திருந்தேன்.

இந்தச் செய்தி ஊரெங்கும் விநாடியிற் பரவியது. செய்தியை பிரோஸாவும் பொறுக்கிக் கொண்டாள். அவள் உணவை வெறுத்தாள். உறக்கத்தை மறுந்தாள். அழுதழுது ரோஜா மலர் வதனம் வீங்கியிருந்தது. அவளின் அம்மாவால் அவளைத் தோற்ற முடியவில்லை. எனக்கும் என்ன செய்வதென்றே விளங்கவில்லை.

"அடி அசடே! நீ ஏதுக்கடி அழுகிறாய்? இந்த ஸேர் போனக்க, இன்னொரு ஸேர் வருவார்தானே? இல்லாட்டியும் அவர் படிச்சிப்போட்டு திரும்ப இங்கு வருவார்தானே...?" என்று சமாதானம் கூறினாள் தாய்.

எனக்கு நிறைய வேலையிருந்தது. நான் அறையுட் புகுந்தேன். பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தேன். புத்தகங்களையும் துணிமணிகளையும் 'பேக்'கில் அடுக்கத் தொடங்கினேன். அதே வேளை அறைவாசலில் அரவம் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். திக்பிரமை பிடித்தவளாகப் பிரோஸா எனக்குப் பின்னால் நின்றாள். தக்காளிப் பழமாகச் சிவந்து போயிருந்த அவளது கன்னங்களையும் வாடிய இதழ்களையும் பார்க்கும்போது எனது மனம் புண்ணாகிப் புரையோடியது.

இதயத்துடன் இதயத்தை இணைக்கும் தூய அன்பினாலேதான் உலகம் இயங்குகின்றது. பவித்திரத்தன்மை வாய்ந்த இந்த அன்புத் தொடர்பினால், வாழ்க்கை கனிவதை விட, துன்புறுவதே அதிகம்....

## High Class Printers

Colour Printing a
Speciality
&
Calender Works
Under - taken

VISIT

# TAS PRESS

1/25, Mookathal Street,
PURASAWALKAM, MADRAS-7

*T'phone:* **63012** *T'grams:* **"THAIYANNA"**

ALSO,

## TAS PRESS

**KILAKARAI**

*T'phone:* **44** *T'Grams:* **"THAIYANNA"**

சுவரில் தொங்க விட்டிருந்த எனது புகைப்படத்தைக் கழற்றி எடுத்தேன். அவள் ஓடி வந்து எனது தோளைப் பிடித்துக் கொண்டு, அதைக் கேட்க முயன்முள். ஆனல், அவளால் பேச முடியவில்லை. அதை விடுக்கென்று பறித்தெடுத்து நெஞ்சுடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள். உலர்ந்து கிடந்த உதடுகளை உமிழ் நீரால் நனைத்துக் கொண்டு பேசினுள்:

''ஸேர், நீங்க என்ன விட்டுப் போறீங்களா...?'' என்முள். அந்த வார்த்தைகளில் இழையோடிய வாஞ்சை எனது இதயத்தை ஊடறுத்துச் சாறுபிழிந்து கண்ணீராகச் சுரக்கச் செய்தது. என்ன சொல்வதென்றே தெரியாமல், ''ஓ'' என்றேன்.

''எங்கே உங்க ஊருக்கா...''

''இல்லை. ஏன் அப்படிக் கேட்கிருய்?''

''நானும் உங்கள்கூட வரத்தான்.''

''நான் ஊருக்குப் போகல்ல பிரோஸா''

''அப்போ...''

''பேராதனைச் சர்வகலாசாலைக்குச் செல்கிறேன் ''

''ஏன் ஸேர்?''

''மேல் படிப்புக்குச் செல்கிறேன். மூன்று வருஷங்கள் அங்கு படிச்சிப் போட்டு, நான் உங்கிட்டே வந்திடுவேன்..''

''நெசமா எங்கிட்ட வருவீங்களா ஸேர்... உங்கள விட்டு என்னுல இருக்கேலா ஸேர்..''

''ஏன்...?''

அதற்குப் பதில் சொல்ல முடியாது அவள் திண்டாடிடுவதிலேகூட சௌந்தர்யம் மலர்ந்தது.

ஒரு கணம் மௌனம் நிலவியது.

மீண்டும் நான் ''ஏன்?'' என்றேன்.

அவள் என்னைக் கட்டிப் பிடித்துப் பிஞ்சு விரல்களால் எனது உடம்பில் கீறி பதிலைச் சித்திரித்தாள்.

''ஸேர் நீங்க என்ன ஏமாத்திப்புட மாட்டீக்கதானே...''

''ஹூம். என்ன நம்பு...''

"சத்தியமா. அல்லாணே..."

"அல்லாணையாக" என்று அவளது கரங்களில் சத்தியம் செய்து கொடுத்தேன்.

அவளின் பேச்சும் போக்கும் எனக்கு வியப்பாக இருந்தது. அவளது நோக்கம் என்ன வென்று எனக்கு விளங்கவில்லை... பெண் என்பவள் சபலம் நிறைந்தவள். அவள் இதயம் ஆழம் காண முடியாத சமுத்திரம் என்பதற்கு இவளே தக்காள்.

"ஸேர் உங்கட நினைவாக எனக்கு ."

"ஓ...ஒரு முத்தம் தரட்டுமா?"

அவளின் கவின் வதனம் சிவந்து அதரம் துடிதுடித்தது

"அதால மட்டும் நினைவு வருமா...?" என்ருள்.

"அப்போ எதால..."

சிறிது நேர அமைதிக்குப்பின், "இது, இந்தப் போட்டோவ எனக்குத் தாங்க..." என்ருள்.

நான் அதை இரு கரத்தாலும் தூக்கிக் கொடுத்தேன்.

"உங்களுக்கு என்ன ஸார் வேணும்?"

"கன்னத்தில் ஒன்று தந்தால்போதும்"

"ஹூம், அது போதா... ஏண்ட லேஞ்சியையும் தாரன்..."

"ஓ ..அதைத் தா .."

அந்த லேஞ்சியை நான் பவுத்திரமாக மடித்து வைத்துக் கொண்டேன். எனது போட்டோவை அவள் துடைத்துச் சுவரில் தொங்க விட்டாள்.

பேராதனைச் சர்வகலாசாலைச் சூழல் எனக்கு மனோரம்மிய மாக இருந்தது. ஓய்வு வேளைகளில், மாணவர்கள் சோடிசோடி யாகச் சென்று பூங்காவில் பொழுது போக்குவார்கள். பூங் காவை ஊடறுத்துச் செல்லும் மகாவலி கங்கையருகில் சென் றதும் எனக்கு அந்தக் குக்கிராமம் நினைவுவரும். அந்தக் குக் கிராமத்து ஆற்றங்கரையில் நானும் பிரோஸாவும் அமர்ந்து அழகை ரசித்த இனிய நினைவுகள் பசுமையுடன் துளிர்க்கும்.

With the best compliments of:

# K. M. M. A.

# Abdul Cader Abdul Kaiyoom

GEM MERCHANTS & JEWELLERY MANUFACTURERS

**113, KEYZER STREET,**
**COLOMBO.**

**Office & Residence:**

126¼, PRINCE STREET,
PETTAH.

*T'Phone:* **5841** *T'Grams:* **HAQUE** ***COLOMBO.***

With best compliments from:

# M. A. KUDDUS & CO,

**GEM MERCHANTS**

**107/8, Maliban Street,**
**Colombo-11.**

T'Phone: ***29391*** T'Grams: ***"CEYGEM"***

பொன் நிறமான மென் விரல்களால் என் முகத்தை வருடி, கவின் அதரங்களால் ஈரம் பரிமாறுவாள் ''ஆகா, இந்த ஸேர் நல்ல பஸிந்து .....'' என்று கூறிக் களிப்பாள்.

மூன்று வருடங்கள் கழிந்துவிட்டன.

கொழும்பு மா நகரிலுள்ள உயர்தரக் கல்லூரியென்றில் எனக்கு உத்தியோகம் கிடைத்தது. இந்த மகிழ்ச்சிகரமான செய்தியைப் பிரோஸாவிடம் கூறி, அவளையும் கையோடு அழைத்து வந்து, தலைநகரின் விநோதங்களைக் காட்ட வேண்டும் என்ற பேரவா சடைத்து வளரலாயிற்று!

'அவளுக்கு வேண்டிய உடைகள் வாங்கக் கடையொன்றில் புகுந்தேன். அவள் இப்பொழுது பருவமடைந்து சேலை கட்டி யிருப்பாளோ?' என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. பாவா டைக்கான துணி மணிகளை வாங்குவதா? சேலை வாங்குவதா? என்று சிறிது நேரம் தர்ம சங்கடப்பட்டேன். சரிதான் எப் பொழுதுதாவது அணியட்டுமே என்று சேலையும், சட்டைத் துணிகளும் வாங்கிக் கொண்டேன்.

கொழும்பிலிருந்து வாடகைக் காரொன்றில் அந்தக் கிரா மத்தை நோக்கி விரைந்தேன்.

டாக்ஸி மீட்டார் போன்று எனது மனதுள் இனிய நினைவுகள் தோன்றி மறையத் தொடக்கின.

இப்பொழுது பிரோஸா பருவக் குமாரியாக இருப்பாள்; இளமைப் பருவத்தின் பரிபூரண சௌந்தர்யமும் அவள் உடம் பில் பொங்கிப் பிரவகிக்கும் என்னைக் கண்டால் பேசுவாளா...? அல்லது நாணிக்கோணி கதவிடுக்குள் ஓடி மறைந்து... திரை மறைவில் நின்று கொண்டு பேசுவாளா? இந்த நினைவுகள் எனது மனத்தைத் தேனீக்களாக கொட்டின.

மூன்று வருடங்களுக்குள் அந்தக் கிராமம் சிறிது மாறுதல டைந்திருந்தது. ஆனால், அந்த வீட்டைத் தேடிப் பிடிப்பதில் அவ்வளவு சிரமம் இருக்கவில்லை.

வீடு புதுப்பிக்கப் பட்டிருந்தது.. அவளுக்குப் பூப்பெய்த விழா நடந்தேறி இருக்கவேண்டு மென்ற நினைவு நிழலாடியது. காரிலிருந்து இறங்கி வாசலுக்குச் சென்றதும் ஒரு புது மனிதர் என்னை வரவேற்றார்.

அவருக்குச் சுமார் நாற்பது வயதிருக்கும். வழுக்கைத் தலை. நிறைமாதக் கர்ப்பிணியின் சாயலில் பெரிய தொந்தி. ஆந்தை விழி. பார்க்கப் பயங்கரமான உருவம். வாயிலிருந்த சுருட்டைக் கையில் எடுத்துக் கொண்டு, ''வாங்க துரை'' என்று வரவேற் றார். சுருட்டின் அருவருப்பான வீச்சம் என்னைக் கிறங்கச் செய் தது.

“பிரோஸா வீடுதானே... அவ இருக்கா?” என்று நான் கேட்டேன்.

“ஓ” என்று தலையாட்டிய அவர், “பிரோஸா பிரோஸா” என்று உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தார்.

“பிரோஸா, மாப்பிளை பேசுறார்டி” என்று தாய்க்காரி சொன்ன வார்த்தை என் காதுள் விழுந்தது.

‘யார் மாப்பிள்ளை? நானா அவரா ?’ என்று வியப்புற்றேன்.

சேலை கட்டிய பிரோஸா வேண்டா வெறுப்போடு வந்து “ஏன் கூப்பிட்டீங்க ?” என்று அவரைக் கேட்டாள்.

திடீரென்று என் பார்வையும் அவள் பார்வையும் சங்கமித்தன. ஒரே அதிர்ச்சி அவள் கண்களில் கலங்கி கண்ணீர் பீரிட்டுப் பாயத் தொடங்கியது. சேலைத் தொங்கலால் அவள் முகத்தை அழுத்திக் கொண்டு உள்ளே ஓடினாள் அதே வேளை அவளது கழுத்திலிருந்த தாலி மின்னி என் கண்களை உறுத்தியது.


நான் என் பார்வையை வெளியே மேயவிட்டுச் சிலையாக நின்றேன்.

Space donated by

M. A. HAMEED

COLOMBO-11.

ராஹிலா, கரீமுடன் புது வாழ்க்கை நடத்தத் தீர்மானித்து விட்டாள். அவளுடைய நொண்டிக் கணவன் அதற்கு நிச்சயமாகத் தடையில்லை. அப்படியானால்...?



# வேலி

—எஸ். எல். எம். ஹனிபா

இருள் திட்டுத் திட்டாக வானத்தை அடைத்துக் கொண்டது. இரவின் முற்பகுதி நன்கு விரிந்து படர்ந்து, சயன மஞ்சப் பாடலை தொண்டைக் குழியில் வைத்து முணுமுணுக்கும் சாயல்.

'சாய்! என்னண்டாலும் இம்மட்டுச் சுணங்கியிருக்கப் படாது' என்ற குற்ற உணர்வின் கூரியமுள் ராஹிலாவின் உள்ளத்தை உறுத்தியது. அங்கமெல்லாம் வியர்வைப் பருக்கள் அள்ளிச் சொரிந்தன. கடப்பைத் தாண்டி உள்ளே வந்து, குடிசையைப் பார்க்கின்றாள். இருளின் மோனத்திற்குள் ஒப்புக் கொடுத்து, தாலியறுந்தவளின் வாழ்க்கையைப் போன்று சாரமற்றுக்கிடப்பதாக அது தோன்றியது.

அநுதாப உணர்ச்சிகளை வெட்டிப் பிளந்து, இவ்வளவு காலமும் பேயுறக்கத்தில் ஆழ்ந்திருந்த பருவ உணர்ச்சிகள் சடைத்து வளருகின்றன.

'இன்றுமட்டும் இந்தக் குடிசையிலே விளக்கும் வெளிச்சமும் இருக்கட்டும் தொடர்ந்து?' என நினைத்துக் கொள்ளுகிறாள்.

அவளுடைய காலடி ஓசையைக் கேட்டதும், குடிசைக்குள் உயிர்ப்பின் குரல்.

''ராஹிலாவா?''

''ம்ஹூ!''

''ஏன் இண்டக்கி இவ்வளவு சுணக்கம்?''

''என்ன செய்யிற? நெடுக நேரத்தோடவர ஊட்டுக்காரன் அங்க விறகெடுத்துக் கட்டியா வச்சிருக்கான்?'' ராஹிலா வெடுக்கெனக் கேட்டுவிட்டாள். தோட்டுப் பாய்க்குள் சுருண்டு கிடந்தவனுக்கு ஏன் கேட்டோம் என்றாகி விட்டது. வேதனையை நெஞ்சத்தின் ஆழத்திலே புதைக்க எடுத்த எத்தனத்தில் காங்கை மிக்க ஒரு பெருமூச்சு .....

முகத்தில் பொக்களமிட்டு வழிந்த வியர்வைக் காட்டை முன்றானையால் ஒத்தியெடுத்தவளுக்கு, தான் தேவையற்ற கொடூரத்தைத் தனது பதிலிலே குழைத்துவிட்டதான ஓர் எண்ணமும் மெல்ல மெல்லக் கண்ணுமூஞ்சி காட்டியது.

கடமை உணர்ச்சியுடன் குடிசையின் விளக்கை ஏற்றினாள். ஊமை வெளிச்சம் பரவி

யது. அந்த வெளிச்சத்தில் பாய்க்குள் சுருண்டு கிடந்த உருவத்தை ராஹிலாவின் விழிகள் தேடின. அந்த உருவம் அந்நியமானதல்ல. கடந்த ஐந்து ஆண்டுகளாக ராஹிலாவின் கணவன் என்ற ஸ்தானத்தை அந்த உருவந்தான் பூர்த்தி செய்து வருகின்றது.

எதிர்பாராத ஊற்றுக் கண்ணின் உடைவு; பரிவின் கசிவு!

'பாவம்' என்று அவள் மனம் ஏங்கிற்று.

"உங்களுக்கு என்ன செய்யிது?"

சற்றுமுன்னர் நடந்த உரையாடலை அவன் முற்றாக மறந்து விடுகின்றான். தண்டித்த தாயின் மடியிலே பிஞ்சுக்கால்களால் உதைத்துக் 'கொம்பி' ஏறும் குழந்தைத் தனத்தில் அவன் மனம் மிக மிக இலேசாகியது.

"ராஹிலா! இண்டைக்கி எனக்கிக் காய்ச்சல் போல யிருக்கு. நெஞ்சுக்குள்ளயும் ஏதோ அடைக்கிற மாதிரி யிருக்கு. எனக்கி ஏலா. முடியுமெண்டா கொஞ்சம் கஞ்சி காய்ச்சித்தா ' இத்தனை வார்த்தைகளையும் மலையைப் பிளந்தெடுத்த பாரிய பிரயத்தனத்துடன்தான் சொல்லி முடித்தான். 'மாப்பிள்ளையின் சோக்குக்குக் கஞ்சியா கேட்குது?' என்று ஏதாவது ஏளன வார்த்தை நறுக்கு வந்து விழுந்து விடுமோ என்ற அச்சம் வேறு அவனைப் பீடித்துக் கொண்டது.

கடந்த ஆறேழு மாதங்களாக அவன் என்ன சொன்னாலும், செய்தாலும் சீறிப்பாய்வது என்பது அவளுக்கு இரண்டாஞ் சுபாவமாக வளர்ந்துள்ளது. ஆனால், இன்று வழக்கத்திற்கு சற்று மாறாக எதிர் வார்த்தை எதுவுமே பேசாது அவன் விருப்பத்தை நிறைவேற்றும் விதத்தில் அவள் கஞ்சி காய்ச்சத் தொடங்கினாள்.

நெருப்புப் பொறியை உள் வாங்கிய அடுப்பு புகையைக், கக்கத் தொடங்கியது. கண்களைக் கசக்கிக் கொண்டே அவள் வாயை உப்பி ஊதிக் கொண்டிருந்த முயற்சியின் பலிதமாக அடுப்பிலே நெருப்புப் 'பா' ரென்று பற்றிப் படர்ந்தது. அத் தீக் குஞ்சின் பிரகாசத்தில் அவள் மேனி பொன்னெனப் பொலிவுகாட்டி மிளிர்வதாக அவனுக்குத் தோன்றியது.

தன் ஒற்றைக் காலை நீட்டிக்கொண்டு அந்த மண் குடிசையின் சுவரில் சாய்ந்திருந்தான் ராஹிலாவின் கணவன்.

நெஞ்சிலே கனம். மேல் மூச்சு, கீழ்மூச்சு வாங்கியது.

கழுத்தைத் தாங்கிக் கொண்டிருந்த தலையணை சுகத்தைக் கொடுத்தாலும், கண்களைப் பறிக்கும் மனைவியின் கொள்ளை யழகின் புதிய கோணப் பொலிவு அவன் நெஞ்சிலே நெருஞ்சிக் காட்டை வித்திக் கொண்டிருந்தது.

உலையிலே நெருப்பு விளைந்து நிலைத்ததும், ராஹிலா குடிசையின் வீட்டுப் பகுதிக்குள் வந்தாள். அவளின் திருமணத்திற்கு வாங்கிய பூச்சிலுக்கும், வெல்வெற் ரவிக்கையும் கட்டுப் பெட்டிக்குள் தேடு

வாரற்றுக் கிருந்தன. புதிய வாஞ்சையுடன் அவற்றை கையிலெடுத்தவள், கயிற்றுக் கொடியில் உலரப் போட்டாள். வானத்தில் பிறைச்சந்திரன் எழும் அறிகுறியாக ஏதோ ஒருவகை ஒளி படர்கின்றது. அவள் உள்ளத்திலும் இனந்தெரியாத, இன்னும் பிரகாசம் பெறாத, ஒளியின் வீச்சு! மறுபடியும் ராஹிலா உலையடியில் வந்து குந்தினாள். அவர்களுள் யாருமே பேசவில்லை. ஆனால், அந்த மனங்களிரண்டும் பேச்சுக்களிலும் பார்க்க இத்தகைய மௌனத்திலேயே அதிகமாகத் தங்களுடைய உணர்ச்சிகளைப் பரிமாறப் பழகிக் கொண்டன.

அரிசியை 'அரிக்கிமிலா' யிலே அரித்து, உலையிலே போட்டுக் கலக்கத் தொடங்கினாள் ராஹிலா. அவளையே பார்த்துக் கொண்டிருந்தன அவனுடைய கண்கள்.

'ராஹிலாவை ஒரு பெண்' என்று ஏக வசனத்தில் அறிமுகப் படுத்தி விடமுடியாது. கொத்துக்குள் விளைந்த மாம்பழத்தின் அபூர்வக்கவர்ச்சி அவளுடையது. முகத்திலே புன்னகை படரும் பொழுது, இடப் பக்கக் கன்னத்திலே சுழிந்து குமிழும் குழியின் அழகைப்பார்த்துக் கொண்டே இருக்கலாம் காலமெல்லாம்! அழகின் தனித்துவ முத்திரையைப் பொறிப்பதற்கு ஆண்டவன் தேர்ந்தெடுத்த பாலைவனப் பூ அவள் என்றுதான் அவனுக்கு இப்பொழுதும் தோன்றுகின்றது.

'மச்சி முறையான அவள் அழகிலே சொக்கி, தன் விடா முயற்சியான உழைப்பிலே கவர்ச்சி காட்டி, அவளை அடைந்த பொழுது, உலகத்தின் செல்வமனைத்தும் தன்னுடைய காலடிகளிலே குவிந்து கிடப்பதான பெருமையே அவனுக்கு ஏற்பட்டது.

ஒரு சுற்றுப் பருத்து, சில அங்குலம் வளர்ந்து விட்டதான பெருமிதம் அவனுக்கு. பெருமை அவன் கைக்குள் பிடிபடவேயில்லை. புதுமாப்பிள்ளை என்ற முத்திரைச் சின்னமாக பலகார உமல்களைத் தோளிலே போட்டுக்கொண்டு கூலி வேலையாகக் காடு வெட்டித் திரும்பும் அவனைப் பார்க்கும் பொழுது, மனோராஜ்யம் ஒன்றின் சக்கரவர்த்தியாக அவன் வாழும் தனித்துவம் மிளிரும்.

வான வில்லின் கோலமயக்கம்; புல்நுனியில் நித்திலப் பொலிவு காட்டும் நீர்த்துளி துளியின் அழகு...இப்படித்தன் வாழ்க்கை அமையு மென்று ஆரூடம் பார்க்கவோ, கவித்துவமாகக் கற்பனை செய்யவோ இயலாத பாமரன் அவன்.

ஒரு தடவை காடு வெட்டப் போய்த் திரும்பி வந்தான். வலக் காலை ஊன்றி நடப்பதற்குச் சிரமப்பட்டான். மரம் வெட்டும் பொழுது கிளையொன்று வந்து முழங்காலில் அடித்து விட்டது என்று சிரித்தபடியே சொன்னான். ராஹிலாவின் மோகனப் புன்னகையே அதனை மாற்றிவிடக் கூடிய மருந்தென நம்பினான் போலும். நம்பிக்கையை உண்மை உலர்த்தி எடுத்தது. சீழுடன் புரையோடிய முழங்காற் புண் 'புளியந் தீவு ஆஸ்பத்திரி' என இரண்டு மாதங்கள் இழுத்தடித்து, அவன் வலக் காலைத் துண்டித்து, நிரந்தர நோயாளியாக வீட்டின் தோட்டுப் பாயிலே கொண்டு வந்து சரித்

தது. இவ் வைத்தியத்தில் அற்ப சொத்துக்களும், அவள் உடலில் மின்னிய, 'பொன்னி'களும் கரைந்துபோனதுதான் மிச்சம்.

கடைசியில் அரசினர் குடியிருப்புக் கொலனியில் ஒரு குடிசையைக் கட்டிக் கொண்டு, கணவனை அதில் வாழச் செய்து, அவனுக்குத் துணையாக வாழ்வதிலே சகல சுகமும் காண முடியும் என்ற நம்பிக்கையுடன் வாழத் தலைப்பட்டாள் ராஹிலா.

இளமையின் கனவுகளுக்கெல்லாம் பொருள் கண்டு விட்டதான பூரிப்பில் மிதந்தது கனவாக தன் கன்னிப் பருவத்தின் பூரிப்பை அம்மணகிய கூச்சம் மட்டுமே அடிநாக்கில் சுவைக்க, மனைவியென்ற போர்வைக்குள் தன்னைக் கவசப் படுத்திக் கொண்டு, விறகு பொறுக்கியும், விற்றும் சுய சம்பாத்தியம் தேடிக் கொள்ளும் பெண்கள் கூட்டத்தில் ஒருத்தியாயினுள்.

இந்த இடர்மிகு வாழ்க்கையிலே சில ஆண்டுகள் சிக்கி, இதழ் இதழாகப் பூட்டறுந்து, இற்ற பின்னர், அன்றுதான் பிரச்சினையின் காளாத்திரி பூதாகரமாக எழுந்து நிற்கின்றது.

கஞ்சி உலை கொதித்துக் கொண்டிருக்கிறது.

மனத்திலே அன்று நடந்த சம்பவங்கள் சூடு ஆருத சம்பவங்களாகிக் கொதித்துக் கொண்டிருக்கின்றன.

தூரவடிக்குப் போன ராஹிலா கால் முகங்களைக் கழுவியவளாக விறகுக்கட்டை எடுத்துக் கொண்டு போகும் பொழுது, ஆதவனின் அஸ்தமனத்திற்கு கீழ்வானில் செந்தூரக் கோலம் போடப்பட்டிருந்தது.

'இன்று அலியார்ப் போடியாரின வீட்டில் விறகு போடும் முறை' என்ற நினைவுதான் முதலில் எழுந்தது. அந்த வீட்டை நினைததும், அவளை அறியாமலே ஒருவகைக் கூச்சத்தில் அவள் மேனி சிலிர்த்தது.

விறகைச் சமையல் கட்டுப் பக்கம் போட்டுவிட்டு, கிணற்றில் நீரை அள்ளிப் பருகும் போதுதான் 'கரேச்' பக்கமிருந்து போடியார் வீட்டு ட்ரக்டர் றைவர் கரீம் பிரசன்யமாஞன். அவன் அவளுடைய தரிசனத்திற்காகவும், அவள் அவனுடைய தரிசனத்திற்காகவும் காத்திருப்பது எட்டு மாத காலமாகப் பழகிவிட்டது. இருவருக்கும் இது தெரியும், இருவரும் இதுவரை இதை வார்த்தைகளில் வெளியிட்டது மில்லை.

திறந்த கரேச் கதவின் நீவினூடே பாய்ந்த ஒளிக் கற்றை ராஹிலாவின் மேனிக்குத் தங்கமுலாம் பூசவே உதவியது. சுருங்கிய இமையின்கோடியிலே விழிகளைப் புரட்டியபடி, " இவங்க எங்க போனுங்களோ?'' என்ருள்.

''பள்ளில இண்டைக்கி ஹதீஸாம். அதுதான் போடியாரும் பொஞ்சாதியும் போயிருக்காங்க!''

அவன் கண்கள், அவள் அணிந்திருந்த ரவிக்கையையும் திமிறிப்புடைத்த குமரிமையின் கொள்ளைத் திரட்சியை காட்

டிய மார்புகளை மேய்ந்து கொண்டிருக்க, அவன் உதடுகள் வெறுமனே பதில் சொல்லின.

தன்னைப் பற்றிய பூரண உணர்வு என்னும் மின்னல் தாக்குதலில், அவள் தன் உடலைத்தானே வாஞ்சையுடன் பார்த்துக் கொள்ளுகின்றாள். நான்கு வருடங்களாகத் தன் கணவனால் கசக்கப்படாது, அன்றலர்ந்த மலரின் வாளிப்புடன் கடின கூலி வேலையில் மேலும் திடமும் உறுதியும் பெற்று...

நாணம்; மறுகணம் ஆவேசம்!

விழிகளால் அவன் தன்னை அம்மணமாக்கிப் பார்ப்பது விரசமானது என்ற எண்ணம் இற்று, அதிலே ஏதோ சுகம் வந்து ஒட்டுவதாக 'கிச்சா மூச்சம்'!

அந்நிலையில் யுகயுகாந்திரமான எண்ண எழுச்சிகளை அந்த விழிகள் பரிமாறிக் கொள்ளுகின்றன.

மறதியின் சுவைப்பினைப் பிளந்து, பிரக்ஞையின் பிரசவம்.

குடிசையிலே கணவன் என்ற ஓர் உருவத்தின் மங்கலான நினைவு.

"விறகு கொண்டாந்திருக்கன். அவங்களுக்கிட்டச் சொல்லுங்க சில்லறையிருந்தாத் தாங்க" வார்த்தைகள் அவளின் தொண்டையினின்றும் திக்கித் திக்கி எழுந்து மடிகின்றன.

"சரி! உள்ளாலே வாங்க ராஹிலா!" என்று கதவை இன்னுஞ் சற்று சாத்தியபடி கரீம் 'கரேஜு'க்குள் நுழைகின்றான்.

இளமையின் இன்பானுபவத்தை வாழ்வில் கானலாகக் கண்டு நிற்கும் ராஹிலாவின் ஒடுங்கிய உணர்வுகள் அவனைக் காணும் போதெல்லாம் தளம்பத் தொடங்கின. ஆரம்பத்தில், அவள் கணவனின் கருணை முகமும் — இயலாமையும் இணைந்து அந்த எண்ண அலைகளுக்கு அரணிட்டன.

காலப் போக்கில் ...

அவள் கணவனோடு உறவாடும் போதெல்லாம், நினைவில் குமிழ்விடும் இவனின் அழகிய முகமும், சதா அந்த முகத்தில் நெளியும் புன்னகையும் அவள் மனதிலே குறுக்கு இழைகளாக இணையத் தொடங்கின.

அரண் முற்றாகத் தளர்ந்துவிட்டது. கனவு நிலையில் தன் உடலை அவனுக்கு ஒப்படைத்து அநுபவிக்கும் ஊமை இன்பம் உடலிலே பரவத் தொடங்கி...

அதுவே இன்பம் என்ற நிலையும்! இன்று அரிதாக வாய்த்திருக்கும் ஒரு சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கரீம் தன்னை அழைப்பதை அவள் உணர்வாள். அவனுடைய விருப்பத்தின் சுவட்டிலே நடப்பவளைப் போல கரேஜுக்குள் நுழைந்தாள்.

உள்ளே மௌனத்தின் மோனமே இருவரையும் இணைத்தது. ஒருவர் மூச்சு மற்றவர் மீது படும் அளவுக்கு நெருக்கம். அவளுடைய வாலிபப் பூரிப்பை விழிகளாலேயே பருகிவிடலாம் என்ற ஆவேசம்

கொண்டவனைப் போல அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னது கடுமையாப்பாக்கிறீங்க" என்றவளின் முகத்தில் புன்னகை கோலமிடுகின்றது.

"ராஹிலா! உண்ட நிலம எனக்குத் தெரியும். எத்தனையோ நாளா நானும் உனக்கிட்டக் சொல்லப்பார்த்தன்... இன்றுதான் கிடச்சு எனக்கு வேற தெரியா சம்மதமெண்டாச் சொல்லு"

சஞ்சலமும் துயரமும் நிறைந்த தன் வாழ்க்கை என்னும் சிறையிலிருந்து மீழ வேண்டுமென்ற நினைவை இவ்வளவு காலமும் கரீமின் பார்வையே ஊட்டி வந்தன. மூன்றும் மனிதனாக நின்றவன் இரண்டாம் மனிதனாக சமீபத்தில் நின்று பேசும் பொழுது நம்பிக்கை அசுரப் பசளை உண்டு 'இசுகிசு' என வளருகின்றது.

"அல்லாவுக்கு மத்திச்சமா என்னக் கைவிடமாட்டாய் எண்டா உன் பின்னால வாறன்" அந்த வார்த்தையைச் சொல்ல எப்படித்தான் துணிவு வந்தது என்பது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

"ராஹிலா!" என்று கூறிக் கொண்டே நெடுநாளைய ஆசையைப் பூர்த்தி செய்யும் ஆசை கனியவே, அவளைத் தனது அணைப்பிற்குள் கரீம் முற்றாகச் சிறைவைத்தான். அந்த அணைப்பில் தன்னை இழந்த அவள், இடையிலிருந்து கீழாக ஊர்ந்த அவன் கையை விலக்கும் சக்தியை இழந்தாள்.

வீதியில் யாரோ கதைக்கும் சப்தம், தாங்கள் இருந்த 'கரேஜ்' மனித சஞ்சாரமற்ற உலகமல்ல என்பதை உணரச் செய்தது.

"இருந்தாப்பல போடியார் வந்திட்டா" எனத் தயங்கினாள் ராஹிலா.

"நானும் மறந்திட்டன். வாற நேரம்தான். விறகுக் காசை போடியாருக்கிட்ட வந்து வாங்கு. அப்பதான அவங்களும் ஒண்ணும் நினைக்க ஒண்ண. சிலவுக்கு இந்தா, இந்த ஐந்து ரூபாவை வைத்துக் கொள்..." என ஐந்துரூபாய் நோட்டு ஒன்றை நீட்டினாள். ராஹிலா தயங்கினாள்.

"இனி, நான் உழைக்கிறதெல்லாம் உனக்குத்தானே? வைச்சுக்கொள்" என்று கைக்குள் திணித்தான். அவளும் பெற்றுக் கொண்டாள்.

"ராஹிலா! மறந்திடாம விடியச்சாமம் அந்தப் பனிச்சங் காட்டுப் பக்கம் நிக்குதே நாசு மரம் அங்க வா... எல்லாம் கதைப்பம்...!"

அசையாத சிலையாக இத்தனைக்கும் விட்டுக் கொடுத்தவள், சம்மதித்திற்கு அடையாளமாகத் தலையைத்தொங்கப் போட்டுக் கொண்டாள். கால்கள் நடக்கத் தொடங்கின.

கஞ்சி உலை கீழே இறக்கப்பட்டது.

தாலாப் பீங்கானில் கஞ்சியை ஊற்றி ஆற்றும் போதே

காகிதத் தொழிற்சாலையின் சைரன் ஒலி அந்தப் பிரதேசத்தை யெல்லாம் நிறைந்துக் கொண்டிருந்தது.

தூக்கக் கலக்கத்தில் இருந்தவனை ராஹிலா, ''இஞ்சப் பாருங்க, பத்து மணியாப் போச்சு, எழும்பிக் கஞ்சைக் குடிச்சுட்டுப் படுங்க''

கைகளிரண்டையும் நிலத்தில் ஊன்றியவாறு கஞ்சியைக் குடித்துக் கொண்டே ''ரஹிலா! உனக்கு என்னுல சரியான கஸ்டம்தான். ஆண்டவன் நெடுகிலும் கஸ்டத்தை தரவா போருன்? ஒருநாள் நமக்கும் பொழுது விடியும்'' சொல்லிக் கொண்டே கைகளைக் கழுவியன் அதே பாயிலே சுருண்டு கொள்கிருன்.

கும்பி விளக்கு கொழுந்து விட்டுஎரிந்து கொண்டிருந்தது. உச்சிக்கு வந்துவிட்ட நிலவைக் கருமேகக் குவியல் ஒன்று மெல்ல மெல்ல விழுங்கிக் கொண்டுவந்தது.

வெள்ளைப் பட்டால் பந்தல் இழுத்தாற் போல் பனிப் படலம் எங்கும் பரவிக்கிடந்தது.

மங்களகரமான காலைப் பொழுதின் உதயத்திற்குப் பறவையினங்களின் முதலாவது சுருதி ரா்வறிலாவின் செவிகளில் துல்லியமாக விழுந்தது.

துரவடிக்குப்போய்க் காலைக் கடனை முடித்துக் கொண்டாள்.

நாகயடியில் கரீம் தனக்காகக் காத்திருக்கும்கும் காட்சி அவள் மனத்தில் நடைபாவாடை விரிந்த்தது.

பாயின் அடியில் கிடந்த பூச்சிலுக்குச் சேலையும் வெல்வெற் ரவிக்கையும் அணிந்து, தன் அழகின் பூரணத்துவத்தை ஒரு முறை பார்த்துக் கொள்ளுகின்ருள். இறுதியாகக்கதவிடுக்கினூடே ஒரு சம் பிரதாயமான பார்வை.

நோயின் அழுத்தத்தால் சூம்பிப் போன கரங்களிரண்டும் மேல் நோக்கி இறைஞ்சிய வண்ணமிருந்தன. கண்களில் பெருகிய நீர்த்துளிகள் கன்னக் கதுப்புகளில் சரம் கோத்து பின்னமுவிக் கொண்டிருக்க .. அவனுடைய உலர்ந்து போன அதரங்களைப பிளந்து கொண்டு... 'இறைவா! எங்கும் நிறைந்த, எல்லாம் தெரிந்த ஏகனே! நான் வாழ்வில் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களைப் பொறுத்தருள்வாயாக ! என்னைக் கணவனுக ஏற்றுக் கொண்ட நாட்தொடம் இந்தக் கணம் வரையிலும் என் மனைவி படும் கஸ்டங்களுக்கெல்லாம் காரணமான என்னுயிரையாவது வாங்கிக் கொண்டு அவளுக்கு நல் வாழ்வை அருள்வாயாக......!'

நின்ற நிலையில் தன் கால்கள் வேர்கள் பாய்ச்சி இறங்கி விட்டன போன்று ராஹிலாவுக்குத் தோன்றியது.

புழுப் போலாகி வாழ்வின் சகதியில் நெளியும் நிலையிலும் அளவற்ற அன்பைச் சொரியும் கணவனை நினைக்கும் போது...

அந்நிலையில் புதிய துணிவும் வைராக்கியமும்...

அலியார்ப் போடியாரின் வீட்டிற்குப் போனுல். கரீமுக்குக் கொடுக்கவேண்டிய ஐந்து ரூபாய் நோட்டைச் சேலைத் தலைப்பிலே முடிந்து கொண்டாள்.

பழைய கஞ்சிப்பானை, புதிதாக அவள் மூட்டிய உலையிலே ஏறி அமர்ந்தது!

## அரசு வெளியீடுகள்

தோணி வ. அ. இராசரத்தினம் - ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற சிறுகதைத் தொகுதி விலை. ரூ. 2/-

வாழையடி வாழை க. செபரெத்தினம் -வாழ்க்கை வரலாறு விலை. ரூ. 2/-

பகவத்கீதை வெண்பா புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை - சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற கவிதை நூல் விலை. ரூ. 3/50

இளமைப் பருவத்திலே! எம். ஏ. ரஹ்மான் - நூல் நிலையத்துக்குரிய சான்றிதழ் பெற்ற சிறுவர் இலக்கியம் (இரண்டாம் பதிப்பு) விலை. ரூ. 1/25

மரபு எம். ஏ. ரஹ்மான் - உருவகக்கதைகள் (வண்ணச் சித்திரங்களுடன்) விலை. ரூ. 2/-

ஈழத்து இலக்கிய வளர்ச்சி இரசிகமணி கனக. செந்திநாதன் - ஈழத்தின் தற்கால இலக்கிய வரலாறு கூறும் வரலாற்று நூல் விலை. ரூ. 3/50

அண்ணல் கவிதைகள் கவிஞர் அண்ணல் - கவிதைத் தொகுதி விலை. ரூ. 2/25

பரியாரி பரமர் -'சாஞ'- பேஞச் சித்திரம் விலை. ரூ. 1/90

இலக்கிய உலகம் - வி. கந்தவனம் - கவிதை நூல் விலை. ரூ. 1/40

காப்பியச் சொற்பொழிவுகள் - பத்துக் காப்பியங்கள் பற்றிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் விலை. ரூ. 3/50

புதுயுகம் பிறக்கிறது - மு. தளையசிங்கம் - சிறுகதைத் தொகுதி விலை. ரூ. 2/75

மஹாகவியின் குறும்பா - 100 குறும்பாக்கள், 'செள'வின் 50 சித்திரங்களுடன் கூடியது. விலை. ரூ. 1/85

ரகசிர் குழு போட்டிக் கதைகள் - போட்டி மூலந் தேர்ந்த சிறுகதைகளின் தொகுப்பு விலை. ரூ. 1/30

வீ எஸ். பொன்னுத்துரை சிறுகதைத் தொகுதி விலை. ரூ. 4/40

நபிமொழி நாற்பது - ஆ. மு. ஷரிபுத்தீன் விலை. ரூ. 1-50

முஸ்லிம் தமிழ்ப் பாரம்பரியம் - எம். கே. செய்யிது அஹமது விலை. ரூ. 4-75

இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள் -தொகுப்பு நூல் விலை ரூ 6-00

ஞானப் பள்ளு - கலாநிதி ஆ. சதாசிவம் விலை ரூ 4-00

அரசு வெளியீடு

231, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13, இலங்கை.

# உரைச்
# சித்திரம்

## ஒற்றைப் பூ

அன்ப,

நான் எழுதி இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் பேச்சுக்கள் - நாடகங்கள் - உரைச் சித்திரங்கள் ஆகியவற்றைப் பாராட்டி 'இளம்பிறை' வாசகர் பலர் அவ்வப்போது கடிதங்கள் எழுதியிருக்கின்றூர்கள். அவர்கள் அன்பிற்கு என் நன்றிகள். ஒலிபரப்பாகும் விடயங்களை 'இளம்பிறை'யில் வெளியிட்டால் அவற்றைப் பாதுகாத்து வைத்தல் சாத்திய மானது எனவும் பல அன்பர்கள் வேண்டு கோள் விடுத்திருந்தார்கள். அவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யாது விட்ட மைக்குக் காரணங்கள் பல. அக்காரணங்களை இங்கு பிரஸ்தாபிக்கும் உத்தேசம் எனக்குக் இடையாது. இருப்பினும், பலரது அன்பு வேண்டுகோளை நிறைவேற்றும் வகையில் இவ் வாண்டிலே ஒலிபரப்பான 'பயணங்கள்' என் னும் உரைச் சித்திரத்தை ஒலிபரப்பிற்கு எழுதிய அமைப்பிலேயே, ஒற்றைப் பூவாக இங்கு பிரசுரிக்கின்றேன். சென்ற ஆண்டின் மீலாத் மலரில் பிரசுரமான 'நினைவுகள்' என்ற உரைச் சித்திரத்தின், முழு நிறைவான மறு பகுதியே 'பயணங்கள்' என்னும் இவ்வுரைச் சித்திரம் எனவுங் கொள்ளலாம்.

எம். ஏ. ரஹ்மான்

சித்திரம்

# பயணங்கள்

குரல் 1: 1958-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19ஆம் நாள்.

குரல் 2: இந்தியத் துணைக் கண்டத்தின் தலைநகரான புது டில்லியிலுள்ள ராஜா எட்வட் வீதியின்கண் அமைந்துள்ள நாலாம் இலக்க வீடு.

குரல் 1: அந்த வீட்டில் கிழவர் ஒருவர் வசித்து வருகின்றார். அவ்வாண்டின் நவம்பர் மாதத்தில் தமது 70-வது பிறந்த தினத்தைக் கொண்டாட எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்.

குரல் 2: அக்கிழவர் இந்திய நாட்டின் முன்னணித் தலைவர்களிலே தலைசிறந்தவர். சுதந்திர பாரதத்தின் மந்திரி சபையில் கல்வி அமைச்சராக மகிமை பெற்று, அப்பதவியில் நீண்ட பதினோராண்டு காலமாக உழைத்து வருகின்றார். நவ இந்தியாவின் இளைய சமுதாயத்தின் கல்வி முன்னேற்றம் என்ற நினைவே அவர்தம் நெஞ்சமெல்லாம் வியாபித்திருக்கின்றது.

பெண் : எழுபது வயதுகளாகிவிட்ட போதிலும், வாலிபத்தின் சுறுசுறுப்பு அவருடன் இணைந்தே இருக்கிறது. கட்டுப்பாடுகளுக்கு இசைந்தொழுகி, குறித்த காலத்தில், குறித்த கடமைகளை இயற்றுதல் அவருடன் இணைந்த சுபாவமாகும். அவர் இந்தியத் துணைக் கண்டத்தின் கல்வி அமைச்சராக இருந்த போதிலும், தாம் ஓர் இஸ்லாமியன், இஸ்லாமியக் கடமைகளை இம்மியும் தவறாது இயற்றுதல் வேண்டும் என்ற ஏக சிந்தையும் உடையவர்.

குரல் 1: அன்று விடியற் காலை.

குரல் 2: சுபுஹுத் தொழுகை நேரம் அண்மித்துக் கொண்டிருக்கின்றது.

(பாங்கு ஓதுதல் — அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்...)
(பாங்கொலி மெல்லிய பின்னணியில் ஒலித்தல்)

பெண் : சுபுஹுத் தொழுகையை இயற்றுவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றார். இதற்காகக் குளியல் அறையை நோக்கி விரைகின்றார்.

(சறுக்கி விழுந்து, பலமாக அடிபடுவதான ஒலிக்குறிப்பு)

3 குரல்களும்: (வியப்புடன்) ஆ.! ஆஹ்!

குரல் 1: அக்கிழவர் கீழே விழுந்து விட்டார். அடி பலமாகத் தோன்றவில்லை. ஆனால், மூர்ச்சையை இழந்து விட்டார்.

பெண் : பாரதத்தின் கல்வி அமைச்சர் குளியல் அறையில் சறுக்கி விழுந்து பிரக்ஞை இழந்து கிடக்கின்றார் என்ற செய்தி காட்டுத் தீ போல டில்லி நகரம் பூராகவும் பரவுகின்றது. பாரதப் பிரதமர் பாரத ரத்தினம் ஜவஹர்லால் நேரு உட்படச் சகல தலைவர்களும் திடீரெனச் சுகயீனம் அடைந்துள்ள கிழவருடைய படுக்கையைச் சுற்றி மொய்க்கின்றார்கள்.

குரல் 1: பிப்ரவரி மாதத்தின் 19ஆம் நாள் நத்தையாக ஊர்ந்து மடிகின்றது.

பெண் : கிழவருடைய உடல் நிலையில் எவ்வித அபிவிருத்தியும் ஏற்படவில்லை.

குரல் 1: இந்தியாவின் விமானப் படையைச் சேர்ந்த விமானம் ஒன்று கல்கத்தாவை நோக்கி விரைகின்றது. மேற்கு வங்காளத்தின் முதல் அமைச்சரும், பாரத நாட்டின் தலைசிறந்த டாக்டருமான பி ஸி. ராய் அதில் ஏறி, புதுடில்லி வந்தடைகின்றார். தமது நெருங்கிய சகாவான அக்கிழவருடைய உடலைப் பரிசோதிக்கின்றார்.

குரல் 2: 20ஆம் நாளும் ஊர்ந்து மடிகின்றது.

பெண் : கிழவருடைய உடல்நிலையில் எவ்வித அபிவிருத்தியும் ஏற்படவில்லை.

குரல் 1: நள்ளிரவு வரை மிகுந்த மனக் கவலையுடன் பாரத ரத்தினம் ஜவஹர்லால் நேரு கிழவரின் படுக்கையின் அருகில் அமர்ந்திருக்கின்றார். மனத்திலே துக்கம், விழிகளிலே தூக்கக் கலக்கம். சற்றே சயனித்து ஓய்வு பெற நேரு விரும்புகின்றார். இதனால், அவர் தமது இல்லத்திற்குத் திரும்புகின்றார்.

பெண் : கிழவருடைய முகத்தில் ஒருவித பிரகாசம். அவருடைய இதழ்கள் இலேசாக அசைகின்றன. மிக மெல்லிய குரலில், **'என்னை இறைவனிடம் விட்டு விடுங்கள்'** என மூன்று தடவைகள் கூறுகின்றார். உர்து மொழியின் தலைசிறந்த பேச்சாளனாக விளங்கிய அவர் கூறிய கடைசி உர்து வார்த்தைகள் அவைதாம்.

(தொலைபேசி மணியின் கிணுகிணுப்பு ஒலிக் குறிப்பு)

குரல் 2: ஜவஹர்லால் நேருவின் வீட்டின் தொலை பேசி மணி கிணுகிணுக்கின்றது. அப்பொழுதுதான் வீடு திரும்பிய அவர் அதனை எடுத்துச் செவியிலே வைக்கின்றார்.

அன்றும் இன்றும்... என்றுமே!

பேரும் புகழும் பெற்றது


பீடி புகைப்பவர்களின் மனதில்

அழியா ஓவியமாகத்

திகழ்வது

## ஆப்பிள் மார்க் பீடிகளும்

# முத்தையா பீடிகளுமே




தரத்திலும், மணத்திலும் அளவிலுங் கூடச் சிறந்தது

பீடிகளெல்லாவற்றிலும்

தனித்தன்மை யுடையனவாக

தன்னிகரற்ற

பீடிகளாக நிலவுவது

ஆப்பிள் மார்க் பீடிகளும்

**G. S.** முத்தையா ஸ்பெஷல் பீடிகளுமே!

தயாரிப்பாளரும் விற்பனையாளரும்:

## ஞானமலர் ஸ்டோர்ஸ்,

*102/2 A, இரத்தினஜோதி சரவணமுத்து வீதி,*

*கொழும்பு-13*

தொலைபேசி: **32221** Extn: 3

| | |
|---|---|
| பெண் : | மறுகோடியிலிருந்து செய்தி வருகின்றது. |
| குரல் 1: | **மௌலானு அபுல்கலாம் ஆஸாத் இறந்து விட்டார்!** |
| குரல் 2: | 21-ம் நாள் மடிந்து, 22-ம் நாள் பிறந்து கொண்டிருந்த அந்த நள்ளிரவு வேளையில், இந்த அதிர்ச்சி தரும் செய்தி இவ்வாறு பரம்பியது. |
| பெண் : | நேரு கலங்கினுர். |
| குரல் 1: | டில்லி அதிர்ச்சியுற்றது. |
| குரல் 2: | பாரத நாட்டை இச்செய்தி உலுக்கியது. |
| பெண் : | உலகின் பல நாடுகளிலும் அநுதாப உணர்ச்சி மேலோங்கியது. மௌலானு அபுல் கலாம் ஆஸாத் இறந்ததும் அந்நாளில் இந்திய ராஷ்டிரபதியாக விளங்கிய ராஜேந்திர பிரசாத் 'முப்பது ஆண்டுகளாக என் நெருங்கிய நண்பரும் சகாவுமாக இருந்த ஓர் இனியவரை இழந்தேன்' என வருந்தினுர். |
| குரல் 1: | ஆஸாத்தின் பூதவுடலின் இறுதிச் சடங்குகள் முடிவுற்ற இரண்டாம் நாள், அதாவது, பிப்ரவரி 24-ம் நாள், டில்லியில் இந்தியப் பாராளுமன்றம் கூடியது. மௌலானு அபுல் கலாம் ஆஸாத்தின் மரணம் குறித்து அநுதாபம் தெரிவிக்கவே அக்கூட்டம் கூடிற்று. அப்பொழுது ஜவஹர்லால் நேரு கண்ணீர் மல்கப் பின்வருமாறு பேசினுர்: |
| குரல் 2: | 'ஒரு பிரமுகர் மறைந்ததும், அவர் மறைவினுல் ஏற்பட்ட இடைவெளி நிரப்பத்தக்கதன்று எனப் பேசுதல் இக்காலத்தில் வழக்கமாகி விட்டது. பல சந்தர்ப்பங்களில் அத்தகைய கூற்று ஓரளவு உண்மையாகவுமிருக்கலாம். ஆனுல், மௌலானு ஆஸாத் அவர்களுடைய மறைவு குறித்து இக்கூற்று அட்சரம் பிசகாத முழு உண்மையாகும். பெரியார்கள் இனி இந்தியாவிலே தோன்ற மாட்டார்கள்; என்ற அர்த்தத்தில் நான் கூறவில்லை; நிச்சயமாக இல்லை; பெரியார்கள் தோன்றியிருக்கிறுர்கள்; பெரியார்கள் தோன்றுவார்கள். ஆனுல், மௌலானு ஆஸாத் பிரதிநிதித்துவப் படுத்திய அந்தத் தனித்துவமான, விசேடத் தன்மையான பெருமை இந்தியாவிலோ, வேறு எங்கணுமோ தோன்றத் தக்கதன்று என்பதைத் தாழ்மையாகச் சமர்ப்பிக்கின்றேன்... ... |
| | 'அவர்தம் ஆழ்ந்த கல்வி ஞானம், நுண்மாண் புலமை, நாவன்மை ஆகிய பல குணங்களை நாமெல்லோரும் அறிவோம். அவற்றை நான் குறிப்பிடுவது அவசியமன்று. அவர் ஒரு தலைசிறந்த எழுத்தாளர். பல வழிகளிலுஞ் சிறப்புப் பெற்றவர். மற்றும் அறிவாளிகளும், மற்றும் எழுத் |

தாளர்களும், மற்றும் நாவலர்களும் நம்மத்தியில் இருக்கிறார்கள். ஆனால், அவரிடம் மட்டுமே பழைமையின் சிறப்பும், நிகழ்காலத்தின் மகத்துவமும் நேர்த்தியாக இணைந்திருந்தன. பல நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு பற்றி நான் படித்தவற்றை அவர் பிரதிநிதித்துவப்படுத்தி எனக்கு நினைவூட்டினார்.'

பெண் : மௌலானா ஆஸாத் ஆழ்ந்த புலமை நிரம்பிய கல்விமான். கற்றோரைக் கற்றோரே காமுறுவர் என்பதற்கு ஏற்ப இந்திய தத்துவ மேதையும், பின்னாளில் இந்தியாவின் ஜனாதிபதியாகவும் விளங்கிய டாக்டர் ரதாகிருஷ்ணன் அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்:

குரல் 1: 'மௌலானா சாஹிப் மிகுந்த தைரியத்தினதும், பயமின்மையினதும். நேர்மையினதும், சுதந்திரத்தின் மீதான வழுவாப் பற்றினதும் உந்நதத் திருட்டாந்தமாக விளங்கினார். ஏறத்தாழ இரண்டு தலைமுறைகளாக, நமது அரசியல் வாழ்க்கையின் ஒப்பற்ற தலைவராக அவர் விளங்கினார். பல்வேறு கடினமான சந்தர்ப்பங்களில், பல ஆண்டுகளாக, மதிநுட்பமுள்ள இராஜ தந்திரியாகவும், தீவிர தேச பக்தனாகவும். சிறந்த அறிவாளியாகவும் அவர் நாட்டிற்காற்றிய சேவை மதிப்பிடற்கரியது. தான் வரித்திருந்த நம்பிக்கைகளுக்காக அவர் துன்பப் பட்டிருக்கிறார். ஆனால், அதற்காக அவர் தம்முடைய கருத்துக்களைச் சொல்வதற்கு எந்தக் காலமும் பின் வாங்கியதில்லை.... புத்தகங்களை அவருடைய தொடர்ச்சியான, நிச்சயமான கூட்டாளிகளாக விளங்கின. அராபிய பாரசீக உயரிலக்கியங்களின் மேற்கோள்கள் அவருடைய உரையாடல்களில் விரவிக் கிடக்கும்........ வெல்ல முடியாத துணிவும், பயமில்லாத நடத்தையும், கம்பீரமான சபைத் தோற்றமுமுள்ள ஒரு மனிதராக- ஒரு பெரியாராக - விளங்கிய மௌலானாவுக்கு ஒப்பான இன்னொருவரை, நாம் சந்திக்க மாட்டோம் என்பதில் ஐயமில்லை.'

குரல் 2: மௌலானா ஆஸாத் இரு சந்தர்ப்பங்களிலே தமது சுயசரிதையை எழுதியிருக்கின்றார். முதல் எழுதப்பட்ட சுயசரிதை 'தத்கிரா' என வழங்கப்படுகின்றது. இது 1916-ம் ஆண்டில் எழுதப் பட்டது. அப்பொழுது ஆஸாத்துக்கு முப்பது வயது தானும் ஆகவில்லை என்பது கவனத்திற்குரியது.

பெண் : ஆஸாத்தின் பதினான்காவது ஆண்டிலேயே நட்புரிமை பாராட்டி, அவருடைய வளர்ச்சியைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்த மிர்ஸா வஸ்லுத்தீன் அஹமத் எனும் புத்தகப் பிரசுரிப்பாளரின் வற்புறுத்தலின் பேரிலேயே இச் சுயசரிதை

எழுதப்பட்டது. 'அல்ஹிலால்' (இளம்பிறை) என்ற உர்து மொழி வாரச் சஞ்சிகையைப் பிரசுரித்து இந்திய மக்களின் உள்ளங்களை ஆஸாத் சூருவளி யெனக் கவர்ந்தார்.

குரல் 1: 'அபுல்கலாம் ஆஸாத்தை ஆசிரியராகக் கொண்டு அல்ஹிலால் பல்வகைத்தான எழுத்துக்களால் பல பகுதி மக்களையுங் கவரக் கூடியதாக வெளிவந்து கொண்டிருந்தது' என ஒரு வரலாற்று நூல் போற்றுகின்றது.

பெண் : அத்தகைய பத்திரிகையை வெளியிடும் இந்தத் தன்னிகரற்ற தலைவருடைய சக்திமிக்க ஆற்றலை யும், அவர்தம் சொந்த வாழ்க்கையையும் அவரு டைய அபிமானிகள் அறிதல் வேண்டுமென மிர்ஸா துடித்தார். எனவே, ஆஸாத்தைத் தமது சுயசரி தையை எழுதித் தரும்படி மிர்ஸா வேண்டினர். இந்தக் கோரிக்கையை முதலில் ஆஸாத் வேடிக் கையாகவே கருதினர்.

குரல் 2: 'எத்தனையோ சிறந்த மகான்களுடைய வாழ்க்கை, சிறந்த நூலுக்கான பொருளாக அமைந்துள்ளது. அவர்களைப் புறக்கணித்து என்னைப் பற்றி எழுதுவது வேடிக்கையான காரியமாகும்.'

பெண் : என ஆஸாத் தமது நிலையை விளக்கினர். ஆனல், மிர்ஸா விடாக் கண்டர். அமைதியான முறையில், தமது கோரிக்கையைத் தொடர்ந்து வற்புறுத்தி வந்தார். இதன் விளைவாக வாராவாரம் ஏதாவது எழுதித் தருவதாக ஆஸாத் ஒப்புக் கொண்டார். தம்முடைய குடும்ப வரலாற்றுடன்தான் தமது சுயசரிதையை ஆஸாத் ஆரம்பிப்பார் என்றே மிர்ஸா கருதினர்.

குரல் 2: 'எனக்கும் என்னுடைய காலத்திற்கும் அந்நியனன, குடியிருக்க வீடற்ற பரதேசியான நான், புண்பட்ட உணர்ச்சிகளின் ஆகாரங்களில் வளர்ந்து, அவாக் களின் முழுமையால் நிரப்பப்பட்டு, ஆசைகளின் நிறைவேருத பாழ் பொருளாக அகமத் என்று பெயர் பெற்று அபுல்கலாம் என்று அழைக்கப் பட்டு வாழும் நான், 1888-ம் ஆண்டிற் பிறந்தேன்.'

பாடல் : இரைச்சலொன் றெழுந்தது; நித்திரை போன்ற
உயிர்ப்பிலாத ஒரு நிலை யிடையே
கண்களைத் திறந்து கண்டு கொண்டோம்;
குழப்பம் நிறைந்த அக் கொடிய இரவோ
இன்னமும் கழிந்திட வில்லை;
மறுபடி துயிலிடை மயங்கி வீழ்ந்தோமே!

பெண் : இவ்வாறு தத்கிராவின் பின்னிணைப்பில் ஆஸாத் தம்மைப் பற்றிக் குறிப்பிடுகின்றூர். உண்மையில்

We deal in Rice - Paddy - Samba
Kora - Cocoa - Pepper - Cloves
Coffee and other
Ceylon Produces

**K. M. MOHIDEEN & CO**

108, Dam Street,
Colombo-12.

Phone: 21037

**Head Office**

65, 4th Cross Street, Colombo-11.

ALLENS TOFFEES
ALLENS SWEETS

Delicious & Nutritious

MANUFACTURED WITH
MODERN MACHINERY
AND
UNTOUCHED BY HAND

**BUY ALLENS CONFECTIONERY**

**ABRAHAM INDUSTRIES**

64, Hultsdorf Street,
COLOMBO-12.

Phone: **21032**

இப் பிற்பகுதியை வாசித்த பின்னர் நூலை வாசித்தாற்றான் நூலின் உட்கருத்தைப் புரிந்து கொள்ளலாமென அறிஞர்கள் கருதுகிறார்கள். தத்கீரா சாதாரண சுயசரிதமல்ல. அது குறியீடுகளிலே எழுதப் பட்டுள்ள அற்புதத் தத்துவக் குவியலாகும். உர்து மொழியைச் செழிப்படையச் செய்த அற்புதப் படைப்புமாகும்.

குரல் 1 : இச் சந்தர்ப்பத்தில் உர்து மொழி பற்றிய ஓர் உண்மையினை மனத்தில் இருத்திக் கொள்ளுதல் வெகு பொருத்தமானது. லட்சுமணபுரி பல்கலைக் கழகத்தின் அரபுப் பேராசிரியரான டாக்டர் எம். வாஹித் மிர்ஸா வருமாறு கருத்துத் தெரிவிக்கின்றார்.

குரல் 2 : மொகலாய ஆட்சியின் பிற்கட்டத்தில், ஹிந்தி ஹரிபோலி என்ற மொழியிலிருந்து பிறந்து; ராணுவப் பாசறைகளிலே பேசப் பட்டு வந்த உர்து மொழி, உண்மையிலேயே 19-ம் நூற்றாண்டிலே தான் இலக்கிய மொழியாக உயர்ந்தது. அத்துடன் வட இந்தியாவிலும், தக்கணப் பிராந்தியத்திலும் வாழ்ந்த கவிஞர்கள் தமது கவிதைகளை இயற்றுவதற்கு உர்து உவப்பான மொழி என்பதை உணரலாயினர்.

குரல் 1 : இந்த மொழியை வளப் படுத்திய காலிப், சர் செய்யித் அஹமத்கான், டாக்டர் நாஸீர் அகமத், மௌலவி முஹம்மட் ஹுசைன் ஆஸாத் ஆகியோருடன் வைத்தெண்ணப் படும் தகைமை மௌலானா அபுல் கலாம் ஆஸாத் அவர்களுக்கும் உண்டு என்பதை தத்கீரா நிரூபிக்கின்றது.

பெண் : தத்கீரா சாகாத இலக்கியங்களின் வரிசையில் இடம் பெற்றுள்ளது. சுவைமிக்கக் கவிதைகளினாலும், காவியக் குறியீடுகளினாலும் இந்நூல் நிரம்பி வழிந்து, நனி சொட்டச் சொட்டச் சுவைக்கின்றது. இதற்குச் சான்றாக ஓரிரு பாடல்கள் வருமாறு:

பாடல் : காலிலே தைத்த முள்ளினைக்
கழற்ற ஒரு கணம் திரும்பவும்,
காதலியோடு என் ஒட்டகம்
எங்கோ ஓடி மறைந்தது!
ஒரு கணம் திரும்பிய கவனம்;
ஒரு நூறாண்டாய் நீண்டது பயணமே! 1

நின்னுடன் சேருதற்
கதுவே நெறியெனின்
இதயமோ சமயமோ
எதையும் பணயமாக
வைத்திழப் பேனே! 2

பெண் தத்கீராவில் தத்துவ மெருகினைப் புடம்போட்டெடுப்பதற்காகத் தன்னைப் பற்றிய செய்திகளையும், திகதிகளையும் போட்டுக் குழப்பி நம்மை ஆஸாத் மலைக்க வைக்கின்றார்.

குரல் 2: 'என் சொந்த நகரம் தில்லியாகும்.'

குரல் 1: ஆஸாத் பிறந்தது மக்கமா நகரிலாகும். அவர் தமது வசிப்பிடமாக வரித்துக் கொண்டது கல்கத்தா நகராகும். அப்படியிருக்கவும் தமது சொந்த நகரம் டில்லியென்று எழுதுவதற்குக் காரணம் என்ன?

குரல் 2: ஒரு பாரிய நூலில்,

குரல் 1: டாக்டர் கே. எம். முன்ஷி அவர்களுடைய தலைமையில் அறுபதுக்கும் மேற்பட்ட பேராசிரியர்களின் கூட்டு முயற்சியாக பதினொரு பெரிய தொகுதிகளாக இந்நூல் வெளிவந்துள்ளது. 'ஒரு சொல்லிற் கூறுவதென்றால், இதன் தரம் மிகவும் உயர்வானது' என ஒரு பத்திரிகை இதனை விமர்சனம் செய்துள்ளது.

குரல் 2: அந்நூலில், 'மொகலாயப் பேரரசின் காலத்தில் டில்லி நகரிலிருந்த அத்தனை வீடுகளுமே முஸ்லிம்களுக்குச் சொந்மானதாகவே இருந்தன.' ஆனால், மொகலாய சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்ற பின்னர், 'என் தலைக்கு மேலே உள்ள இந்தக் கூரை எனக்குச் சொந்தமானது' என்று கூறக்கூடிய முஸ்லிமை டில்லி நகரத்தில் கண்டு பிடிப்பதுவே அரிதாகியது. பிரித்தானியருடைய பலாத்காரத்திற்கும் வன்முறைக்கும் முஸ்லிம்களே விசேட இலக்குகளாக அமைந்தனர். முஸ்லிம்கள் அநுபவித்த நீண்ட துயரை மௌலானா ஆஸாத் ஆழமாக உணர்ந்தார். எனவே, டில்லியை 'என் சொந்த ஊர்' என உரிமை கொண்டாடும் உரிமை முஸ்லிம்களுக்கு ஏற்படும் காலமே உண்மையான சுபீட்சக் காலம் என ஆஸாத் கனவு கண்டதில் வியப்பு ஒன்றுமில்லை.

பெண் : இவ்வகையில், தத்கீராவில் வரும் ஒவ்வொரு சொற்றொடரினதும் பொருள் இன்பத்தை நுகர்வதற்கு ஆழ்ந்த ஆராய்ச்சிகள் நடத்தப் படல் வேண்டும்.

குரல் 1: 'என் தாய் நபிநாயகமவர்கள் இடம் பெயர்ந்து சென்று நபித்துவத்தை நிலைநாட்டிய புனித மண்ணில் அமைந்துள்ள நகரத்தைச் சேர்ந்தவள்'

பெண் : இவ்வாறு ஆஸாத் சுட்டுவது மதீனமா நகரம் என்பது குறிப்பிடத் தக்கது. இச் செய்திகளைக் குழப்பும் ஆஸாத், தான் பிறந்து, வளர்ந்து, விளையாடி இன்

புற்றது கஃபாவின் நிழல் படியும் மக்கமா நகரம் என்பதைக் கோடி காட்டும் இடம் சுவையாக உள்ளது.

பாடல் : ......

திசையினைக் காட்டும் ஊசிபோற் திரும்பிச்
சுழலும் என் இதயம்; சுழற்றிச் சுழற்றி
எங்ஙனம் திருப்பினாலும், இதுவோ
தேவியின் புருவம் தேடிக் காட்டுமே!

பெண் : என ஆஸாத் கஃபாவில் அமைந்துள்ள கல்லைத் தமது காதலியாக உருவகித்து தத்கீராவில் எழுதி யுள்ளார்.

குரல் 1: "அந்தப் பாதையிற் செல்பவர்கள் என்றுங் களைப் படைவது கிடையாது. ஏனெனில், அதுவோ வழி யும் இலக்குமாம்!"

குரல் 2: அஃது ஈரடியில் நிறைவுறும் பாரசீகக் கவிதையின் அர்த்தமாகும். இந்தக் கவிதையை ஆஸாத் அடிக் கடி பிரியமுடன் கையாண்டார்.

பெண் : ஆஸாத்தின் வாழ்க்கை அக்கவிதையின் திருட்டாந்த மாகவே அமைந்தது. வாழ்க்கை நிலையாமை பற்றி யும் ஆஸாத்தின் மனம் தேடுதல் நடாத்தியது என்பதற்கு தத்கீராவில் வரும் பின்வரும் பாடல் கள் தக்க சான்றுகளாக அமைந்துள்ளன.

பாடல் : எனது பயணம் எங்கு முடியுமோ;
இதனைக் கூறுவார் எவரும் இல்லை
பாலைமேற் பாலையைக் கடந்தேன்;
பாலையே மேலும் மேலும் கிடந்ததே. 1

வசந்த காலமும் வறண்ட கோடையும்
என்றும் தழுவிக் கிடக்கும் இவ்வனத்தே,
காலத்தேவன் கையிலே மதுவும்
கண்ணிலே சாவும் காட்டுகின்றனே. 2

வாழ்கிறோம் என்னும் இம் மாயத் தோற்றம்
இரண்டு நாட் களுக்கு மேல் இருக்க வில்லை.
எங்ஙனம் இவ்விரு நாட்களும் கழிந்தன
என்பதைக், 'கலீம்', நான் எங்ஙனம்
உணர்த்துவேன்..? 3

இதனொடும் அதனொடும் இணைவதில்
ஒன்றும்,
இணைப்பினில் இருந்தென துளத்தை
அறுத்தெடுப் பதிலே அடுத்ததும்
அழிந்ததே. 4

With the Best Compliments of:

# MOOSAJEE SONS

Manufacturers of "Ceylopak" Polythene,

**270, Wolfendhal Street,**
**COLOMBO-13.**

*Phone:* **31737 - 8**

அன்பர்களே! நண்பர்களே!

அரிசி உணவுப் பிரியர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!
உங்களுக்குத் தேவையான அரிசி வகைகள் கிடைக்க
வில்லையே என்று கவலைப்படுகிறீர்களா? வேண்டாம்!
இப்போதே கவலையை விடுங்கள்!

# மகாராஜா ஸ்டோர்ஸ்

அரிசி வியாபாரிகள்.

103, பழைய சோனகத் தெரு

கொழும்பு-12

Telephone: 32784

சகல வைபவங்களுக்கும் உங்களுக்குத் தேவைப்படும்
பல விதமான அரிசி தினுசுகளை விலை மலிவாகவும், திருப்தி
கரமான முறையிலும் பெற்றுக் கொள்ள மேற்கண்ட
விலாசத்திற்கு இன்றே விஜயம் செய்து உண்மையறியுங்கள்.

பெண் : தத்கீராவில், மனித வாழ்க்கையில் மூன்று நிலைகள் இருப்பதாக மௌலானு ஆஸாத் விளக்குகின்றூர். ஆசை, அன்பு, உண்மை என அந்நிலைகளை அவர் விளக்குகின்றூர்.

குரல் 2: 'எல்லா உயிர்களையும் தழுவி நிற்கும் அன்பை யல்லாது, ஒடுங்கிய, தூய்மையற்ற, உடல் நுகர்வு சார்ந்த அன்பையே நான் கருதுகின்றேன். இந்த உலகம் முழுவதிலும் அன்பினைத் தவிர வேறு எதுவுமே கிடையாது. அதுவே சுவர்க்கத்தைத் தாங்கி நிற்கும் தூண்; பூமியின் அச்சாணி. தரிசனம் தருபவை எல்லாமே அன்பு. கண்களுக்குப் புலப் படாது மறைந்திருப்பனவும் அன்பு.'

பெண் : இவ்வாறு அன்புக்கு வரைவிலக்கணம் வகுக்கும் ஆஸாத், அன்பு உண்மையுடன் கலந்து உயர் நிலையடைகின்றது என்கிறூர். மேலும்,

பாடல் :

'காதல்' ஒருவனைக் கண்டேற் பதற்கோர்
ஆயிரம் நிபந்தனை நிறைவுறல் வேண்டும்;
முதற்கண்,
அமைதியும் திருப்தியும் அடைந்து கண்
டிருந்தால்
அவற்றிற் குரிய வாம் கழி விரக்கமாம். 1

'கொன்று வாழ்வு கொடுத்தல் எங்ஙனம்?'
எனக்
கேட்டேன்., தேவி ஓர்பார்வையால் என்னைக்
கொன்றனள்; வேறு பதில் கூறிலளே! 2

பெண் : என்ற பாடல்கள் மூலமும் ஆஸாத் இதனை விளக்கு கின்றூர்.

குரல் 1: தத்கீராவைப் பற்றி இவ்வளவு விரிவாகப் பார்த்த பின்னர், அவருடைய பிறிதொரு சுயசரிதமான 'இந்தியா விடுதலை பெறுகின்றது' என்ற நூலினைப் பற்றிச் சிறிது குறிப்பிடுதல் மிகவும் பொருத்தமான ஒன்றுகும்.

குரல் 2: இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற் பங்கு பற்றிய உந்நத புருஷர் என்ற வகையில், தாம் பங்குகொண்ட வரலாற்றினை எழுதி வைத்தல் வேண்டுமென்ற பிறிதொரு வற்புறுத்தலுக்காகவே அவர் இந்தச் சுய சரிதையையும் எழுதினூர். 'இந்தியா விடுதலை பெறுகின்றது' என்ற சுயசரிதை நூல் 1957-ம் ஆண்டு நவம்பர் மாத இறுதியில் பூர்த்தியாயிற்று. இந்நூல் தமது 70-வது பிறந்த தினத்தன்று வெளிவருவதை மௌலானு ஆஸாத் விரும்பினூர். துர்ப்பாக்கியக் குறுக்கீட்டினூல், ஆஸாத் அதற்கும் முன்னரே மரணத்தின் வாய்ப் பட்டார்.

பெண் : அந்நூலிலுள்ள முப்பது பக்கங்கள் இன்னமும் பிரசுரமாகவில்லை என்பது விசேடமாகக் குறிப் பிடத் தக்கது.

குரல் 2: 1945ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் இனப் பிரச் சினைக்குத் தீர்வு காணும் தமது சொந்தத் திட்டம் ஒன்றை அபுல் கலாம் ஆஸாத் வெளியிட்டார். அவருடைய திட்டம் பிரிந்து செல்லும் உரிமையுள்ள ராஜ்யங்களினுல் அமைந்த கூட்டமைப்பினை விரும் பியது. கூட்டுத் தேர்தல் தொகுதிகளின் மூலம் இன வேறுவாடுகளுக்கு ஏற்ப அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல், மத்திய அரசிலும் நிர்வாகத் திலும் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் சரி சம மான அந்தஸ்து இருத்தல், இந்திய அரசியல் திட் டத்தில் முஸ்லிம்களுடைய அந்தஸ்தினை இந்துக் களுடைய தலையீடின்றி முஸ்லிம்கள் மட்டுமே தீர்மானித்தல் ..... என்றெல்லாம் அவர் திட்டம் விரித்துரைத்தது.

ஆனுல், துர்ப்பாக்கியவசமாக அவருடைய திட்டத் திற்கு ஆரம்ப நிலையிலேயே காங்கிரஸ் செயற் குழுவில் பலத்த எதிர்ப்பு இருந்தது.

குரல் 1: எஸ். நடராஜன் எழுதிய நூலிலே காணப்படும் இத்தகவலை இப்பொழுது பிரசுரமாகியுள்ள 'இந் தியா விடுதலை பெறுகின்றது' என்ற நூலில் ஆஸாத் விரிவாகப் பிரஸ்தாபிக்கவில்லை. இவற்றை அவர் பிரசுரமாதாத முப்பது பக்கங்களிற் பிரஸ் தாபித்திருக்கக் கூடும் என்று ஊகிப்பதற்கும் இடமுண்டு.

பெண் : பிரசுரமாகாத பகுதி முக்கியமாகத் தனிப்பட்டவர் களைக் குறிக்கும் சம்பவங்களும், கருத்துரைகளும் கொண்டவையாகும். இப்பக்கங்கள் பிரசுரமாவது உடனடியாகச் சிலருக்கு மன அவதியைக் கொடுக் கக் கூடும் என்பதையும் ஆஸாத் உணர்ந்தார்.

குரல் 1: அப்பகுதிகளின் இரு பிரதிகளைத் தயாரித்து அவற் றைக் கல்கத்தா தேசிய நூல் நிலையத்திலும், புது டில்லித் தேசிய நூல் நிலையத்திலும் முத்திரையிட்ட உறைகளிலே பாதுகாப்பாக வைக்கப்படல் வேண் டும் எனவும், தனது மரணத்திற்கு முப்பது ஆண்டு களின் பின்னரே அந்த முப்பது பக்கங்களும் பிர சுரமாகுதல் வேண்டும் எனவும் அவர் உயில் எழுதி வைத்துள்ளார்.

குரல் 2: எனவே, மௌலானு அபுல் கலாம் ஆஸாத் அவர் களுடைய நூற்றுண்டு விழா கொண்டாடப்பட வேண்டிய ஆண்டான 1988ஆம் ஆண்டிலேதான் 'இந்தியா விடுதலை பெறுகின்றது' என்ற நூலினை முழுமையாக வாசிக்கும் வாய்ப்பு எல்லோருக்கும் ஏற்படும்.

பெண் : இந்த ஏற்பாட்டின் மூலம் வரலாறு சம்பந்தமான செய்திகள் உள்ளவாறு சித்திரிக்கப்படல் வேண்டும் என்ற ஆஸாதின் கண்டிப்பான போக்கினையும், அதே சமயம் தம்முடைய வித்துவத்திற்காக மற்றவர்களுடைய மனத்தினைப் புண்படுத்தலாகாது என்ற அன்புப் போக்கினையும் உய்த்துணரலாம்.

குரல் 2: மகாத்மா காந்தியின் சுய சரிதைக்குப் பின்னர், சிறிதும் ஒளிவு மறைவின்றி எழுதப் பட்ட சுய சரிதம் ஆஸாதினுடைய 'இந்தியா விடுதலை பெறுகின்றது' என்ற சுயசரிதமேயாகும்.

பெண் : 'தேசப் பிரிவினையின் அந்தரங்கக் கதையை கவர்ச்சிகரமாசத் தருகின்றது' என ஒரு பத்திரிகை இந்நூலை விமர்சித்தது.

குரல் 1: 'சிறிதும் ஒளிவு மறைவின்றி உண்மையுணர்ச்சியுடன் அவர் எழுதியுள்ளார். பெருந்தன்மையான கண்ணேட்டமும் உந்நத இலட்சியங்களுங் கொண்ட ஒரு மகா புருஷனை இந்த நூலெங்கும் காணலாம். நிகழ்ச்சிகளுக்கு அவர் தரும் விளக்கத்தை எல்லோரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். எனினும், தாம் சரியென நம்பியதை எழுதுவதற்கான திட சித்தம் படைத்தவராகவே இந்நூல் அவரைக் காட்டுகிறது' என ஒரு பத்திரிகை விமர்சித்தது.

பெண்: 'தத்கீரா', 'இந்தியா விடுதலை பெறுகின்றது' ஆகிய இரண்டு நூல்களிலும் பார்க்க மௌலானு ஆஸாதினுடைய தர்ஜுமன் அல்குர்ஆன் தான் அவருடைய ஒப்பற்ற இலக்கிய சாதனை என உர்து மொழி விற்பன்னரும், இஸ்லாமிய இறை நூலாரும் ஒருமுகமாகக் கருதுகின்றூர்கள்.

குரல் 2: முதல் முதலாக 1791-ம் ஆண்டில் குர்ஆன் உர்து மொழியிற் பெயர்க்கப்பட்டது. இதனைச் செய்தவர் ஷா அப்துல் காதிராவர்.

குரல் 1: ஆனல், எளிமையும் தூய்மையும் அழகும் கொண்ட உர்து மொழியின் செழுமையான நடை பிற்காலத்திலேதான் தோன்றியது. இது மௌலானு ஆஸாதினுடைய பங்களிப்பினுலும், அவருடைய காலத்தில் உச்சம் பெற்றது.

பெண் : தர்ஜுமன் அல்குர்ஆனை மூன்று பகுதிகளாக வெளியிட மௌலானு ஆஸாத் ஆரம்பத்திலே திட்டமிட்டார். ஒன்று குர்ஆனின் விளக்கமான உர்து மொழி பெயர்ப்பினைத் தயாரித்தலாகும். வாசகனுக்கும் நூலுக்குமிடையில் எந்த உரையாசிரியனும் புகுந்து கொள்ளாது குர்ஆன் தன்னியல்பாகப் பேசுதல் வேண்டும் என்பது இதன் நோக்கமாகும். இந்நூலுக்குத் தர்ஜுமன் அல்குர்ஆன் எனப் பெயரிடத் திட்டமிட்டார்.

கலப்பு பொஸ்பிரசன் **ரன்ரட்**

ரன்ரட்—ஒரு கலப்பு ''பொஸ்பிரசன்'' உங்கள் இல்லங்களிலும், உங்கள் விவசாயப் பகுதிகளிலும், அழிவை உண்டாக்கும் விஷக் கிருமிகளான எலிகளை நொடிப் பொழுதில் அழித்துவிட சிறந்த மருந்து ரன்ரட். ஒரு போத்தல் அடங்கிய பக்கட்டின் மருந்தை ஆறு தடவை உபயோகப்படுத்தலாம். ஒவ்வொரு பக்கட்டிலும் பாவிக்கும் முறை விபரிக்கப்பட்டுள்ளது. இன்றே உங்கள் வியாபாரிகளிடம் ரன்ரட் எலி மருந்தை வாங்கி எலிகளின் தொல்லையை அகற்றுங்கள்.




**ரன்பக்** கலப்பு கிருமி நாசினி




ரன்பக்—ஒரு கலப்பு கிருமி நாசினி. மூட்டைப் பூச்சிகளையும், கொசு போன்ற விஷக் கிருமிகளையும் நொடிப் பொழுதில் அழிக்க வல்லது ரன்பக். இன்றே உங்கள் வியாபாரிகளிடம் ரன்பக் ஒரு போத்தல் வாங்கி உங்கள் இல்லங்களில் இருக்கும் விஷக் கிருமிகளை அழித்து ஒழியுங்கள்.

ரன் இன்செக்ட் கில்லர், ஈவா கொஸ்மெடிக் மற்றும் எல்லாவித சைஸ்களிலும் பேப்பர் பேக்ஸ் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பிக்கவும்:

தயாரிப்பாளர்கள்:— தொலை பேசி: **33952**

**அப்துல்லா இண்டஸ்ரீஸ்,**

**72, பார்பர் ஸ்ட்ரீட், கொழும்பு-13.**

குரல் 1: இரண்டாம் நூலுக்கு தப்ஸீர் அல்பயான் என்ற பெயர் சூட்டப் படலாமென ஆஸாத் நினைத்தார். இதனை, குர்ஆனைப் பற்றிய விபரங்களை அறியும் ஆர்வமுள்ள முதிர்ந்த மாணுக்கருக்காக எழுதவே அவர் விரும்பினர்.

குரல் 2: மூன்ருவது நூல் முகத்தமா இ தப்ஸீர் என அழைக்கப்படும். குர்ஆனின் நோக்கங்கள் பற்றியும், அதன்கண் அமைந்துள்ள அடிப்படைகள் பற்றியும், அறிஞரின் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக இதனை எழுத ஆஸாத் தீர்மானித்தார்.

குரல் 1: மனக்கண்களிற் கண்ட இம் மூன்று நூல்களையும், முதலில் தனித் தனி நூல்களாக வெளியிட மௌலானு ஆஸாத்தினுல் முடியவில்லை. அவருடைய பொது வாழ்வில் ஏற்பட்ட சம்பவங்களின் முன்னேற்றம் அத்தகைய பூர்த்தியை அனுமதிக்கவில்லை. மூன்று தலைப்புகளிலே நீண்ட காலமாகத் திட்டமிடப்பட்ட நூல் இறுதியில் ஒரு நூலின் மகுடமாக ஒதுக்கப்பட்ட தர்ஜுமன் அல்குர்ஆன் என்ற பெயரில் வெளியாயிற்று.

பெண் : கூடுமான அளவு புரிந்து கொள்ளக் கூடியதாகவும், அர்த்தக் குறிப்பில் மற்றைய இரண்டினதும் அம்ஸங்களையும் அடக்கக் கூடியதாகவும் இம்மகுடம் அமைந்தது. தர்ஜுமன் அல் குர்ஆன் உர்து மொழியில் நிகழ்த்தப்பட்ட ஒப்பற்ற இலக்கிய சாதனை எனக் கற்றுணர்ந்தோர் அபிப்பிராயம் கூறியுள்ளனர். ஆஸாத் தமது மனம் வளர்ச்சியடைந்தமை பற்றியும், இஸ்லாமிய படிப்புத்துறையில் தாம் வரித்துள்ள பார்வை பற்றியும்,

குரல் 2: 'இருபத்தியேழு ஆண்டுகளைக் கொண்ட நீண்ட காலமாக இவ்விடயத்தில் என் மனம் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருந்தது. குர்ஆனின் ஒவ்வோர் அத்தியாயமும், அதன் ஒவ்வொரு பகுதியும், அதன் ஒவ்வொரு செய்யுளும், ஒவ்வொரு பதமும் கூட, எண்ணற்ற பள்ளத்தாக்குகளிலே பயணஞ் செய்து, அதே இடர்களை எதிர்த்துத் தாங்கும்படி, என்னைக் கடமைப் படுத்தியிருக்கின்றன. இப்பொருளார்ந்து இன்று கிடைக்கக் கூடிய பிரசுரமானதும் பிரசுரமாகாததுமான பரந்த இலக்கியத்தின் கணிசமான பகுதியை நான் பார்வையிட்டுள்ளேன் என்பதை என்னுல் உறுதி கூற முடியும். குர்ஆன் பற்றிய கல்வி கேள்விகளால் நிலைத்துள்ள அறிவின் எந்தத் தனிமையான இடமும் அதுு எழுப்பியுள்ள பிரச்சினைகள் பற்றி இவ்வளவு காலமும் எழுதப்பட்ட எவையும் என் பார்வையிலிருந்து நழுவவில்லை என நான் நம்புகிறேன். பழைய

புதிய கல்வியறிவுகளுக்கிடையில், சந்தேகமின்றி, வழக்கமாகவே வேறுபாடு கற்பிக்கப் படுகின்றது. ஆனால், உண்மை பற்றிய என் விசாரணையில் இந்த வேறுபாட்டினை நான் எப்பொழுதும் கணக் கெடுத்ததில்லை. பழைமையை நான் முதுசொம் மாகப் பெற்றுள்ளேன். புதுமை, பழைமையைப் போன்றே எனக்குப் பழக்கமானது. இரண்டையும் நான் ஆராய்ந்துள்ளேன்.

'மிக ஆரம்பத்திலிருந்தே, என் குடும்ப மரபுகள், என் கல்வி, என் சமூகச் சூழல் ஆகியன என் மனத்தினை உருவாக்க அளித்தவற்றில் தங்கியிருப் பதற்கு நான் விரும்பியதில்லை. ஐயத்தின் கொடுக் கைச் சுமந்து முடிக்காத எந்தவொரு தீர்ப்போ, மறுதலித்தல் என்ற பரிசோதனையை எதிர் நோக் காத எந்தவொரு நம்பிக்கையோ என்னிடம் இல்லை. என் உதடுகளுக்குக் கொண்டு வரப்பட் டுள்ள ஒவ்வொரு துளி பானத்துடனும் நான் நஞ்சினை விழுங்கியிருக்கிறேன். அதே சமயம், ஒவ் வொரு பகுதியிலிருந்தும் வந்த காயகல்பத்தை யும் என்னுள் செலுத்தியிருக்கிறேன். தாகத்தின் உணர்வு ஏற்பட்ட பொழுதெல்லாம், அதேயளவு தாகம் கொண்ட மற்றவர்களுடைய உதடுகளைப் போன்று என் உலர்ந்த உதடுகள் தோன்றவில்லை. நான் என் தாகத்தை, மற்றவர்கள் தாக சாந்தி செய்த அதே ஊற்றிலே தணித்துக் கொள்ளவில்லை. என் வாழ்க்கையின் இந்நீண்ட காலப் பகுதியில், குர்ஆன் உண்மை பற்றிய என் தேடலிலே என் னால் சேகரிக்க முடிந்தவற்றையெல்லாம் எனது ஆற்றலின் சிறப்பிற்கு ஏற்ற வகையில் விளங்க முயன்று, இத் தொகுதியின் பக்கங்களிலே பரப்புகின்றேன்.'

பெண் : என்ற இரத்தினச் சுருக்கமான கருத்தை அபுல் கலாம் ஆஸாத் தமது முன்னுரையில் குறித்து வைத்துள்ளார்.

குரல் 1: 'மௌலானாவின் மரணக் குமுறலாகவே இப்பதியை நான் மதிக்கின்றேன். ஏனெனில், தமது நாட்டிற் கான உக்கிரமான அரசியற் போராட்டம் நிரம் பிய நீண்ட காலத்தையடக்கிய, அதன் பின்னேற் பட்ட அவருடைய வாழ்க்கையின் சூழ்நிலைகள் எந்தவொரு பாரிய முக்கியத்துவம் வாய்ந்த அல் லது தனித்துவ முத்திரை பொறித்த இஸ்லாமிய ஆராய்வுகளை மேலும் தொடருவதற்கு அவருக்கு நேரத்தை அனுமதித்ததில்லை ...'

பெண் : என தர்ஜுமான் அல் குர்ஆனை உர்து மொழியி லிருந்து ஆங்கிலப் படுத்திய பேராசிரியர் செய்யித் அப்துல் லத்தீப் குறிப்பிடுகின்றார்.

குரல் 1: இஸ்லாமியக் கல்வியறிவுக்கு மௌலானா ஆஸாத்தின் சிறப்பான பங்களிப்பினை மதிப்பிடுவதற்கு, குழந்தைப் பருவத்திலும் பிள்ளைப் பருவத்திலும் அவருடைய மனம் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதை ஒருவர் பார்வையிடல் வேண்டும். வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் அபிவிருத்தியடைந்த மனோபாவங்களுடன் அவர் தமது படிப்பு வாழ்க்கை முழுவதும் தொங்கிக் கொண்டிருந்தார் என்பது அவருடைய எழுத்துக்கள் எல்லாவற்றிலும் தெளிவாகத் தோன்றுகிறது. சான்றினாலும் இம்முறை நியாயப் படுத்தப்படுகிறது.

பெண் : அராபிய முஸ்லிம் அறிஞர்கள் பலர் தோன்றிய மதீனா நகரக் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆஸாத்தின் தாய். ஆஸாத்தின் தந்தையும் அரபு மொழியில் ஆழ்ந்த புலமை பெற்றவராகத் திகழ்ந்தார். தாய்வழிப் பாட்டன், தந்தை ஆகிய இருவரும் அவருடைய குழந்தை உள்ளத்தை ஊற வைத்தார்கள். ஆஸாத்திற்குப் பத்து வயது ஆகிய பொழுது, ஆஸாத்தின் தந்தை மக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிக் கல்கத்தாவிலே குடியேறினார்.

குரல் 2: இதற்கிடையிலேயே இஸ்லாமிய மார்க்கச் சட்டம் சம்பந்தமான எல்லா முக்கிய நூல்களையும் ஆஸாத் கற்றுக் கொண்டார். கல்கத்தா மதரஸாக்களில் இம்முறை தீவிரப் படுத்தப்பட்டது.

குரல் 1: இத்தீவிரம் அதன் எதிர்த் தாக்கத்தையும் கொண்டிருந்தது. மிகக் குறுகிய காலத்தில் சீரற்ற முறையிலே திரட்டப் பட்ட அபரிமிதமான அறிவு அவருடைய பிஞ்சு மனத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி, பல்வகையான விடயங்களில் ஐயப்பாடுகள் தழுவி நின்றன.

பெண் : இருப்பினும், முஸ்லிம் வரலாற்றுப் பாதையில் குர்ஆன் வாசகம் தனக்குத்தானே சுதந்திரமாகப் பேசுவதைச் சில சுயநலமிகள் தடுத்து விட்டார்கள் என்ற ஒரு விடயம், இக்காலத்திலேயே அவருக்குத் தெளிவாகப் புரிந்தது.

குரல் 1: அவருடைய கெய்ரோ விஜயமும் அல் அஸ்ஹர் பல்கலைக் கழகம் உந்நதம் பெற்றிருந்தமையும் சமகால நிகழ்ச்சிகளாம். அல் அஸ்ஹர் பல்கலைக் கழகத்திலிருந்து செய்யித் ஜமாலுத்தீன் ஆப்கானியும், ஷெய்க் முஹம்மது அப்துஹுவும் இஸ்லாத்தின் தாராளத்தையும், ஐரோப்பிய ஆதிக்கத்திலிருந்து இஸ்லாமிய நாடுகளை விடுவித்தலையும் ஆதரித்தார்கள்.

பெண் : எனவே, மேற்கு ஆசிய நாடுகளில் தமது ஊர்ச்சிலவினை முடித்துக் கொண்டு ஆஸாத் இந்தியா திரும்பிய பொழுது, நீண்ட காலமாகத் தெளிவற்

@ கட்டடத் தளபாடங்கள்

@ அரிசி ஆலை மெஷின்கள்

@ அரைக்கும் மெஷின்கள்

இத்தியாதி இயந்திரங்களுக்கு
நம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்

**கே. என். அப்துல் காதர் ராவுத்தர்**

**அன் கோ. லிமிட்டெட்,**

312, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு-10.

தொலைபேசி: **32028 & 32956**

றதாகத் தோன்றிய முஸ்லிம் மார்க்கச் சிந்தனையை விடுதலை செய்தல் வேண்டும், பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உழைத்தல் வேண்டும் என்பன அவர்தம் இலட்சியங்களாக அமைந்தன.

குரல் 1: இந்த இலட்சியங்களை காரிய சாதனையாக்கும் முயற்சியில் 1912-ம் ஆண்டில் கல்கத்தாவிலிருந்து அல் ஹிலால் என்ற உர்து மொழி வார சஞ்சிகையை வெளியிட ஆரம்பித்தார்.

குரல் 2: தர்ஜுமன் அல்குர்ஆனை ஆஸாத் எழுதி முடித்த வரலாறு சோகமும் சோதனையும் மண்டிய வீர காவியமாகக் காட்சி தருகின்றது.

பெண் : தர்ஜுமன் அல்குர்ஆனின் பிரசுரம் பற்றி ஆஸாத் நடாத்திய பிறிதொரு பத்திரிகையான அல் பலாக் மூலம் அறிவித்த பொழுது, ஆஸாத் குர்ஆனின் ஐந்து அத்தியாயங்கள் வரையிலும் மொழி பெயர்த்திருந்தார். பிரதிகளைத் தயாரித்தலும், அச்சிடும் வேலைகளும் ஏக காலத்தில் நடைபெறுவதற்கு அவர் ஒழுங்கு செய்திருந்தார். அக்காலத்தில் அல் பலாக் பத்திரிகையைப் பதிப்பதற்கு மூன்று நாள்கள்.

குரல் 1: குர்ஆன் மொழி பெயர்ப்பதற்கு இரண்டு நாள்கள்...

குரல் 2: குர்ஆன் வியாக்கியானங்கள் எழுதுவதற்கு இரண்டு நாள்கள்,

பெண் : என வாரத்தின் வேலைகள் பங்கிடப் பட்டிருந்தன அத்துடன் 'லித்தோ' பிரதிகள் எடுக்கும் வேலைகளும் ஆரம்பிக்கப் பட்டிருந்தன.

குரல் 1: ஆனால், 1916-ம் ஆண்டு ஜூன் மாதம் எட்டாம் நாள் இந்திய அரசாங்கம் ஆஸாத்தின் மீது திடீரெனத் தடுப்புக்காவல் சட்டத்தைப் பிரயோகித்தது. அதனால், பீகார் மாகாணத்திலுள்ள ராஞ்சி என்ற இடத்தில் ஆஸாத் தடுப்புக் காவலில் வாழ நேர்ந்தது.

குரல் 2: 'இலக்கியப் பணியைத் தொடரலாம் என்பது மட்டுமே என் செயற்படு துறையாக மிச்சமிருந்தது. தடுப்புக் காவலின் 19 விதிகளும் என்னை அங்கு தொடவில்லை. சகல சுதந்திரங்களும் என்னிடமிருந்து பறிக்கப்பட்ட போதிலும், வாசிப்பது - எழுதுவது - சிந்தனையின் விளைவுகளைப் பாதுகாப்பது ஆகிய சுதந்திரங்களை என்னிடமிருந்து ஒருவராலும் பறிக்க முடியாது என்பதை நான் அறிவேன் ஆனால், இந்நிலையில் மூன்று மாதங்கள் செல்வதற்கு முன்னர், மேலும் கடினமான சோதனைகளை எதிர் நோக்க வேண்டியிருந்தது.'

பெண் : என ஆஸாத் பின்னர் எழுதினார். இதற்கும் காரணர் சர் சார்லீஸ் கிலீவ்லண்ட் என்ற ஆங்கிலேயர்.

இவர் அக்காலத்தில் இந்திய அரசாங்கத்தின் ஒற்றர் இலாகாத் தலைவராகப் பணியாற்றினர்.

குரல் 2: 'என் விவகாரத்தில் இக்கனவான் அசாதாரணமானதும் தனிப்பட்டதுமான அக்கறை காட்டினர்'

பெண் : என இவர் செயலைப் பற்றி ஆஸாத் வேடிக்கையாகக் குறித்து வைத்துள்ளார்.

குரல் 1: சர் சார்லீஸ் ராஞ்சிக்குச் சென்று ஆஸாத்தின் வீட்டைப் பரிசோதனை போட்டு, ஆஸாத்தின் கையெழுத்துப் பிரதிகளுள் ஒற்றைத் தானும் பாக்கிவைக்காது எல்லாவற்றையும் தன்னுடன் எடுத்துச் சென்ருர். அப்பொழுது ஆஸாத குர்ஆனின் எட்டு அத்தியாயங்கள் வரை மொழி பெயர்த்திருந்தார் என்பதும், அன் நிஸா அல்லது ஐந்தாம் அத்தியாயம் வரை வியாக்கியானங்களும் எழுதியிருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது இவற்றினல் தடைபடாது, முன் போலவே, குர்ஆனின் மிகுதிப் பகுதிகளை மொழிபெயர்ப்புக்கு எடுத்துக் கொண்டு 1918-ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் முடித்தார்.

குரல் 2: 'இதுவும் இந்திய அரசாங்கத்துடன் இருந்த முதல் எட்டு அத்தியாயங்களின் மொழி பெயர்ப்பும் சேர்ந்து குர்ஆன் முழுவதின் மொழி பெயர்ப்பினைப் பூர்த்தி செய்தது. இதன் பின்னர், என் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பித்தரும்படி இந்திய அரசாங்கத்துடன் கடிதத் தொடர்புகளை ஆரம்பித்தேன். அவை உடனடியாகத் திருப்பித் தரப் பட மாட்டாதெனவும், எப்பொழுது அவற்றைத் திருப்பித் தரலாம எனக் கூறும் நிலையிலும் அரசாங்கம் இல்லையெனவும் பதில் கிடைத்தது. எனவே, பறிமுதல் செய்யப் பட்ட முதல் எட்டு அத்தியாயங்களையும் மீண்டும் புதிதாக மொழி பெயர்த்தல் நன்றென நான் நினைத்தேன். ஒரு முறை எழுதித் தொலைத்த பகுதியை மீண்டும் எழுதுவது இலகுவான காரியமல்ல. அது மிகக் கடுமையான சோதனையாக அமைந்தது. இருப்பினும், நான் நூலைப் பூரணப்படுத்தினேன். உர்து தட்டச்சுப் பொறியை வரவழைத்து, விடயங்களின் பேர் பாதிக்கு மேல் பிரதியெடுத்த பொழுது, என்னை விடுதலை செய்ய இந்திய அரசாங்கம் தீர்மானித்தது.'

பெண் : என இச்சோக வரலாற்றை ஆஸாத் தன் கைப்பட எழுதினர்.

குரல் 1: மௌலான ஆஸாத் 1918, டிசம்பர் 27-ம் நாள் தடுப்புக் காவலிலிருந்து விடுதலை செய்யப் பட்டார். அவர் விடுதலையடைந்த பொழுது பாரத தேசம் ஒத்துழையாமை இயக்கத்திற்குத் தயாராகிக்

கொண்டிருந்தது. எனவே, அல் ஹிலால் பத்திரிகையைப் புனருத்தாரணஞ் செய்து, அரசியலில் ஈடுபடுதல் தவிர்க்க முடியாத நியதியாக ஆஸாத்திற்கு அமைந்தது. இதனால், அவர் தர்ஜுமன் அல்குர்ஆன் பிரசுரத்தை மறந்தாரல்லர்.

பெண் : இதனைத் தொடர்ந்த சம்பவங்களை ஆஸாத் அவர்களுடைய வார்த்தைகளிலே சொல்வதுதான் மிகவும் பொருத்தமானது.

குரல் 2: 'தர்ஜுமன் அல்குர்ஆனை அச்செழுத்தில் அச்சிடுதல் ஏற்றதல்ல எனக் கருதப்பட்டமையால், அதனை லித்தோ கிராபில் அச்சிடும் ஒழுங்குகள் செய்யப்பட்டன. அரபு மூலம் முதலில் அச்சுக்காகப் பிரதி செய்யப்பட்டு, இவ்வேலை 1921 நவம்பரில் பூர்த்தியாயிற்று. மொழிபெயர்ப்பை லித்தோ கிராப் தாளில் பிரதி பண்ணும் வேலை மேற்கொள்ளப்பட்டது. ஆனால். இவ்வேலை தொடங்கப்பட்டதும், காலத் தேவனின் கட்டளை எனது திட்டத்துக்கு எதிராக மீண்டுமொரு தடவை பிறப்பிக்கப் பட்டது.'

பெண் : இவ்வாறு ஆஸாத் குறிப்பிடுவது ஒத்துழையாமை இயக்கத்தின் நடவடிக்கைகளைத்தான். அவ்வியக்கம் உச்சக் கட்டத்தை யடைந்தது. இந்தியத் தேசிய காங்கிரஸ் சட்டத்திற்கு மாறான நிறுவனம் என்று பிரகடனஞ் செய்யப் பட்டு, ஆஸாத்தும் சகாக்களும் 1921ஆம் ஆண்டு டிசம்பர் 10-ம் நாள் கைது செய்யப்பட்டார்கள்.

குரல் 1: ஆஸாத்திற்கு எதிராக வழக்குத் தொடருவதற்கு அரசாங்கத்தினர் தேவையான தஸ்தாவேஜுகளைத் தேடுவதில் ஈடுபட்டார்கள். இந்தத் தேடுதலை நடத்தியவர்களுக்கு அரபு-உர்து-பாரசீகம் ஆகிய மொழிகளிலே அறிவு கிடையாது. எனவே, அவர்கள் அம்மொழிகளில் அமைந்த அத்தனையும் எதிரிடையானவைகளாக இருக்கக்கூடும் எனக் கருதி, லித்தோ பாரங்கள் உட்பட எல்லாமே பறிமுதல் செய்யப் பட்டன.'

பெண் : அவை பதினைந்து மாதங்களுக்குப் பின்னர், மௌலானா ஆஸாத் விடுதலை செய்யப் பட்ட பின்னரே அவரிடம் ஒப்படைக்கப் பட்டன.

குரல் 2: 'அவை எனக்குத் திருப்பித் தரப்பட்ட பொழுது, கேவலமான கந்தைகளின் குழப்பக் குவியலாகக் காட்சி தந்தன.'

பெண் : என ஆஸாத் மனம் உருகப் பின்னர் எழுதினார். மேலும்,

குரல் 2: 'இச்சோதனை சித்திரவதை செய்வதாக இருந்தது. இருப்பினும், அச்சம்பவத்திற்குச் சமனாக எழ முயன்றேன். இஃது, என் உதடுகளில் வைக்கப்

with the best compliments from

# CRESCENT TRADERS

Dealers in Readymade Garments

**8, Chapel Lane,**
**off Prince Street,**
**COLOMBO-11.**

Phone: **23894**

There is a MAXILAY FEED for every purpose

CHICK MASH
GROWERS MASH
LAYERS MASH
BROILER MASH
MEDICATED FEEDS

Engage Maxilay Poultry Feed Co.,
as consultants.
They offer you service not available elsewhere.

# MAXILAY POULTRY FEED CO.,

368/5, SRI SANGARAJA MAWATHA,
COLOMBO-10.

T'phone: **25004 & 25005**

பட்ட விதியின் மிகக் கசப்பான கிண்ணம். அதனுள்ளேயிருந்ததைச் சற்றேனும் தயங்காது பருகினேன். ஆனால், அதன் கசப்பினை இன்னமும் என் தொண்டையில் உணர்கிறேன் என்பதை நான் மறுக்கவில்லை. அரசியல் நடவடிக்கையில் குழப்பமும் இலக்கிய வாழ்க்கையில் அமைதியும் ஒரு சேர இருத்தல் சாலாது. நெருப்புக்கும் மிகுந்து கிடக்கும் பஞ்சுக்குமிடையில் சமாதான நிலை எப்பொழுதும் சாத்தியப்படமாட்டாது. இரண்டினையும் ஒன்று சேர்க்க நான் விரும்பினேன். ஒரு புறம் சிந்தனையின் முயற்சிகளை அடுக்கிக் கொண்டிருந்தேன். மறுபுறம் பொசுக்கும் மின்னலை இடைவிடாது தூண்டிக் கொண்டிருந்தேன். விளைவை நான் அறிவேன். எனவே, புலம்புவதற்கு எனக்கு உரிமை கிடையாது. தர்ஜுமன் அல்குர்ஆனும் அதன் வியாக்கியானமும் பொது மக்களுக்கு முன்னால் தோன்ற வேண்டுமாயின் அவற்றை மீண்டும் நான் திருப்பி எழுதுதல் வேண்டும். நடந்தேறியவற்றிற்குப் பின்னர், என் உள்ளுயிர்ப்புகள் மிகவுஞ் சோர்வடைந்திருந்தபடியால், நான் எவ்வளவுதான் முயன்ற போதிலும், அவை புத்துயிர் கொள்ள மறுத்தன. கடைசி அடியினால் ஏற்பட்ட காயம் மிக ஆழமானபடியால், கணப் பொழுதில் அது குணமடைய மாட்டாது என்பதை நான் உணர்ந்தேன். ஏற்கனவே இரு தடவைகள் எழுதப்பட்ட ஒன்றை மீண்டும் திருப்பி எழுத வேண்டுமே என்ற சோர்வு நினைவே எனக்கு எரிச்சல் மூட்டியது. எல்லாச் சோதனைகளுள்ளும் இஃதே ஓர் ஆசிரியனுக்கு மிகவும் சிரமமானது. நூற்றுக் கணக்கான பக்கங்களைக் கொண்ட புதிய விடயத்தை அவனால் இலகுவாகத் தயாரிக்க முடியும். ஆனால், இதுவரையில் எழுதித் தொலைத்த ஒரு பக்கத்தைத்தானும் திருப்பி எழுதும் பொழுது அவன் மிகுந்த சோர்வுணர்ச்சியின் வசப்படுகிறான். ஒருவனுடைய அரும் பெருஞ் செயல் ஒரு தடவை அழிவினால் மூச்சுத் திணறடிக்கப்பட்ட பின்னர், அறிவு சார்ந்த முயற்சியில் மீண்டும் புத்துயிரளிக்கச் செய்தல் எவ்வாற்றானும் சுலபமானதல்ல......

பெண் : அப்பப்பா..! எவ்வளவு ஆழமான துயரும், விரக்தியும் மௌலானா சாகிபுவின் உள்ளத்தைப் பீடித்தன!

குரல் 1: திருப்பி எழுதும் மனோநிலை பல ஆண்டுகளாக ஆஸாத்திற்கு ஏற்படவில்லை. சிதைந்த சின்னங்களின் மிச்சில்கள் அடங்கிய கட்டுக்களைக் கண்டதுமே அவருடைய விரக்தி உச்சம் பெறும். ஆனாலும், முஸ்லிம் உலகத்தின் மிக அவசியமான தேவை சம்பந்தமான இவ்வேலையை முற்றாகப்

புறக்கணிக்கவும் முடியவில்லை. இக்கடமையை இயற்றுவதில் ஏற்படும் காலதாமதம் ஆஸாத்தின் உள்ளத்தை அரித்துத் தின்றது.

பெண் : 1927-ம் ஆண்டு தன் அந்தத்தை அடைந்து கொண்டிருக்கின்றது. நீண்ட காலமாக மரத்துப் போயிருந்த உள்ளுணர்விலே திடீரென உருளும் ஒலி கேட்டதை ஆஸாத் உணரலானார்.

குரல் 1: இந்த அபூர்வ அநுபவத்தை ஆஸாத்தின் பேனாவைப் போன்று வேறு எந்தப் பேனாவினாலும் நேர்த்தியாகச் சித்திரிக்க இயலாது.

குரல் 2: 'கடந்த காலத்தில் மீண்டும் மீண்டும் தட்டிய பொழுது கூட என் பேனாவுக்கு நெகிழ்ந்து கொடுக்க மறுத்த இலக்கிய ஆக்கத்தின் கதவு திடீரென வெடித்து திறந்து விட்டதைப் போன்று தோன்றியது. வேலை தொடங்கிற்று. என் இயக்கத்தில் ஒருவிதத் தல்லுதல்களைத் தொடர்ச்சியாக நான் உணர்ந்தேன். இது மட்டுமல்ல. என் எழுத்து நடை இப்பொழுது உள்ளதைப் போல என்றுமே வேகமாக இருந்ததில்லை என்பதையும் நான் அவதானித்தேன். எழுத வேண்டுமென்ற உந்துதலால் நான் அவ்வளவு பற்றப் பட்டிருந்தபடியால், என் பேனாவின் இயக்கத்தைக்கூட என்னால் கட்டுப் படுத்த முடியாமலிருந்ததை நான் உணர்ந்தேன். பணி தொடர்ந்தது. குர்ஆன் விளக்கத்திற்கு சூரத்துல் பாத்திஹா பற்றிய வியாக்கியானம் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்து, அதில் என் முதற் கவனத்தைச் செலுத்தினேன்.........'

பெண் : தர்ஜுமன் அல்குர்ஆன் முதற் தொகுதியின் பிரசுரம் பற்றிய சோக வரலாறு அவ்வாறு அமைந்தது.

குரல் 1: இதனைத் தொடர்ந்து பதினெட்டாவது பகுதிவரை மொழி பெயர்ப்பையும், வியாக்கியானத்தையும் கொண்ட இரண்டாம் தொகுதி வெளிவந்தது.

பெண் : இவை இரண்டும் அகமத் நகர் கோட்டைச் சிறையில் மீள் பார்வை செய்யப்பட்டு, 1945-ம் ஆண்டு மறு பிரசுரம் செய்யப்பட்டன. ஆனால், இத்தொரின் கடைசித் தொகுதி மௌலானாவின் காலத்தில் பிரசுரமாகவில்லை.

குரல் 2: இந்நூலினை ஆங்கிலத்தில் பெயர்க்கப்படல் வேண்டும் என்ற அவசியத்தை மௌலானா மிகவும் காலந்தாழ்த்தியே உணர்ந்தார். மூன்று ஆண்டுகளாக இந்த வேலையில் ஈடுபட்டிருந்த பேராசிரியர் செய்யித் அப்துல் லத்தீப்,

குரல் 1: 'குர்ஆனின் தோற்றுவாய் அத்தியாயமான சூரத்துல் பாத்திஹா பற்றிய தமது வியாக்கியானத்தில் மிகக் கூடுதலான முக்கியத்துவத்தை மௌலானா ஆஸாத் இணைத்தார். இவ்வத்தியாயத்தை அமைக்கும் சுருக்கமான ஏழு வாக்கியங்களின் வியாக்கியானமாக அமைந்ததில், குர்ஆன் முழுவதிலுமுள்ள அதன் அடிப்படை மன உருவங்களை நிதானமாக விபரிக்கும் முறையில் விரிவாக அறிந்தமைத்தார். இவை அவருடைய ஆலோசனைகளுடன் நடைபெற்றன.'

பெண் : எனக் குறிப்பிடுகின்றார். தர்ஜுமன் அல்குர்ஆனை ஆங்கிலத்தில் வெளியிடுவதற்கு முன்னர், 'குர்ஆனின் அடிப்படை மனவுருவங்கள்' என்ற மகுடத்தில் அது முற்கூட்டியே வெளியிடப்படல் வேண்டும் என அவர் நினைத்தார்.

குரல் 2: அவர் விரும்பிய பிரகாரம் தயாரிக்கப்பட்ட சுருக்கம் சென்னையில் அச்சிடப்பட்டு, அவர் மரணத்திற்குப் பின்னரே வெளிவந்தது. அதன் தமிழாக்கம் ஒன்றும் வெளிவந்துள்ளது.

பெண் : இறுதி மூன்று ஆண்டுகளும் ஆஸாத்துடன் நெருங்கிப் பழகிய பேராசிரியர் லத்தீப், 'முழுநிறைவற்ற தலை சிறந்த படைப்பு' என்ற தமது கட்டுரையில், இறுதிக் கால நிகழ்ச்சியைப் பற்றி வருமாறு எழுதுகின்றார்......

குரல் 1 : 'அவருடைய இறுதிக் காலக் காட்சி என் மனத்தில் பசுமையாக இருக்கின்றது. ஹைதராபாத்திலிருந்து புதுடில்லிக்குப் புறப்பட்ட பொழுது, அவருடைய மரணச் சடங்குகளிற் கலந்துகொள்ளச் செல்கின்றேன் என்று ஒரு கணந்தானும் கனவுகூடக் கண்டிருக்க முடியாது. இந்த வருகைதரவின் போதும் வழக்கம் போலவே அவருடைய இல்லத்தில் தங்கினேன். பிப்ரவரி 16-இல் புதுடில்லியை விட்டுப் புறப்படுவதாக இருந்தேன். ஆனால், 16-ம் நாள் காலையில் சயனப் பெட்டியின் பதிவினை ரத்துச் செய்து விட்டுத் தன்னுடன் இன்னுஞ் சில தினங்கள் தங்கியிருக்கும்படி மௌலானா என்னைக் கேட்டார். உண்மையில் நான் தங்கினேன்; ஆனால், அங்கிருந்த எல்லோரையும் எதிர்பார்த்திருந்த அந்தத் துன்பத்தை நானும் பங்கிடவே! என்னைத் தன்னுடன் தங்கியிருக்கும்படி கேட்ட பொழுது—

பெண்: வரக் கூடிய நிகழ்ச்சியைப் பற்றிய முன்னுணர்வு ஏதாவது மௌலானா அபுல் கலாம் ஆஸாத்திடம் இருந்ததா...?

*Meelad Greetings*

*from*

**RAJAH BEEDI CO.,**

**COLOMBO-14.**

Phone: **21739**


# கல்லூரி மன்றம்

—மூன்று இதழ்கள்

கல்லூரி மன்றம் என்ற தொடரில், மூன்ருவதாக மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணுக்கர் மூவருடைய விடய தானங்களை இங்கு பிரசுரிக்கின்ருேம்.

இலங்கையின் மிகப் பழைமை வாய்ந்த கல்லூரி மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள மெதடிஸ்த மத்திய கல்லூரியாகும். இது 1814-இல் நிறுவப்பட்டது. மட்டக்களப்புப் பகுதியில் வாழும் அநேக கல்விமான்களும், அரசியல் தலைவர்களும், கலைஞர்களும் இக்கல்லூரியிற் கல்வி பயின்று உருவானவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இக்கல்லூரி தன்னுடைய நீண்ட பாரம்பரியத்தை இன்றும் பேணி வருதல் மகிழ்ச்சிக்குரியதாகும். இக்கல்லூரியில் க. பொ. த. (சாதாரணம்) இறுதி ஆண்டில் விஞ்ஞான பாடங்கள் கற்கும் மூன்று மாணுக்கருடைய விடய தானங்களைத் தொகுத்துத் தந்துள்ளோம். பேச்சு-கதை-கட்டுரை ஆகிய மூன்று இதழ்களாக இது மலருகின்றது.


# மெதடிஸ்த மத்திய கல்லூரி அதிபரின் செய்தி



அதிபர் பி. ரி. சின்னையா அவர்கள் மேலைத் தேய மொழிகளைச் சிறப்புப் பாடங்களாகப் பயின்ற பட்டதாரியாவர். முதலாந் தர அதிபர். இவர் அடக்கமான முறையிலே, மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கல்விப் பணி புரிந்து வருகின்றார்.

இளம் எழுத்தாளர்களுடைய இலக்கிய ஆற்றல்களையும், எழுத்து வன்மையையும் வெளிக் கொணரத் தக்க களம் அமைத் கொடுத்துப் பயனுள்ள தொண்டியற்றும் 'இளம்பிறை'க்கு இந்த ஆசிச் செய்தியை அனுப்பி வைப்பதில் யான் பெரு மகிழ் வெய்துகின்றேன். தமது ஓய்வு நேரங்களை இலக்கியம் சம்பந்த மான வழிகளிலே செலவு செய்யும் சந்தர்ப்பத்தை மாணக்க ருக்கு 'இளம்பிறை' அளித்து வருவதுடன், மாணக்கருக்குப் பயனுள்ள செய்திகளை அளித்து, மகிழ்வூட்டுஞ் சாதனமாகவும் அஃது அமைந்துள்ளது. 'இளம்பிறை' இயற்றி வரும் சேவை களுக்காக அதற்கு நம்முடைய முழு ஆதரவுகளும் உரியதாகுக.

பி. ரி. சின்னையா,
அதிபர்,
மெதடிஸ்த மத்திய கல்லூரி,
மட்டக்களப்பு.



# தமிழன் நிலை

—எஸ். சொல்வேந்தன்

'ஈட்டிமுனை கண்டு இமை கொட்டியவன் கோழை; அதை தன் இதயகீதமாக்கிக் கொண்டவன் தமிழன்!' என்று வீரத்திற்கு வாழிபாடிவாழ்ந்த தமிழினம்; மேற்கே மிருசத்தின் கரைகளையும், கிழக்கே கடாரத்தின் அலைகளையும் அளைந்து வந்த நாவாய்களைச் செலுத்தித் 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்று வளம்மிக்க வணிகம் வளர்த்த தமிழினம்; 'மலரின் மது அருந்திக் காமித்த வண்டுகளின் களிப்புக்கு இடையூறு விளைவிக்குமோ?' என அஞ்சி, வழிமேல் விழிபுதைத்து தன் வருகைக்காக காத்திருந்த தலைவிக்குத் தன் தேரிசைக்கும் மணியோசையின்பம் கிட்டாது போயினும் போக, எனத் துணிந்து தன் தன் தேரின் மணிநாக்கைத் துண்டித்து இயற்கையின் கொள்ளையழகையும் ஒரு புறம் ரசித்துக் கொண்டு, 'காமமோ பெரிது உயிர்தவச் சிறிதே' என்று காதலைக் கற்பு-களவியல் என்னும் இருகளங்களிலும் வைத்து மறுபுறம் போற்றியும், 'இருகை மறவன் ஒருகை யானையுடன் பொருதுவது மறமன்று' என்று பிறிதொரு புறம் மறநெறியை வழிபட்டு வாழ்ந்த தமிழினம்; நான்மறைக்கும் மேலால் தமிழ் மறை வகுத்து வாழ்க்கைக்குப் பயனும், இலக்கணமும் கண்ட தழினம்; என ஓராயிரம் வண்ணத்தமிழ் வார்த்தைகளால் பண்டைக் கலாத்திலும் பழந்தமிழ் பனுவல்களில் விதந்தேத்தப்பட்ட ஒரு இனத்தின் பரம்பரை பரம்பரையினரான இன்றைய ஈழத்தமிழ் மக்களின் நிலை என்ன? என்ற கேள்வியை எழும்பும்போது ஒரு கணம் மௌனம் சூழ்ந்து கொள்கிறது. அம்மௌனத்தினூடே அடிபணிந்து, மிடிமைப்பட்டு, விடிவுகாணாது, துயரும் நம் இனத்தின் சோகக் குரலை இனம்பற்றுடைய ஒவ்வொரு தமிழனாலும் கேட்க முடிகின்றது. ஓ, தமிழினமே நீ தாழ்ந்தாயா?

ஈழவளநாட்டிலே, நம் தமிழினம் மாற்றான் தாய் பிள்ளைகளாக, இரண்டாம் தரக் குடி மக்களாக, ஒட்டுத் திண்ணையில் குந்தியிருக்கும், உறவினர்களாக, எல்லாவற்றிற்கும் மேலாக, 'கள்ளத்தோணிகள்' என்ற இழிவான சொல்லைச் சிரம் சுமந்து வாழ்கிறார்கள்! இவர்கள் இந்நாட்டில் கள்ளர்களாக வாழ்கிறார்களா? ஏனையோர் உழைப்பை உண்டு கொழுக்கும் கூட்டங்

Select

The World's

Loveliest Colours

At the Show - - rooms of

**T. P. ABDUL RAHUMAN & CO.,**

350, Sri Sangaraja Mawatha,

Colombo-10.

AUTHORISED DISTRIBUTORS FOR

ROBBIALAC

&

REGENT PAINTS

FREE DELIVERY SERVICE IN COLOMBO

**Phone: 25004, 25005**

களாக வாழ்கிறார்களா? பொய்மைக்கும் சோரவாழ்வுக்கும் வித்திடுகிறார்களா? அல்லது சமுதாயம் கண்டு முகம் சுளிக்கும், நீச நோய் பரப்பும் தூதர்களாக வாழ்கிறார்களா? இல்லை! இல்லவே இல்லை!!

சுறுசுறுப்பு உள்ளவர்கள், சுயசிந்தனை உடையவர்கள், இலக்கிய ரசனை மிக்கவர்கள், கலைவண்ணம் கண்டவர்கள்! இத்தனை பெருமைகளிலிருந்தும் இவர்களுக்கு ஏன் இந்த நிலை என்ற கேள்விதான் துன்பத்திலே சாம்பும் ஒவ்வொருவருடைய மனதையும் அலக்கழிக்கின்றது!

சரித்தரம் செய்த சதி என்பதா? அன்றேல், கணிதம் செய்த கொடுமை என்பதா? இந்நாட்டில் இவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் என்பதற்காக தகுதியும் - திறமையும், வண்மையும் - திண்மையும், அறிவும் - ஆற்றலும் ஒருங்கே புறக்கணிக்கப்பட்டு வாழவேண்டிய நிலை, சந்திரனில் மனிதர்கள் குடியேறலாமென்று ஆராய்ச்சி நாடாத்தும் இந்த நூற்றாண்டிலா நம் இனத்திற்கு வந்து சேரவேண்டும்?

எந்த ஒரு கேள்விக்கும் அறிவுசார்ந்த ஒரு விடையைக் கண்டு பிடிப்பதுதான் அறிவுடைமை, பண்புடைமை! தன் மயமாகவோ, தன் இன மயமாகவோ சிந்திப்பவன் தசையுந்தல் வசப்பட்டு உணர்ச்சி வசம் எனும் போர்வையினால் மூடப்பார்க்கிறான். 'இந்தச் சேலைப்பேன் குத்தும் வியாதிதான் நம்தமிழினத்தைச் சீர்குலைக்கும் தொழுநோய்' என்று கூறினான் காலம் சென்ற சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன். எனவேதான், எவ்வொரு கொள்கையையும் அறிவுபூர்வமாக அணுக வேண்டும் என்ற பூரண அறிவு அவதானத்துடன் பேச முன்வந்துள்ளேன்.

'சிங்கள வகுப்பு வாதம் வந்ததினாலேதான் நம் தமிழினத்திற்கு இந்த அவலநிலை ஏற்பட்டது' என்று நாம் கூறினால் அது சுயம்புவான உண்மையாகமாட்டாது. இவற்றை சரித்திர சான்றுகளிலிருந்து நிரூபித்தல் சாலும்.

இலங்கை மன்னனாகிய இராவணேஸ்வரனை அழித்துத் தன் மனையாளை மீட்ட இராமபிரானின் புனித பாதம் பட்டதாகக் கொள்ளப்படும் இராமேஸ்வரக் கோயிலைக் கட்டியவன் சிங்கள மன்னன் பராக்கிரமபாகு. பெண்மையின் கற்பினை கடவுளின் நிலைக்கேற்றித் தொழும் வழி முறை வகுத்த சிலப்பதிகாரத்தின் நாயகி கண்ணகியை பத்தினித் 'தெய்யோ' என வழிபட வைத்த 'கடல்சூழ் இலங்கை கஜவாகு' மன்னனும் சிங்கள மன்னனே. ஈழத்தில் எழுந்த முதல் நூலாகிய சரஸ்வதி மாலை இயற்றப்பட்டதும் சிங்கள மன்னர்களின் கோநகரராக விளங்கிய தம்பதெனியாவிலேயே! சிங்கள மறவரின் சுதந்திரக் கொடியை இறுதிவரை காப்பாற்றிய ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் கண்ணுச்சாமி என்பதை யார் அறியார்?

அந்தத் தொடர் சரித்திரத்திலேதான் நாம் வகுப்பு வாதத்தை அணுக வேண்டும். நாட்டின் நலனிலும் முன்னேற்றத்திலும், மனிதாபிமான உணர்விலும் சிந்திக்க இயலாத சில

சிங்கள அரசியல்வாதிகள் குறுக்கு வழியில் அதிகார உயர்வு பெற ''அப்பே சிங்கள ஆண்டுவா'' என்று ஏற்றிய தீபத்திற்கு விவேகமற்ற சுயநலமிக்க நம்தமிழ் தலைவர்கள் ஊற்றிய நெய்தான் என்று நம் இனத்தை விட்டில்களாக பொசுக்கித் தள்ளும் பயங்கர தீவட்டியாக ஒளிர்ந்து கொண்டு இருக்கிறது! அப்படியானால் 'நம்தமிழினம் ஏன் இந்த இழிவு நிலையடைந்தது?' எனும் கேள்விக்கு நம் தமிழ்த் தலைவர்களே காரணர் என்று உங்கள் முன் கூறுகிறேன்; மீண்டும் கூறுவேன்!


இவர்கள் பொது மேடைகளிலே வண்ணத்தமிழ் வார்த்தைகளால் தமிழர்களை ஏமாற்றி, அவர்களின் வாக்கைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர் என்றபேரில், பாராளுமன்றக் கதிரைகளுக்கும் சுமையாக, தமிழினத்திற்கும் சுமையாக வாழ்கிறார்கள். 'கள்ளத்தோணி' என்ற சொல்லை சிங்களவர்களுக்குக் காட்டிக் கொடுத்தவர்களும் இத்தலைவர்களே! சிறுபான்மைத் தமிழர் எனும் சாதி வேற்றுமையினால் தமிழினம் பிளவு பட்டுக் கிடக்கிறது எனக் காட்டிக் கொடுத்தவர்களும் இவர்களே! இவர்கள் தமிழினத்திற்கு செய்த இந்த கொடுமையான செயலை பேசுவதற்கு நீங்கள் தந்த ஏழு நிமிடமென்ன, ஏழு யுகங்கள் தந்தாலும் போதாது.

ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம். நம் தமிழினம் வாழ்ந்தது என்பது சரித்திர உண்மை. வாழ்கின்றது என்பதும் நாம் கண்ணூடாக காண்கின்றோம். 'நம்தமிழினம் ஈழத்திலே தொடர்ந்து வாழுமா?' என்னும் கேள்வியுடன் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன். வணக்கம்.

○ எஸ். சொல்வேந்தன் சிறந்த மேடைப் பேச்சாளர். கணீரென்ற குரலில், மக்கள் உணர்ச்சியைத் தட்டி யெழுப்பும் விதத்திலே பேசவல்லர். மட்டக்களப்பில் மாவட்ட ரீதியாக நடைபெற்ற பல போட்டிகளிலே பங்கு பற்றி, பல தடவைகளில் முதற் பரிசினைச் சுவீகரித் துள்ளார். அத்துடன், விளையாட்டுத் துறைகளிலும் முன்னணியிலே திகழுகின்றார். அவர் ஆற்றிய சொற்பொழிவு ஒன்று 'தமிழன் நிலை' என்ற மகுடத்தில் இங்கு பிரசுரமாகின்றது.

○○ எஸ். எம். ஏ. கபூரும் சிறந்த மேடைப் பேச்சாளராவர். இவரும் கல்லூரிப் பேச்சுப் போட்டிகள் பலவற்றிலே பங்கு பற்றிப் பரிசில்கள் பெற்றுள்ளார். ஐங்காலத் தொழுகையின் மேன்மையைச் சித்திரிக்கும் 'கண் திறந்தது' என்னும் அவருடைய சிறுகதை இங்கு பிரசுரமாகியுள்ளது.

○○○ எம். எம். இப்றாஹிமிற்குக் கட்டுரை எழுதும் கலை இயல்பாகக் கை வந்த ஒன்றும். இவர் கட்டுரைப் போட்டிகள் பலவற்றிலே பங்கு பற்றிப் பல சந்தர்ப்பங்களிலே பரிசு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கல்லூரிப் போட்டியில் முதற் பரிசு பெற்ற அவருடைய கட்டுரை ஒன்று 'திருநபியும் திருமறையும்' என்ற மகுடத்தில் இங்கு பிரசுரமாகியுள்ளது.



# கண் திறந்தது

—எஸ். எம். ஏ. கபூர்

கதவு தட்டும் சத்தம் கேட்டு, கதவைத் திறந்தான் பாறூக்.

'அஸ்ஸலாமு அலைக்கும் பாறூக்' என்று கூறியபடி ஜலீல் எதிரில் நின்றான்.

'வஅலைக்கும் ஸலாம்......... வாங்க ஜலீல்' என பாறுக் அழைத்தான்.

இருவரும் அறைக்குள் நுழைந்தனர். எதிர் எதிராகக் கிடந்த நாற்காலிகளில் அமர்ந்தார்கள்.

'சுகமா பாறூக்? வாப்பா எங்கே? இப்ப நீர் என்ன வேலை செய்து கொண்டிருக்கிறீர்?' எனப் பல வினாக்களை ஜலீல் அடுக்கினான்.

பாறூக்கின் விழிகளில் கண்ணீர் மல்கத் தொடங்கியது.

'பாறூக், இதென்ன? என்ன நடந்தது?' என்று பரிவுடன் கேட்டான் ஜலீல்.

'ஜலீல், வாப்பா எங்களை விட்டுப் பிரிந்து இரண்டரை வருடங்களாகின்றன. குடும்பப் பொறுப்புகளெல்லாம் என்னுடைய தலையிலேதான் சுமத்தப்பட்டுள்ளன. நானோ எஸ். எஸ். ஸியைப் பாஸ் செய்துவிட்டு வேலைக்குப் பஞ்சாய்ப் பறந்து திரிகின்றேன். பல்கலைக் கழகம் செல்ல வேண்டும்; படிக்க வேண்டும்; பட்டம் பெறவேண்டும் என்ற நினைவுகளெல்லாம் பழங் கனவுகளாயின. இடையிலே தங்கை பாத்திமா ஒருத்தி இருக்கிறாள். அவளும் பக்குவப்பட்டு மூன்று வருடங்களாகின்றன. அதற்குக் காலா காலத்திற்குக் கல்யாணஞ் செய்து வைக்க வேண்டியது என் பொறுப்பு. 'சீதனம்' என்று ஒற்றைக் காலிலே நமது சமூகத்து மாப்பிள்ளைகள் நிற்கும் பொழுது நான் என்ன செய்வேன்? ஜலீல், நீதான் ஒரு வழிகாட்டு' என பாறூக் தன்னுடைய வரலாற்றை ஆதியோடந்தமாகக் கூறினான்.

'பாறூக் மனம் பேதலிக்காதே! நேற்றைய பணக்காரன் இன்று ஏழை; இன்றைய ஏழை நாளைய பணக்காரன். இது இந்த

# தமிழ் உலகம்

துட்டர்களின் கொட்டமடக்க
துள்ளிவரும் வேல்!
ஆவேசத்தை அள்ளிவரும் வாள்!!
தமிழ் மறவாத் தமிழனுக்கோர் கேடயம்!!!
"தமிழ் உலகம்"

இன்றே




விபரங்களுக்கு:—

நிர்வாகி

**தமிழ் உலகம்**

50, புதுச் செட்டித் தெரு, கொழும்பு-13.

உலகில் சகஜம். நாளையே நீ பணக்காரனாக மாறலாம். நம்பிக்கையைத் தளரவிடாதே...'

'நான் பணக்காரனாவேனா? என் தங்கை பாத்திமாவுக்கு நல்ல வாழ்வு சமைத்துக் கொடுப்பேனா? இதற்கு வழி...'

'ஏன் வழியில்லை?'

'வழி இருந்தால் சொல்...'

'சுலபமான வழி ...... அல்லாஹ் இணை துணையற்றவன். நமக்கு விதிக்கப்பட்டுள்ளது போல தினமும் ஐங்காலத் தொழுகையும் ஒழுங்காச் செய். உன் கஷ்டங்களையும் பொறுப்புக்களையும் அவனிடம் எடுத்துக் கூறி, அவனிடமே பாரப் படுத்து...'

ஜலீல் கூறிய வழி ஏதோ பத்தாம்பசலி வழியாகவே பாறூக்கிற்குப் பட்டது.

'ஜலீல், உலகம் தெரியாதவனைப் போல பேசாதே. அது அந்தக் காலம், தொழுகையே செய்யாமல், ஹறாமான வழிகளிலே சம்பாதிப்பவர்களே இந்தக் காலத்திலே பெருஞ் செல்வத்துடன் வாழ்கிறார்கள்...'


'அவர்கள் அதற்கான தண்டனையை அநுபவிப்பார்கள். 'நபியே உம்மிடம் என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றிக் கேட்டால் அதற்கு நீர் சொல்லும் இறைவனாகிய நான் சமீபமாகவே இருக்கிறேன். எவரும் என்னை அழைத்தால் அவ்வழைப்பிற்கு நான் விடையளிப்பேன். ஆதலால், என்னிடம் பிரார்த்தனை செய்யும்...'—இத்திருமறை வாசகத்தை நீ அறிந்ததில்லையா? எப்பொழுதும் எதற்கும் இறைவனைத்தான் நம்பி வாழவேண்டும். எங்களுக்குக் கஷ்டங்களைக் கொடுப்பவனும் அவன்தான்; அதனை அழித்து மகிழ்ச்சியையும் நிறைவையுந் தருபவனும் அவன்தான். 'உங்கள் செருப்பின் வார் அறுந்து விட்டாலும், அதனைச் செப்பனிட இறைவனைப் பிரார்த்தியுங்கள்' என்பதாக நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள். நீர் இறைவனைப் பிரார்த்தியுங்கள். அத்துடன் கடினமாக உழையுங்கள். எல்லாக் கஷ்டங்களும் பனியாக மறைந்துவிடும் என்றான் ஜலீல் திட நம்பிக்கையுடன்.

அவன் சொல்வதிலே உண்மை பொதிந்திருக்கிறது என்ற எண்ணம் பாறூக்கின் உள்ளத்தில் துளிர்ந்தது. தினமும் ஐங்காலத்தில் தொழுகையைச் செய்வது என பாறூக் சபதம் இயற்றினார். நண்பர்கள் பிரிந்தார்கள்.

மூன்று ஆண்டுகள் ஓடிவிட்டன. இப்பொழுது பாறூக் இலட்சாதிபதியாகச் செழிப்புடன் வாழ்கின்றான்.

'இதன் மர்மம் என்ன? அவனுக்கு ஏதாவது சுவீப் விழுந்ததா?' எனக் கேட்கின்றீர்களா?

'மர்மமா? இறை பக்தியுடன் கூடிய ஐங்காலத் தொழுகையும், கடின உழைப்புந்தான் என்னை இந்நிலைக்கு உயர்த்தியது' என்று பாறூக் சொல்லுகின்றான்.



# திருநபியும் திருமறையும்

—எம். எம். இப்ருகிம்

'இறைவன் ஒருவனே!' என்ற ஏகத்துவத்தோடு இஸ்லாத்தின் புனிதத் தன்மைகள் ஒளிவிட்டுப்பிரகாசிக்கும் அரேபியா, இன்றைக்கு 1400 ஆண்டுகட்கு முன் அறியாமையுள் மூழ்கி, அனாசாரத்திலே நீந்திக் கொண்டிருந்தது. இறைமறை வழி பாடின்றி கல்லையும் மண்ணையும் கடவுளென நினைத்து ஆராதனை நடாத்தினார்கள். பெண் பிள்ளைகள் பிறந்தவுடனே புதைகுழி தோண்டிப் புதைத்தார்கள். மதுவைத் தங்கள் இன்ப பானமாக அருந்தி போதையிலாழ்ந்து, பெண் என்ற பேதமின்றி நிர்வானத்திலாழ்த்தி, அவர்களோடு, ஆடல் பாடல்களில் தன் வாழ்வைக் களித்துக் களைத்துக் கழித்தார்கள். கொலை, கொள்ளை, சூது என்பவற்றைக் கலையாகக் கொண்டிருந்தார்கள். பிறர் பொருளை அபகரிப்பதில் தனி இன்பம் கண்டார்கள். இதுபோன்று அளவுகடந்து அல்லற்பட்டுக் கொண்டிருந்த அவர்களிடம் அறியாமையே பரந்து கிடந்தது. இதையே 'அய்யாமுல் ஜாஹிலிய்யா' அறிவிலிகளின் காலம் என்கின்றனர். இக்காலம் ஈஸா நபியவர்களின் பிற்பட முஹம்மது நபியவர்கள் வரும் வரைக்கும் வியாபித்த காலமாகும். இவ்விடைக் காலத்தில் ஒரு நபியேனும் இறைவனால் அனுப்பப்படவில்லை.

இவ்வேளையிலே அவ்விருள் சூழ்ந்த அனாசாரா களத்திலே உலகின் உதய சூரியனாக, உத்தம ஜோதியாக, அவதரித்தார்கள் எம்பெருமானாரவர்கள். பிறக்கும் போதே தந்தையை இழந்து, ஆறாம் வயதில் தாயையும் இழந்தார்கள். பால்யப் பருவத்திலிருந்தே அவர்களின் குணமும், ஒழுக்கமும், செயலும் மக்கள் மனத்திலே நிலைக்கக் கூடிய எவ்வகையிலும் மிகவும் சிறப்பு வாய்ந்தனவாய் இருந்து வளர்ச்சியடைந்து வந்தது. அன்பு, பொறுமை, விசுவாசம் என்பவற்றிற்கு அணிகலனாய் திகழ்ந்தார்கள். இதன் காரணமாகவே அல்அமீன் (நம்பிக்கைக்குரியவர்) என்ற பட்டமும் கிடைத்தது. ஒன்பது வயதை எய்திய போது தனது சிறிய தந்தையுடன் வியாபாரத்திற்காகச் செல்

லும் போது "பஸ்ரு" என்ற ஊரில் "புகைரு" என்ற பாதிரியார், 'இறுதி நபிக்குரிய அடையாளங்கள் இப்பையன்மேல் இருக்கின்றன; ஆதலால் இவரைக் கவனமாகப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என நாயகத்தைச் சுட்டிக் காட்டினார் சிறிய தந்தையிடம்! இது போன்ற இன்னும் எத்தனையோ அடையாளங்கள் நாயகத்தை இறுதி நபியாக சுட்டிக்காட்டின.

இருபத்தைந்து வயதை எய்தியபோது, வியாபாரத்திலே மேன்பட்ட சீமாட்டி கதீஜா அவர்கள் தமது வியாபாரப் பொருள்களை எடுத்துச் சென்று விற்று வருமாறு ஏவ; அப் பொறுப்பை யேற்று நாயகமவர்கள் சீரியாவுக்கு வியாபாரப் பொருள்களை எடுத்துச் சென்று விற்று அதிக லாபத்துடன் ஊர் திரும்பினார்கள். வியாபாரத்திலேற்பட்டிருந்த வெற்றியையும், இலாபத்தையும், முஹம்மதுவின் சீரிய குண நலங்களையும் அறிந்த கதீஜா தனது அன்புக்குப் பாத்திரவானுக்க விரும்பி தமது நாற்பதாம் வயதில் இருபத்தைந்து வயதான நாயகமவர்களை மணந்து கொண்டார்கள்.

இவ்வேளையிலே நாயகமவர்கள் ஹிரா என்ற குகையிற் சென்று இறைவனை வணங்கிக் கொண்டு வருவது வழக்கமாயிருந்தது. பல நாள்கள் அங்கு தங்கியிருக்கும் வழமையுமிருந்தது. ஒரு நாள் இறை பக்தியிலிருந்த நாயகமவர்களின் முன் வானதூதர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் தோன்றி, 'ஓதுவீராக ..!' என்றார்கள். இதைக் கேட்ட நாயகமவர்கள் பிரமித்து, ஒன்றும் தோன்றாமல், 'நான் ஓதத் தெரியாதவன்' என்று விடை பகர்ந்தார்கள். மீண்டும் ஜிப்ரீல் (அலை) அவர்கள், 'ஓதுவீராக ..!' என்ற வார்த்தையை உரத்துக் கூறியவாறு, நாயகமவர்களைப் பிடித்து அழுத்தினார்கள். அதற்கும், 'நான் ஓதத்தெரியாதவன் ..' என்றே விடையளித்தார்கள். இதுபோன்று மும்முறை நடைபெற்றதும், ஈற்றில் வானதூதர், 'சிருஷ்டித்த உமது நாயனது திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக! மேலும் உமது நாயன் எழுது கோலைக் கொண்டு அறிவித்த சிறப்பாளன். மனிதனுக்கு அவன் மனிதன் அறியாததை அறிவித்தான்'' என்றோதினார். பெருமானாரவர்கள் இவ்வசனங்களைத் திருப்பிக் கூறவே, வான தூதரவர்களும் மறைந்து விட்டார்கள்.

அஞ்சா நெஞ்சு படைத்த அருமை நாயகமவர்கள் எதிர் பாராத இவ்விடயத்தில் பயந்து விட்டார்கள். நடுக்கம் அவர்களைப் பற்றியது. காய்ச்சல் உடலெங்கும் பரவியது. மிக்க சிரமத்துடன் வீடு வந்து தனது அருமை மனைவி கதீஜா நாயகி அவர்களைப் பார்த்து துப்பட்டியால் தன்னை போர்த்துவிடுமாறு ஏவினார்கள்.

இவ்வஹி (Revelation) இறங்கிய இவ்விரவையே 'கத்ர்' என்கின்றனர். இவ்விரவு ரம்ழான் மாதத்தின் கடைசி பத்து இரவுகளில் ஒற்றையான ஓர் இரவுதான் என்பது முஸ்லீம்கள் அநேகரின் அபிப்பிராயமாகும். இவ்விரவைப் பற்றி இறைவன் திருமறையிலே,

'நிச்சயமாக நாம் இந்தக் குர்ஆனை (கண்ணியமிக்க)லைலத்துல் கத்ர் என்னும் ஓர் இரவில் (முதலாவதாக) இறக்கிவைத்தோம் (நபியே!) அந்த கண்ணியமிக்க இரவின் மகிமை

எத்திக்கும்

தித்திக்கும்

இன் சுவை விருந்து

ஸ்டார்

டொபி ஸ்வீட்ஸ்

தயாரிப்பாளர்கள்:

த மொடர்ன் கொன்பெக்ஷனரி வேர்க்ஸ்

தபால் பெட்டி 1100

கொழும்பு-14.

யினை நீர் அறிவீரா? கண்ணியமிக்க அந்த இரவு ஆயிரம் மாதங்களைவிட மேலானதாகும்'

என அந்த இரவை ஆயிரத்திலும் பெரிதாக சிறப்பித்துக் கூறப்படுகின்றது. மனிதன் செய்த பாவங்களுக்காக இவ்விரவில் கேட்கப்படும் பாவமன்னிப்புக்கள் 'தவ்பா' ஏற்றுக் கொள்ளப் படும் எனவும் இறைவன் கூறுகின்றான். இவ்விரவின் மகிமை யைப்பற்றி கூறப்புகின் பல உண்மைத் தத்துவங்களை பக்கம் பக்கமாக எழுதி நிரப்பிவிடலாம். மாண்புமிக்க இந்த இரவிலே முதன்முதலாக அருளத் துவங்கிய இம்மறையின் வசனங்கள் அந்தக்காலத்தின் நிலைமைக்கும் அவசியத்திற்கும் தக்கவாறு பெருமானாரவர்கள் சீவித்திருந்த இருபத்தி மூன்று வருடங்களுக் குள்ளும் சில சில வசனங்களாக அருளப்பெற்றன. இவ்வாறு ஒவ்வொரு வாக்கியமும், வசனமும் இறங்கும் போது ஒவ்வொரு வருக்கும் அதை ஓதிக்காட்டி அதை எழுதுவதற்காக நியமிக்கப் பட்டவர்களுக்கு இன்னென்ன இடங்களில் இன்னவை எழுதப் பட வேண்டுமெனவும் வகுத்துக் காட்டினார்கள். இவ்வசனங்கள் புத்தகத்திலோ அல்லது ஒழுங்கான கடதாசியிலோ எழுதப்பட வில்லை. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் இறங்கும் வசனங்களை சந்தர்ப்பத்திற் கேற்றவாறு எலும்பு, தோல், மரப்பட்டை ஆகி யவற்றில் எழுதப்பட்டன. ஆனால், இதைவிட என்றும் அழியா வகையில் மக்கள் இதயங்களிலும் எழுதப்பட்டிருந்தது. இக்காலை வாழ்ந்த அரபிகள் மனனம் செய்யும் ஆற்றல் பொருந்தியவர் களாக காணப்பட்டதால், திருமறையின் வசனங்களை நாயக மவர்கள் ஒரு முறை ஓதிக்காட்டினால், அதை என்றுமே அகல விடாது தம் நெஞ்சத்திற் பதிய வைத்து, பின் பிறருக்கும் ஓதிக் காட்டினார்கள். இவ்வாறிருக்கையில் நாயகமவர்கள் இறப்பதற்கு சில தினங்களுக்கு முன்பு வஹீ அருளப்படுவதும் முடிவடைந் தது. நாயகமவர்களும் இறைவனடி சேர்ந்தார்கள். இதன் பின்புதான் இத்திருமறை புத்தக ரூபத்தில் ஒன்று சேர்க்கப் பட்டது. இது 114 அத்தியாயங்களாக அமைக்கப்பட்டிருக் கின்றது.

இம்மாமறையிலே அடங்கியிருக்கும் ஒவ்வொரு சொல்லும், வாக்கியமும் மானிட வாழ்க்கைக்கு அவசியமானது. 'அதில் என்னதான் இருக்கின்றது?' எனப் பார்ப்பின், 'அதில் என்ன தான் இல்லை?' என்ற விடை அதைப் படித்ததும் நம் உள்ளங்களில் தோன்றும். விஞ்ஞானம், சரித்திரம், பொரு ளாதாரம், இலக்கியம், அரசியல் சட்டதிட்டங்கள் எல்லாம் விரிவாக விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

இன்று பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுப் பாரெங்கும் பரவியிருக்கின்றது. இத்திருமறையை உருவாக்கு வதற்காக; மானிட வர்க்கத்தை நேர்வழியில் அழைப்பதற்காக; இறைவனின் ஏகத்துவக் கொள்கையைப் பரப்புவதற்காக நாயகமவர்கள் அக்கால அறிவிலிகளால் அநுபவித்த அடி உதை, எறிகளைச் சொல்லும் போதே மெய்சிலிர்க்கின்றது. இக்கஷ் டத்தினிடையே இம்மாமறையை உருவாக்கித் தந்த அம்மகான வர்களுக்கு நாம் செய்யும் கைம்மாறு திருமறையின் அரும் போதனைகளை அறிந்து அதன்படி ஒழுகுவதைத்தவிர வேறொன்று மில்லை.

# கவிதைக் கா

## —மூன்று இதழ்கள்

'கவிதைக் கா' என்னும் இப்பகுதியில் மூன்று பிரபல கவிஞர்களுடைய படைப்புகள் இடம் பெறுகின்றன.

'அண்ணல் கவிதைகள்' என்ற தொகுதியைத் தந்துள்ள கவிஞர் அண்ணல் ஈழத்து முஸ்லிம் கவிஞர்களுள் மரபினால் மூத்தவராவர். 'காதற் கவிதைகள்' இயற்றுவதில் தமக்கெனத் தனியிடம் பெற்றுள்ள இவர், சமீபகாலமாகத் தத்துவக் கவிதைகளிலும் நாட்டஞ் செலுத்துகின்றார்.

'இலக்கிய உலகம்,' 'ஏனிந்தப் பெருமூச்சு' ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டுள்ள கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் யாழ் இலக்கிய வட்டத்தின் தலைவருமாவர். மரபு பேணி, 'கவிதை என் தொழில்' என்று நம்பும் அவர், தான் பிறந்த ஏதுவைப் பற்றி கவி விசாரணை நடத்துகின்றார்.

சக்தி. ஏ. பாலையா மலையகம் தந்துள்ள மூத்த கலைஞர்-கவிஞர். மீலாத் தினத்தை ஒட்டி அவர் முஹம்மது நபி நாயகம் அவர்களின் பணிகளை வியந்துபாடுகின்றார்.

# பெருமானர் வழி

—அண்ணல்

பூத்தது புதுமை புலர்ந்தது பொழுது
புவியினுக் கணியெனச் சிறந்து
காத்திட இறைவன் கருணையால் அருளால்
கொடையென முகம்மதை அளித்தான்
போர்த்திய தீமை பிய்ந்தது; நேர்மை
பொலிந்தது பொங்கிய வேதம்
ஆர்த்தது அறமே வளர்ந்தது அநீதி
அழிந்தது வேரெலாம் அறுந்து

நெருப்பிலே வறுத்து நிறுவிய பாலை
நெஞ்செலாம் நஞ்சமாந் தீமை
பிறப்பெடுத் தெங்கும் பேயென ஆடிப்
புரண்டது புனிதமாம் தூதை
நெறிப்பட வாங்கு நிகழ்த்திட வந்த
நிகரிலா அஹமது நபியால்
கறைப்படும் பாவம் கலைந்தது பயந்து;
கருணையே வென்றது உலகை.

எட்டிய தூதை எடுத்தவர் உயர்ந்தார்
இலட்சிய பூர்வமாய் வாழ்ந்தார்
ஒட்டிய உறவு வளைத்தது உலகை
ஓம்பிய பண்புகள் எவர்க்கும்
கிட்டிய பாதை கிளர்த்தின கீழ்மை
கிழிந்தது எளிமையின் கேள்மை
தொட்டமை தூய்மை துலங்கிட உதவி
தொலைந்தது ஆளுமை அடிமை

பிறப்பிலே உயர்வு தாழ்வினை அகற்றப்
பிறந்தது அழகிய சட்டம்
நெறிப்பட ஒழுகும் வாழ்க்கையின் நீதி
நீண்டது நிலைத்தது பண்பு
வெறிப்பட அருந்தும் மதுவொடு சூது
கொலைகள் வாதிய தீமை
இறந்திட எங்கும் எழுந்தது சால்பு
எம்பெரு மான்வழி காட்ட

எவருமே பெண்மை இழிவென மதித்து
இயற்றிய கொடுமைகள் கண்டு
பவமிலே அவர்கள் பாதமே சுவர்க்கப்
பாதையாய் உளதெனப் பகர்ந்து
தவறெலாங் களைந்து தகைமைகள் கணித்துச்
சொத்திலே சுகத்திலே உரிமை
நுவலரும் வகையில் உதவிய பெருமை
நபிபெரு மானையே சாரும்.

பாரினைப் புதுக்கிப் பண்பிலே வளத்தைப்
பக்குவப் படுத்திடுஞ் சட்டம்
நேரிய முறையில் நிகழ்த்தியும் நடந்தும்
நிகரெவர் எனும் வினு எழுப்பும்
சீரிலே நபிகள் சாதனை புரிந்தார்
திருமறை இலக்கண மெனவும்
கூறிடும் பெருமை அவர்களைச் சாரும்
கொள்கையில் உறுதியாய் நிற்போம்.


பீடிகளில் சிறந்தது
**ஆர். எம். ஏ. பீடி**
சோம்பலை நீக்கி சுறுசுறுப்பைத் தருவது
**ஆர். எம். ஏ. பீடி**
பாட்டாளி முதல் பணக்காரர் வரை
விரும்பிப் புகைப்பது
**ஆர். எம். ஏ. பீடி**

தயாரிப்பாளர்:

ஆர். எம். ஏ. பீடி பெக்டரி
பெந்தனி கொட,
நாராம்மல.

தலைமை நிலையம்:

10-ம் வட்டாரம்,
பெரிய கிண்ணியா,
கிண்ணியா.

# மாநபி மார்க்கம்

—சக்தீ : பாலையா

அருளொளியும் அன்பொளியும் அறிவுப் பண்பும்
அகிலத்தே புதுஉணர்வும் அளித்து மாந்தர்
பெருஒளியாம் இறைத்திருவில் கலந்து வாழப்
புனிதமறை குர்ஆனைப் போற்றி ஏற்றிக்
கருணையுடன், பிறர்பொருட்டு வாழ்க என்ற
கனிவுடைய நபிபெருமான் கருத்தைப் பேணி
ஒருபெரிய சாதனையால் உயிர்கள் எல்லாம்
உலகத்துச் சுகம்பெறவும் உறுதி செய்வோம்.

எவ்வுயிரும் தன்னுயிரென் றெண்ணி யாவும்
இறையருளால் ஆனவையே என்ப தெண்ணி
எவ்வுயிர்க்கும் இம்மியும்ஓர் தீங்கும் வாரா
இனியஓர் மார்க்கத்தை இஸ்லாம் என்றே
திவ்வியனும் நபிபெருமான் முகம்ம துசொல்
தெளிவுளத்தோ டருளியதன் உண்மை கண்டு
இவ்வுலகில் கருணைஎனும் இரக்கம் பூண்போம்
உயிர்களிடம் அன்பெழவோர் உறுதி செய்வோம்.

பெண்ணுரிமைச் சுதந்திரத்தைக் காத்த எம்மான்
பெரும்புரட்சிப் போர்தொடுத்த பெருமான் எம்மான்
மண்ணுலகில் நீதிநெறி மறையா வாறு
மானிடர்க்கே சன்மார்க்க மனத்தை ஈந்து
விண்நிறையும் இறைவனுக்கே எல்லாம் என்ற
விரதத்தைப் பூண்டிருந்த நபிகள் எம்மான்
பண்பறிந்து கருணைநெறி வழுவா வாறு
பல்லுயிரும் பயனடையப் பரிவு செய்வோம்.

காலத்தைத் தேசத்தை வளரும் வேதக்
கருத்துக்கள் தமக்கேற்ப வழக்கம் எல்லாம்
ஞாலத்துக் கேற்றவகை நயப்போம் ஒவ்வா
நடைமுறைகள் தமைவிடுப்போம் புதுமை காண்போம்
சீலத்தில் சன்மார்க்கம் இஸ்லாம் நல்கும்
திருமறையை நன்கறிவோம் உண்மை காண்போம்
ஏலத்தில் விலைகூறும் பொருளா காமல்
எங்கள்நபி நாயகம்போல் இனிமை செய்வோம்.

பஞ்சமா பாதகங்கள் பரவா வாறு
பகுத்தறிந்து பெருமானார் நபிகள் காட்டும்
நெஞ்சிரக்க மிகுகருணை நெறியை நாடி
நேர்மை எழில் வழுவாது துன்ப மென்னும்
சஞ்சலத்தைத் துடைத்தெறிந்து சகத்து மாந்தர்
சமத்துவமாய்ச் சுதந்திரமாய் வாழ்ந்தால் யாரே
வஞ்சனைகள் செயக்கூடும்? வையம் போற்றும்
மாநபிகள் முகம்மது நல்மார்க்கம் வாழ்க.


Meelad Greetings

*from*

**RATHA BEEDI COMPANY**

**111, 113, Madawala Road,**

**Katugastota.**

Telephone: **293** Telegrams: **"RATHA"**

# நான் பிறந்ததும் ஏதுக்கே!

—வி. கந்தவனம்

பிறந்ததும் மிகக் கற்றதும் பெரும்
பீடுகொள் கவி பாடவே
சிறந்து செந் தமிழ்ப் பண்பிஃனப் புவி
தேர்ந்து போற்றுதல் செய்யவே
செறிந்துவா ழினும் பருந்துபோ லவே
பறந்து மானிடர் தன்மைகள்
அறிந்துதக் கவை கறந்துமக் களுக்
கான பாட்டுகள் பாடவே!

நிலவுசெய் யணி வகைமிகுந் தெழும்
நேர்த்தி யான கஃலகளார்
கொலுவிலே திகழ் கோனெனப் புகழ்
கொள்ளு மோர் பொருள் வல்லதாய்ப்
பொலிவுடன் பெரும் பொறுப்புடன் சுவை
பொங்கி யெப்பொழு துந்தரும்
நலம் விஃள கவி நல்கிடா விடில்
நான் பிறந்ததும் ஏதுக்கே!

கூச்சலில் வெளிப் பூச்சினிற் களி
கொள்ளுவார் குறிக் கோளிலார்
மூச்சிலார் ஒரு பேச்சிலார் தனி
முத்திரை வரப் பெற்றிலார்
காய்ச்சிரும் பிஃன வைப்பினும் மரக்
கட்டை போலுணர் வொன்றிலார்
கூச்சமுற் றுக்கு டங்கியே திறன்
கொண்டு மோர்புகழ் கண்டிடார்—

யாவரும் விழித் தேயெழுந் துணர்ந்
தான்ற வல்லவ ராகியே
மேவுநற் பணி செய்துநம் மவர்
மேன்மை நாற்றிசை யுள்ளவர்
நாவிலே நட மாடவைத் திடும்
ஞாலம் வென்றுநி ஃலத்திடும்
பாவிஞு லுல காண்டலே னெனில்
பாரி லெய்திய தேதுக்கே!

# இலங்கையின் சுபீட்சத்திற்கு
# அதிக உணவு
# பயிரிடுங்கள்!

ராஜா லித்தோ அச்சகத்தார்
அளித்த பக்கம்

## RAJAH LITHO PRINTERS

**64 1/3, Dam Street,**
**COLOMBO-12.**

Phone: **31370**

# இலக்கிய விமர்சனம்

## மூன்று இதழ்கள்

ஈழத்து இலக்கிய முயற்சிகளிலே முஸ்லிம்
கதைஞர்கள் - கவிஞர்கள் - பத்திரிகையாளர்
ஆகியோருடைய பங்களிப்பினை
மதிப்பீடு செய்யும் முகமாக
'ஈழத்து முஸ்லிம் கதைஞர்கள்',
'ஈழத்து முஸ்லிம் கவிஞர்கள்'
'ஈழத்து முஸ்லிம் பத்திரிகையாளர்'
ஆகிய மூன்று கட்டுரைகள்
இப்பகுதியிலே இடம் பெறுகின்றன.

கதை இலக்கிய வளர்ச்சியிலே,
முஸ்லிம் கதைஞர்களுடைய
வெற்றி - தோல்விகளை
சுருக்கமாகவும் அதேசமயம் ஆழமாகவும்
ஓட்டமாவடி ரி. எல். எம். புகாரி
அவர்கள் விமர்சனஞ் செய்துள்ளார்.

அதேபோல,
முஸ்லிம் கவிஞருடைய முயற்சிகளை
'மாலிக்'கும்,
முஸ்லிம் பத்திரிகையாளரின் தொண்டுகளை
'ரகுராம'னும்
விமர்சனஞ் செய்துள்ளார்கள்.

இக்கட்டுரையில்
எழுப்பப்படும் பிரச்சினைகள் குறித்து
சாதக - பாதக அபிப்பிராயங்களை
எழுத்தாளரிடமிருந்தும்—
வாசகரிடமிருந்தும் அறிய
விரும்புகின்றோம். சுருக்கமாக எழுதுங்கள்.
தகுதியானவை
'இளம்பிறை'யிற் பிரசுரமாகும்.

# ஈழத்து முஸ்லிம் கதைஞர்கள்

—ரி. எல். எம். புகாரி

ஈழத்திலே முஸ்லிம்கள் மூன்ருவது பெரிய இனமாக வாழ்கின்ருர்கள். இந்நாட்டின் பொருளாதார- வர்த்தக- விவசாயத்துறைகளிலே பங்கு கொண்டு உழைத்து வருதலைப் போலவே; இந்நாட்டின் கலை- இலக்கிய வாழ்க்கையிலும் ஈடுபட்டுள்ளார்கள். அரசியல் வாதிகள் சந்தர்ப்ப ஆதாயங்களுக்காக ஏட்டிக்குப் போட்டியாக எது சொல்லிவந்த போதிலும் ஈழத்து முஸ்லிம்களுடைய தாய்மொழி தமிழ்; அவர்களுடைய கலை இலக்கிய மொழியும் தமிழே என்பதை நாம் மானசீகமாக ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

தமிழ் இலக்கியத்திலே கதை புனைதல் என்ற கலை தனித்துவ இலக்கியத் துறையாக நிலைத்து விட்டது. அதனை நாவல் - சிறுகதை -உருவகக்கதை என மேலும் வகுத்துக் கூறலாம். இம்மூன்று வகைக் கதை புனைதலிலும் ஈடுபாடு கொண்டு உழைத்து வரும் கலைஞர்களையே யான் 'கதைஞர்' என்ற பெயரால் சுட்டுகின்றேன்.

'ஈழத்தின் இலக்கிய வளர்ச்சியில் முஸ்லிம் கதைஞர்களுடைய பங்களிப்பு என்ன என்ற கேள்விக்கு விடை காணுதல் பயனுள்ள அறிவு முயற்சியாகும். அம்முயற்சியின் ஏதாகவே இக்கட்டுரையை அமைக்கின்றேன்.

பத்தொன்பதாம் நூற்ருண்டில் 'ஃஹதர்ஷா சரிதம்' என்ற சிறுகதைத் தொகுதியை ஐதுருஸ் லெவ்வை மரைக்காயர் வெளியிட்டதுடன், ஈழத்து முஸ்லிம் கதைஞர்களுடைய சகாப்தம் தொடங்கிவிட்டது எனக் கூறுதல் சம்பிரதாயமான ஒன்ருகும். பழம் பெருமை பேசும் தமிழ் மரபினை ஒட்டியே இக்கூற்று அமைகின்றது.

உண்மையில், கதை புனைதல்முயற்சியில், முஸ்லிம் எழுத்தாளர்கள் புத்தி பூர்வமாக ஈடுபடத் தொடங்கி கால் நூற்ருண்டு காலந்தானுகின்றது. ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை ஆக்கத்தின் வரலாறு சுமார் நாற்பது ஆண்டுகளை உள்ளடக்கியதுதான் என்ற படுதாவிலே, இதனைப் பதித்துப் பார்க்கும் பொழுது நாம் அதிகம் பின் தங்கிவிடவில்லை என்ற நிறைவு பிறந்திடவும் வழியமைந்துள்ளது.

தமிழ்க் கதை ஆக்கங்கள் முதன் முதலில் யாழ்ப்பாணத்திலே தோன்றியமை இயல்பான காரியமாகும். தமிழ் நாட்டுடன் யாழ்ப்பாணம்

கொண்டிருந்த நெருக்கமும், அதனுலேற்பட்ட அரசியல்-கலாசார-இலக்கியப் பரிவர்த்தனையும் யாழ்ப்பாணத்திலே கதைஞர்களைத் தோற்றுவித்தது.

சி. வைத்தியலிங்கம், சம்பந்தன், இலங்கையர்கோன் ஆகிய மூவரையும் கதை புனைதல் முயற்சியில் ஆரம்ப காலத் திரிமூர்த்திகளெனத் தமிழ் இலக்கிய வரலாற்று நூலார் கூறுவர். முன்னைய இருவரும் அதிக எண்ணிக்கையுள்ள சிறுகதைகளை எழுதாத போதிலும், கலைத்துவமாக எழுதினுர்கள். வைத்தியலிங்கத்தின் கதைகளிலே வடமொழி இலக்கிய அலங்காரத்தின் பாதிப்பு இருந்த போதிலுங்கூட, அவருடைய கதைகளுக்கு அழகு சேர்க்கவே அது உதவியது. சம்பந்தனின் கதைகளிலே தனி மனிதனின் உணர்ச்சி நிலையின் சுருதி காம்பீரியமாகத் தொனித்தது. 'இவர் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளை மனத்திலே வைத்து எழுதினுர்' என்று குறை கூறும் விமர்சகர்கள், அவர் பிராந்தியம், தேசீயம் ஆகிய எல்லைக் கட்டுக்களைக் கடந்த சர்வதேச மானிட உணர்ச்சிகளைத் தமது கதைகளிலே கையாண்டார் என்ற உண்மையை அவதானிக்கத் தவறிவிட்டார்கள். அத்தகைய நுண்ணுணர்ச்சிகளைச் சம்பந்தன் பாணியில் எழுதினுற்றான் சிறப்பாக அமையும் என்ற நிறைவு சம்பந்தனுடைய கதைகளை வாசிக்கும் பொழுது ஏற்படுகின்றது இவ்வகையில் சம்பந்தன் தனித்துவ முதன்மை பெற்று விளங்குகின்ருர். காலஞ் சென்ற இலங்கையர்கோன் அதிகமாக எழுதினுர். பல்வகைக் கதைக் கருக்களையும் கையாண்டார். பல்வகைத்தான உத்திகளையும், பாணிகளையும் புகுத்தித் துணிவான இலக்கியப் பரிசோதனைகள் செய்தார். இன்னுமொரு சிறப்பும் இலங்கையர்கோனுக்கு உண்டு. முன்னவர் இருவரும் 'மாஜி' கதைஞர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்ருர்கள். ஆனுல், இலங்கையர்கோன் தமது இறுதி மூச்சு வரை சிறுகதைகள் எழுதினுர். கதைஞராக வாழ்ந்தார்.

இவர்களைத் தொடர்ந்து மறுமலர்ச்சி இலக்கியகாரருடைய சகாப்தம் தொடங்கியதாக இரசிகமணி கனக-செந்திநாதன் அவர்கள் குறிப்பிடுகிருர். அ. செ. முருகானந்தன், அ. ந. கந்தசாமி சு. வே., வரதர், தழையடி சபாரத்தினம் சொக்கன் சு. இராஜநாயகன் ஆகியோர் கதைஞர்கள் வரிசையில் இன்று இடம் பெற்றுள்ள போதிலும், 'மறுமலர்ச்சி' என்னும் பத்திரிகை வெளிவந்த காலத்தில் இவர்கள் கதைஞராக உயர்ந்துவிடவில்லை என்பது என் அபிப்பிராயமாகும். அந்த உயர்ச்சியினை அவர்கள் 1950 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்திலே தான் சம்பாதித்தார்கள். இந்த உண்மையை நாம் மறந்துவிடலாகாது.

யாழ்ப்பாணத்து மண்ணிலே வேரூன்றிய சிறுகதைப் பயிர், உரம் இழந்து 'சோடைபற்றி'க் கொண்டிருந்த அந்நிலையில், கிழக்கிலங்கை மண்ணிலும் கதைஞர்கள் தோன்றத் தொடங்கினுர்கள். இதற்கான காரணிகள் பலவற்றுடன் விபுலாநந்த அடிகளார் ஏற்படுத்திய தமிழ் விழிப்புணர்ச்சியும் ஒன்றென்பது கவனத்தில் வைக்கத்தக்கது.

பீடி புகைப்பவர்கள் மத்தியில் பெருமதிப்புடன்
விழங்குபவை

'பெஸ்ட் பகதூர் பீடி'
'பெஸ்ட் இந்தியன் பீடி'
'S. M. K. ஸ்பெஷல் பீடி'

எமது பீடிகள் தேர்ந்த தொழிலாளர்களின்
சிறந்த அனுபவத்துடன் தயாரிக்கப்படுபவை

தயாரிப்பாளரும் விநியோகஸ்தரும்:

**மகா லெட்சுமி ஸ்டோர்ஸ்,**

உரிமையாளர்: திருமதி M. கனகரத்தினம்
தலைமை ஆபீஸ் : லட்சுமி மகால்
26, புதிய செட்டித் தெரு, கொழும்பு—13
தொலைபேசி: 4875 தந்தி: மாலக்

சகாய விலையில் இயந்திரங்கள்
விற்பனைக்கு உண்டு

சிறந்த சேவை செறிந்த பயன்

"பெட்டர்" டீசல் எஞ்சின்கள்
"லிஸ்டர்" எஞ்சின்கள்
இங்கிலீஸ் ஏ. சி. மோட்டார்கள்
ஹல்லர்கள் - தண்ணீர்ப் பம்புகள்

மற்றும் கட்டிடச் சாமான்கள் முதலியவற்றிற்குத்
தொடர்பு கொள்க:

**ஹுசேன் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ்,**

553, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10
தொலைபேசி: 28131

அவ்வாறு தோன்றிய கதைஞர்களுள் மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட வ. அ. இராசரத்தினம் முதன்மை பெற்றூர். தென்னகத்து மணிக்கொடி பரம்பரையின் வார்ப்பாகவும், வாரிசாகவும் வ. அ. இ. எழுதினுர்; எழுதுகின்றுர். சலசலத்தோடும் நதியைப் போன்ற லாவகமானதொரு நடையைக் கையாளுவதுடன், நம் மத்தியில் நடமாடும் தனி மனிதப் பாத்திரங்களின் மிக நுட்பமான உணர்ச்சிகளையும் நேர்த்தியாகச் சித்திரிப்பதில் அவர் வல்லவர். வ. அ. இ. வின் அதே காலத்தில் எழுத்துத் துறையிலே புகுந்தவர் அருள்செல்வநாயகம். இவர் அதிக எண்ணிக்கையுள்ள கதைகளை எழுதியிருக்கிறுர். ஆனுல், இன்றுகூட இவர் நாவலுக்கும்—சிறுகதைக்குமுள்ள வேறுபாட்டின் பிடிமான மற்றவராகவே எழுதுகின்றுர். 'அக்கரை இலக்கியம்' என்ற நூலில் இடம் பெற்றுள்ள 'அம்மன் அருள்' என்னும் கதை இதற்குத் தக்க சான்றுகும்.

ஒரே மரத்தின் ஒரே கிளையிற் பூத்த இரு மலர்களுள் ஒன்று வ. அ. இ. என்றுல். மற்றது பித்தன். மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட பித்தனின் இயற்பெயர் கே. எம். ஷாவாகும். பித்தனுடைய கதைகள் சிலவற்றிலே மனிதனை மனிதனுக நேசித்தல் வேண்டுமென்ற வக்கிரமான பிரசாரத் தொனி புகுத்துகொள்கின்றது. இக்குறைபாட்டினை நீங்கிவிட்டால், கதைகள் முழு அம்சம் பெறுகின்றன. தாம்பத்தியம் போன்ற இவரது கதைகள், சிறுகதையின் முழுத்துவ இலட்சணம் பொருந்தித் திகழ்கின்றன. இவரே ஈழத்தின் முதலாவது முஸ்லிம் கதைஞராக உயர்ந்து நிற்கின்றுர். இவரை முஸ்லிம் கதைஞர்களின் பிதாமகரெனக் கொள்ளுதலுஞ் சாலும்.

இவருடைய சிறு கதைகள் அடங்கிய ஒரு தொகுதிதானும் நூலுருவம் பெறுமலிருத்தல் விசனத்திற்குரியதாகும். சீணித்த பொருளாதார நிலையிலுள்ள இக்கதைஞரின் கதைகளைத் தொகுத்து வெளியிடுதல் இளைய சமுதாயத்துக் கதைஞர்களுடைய தலையாய கடமை என்பதை இச் சந்தர்ப்பத்தில் நினைவு படுத்த விரும்புகின்றேன். பித்தன் கடந்த ஏழு ஆண்டு காலமாக வற்புறுத்தல்களுக்காவே அவ்வப்போது கதைகள் எழுதுவதாகத் தோன்றுகின்றது. கதை உலகின்மீது இவர் ஒருவகை ஒதுக்கங் காட்டுகின்றுர். இந்த ஒதுக்கம் பித்தனுடைய திறமையைச் சரியாக நிலை நிறுத்த உதவ மாட்டாது. ஒரு வேளை அவருடைய ஆற்றல் 'மியூஸிய'ப் பொருளாகக் கணிக்கப்படுமோ எனவும் அஞ்ச வேண்டியிருக்கின்றது.

பித்தனைத் தொடர்ந்து அ. ஸ. அப்துஸ் ஸமது கிழக்கு மாகாணக் கதைஞராகப் பிரபலமடைந்தார். 'முற்போக்கு' அணியில் இவர் பிணைந்திருந்த போதிலும், அன்றேல் பிணைக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வணியினர் கையாண்ட எழுத்து உபாயங்களை இவர் கையாளத் தவறினுர். அத்துடன், நாட்டார் பாடலுக்கு உரை எழுதுவது போன்ற வலுவற்ற வசன நடையைக் கையாண்டமையினுலும் இவர் கதைஞர்கள் வரிசையில் நிரந்தர இடம் ஒன்றினைப் பெறத் தவறிவிட்டார்.

முஸ்லிம் எழுத்தாளர்களுடைய கதை எழுதும் ஆர்வம் கிழக்கிலங்கையில் மட்டும் முளை கொண்டது எனக் கொள்ளத் தேவையில்லை. கிழக்கிலங்கையில் முஸ்லிம்கள் பெருந் தொகையினராக வாழ்வதினுல், அவர்கள் மத்தியிலே அதிகமான கதைஞர்கள் தோன்றுதல் சாத்தியம். ஆனுல், முஸ்லிம்கள் இந்நாட்டின் நாலு பகுதிகளிலும் பரந்து வாழ்கின்ருர்கள். அப்பகுதி மக்களின் வாழ்க்கையைப் பிரதி பலிக்கும் கதைஞர்கள் தோன்றுதல் இயல்பானதாகும்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 'இளங்கீரன்' தினகரன் பத்திரிகை வாயிலாக ஒரு காலத்தில் மிகவும் பிரபலம் பெற்றிருந்தார். இவருடைய இயற்பெயர் சுபைர் என்பதா, அன்றேல் கலீல் என்பதா என்பது இன்னமும் தெளிவுபடவில்லை. இவர் சிறுகதைகள் சில எழுதியிருப்பினும் அத்துறையில் வெற்றி பெறத் தவறிவிட்டார். எதுகை-மோனை நிறைந்த அடுக்குத் தொடர்களைத் தி. மு கழகத்தின் மேடைப் பேச்சாளர் பாணியில் இவர் எழுதியமை இத்தோல்விக்கான பிரதான காரணம் எனலாம். ஆனுல், கம்யூனிஸ் பிரசாரகராக இவர் பிற்காலத்தில் எழுதிய நாவல்கள் இவருக்குக் கதைஞர்கள் வரிசையில் ஓர் இடத்தினைச் சம்பாதித்துத் தந்துள்ளது. "ஒரு செம்பு பாலில் ஒரு குடம் தண்ணீர் ஊற்றும் வகையில் இவருடைய நாவல்கள் அமைந்துள்ளன' என்ற பிறிதொரு விமர்சகரின் கூற்றில் உண்மை இல்லாமலில்லை. இருப்பினுங்கூட, ஈழத்து நாவலாசிரியர் வரிசையில் நிரந்தர இடம் பெற்றுள்ள கதைஞர் இவரே என்பது பொதுவான அபிப்பிராயமாகும்.

கம்யூனிஸப் பாசறையில் உருவாக்கப்பட்ட பிறிதொரு கதைஞர் எச். எம். பி. முகைதீன் ஆவர். அரசியல் விமர்சனக் கட்டுரைகள் எழுதுவதில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர். தமது எழுத்துத் தொழிலின் துணைக் கருவிகளாகவே இவர் சிறுகதைகளைப் படைத்தார். இக்காரணம் பற்றியே, இவருடைய நாமம் கதைஞர் வரிசையில் வைத்து எண்ணப் படுவதில்லைப் போலும்! இருப்பினும், மனிதாபிமான உணர்ச்சியைப் பிழிந்தெடுக்கும் சில நல்ல சிறுகதைகளை எழுதியிருக்கின்ருர்.

இந்த இடத்தில் ஒன்றினைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். கதைகளிலே சைவக் கதைகள், கிறிஸ்தவக் கதைகள், முஸ்லிம் கதைகள் என வகுத்துப் பேசும் போக்கு அபத்தனமானது. அஃது இலக்கிய விமர்சனமும் ஆகாது. தமிழகத்து முஸ்லிம் கதைஞ்ஞரான தூயவன் (எம். எஸ். அக்பர்) இந்து சமயத் தத்துவங்களைக் கையாண்டுள்ளார். அதே போன்று ஈழத்தின் கதைஞர்கோன் எஸ். பொ., வீ என்னும் சிறுகதைத் தொகுதியில் 'சுவை', 'ஈரா' ஆகிய இரண்டு இஸ்லாமிய பகைப் புலம் சார்ந்த கதைகளையுஞ் சேர்த்துள்ளார். முன்னையது பெருமானுரின் வாழ்க்கை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது; பின்னையது கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கொண்டது. நான் இதுவரை வாசித்துள்ள கதைகளுள் கிழக்கிலங்கை வாழ் இஸ்லாமியரு

டைய வாழ்க்கையின் சுருதிகளை அக்கதை போலவேறெக் கதையும் பிரதிபலித்தது கிடையாது. எனவே, இங்கு முஸ்லிம் கதைஞர்கள் என வகுத்து நான் பேசுதல் ஓர் இனத்தின் எழுத்தாளருடைய வெற்றி-தோல்விகளை மதிப்பிடுவதற்கு இலகுவாக அமையும் என்ற உபாயத்தின் வழி அமைகின்றது என்பது மனத்தில் இருத்தத் தக்கது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், 'முஸ்லிம்கள் முஸ்லிம் கதைகள் படைத்தல் வேண்டும் என்ற கோஷத்தை மறை முகமாக முன் வைத்து, முஸ்லிம் கதை மலர்' என்ற நூல் தொகுக்கப்பட்டது. பிறிதொரு வழியிற் சொல்வதானால், இனத்தின் பெயரால் சிறுகதை உலகில் இடம்பெற எடுக்கப்பட்ட யாசகமாகவும் அத்தொகுதி அமைந்தது. இதன் காரணமாகச் சிலர் வலிந்து சிறுகதை எழுத வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற உண்மையும் சில கதைகளிலே பளிச்சிடுகின்றது. இதனை யூ.எல். தாவூத் தொகுத்துத் தந்தார். அத்தொகுதியில் தொகுக்கப்பட்ட பதின்நான்கு கதைகளுள் ஒன்றுதானும், உண்மையான ஈழத்து இஸ்லாமிய வாழ்க்கையைத் துல்லியமாகப் பிரதி பலிக்கவில்லை. ஆங்காங்கு வரும் சில அரபுப் பதங்களையும், முஸ்லிம் பெயர்களையும் நீக்கிவிட்டால், கதைகள் பிற எந்தச் சமயச் சூழலிலும் நிகழத் தக்கனவே என்ற நிரூபணமே நிலைக்கின்றது.

எனவேதான், முஸ்லிம் கதைகளென்று கணக்கெடுப்பது ஆபத்தான விவகாரம். இருப்பினும், 'முஸ்லிம் கதை மலர்' என்ற தொகுதியிலே அறிமுகப்படுத்தப்பட்ட கதைஞர்களைப் பற்றி இக்கட்டத்திலே பிரஸ்தாபித்தல், என் அலுவலைச் சுலபமாக்கும் ஓர் உபாயமாகும்.

'முஸ்லிம் கதைமலர்' என்னும் இத்தொகுதியிலே பாணந்துறை- ம. மு. உவைஸ், கொழும்பு செய்னுல் குசைன் கொழும்பு எம். எம். மக்கீன் மாவனெல்லை எ. எச். அபு உபைதா. மாத்தறை எம். எம். சுக்கிரி ஆகியோருடைய கதைகளும் இடம் பெற்றுள்ளன. உவைஸ் ஓர் உரையாசிரியர், செய்னுல் குசைன் ஒரு பயணக் கட்டுரையாளர் என்பதை இனப்பற்றுடன் பெருமையாக ஒப்புக்கொள்ளுகின்றேன். சுக்கிரி பன்மொழிப் புலவர்; இஸ்லாமிய மார்க்கப்பிரசங்கி; பல்கலைப் பீடத்தில் அமர்ந்து இஸ்லாமிய கலாசாரத்தைப் பற்றிய அறிவை வளப்படுத்துபவர். இவற்றை இயற்றுதல் அரிய தொண்டாகும். அபூ இஸ்லாமியக் கட்டுரைகள் எழுதியுள்ளார். ஆனால், மக்கீன் சினிமாச் செய்திகளைத் தொகுத்துத்தரும் 'அரிய தொண்டில்' ஈடுபட்டுள்ளார். (மக்கீனும், அஸ்வரும் இயற்றி வரும் 'தொண்டுகள்' குறித்து தன் மானமுள்ள இஸ்லாமியன் எவனும் தலைகுனிய வேண்டியிருக்கிறது.) இந்தப் பஞ்சவரை முஸ்லிம் கதைஞர்களாக நினைத்துப் பார்க்க முடியாது. நினையாப்பிரகாரமாக அவர்கள் செய்துள்ள தவறையே சாதனை என நிலை நாட்டப் பார்த்தல், தவறான இலக்கிய மதிப்பீடு ஆகும்.

இக்கதை மலரிலே ஏ. இக்பால், யூ. எல் தாவூத் ஆகியோருடைய கதைகளும் இடம் பெற்றுள்ளன. இதனைத் தற்செயலாக நடந்த 'விபத்து'

With Compliments from

**THE LEATHER PEOPLE**

# N. M. MOHAMED MOHIDEEN

General Merchants, Tanners,
Exporters & Importers

Leading Exporters of
**"N M M"** Quality
KIPS and TANNED
GOAT and SHEEP SKINS
to U. K.

Direct Importers of

All Kinds of Shoe Materials from
United Kingdom, Europe & India

**17, Second Cross Street,**
**COLOMBO-11.**

Cable: "**SHEEPSKIN**" Dial: **25794**

Tannery at:
**Kotuwegoda, Rajagiriya.**

Bankers:
**Chartered Bank**

Dial: **674 - 2310**

Branch: **Udatalawinne, Katugastota.**
,, **Narpitimunai, Kalmunai.**

எனக் கொள்ள முடியாது. இருவரும் சிறுகதை இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர்களே. குட்டிக் கதைகள் சிலவற்றை எழுதியுமிருக்கிருர்கள். ஆயினும், தமது ஆக்க இலக்கிய ஆற்றலின் துறையைப் புத்திபூர்வமாக இனங்கண்டு கொள்ளாது, இதுவரையிலும் வெள்ளாடு மேய்ச்சலிற் காலங் கடத்தி வருவதாகத் தோன்றுகின்றது.

கதை மலரிலே இடம் பெறும் 'அண்ணல்' (எம். எஸ். எம். சாலிஹ்) 'யுவன்' (எம். ஏ. கபூர்) ஆகிய இரண்டு கதைஞர்களுடைய ஆற்றல்கள் தனியாகவிமர்சிக்கப்பட வேண்டிய ஒன்ருகும். 'அண்ணல்' ஓரிரண்டு நல்ல கதைகளை எழுதிக் கதைஞர்கள் வரிசையில் இடம் பெற்றுள்ள போதிலும், கவிதைத்துறையிலேதான் அவருடைய ஆற்றல் குன்றிலிட்ட தீபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. காதற் கவிதைகளை மிக நயமுடன் அமைக்க, ஈழத்தில் இற்றைவரை எந்த சமூகத்திலும் கவிஞர் அண்ணலைப் போல ஒரு கவிஞன் தோன்றவில்லை எனத் துணிந்து கூறலாம். யுவனும் தமக்கு உரிய இடத்தைக் கவிஞர்கள் வரிசையிலேதான் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கிடையில் புதிய இலகிய சகாப்தம் ஒன்றினைத் தோற்றுவித்த பெரும் எழுத்தாளராக எஸ். பொன்னுத்துரை உயர்ந்து நிற்கின்ருர். ஈழத்து இலக்கிய உலகில் இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் அவர் செய்துள்ள பரிசோதனைகளும், அதனுல் இயற்றியுள்ள சாதனைகளும் பிரமிப்பினை ஊட்டுகின்றன. பல துறைகளிலும் வெற்றியீட்டுவதற்கு வரப்பிரசாதமாக அவர்பெற்ற கொடையே காரணமாக அமையும். எஸ். பொ. அத்தகைய தனித்துவக் கொடை பெற்ற எழுத்தாளர் என்பதை அவரது இலக்கிய விரோதிகள்கூட ஒப்புக் கொள்வார்கள்.

அவருடைய இலக்கிய முயற்சிகளை ஸாஹிரா மகாநாட்டிற்கு முற்பட்ட காலம், ஸாஹிரா மகாநாட்டிற்குப் பிற்பட்ட காலம் என வகுத்துப் பேசலாம். முற்பட்ட காலத்தில் அவர் கம்யூனிஸ்டாகவும், தீவிர தொழிற் சங்கவாதியாகவும் திகழ்ந்தார். எனவே, கம்யூனிஸ அணியிலே—தொழிலாளர் மத்தியிலே—தோன்றிய எழுத்து ஆற்றல்கள் செழித்தோங்கச் செய்ய அவர் பாடுபடுதல் தவிர்க்க முடியாததாக இருந்தது. கே. டானியல், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன் ஆகிய கம்யூனிஸ கதைஞர்களின் நல்ல குருநாதன் எஸ். பொ. தான் என்பது நாடறிந்த உண்மையாகும். பின்னர் வந்துள்ள கம்யூனிஸ கதைஞர்களுக்கு இம்மூவருள் ஒருவர் ஒவ்வொரு காலகட்டத்தில் வழிகாட்டிகளாக அமர்ந்தனர். எனவே, இளையவர்களுக்கு எஸ். பொ. 'குருவின் குருவாக' உயர்ந்து நிற்கின்ருர்.

கம்யூனிஸ அணியிலே எஸ். பொ. இருந்த இறுதிக் காலங்களில் 'முற்போக்கு இலக்கியம் எனப் பேசுதல் மழலைத் தனமானது. ஆங்கில விமர்சன அளவுகோல்களை மட்டும் விமர்சனத்திற்குள் புகுத்துவது அந்நியமானது; இலக்கியத்திற்கு பிரசார நோக்கமும் இருக்கின்

றது என்பதை ஒப்புக் கொண்டாலும், கீழைத்தேய இலக்கிய மரபு என்ற மண்ணிலே நமது ஆக்க இலக்கியங்கள் வேர் கொள்ளுதல் வேண்டும். எனவே, 'தேசீய இலக்கியம்' என்ற கோஷத்தினை எழுத்தாளர் மத்தியில் வைத்தல் பயனுள்ளதாகும்' என்று எடுத்துக்காட்டி வந்தார். அவருடைய வாதங்களை 'அரசியல் தந்திரம்' என்று பேசிய பெரும்பான்மையினர் அப்பொழுது ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நிராகரிப்பின் தூல வடிவம் ஸாஹிரா மாநாட்டிலே பிறந்தது.

கம்யூனிஸ அணியினரின் நிராகரிப்பு, ஈழத்தமிழ் இலக்கியத்தின் ஆதாயமாக அமைந்தது என்பதைப் பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் நிரூபித்தன. அவற்றை விரிவாக ஆராய்வதற்கு இதுவல்ல தக்க இடம். இருப்பினும், பிற்பட்ட காலத்தில் அவர் 'நற்போக்கு இலக்கியம்' என்ற புதிய இலக்கியப் போக்கினை இளைய சந்ததியார் மத்தியிற் பிரசாரஞ் செய்தார். உடனடியான இலக்கியப் பாதிப்பினை அவர் பிரசாரம் ஏற்படுத்தாவிட்டாலும், அவருடைய எழுத்து நடையை ஆதர்ஷமாகக் கொண்டு எழுதும் ஆவல் பல எழுத்தாளரிடம் மனைகோலியது. அகஸ்தியர், பெனடிக்ட்பாலன் ஆகியோரும், பல்கலைக் கழகத்திலே பயின்று கொண்டிருந்த பரராஜசிங்கம், செ. யோகநாதன், கதிர்காமநாதன், கயிலாசநாதன் முதலியோரும் எஸ். பொ. வின் எழுத்து நடையைக் காமித்துக் கதைஞராயினர். அவ்வாறே, எஸ். பொ. வின் எழுத்து ஆற்றலால் உந்தப்பட்டு 'மருதூர்க் கொத்தன்' எம். ஏ. நுஃமான், மருதமுனை - மஜீத், மருதூர்க் கனி, எஸ். எச். ஏ. ஹுஸைன் முதலிய கிழக்கிலங்கை முஸ்லிம்கள் பலர் கதை உலகிற்கு வந்தனர்.

மருதூர்க் கொத்தனும், எம். ஏ. நுஃமானும் மிகவேகமாக முன்னேறிக் கதைஞர்களின் முன் வரிசையில் இடம் பிடித்தார்கள். இவர்கள் எஸ். பொ. சிலசமயங்களிலே கையாளும் வித்துவச் செருக்கு நிறைந்த நடையைக் கருகலாகக் கையாண்டார்கள். மருதூர்க் கொத்தன் தான் வாழும் மண்ணிலே நடமாடும் பாத்திரங்களின் உணர்வுகளுக்கு உயிர்ப்புக் கொடுப்பதில் வெற்றி பெற்றார்.

எம். ஏ. நுஃமான் தொடர்ந்து சிறுகதைகள் எழுதுவதைப் பயின்று வந்திருப்பாரேயானால், இன்று முஸ்லிம் கதைஞர்களின் முன் வரிசையில் இடம் பெற்றிருக்கக் கூடும். இஃது அநுமானமே. ஆனால், அவர் சிறிது சிறிதாகத் தனது கவனம் முழுவதையும் கவிதைத் துறையில் ஈடுபடுத்தத் தொடங்கினார். ஒன்றின் தோல்வி, இன்னொன்றின் பேறாக அமைதல் போல, கவிதை உலகு நுஃமானால் வளம் பெற வழி சமைந்தது.

மருதமுனை - மஜீத் அகில இலங்கைச் சிறு கதைப் போட்டியிலே பாராட்டுப் பெற்ற கதை ஒன்றினை எழுதிப் பிரபலமடைந்தார். அக்கதை 'கலைமக'ளில் பிறிதொரு எழுத்தாளர் எழுதிய கதை என்பது பின்னர் தெரிய வந்தது. இச்செய்கையினால் அவர் கதைஞர் வரிசையில் இடம் பெறும் தகைமையை இற்றைவரை இழந்து நிற்கின்றார். மருதூர்க் கனி ஏதோ கதைகள் எழுதியிருக்கின்றார் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு, கட

Meelad Greetings from

# A. M. Sulaiman & Co.,

MANUFACTURERS AND DISTRIBUTORS
OF

## "BLACK & WHITE"
## SHIRTS

**128, Maliban Street, Colombo-11.**

***Work Site:***
83–1/1 St. SEBASTIAN STREET,
COLOMBO–12.

Meelad Greetings
from

# CITY LEATHER STORES

112, MALIBAN STREET,
COLOMBO-11.

Meelad Greetings
from

S. T. R. SALAY MOHAMED & Co.,
245, Main Street,
COLOMBO-11
Gram: **PERDESHI** Phone: **20536**

Compliments
*from*

P. S. K. V. PALLAK LEBBE & Co.,
**COLOMBO-11**

மையுணர்ச்சிக்காகவே இங்கு பிரஸ்தாபிக்கப்படுகின்றார்.

இந்நால்வரும் மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். கவிஞர் நீலவணனின் நட்புறவாலும் எழுத்து உலகிற்கு வந்தவர்கள். நுஃமானைத் தவிர்ந்த ஏனைய மூவரும், நீலவணனின் சோர்வுச் சிக்கலுக்குள் உள்ளாகியுள்ளதை அவர்கள் எழுதுவதாகக் கூறிக் கொள்ளும் 'கவிதைகள்' புலப்படுத்துகின்றன. இவர்கள் எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்து, தெளிந்த பார்வையுடன் மீண்டும் சிறுகதை எழுதும் பயிற்சியில் ஈடுபடுவார்களேயானால், முஸ்லிம் கதைஞர்கள் வரிசையில் நிச்சயமாக இடம் பெறக் கூடும். எஸ். எச். ஏ ஹுசைன் உருவகக்கதைகள் எழுதுவதில் ஆர்வங்காட்டும் இளங் கதைஞராவர்.

மட்டக்களப்பு மாவட்டக் கல்வி அதிகாரி எம். எம் சமீம் இப்பொழுது சிறுகதைகள் எழுதுவதை நிறுத்திக் கொண்டுள்ளமை துரதிர்ஷ்டமானதாகும். வரலாற்றிலே நல்ல ஞானமுள்ள இவர், உத்தியோக காரணமாக எழுத்துலகிலிருந்து ஒதுங்கியிருப்பது போலத் தோன்றுகின்றது. இனியாவது இவர் சிறுகதைத் துறையை வளப்படுத்தும் ஓர் ஏற்பாட்டினைச் செய்வார் என எதிர்பார்க்கின்றேன்.

சம்மாந்துறை பஸீல் ஏ. காரியப்பர் முற்போக்குடன் ஒட்டியும் ஒட்டாமலும் எழுத்துலகிற்கு வந்தவர். இவர் உருவகக் கதை என்ற நினைப்பில் சில குட்டிக் கதைகளை எழுதிச் சலித்து, இப்பொழுது வசன கவிதைகளிலே கவனஞ் செலுத்தியுள்ளார்.

மாத்தளை - ஏ. ஏ. லத்தீப் அவர்கள் கட்டுரையாளராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் இன்று பிரபலமடைந்துள்ள போதிலும், ஒரு காலத்தில் கதைஞராகவும் திகழ்ந்தார். அவர் எழுதியுள்ள 'மனிதன்' நல்ல வார்ப்பு. பின்னர், இவர் நடை சித்திரங்கள் எழுதுவதைத் தமது கலையாக வரித்துக் கொண்டார்.

ஒரு சமயம் எஸ். பொ. தோற்றுவித்த இலக்கிய இயக்கத்தின் முதுவிளைச்சலாகவும், மறு சமயம் அதன் துருவ முனைப்பாகவும் காட்சியளிக்கும் எம். ஏ. ரஹ்மானைப் பற்றித் தனியாகக் குறிப்பிடுவதுதான் பொருத்தமானது. இதற்குக் காரணமும் உண்டு. ஈழத்துத் தமிழ் இலக்கிய முயற்சிகளைப் பொதுவாகவும், முஸ்லிம்களுடைய இலக்கிய முயற்சிகளைக் குறிப்பாகவும் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக வழி நடத்திய தலைவனாகவும், தொண்டனாகவும் அவர் உழைத்து வருகின்றார்.

ஈழத்தில் இலக்கிய நலனுக்காக மட்டுமே நடத்தப்படும் சஞ்சிகைகள் மிகவும் குறைவு. தொடர்ந்து நடத்துவதிலுள்ள சிரமங்களும் பல. எழுத்தாளர் சங்கங்களினால், அவ்வெழுத்தாளர் சங்கத்து உறுப்பினர்களுடைய செல்வாக்கினை உபயோகித்து எடுக்கப்பட்ட நிரந்தர விளம்பர பலத்துடனும் நடத்தப்பட்ட 'புதுமை இலக்கியம்' 'எழுத்தாளன்' ஆகியன கூட புதுமைப்பித்தன்பாணியிற் சொல்வதானால், நஞ்சுக் கொடியைத் தோளிலே அள்ளிப் போட்டுக் கொண்டு மரித்தன. வாசகர் பலம், சந்தாபலம் ஆகியவற்றிலே காலூன்றி வெளிவருதாக 'இளங்கீர'னால் முர

சஞ்சிகை நிறுத்தப்பட்ட 'மரகதம்' ஆறு மாதங்களுக்கு மேல் உயிர் வாழவில்லை. தூதுவரகங்களின் பின்னணி 'ஆதரவை'ப் பெற்று, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த சஞ்சிகைகளுக்குக்கூட இந்த அவல கதியே விடிந்தது. அப்படி இருந்தும் எம். ஏ. ஆர், தமிழ்-இஸ்லாமிய கலாசாரப் பால மாக வெளியிட்டு வரும் 'இளம் பிறை' ஐந்தாம் ஆண்டு மலரை வெளிக்கொண்டு வருதல் அசாதாரண சாதனையாகும். 'இளம் பிறை'யைத் தவிர, இன்னுமொரு மாசிகை வெகு கிரமமாக வந்து கொண்டிருக்கின்றது. அது வெறும் சினிமாப் பத்திரிகையே என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டால், அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்காமலிருத்தலே மேலெனத் தோன்றுகின்றது. இஃது அவர் இலக்கியத்திலே கொண்டிருக்கும் அழுங்குப்பிடியான, சில சமயம் குருட்டுத்தனமான என்று தோன்றும் அளவுக்குக் கொண்டிருக்கும் பக்தியின் பாற்படும்.

பிறிதொருவகையிலும் இதனைக் கூறலாம். அவர் உரிமையாளராக அமர்ந்து நிறுவியுள்ள 'அரசு வெளியீடு' ஈழத்தின் ஆற்றலிலக்கியத் துறையில் வகையிலும், எண்ணிக்கையிலும் அதிக நூல்களை வெளியிட்டுள்ளது. சொந்த அச்சக வசதிகளுடன், 'தேசிய இலக்கியம்' என்று பெருமை பேசுபவர்கள், இன்றுகூட நூல்கள் பிரசுரிப்பதற்காகச் சென்னைக்குப் பறந்து கொண்டிருக்கும் பொழுது, தமிழ் நூற் பிரசுரத்தில் புதிய உணர்வினையும், தெளிவினையும் இவர் ஏற்படுத்தினர்:

சஞ்சிகை - நூல்கள் பிரசுரித்தல் துறைகளிலே இவற்றைச் சாதனையாக்கிய எம். ஏ. ஆர். சிறந்த கதைஞராகவுந் திகழ்கின்றார். அகில இலங்கைச் சிறு கதைப் போட்டியிலே அவர் எழுதிய 'பூ' என்னுஞ் சிறு கதை முதற் பரிசு பெற்றது. அந்தக் கதையும், இஸ்லாமிய வரலாற்றுப் பின்னணியில் எழுதப் பட்ட 'ஈமான்' என்ற கதையும் நின்று நிலவ வல்ல கதைகளாம். பிறிதொரு வகையிலும் ரஹ்மான் கதைஞர்கள் வரிசையில் நிரந்தர இடம் பெற்றுள்ளார். அஃது உருவகக் கதைத் துறையாகும்.

ஈழத்திலே எழுத்தாளர் பலர் குட்டிக்கதைகள் எழுதி, அவற்றை உருவகக் கதைகள் என்று மருளுகின்றார்கள். இந்த அவல நிலையில், சு. வே., எஸ். பொ. ஆகிய இருவர் மட்டுமே இலட்சண சுத்தமான உருவகக் கதைகளை எழுதி நம் 'மானத்'தைக் காப்பாற்றி வந்தார்கள். ஈழத்தில் நடைபெற்ற முதலாவது உருவகக் கதைப் போட்டியிலே 'சிருஷ்டி' என்ற தமது கதைக்கு முதற் பரிசு பெற்றதுடன் இவர் உருவகக் கதை என்னும் துறையிலே மிக வேகமாக முன்னேறியுள்ளார். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், அவர் வெளியிட்ட 'மரபு' என்பதுதான் ஈழத்தில் வெளியான முதலாவது உருவகக் கதைத் தொகுதியாகும். இப்பொழுது அவர், தனதும், ஈழத்தினதும் இரண்டாவது உருவகக்கதைத் தொகுதியான 'தீபன்' என்பதை வெளியிட்டுள்ளதாக அறிய முடிகின்றது. முஸ்லிம் கதைஞர்களுடைய சாதனைக்கு இது பெருமை சேர்ப்பதாகவும் அமைந்துள்ளது.

புதிய - இளம் ஆற்றல்களை இனங்கண்டு பிடித்து ஊக்குவித்தல் ரஹ்மானிடமுள்ள பிறிதொரு சிறப்பியல்பாகும். 'வளரும் பயிர்', 'கல்லூரி மன்

றம்' ஆகிய புதிய பகுதிகளை 'இளம்பிறை'யில் அமைத்து, ஆரம்ப எழுத்தாளருக்குப் பிரசுர களம் அளித்துள்ளார். அவ்வப்போது ஆக்க பூர்வமான குறிப்புக்களும், விமர்சனங்களும் எழுதி, இளம் எழுத்தாளர் கதைத் துறையில் முன்னேறுவதற்கான வழிகளையும் காட்டியுள்ளார். இவ்வாறு உருவாக்கப்பட்டவர்களுள் பாணந்துறை மொயின் சமீன், எஸ். எல். எம் ஹனிபா, வை. அகமத் ஆகிய கதைஞர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களுடைய கதைகள் வருங்காலத்தில் மிகுந்த நம்பிக்கை வைக்கக் கூடிய தெம்பினைத் தருகின்றன.

ஈழத்தில் பெண் கதைஞர்கள் குறைவு. நன்ருக எழுதிய சில தமிழ்ப் பெண்களே சில ஆண்டுகளுக்கிடையில் இலக்கியத்திலிருந்து ஒதுங்கி வாழும் பரிதாப நிலையைக் காண்கின்ருேம். இந்நிலையில் முஸ்லிம் சமூகத்திற் பெண் கதைஞர்கள் பலர் தோன்றுவார்கள் என எதிர்பார்ப்பதற்கில்லை.

முதல் 'இளம்பிறை' இதழில் அறிமுகமான நயீமா ஏ. பஷீர், பின்னர் 'இளம்பிறை'யில் அறிமுகமான காத்தான்குடி ஆயிஷா, வெலிகாமம்-மெக்காடர் ஆகிய மூன்று பெண்களும் சிறுகதைத் துறையில் முனைந்து பயிற்சி பெறுவார்களேயானுல் கதைஞர் வரிசையில் இடம் பெறத்தக்கவர்களாவர். அவர்களுடைய கதைகளிலே இந்த நம்பிக்கை பூடகமாக உள்ளது.

இன்னெரு பத்து ஆண்டுகள் கழித்து இத்தகைய மதிப்பீடு ஒன்று செய்யப்படுமானுல், முஸ்லிம் கதைஞர்களுடைய பட்டியலும், சாதனைகளும் நீண்டதாக இருக்குமென எதிர்பார்ப்போமாக.

Cable: *WELLCOME* Phone: *24921*

**LANKA PEN Co.,**

MANUFACTURERS' REPRESENTATIVE'S

DEALERS IN

All Brands of **Torch Lights, Fountain Pens & Parts, Thermos Flasks Etc., Etc.**

**44, 2nd CROSS STREET, COLOMBO-11**

BRANCH

EASTERN TAILORING MART

**HAPUGASTALAWA.**

Colombo Phone: **21710**

With the best compliments of:

# SHAMUNA LEBBE & COMPANY

## JEWELLERS

COLOMBO

T' phone: **21447**

# டியூக்

சிந்தடிக் - கழுவக்கூடியதுமான

# டிஸ்டம்பர்

உங்கள் கட்டிடங்களின் வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் டியூக் டிஸ்டம்பர் பூசுங்கள். அது உங்கள் கட்டிடங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது; கவர்ச்சி ஊட்டுகிறது.

டியூக்
டிஸ்டம்பர்
20 வண்ணங்களில்
கிடைக்கிறது.

*தயாரிப்பாளர்:*
**LANKA PAINT Co.,**
**291, Main Street,**
**COLOMBO-11**
Telephone: **25914**

# ஈழத்து முஸ்லிம் கவிஞர்கள்

—மாலிக்

ஈழத்து முஸ்லிம் கவிஞர்களுடைய இலக்கிய முயற்சிகள் சுமார் ஒரு நூற்றாண்டு காலத்தை உள்ளடக்கியதாகும். ஈழத்தில் வாழும் ஏனைய இனத்தினர் ஆங்கிலக் கல்வி பெற்று அரசாங்க உத்தியோகங்களை வேட்டையாடுவதில் நாட்டம் மிக்கவர்களாகக் காணப்பட்டனர். இப்போக்கினால், அவர்கள் கீழைத்தேய மண்ணில் ஊன்றிய கவிதா மரபினைப் புறக்கணித்து, வசனநடையிலே அதிக கவனஞ் செலுத்தத் தலைப்பட்டனர்.

மதம் மாறிய தமிழர்கள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப வசனநடை ஏற்ற ஆயுதமெனக் கண்டனர். 'முள்ளை முள்ளால் எடுப்பது' போன்ற உபாயத்தில், கிறிஸ்தவ எதிர்ப்பிரசாரமும் வசன நடையில் எழுந்தது. ஆறுமுக நாவலர் தமிழ் வசனநடைக்குச் செய்த தொண்டுகள் இந்தப் பகைப் புலத்திலேதான் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

மத மாற்றங்களும், அதனால் எழுந்த வாதப் பிரதிவாதங்களும் முஸ்லிம்கள் மத்தியிலே அச்சத்தை ஏற்படுத்தியது. ஆங்கில மொழி கற்றலும், மத மாற்றமும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்ட சங்கதிகளாக முஸ்லிம்களுக்குத் தோன்றியது. எனவே, இஸ்லாம் எழுந்த மொழியான அரபு மொழி பக்தி மிகுந்தது. இத்தகைய ஒரு போக்கினாலேதான் அரபுத் தமிழ் தோன்றியது என ஊகிப்பதற்கு இடம் இருக்கின்றது. அருமறையின் திரு வசனங்களை ஓதிப்பழகிய செவிகளுக்கு, தமிழிலும் இசையுடன் கூடிய செய்யுள் நடையே உவப்பானதாக அமைந்தது. இதன் காரணமாக ஈழத்தில், ஒரு நூற்றாண்டு கால வரலாற்றில் முஸ்லிம் மக்கள் மத்தியிலே அதிகமான கவிஞர்கள் தோன்றும் வாய்ப்பும் ஏற்பட்டது.

அரபு மொழிப் பயிற்சியினால், அவர்கள் அரபு லிபியில் தமிழ்க் கவிதைகளைப் புனைந்தார்கள். அத்துடன் இஸ்லாம் வலியுறுத்தும் சில தத்துவங்களை வெளியிடுவதற்குத் தமிழ்ப் பதங்கள் வலுவிழந்து காணப்பட்ட பொழுது, அரபுப் பதங்களை அப்படியே கையாண்டார்கள். முஸ்லிம் கவிஞர்கள் சந்தப் புகழ் நிகர்ந்த ஓசை நயம் மிகு செய்யுள்களை இயற்றிப்பாடி இன்புற்ற போதிலும், அவர்களுடைய இலக்கிய முயற்சி ஏனைய சமூகங்களினால் மதிக்கப்படவில்லை. குறுகிய காழ்ப்பு உணர்ச்சியும் ஒரு காரணமாக அமைந்தது. எனவேதான், சின்னத்தம்பிப் புலவர் என்று தொடங்கி, தங்கத்தாத்தா வரை என

ஈழத்துக் கவிஞர்களைப் பட்டியல் செய்பவர்கள் முஸ்லிம் கவிஞர்களுடைய இலக்கியப் பங்களிப்பைப் பற்றி மௌனம் சாதிக்கின்றனர். (இரசிகமணி கனக-செந்திநாதனினால் எழுதப்பட்டு, அரசு வெளியீடாக வெளிவந்துள்ள 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்னும் நூலில் மட்டுமே முஸ்லிம் எழுத்தாளர்களுடைய தமிழ் இலக்கிய முயற்சிகளைத் தனியே ஓர் அத்தியாயமாகத் தொகுக்கப்பட்டிருப்பது மன ஆறுதலைத் தருகின்றது.)

கிழக்கிலங்கையில் வாழ்ந்த சின்ன ஆலிம் அப்பா இயற்றிய 'ஞானரை வென்றான்' என்னும் கவிதை நூல்தான் ஈழத்து முஸ்லிம் கவிஞர்களுடைய முதலாவது அறுவடையாக நமக்குத் தேறியுள்ளது என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். இதன் தொன்மையை நிலைநாட்டுவதற்குப் போதிய அக-புறச் சான்றுகள் இற்றைவரை தரப்படவில்லை.

காலியில் பன்னெடுங்காலமாக முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதும், தமிழையே தாய் மொழியாகப் பயின்று வருகின்றார்கள் என்பதும் அங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள மும்மொழிக் கல்வெட்டினால் நிரூபணமாகின்றது. காலியில் வாழ்ந்த செய்குத் தம்பிப் புலவர் காரணமாலை என்னும் நூலை இயற்றினார். இது 1878-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது எனக் கொள்ளப்படுகின்றது. சீறா சரிதத்தை 763 இசைப்பாடல்களிலே இது செப்புகின்றது. முஸ்லிம் புலவர்கள் இசைப்பாடல்களிலே கொண்ட ஈடுபாட்டினை இது மேலும் நிறுவுகின்றது. இதே காலத்தில் கண்டி செய்கு முகமது லெவ்வை ஆலிம் தீன்மாலை என்னும் நூலினை வெளியிட்டார். இச்செய்யுள் நூல் அரபு லிபியில் எழுதப்பட்டுள்ளது.

தெல்தொட்டையிற் பிறந்து, கண்டியிலும் வாழ்ந்து, தமிழ்ப் பணியாற்றிய 'வித்துவதீபம்' அப்துல் காதிர் புலவரே வண்ணத்திலும், வகையிலும், எண்ணிக்கையிலும் அதிக நூல்களை இயற்றிய கவிஞர்கள் திலகமாகப் பிரகாசிக்கின்றார். தமிழின் தொன்மைமிகு இலக்கிய மரபிலே நன்கு திளைத்தவர் இப்புலவர் என்பதை இவர் இயற்றிய நூல்கள் மெய்ப்பிக்கின்றன. திருமதீனத்து மாலை, கண்டி நகர்ப் பதிகம், திருமயம் காட்டுபாவா சாகிபு காரணக் கும்மி, கண்டிக் கலம்பகம், மெய்ஞ் ஞானக் குறவஞ்சி, மெய்ஞ்ஞானக் கோவை, கோட்டாற்றுப் புராணம், வழிநடைச்சிந்து ஆகியன உட்பட அப்துல் காதிர் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றிய 'சந்தத் திருப்புகழ்' ஈழத்தில் தோன்றிய கவிதை நூல்களிலே ஒப்புயர்வற்றதாக விளங்குகின்றது. யாழ்ப்பாணத்துப் பொன்னம்பலக் கவிராயர், மதுரை முத்துவாலை வெண்பாப்புலிக் கவிராயர் ஆகிய சம காலப் புலவர்களுடன் நட்புரிமை பாராட்டிப் பெருமை பெற்ற சீர்மையர் என்பதும் அறியக் கிடக்கின்றது.

இவரைத் தொடர்ந்து கவிதை மூலம் இலக்கியத் தொண்டாற்றிய முஸ்லிம் கவிஞர்களுடைய பட்டியலை இரசிகமணி அவர்கள் வருமாறு தொகுத்துள்ளார்:

‘முஸ்லிம் புலவர்களது இலக்கிய ஊற்று வற்றிவிடாது, தொடர்ச்சியாக இலக்கிய முயற்சிகள் நடைபெற்றன. குத்புநாயக நிர்யாண மான்மியம் இயற்றிய யாழ்ப்பாணம் மு. சுலைமான் லெவ்வைப் புலவர். நாலாயிரம் கவிதைகளைக் கொண்ட முகைதீன் புராணம் இயற்றிய யாழ்ப்பாணம் பதுருதீன் புலவர், சன்மார்க்க இலகு போத வினு விடை எழுதிய யாழ்ப்பாணம் மீரான் முகைதீன் புலவர், ஆரண முகமதின் காரணக்கும்மி இயற்றிய யாழ்ப்பாணம் சுல்தான் தம்பிப்பாவலர், ஞானத் திருப்புகழ் இயற்றிய அக்குறணை இஸ்மாயில் லெவ்வை, மீரான் மாலை, மெய்ஞ்ஞானத்தூது முதலியன இயற்றிய வேருவலை செய்கு முஸ்தபா ஆலிம் ஒலியுல்லாப் புலவர், மீமன் கப்பல் கும்மி முதலியன இயற்றிய திருகோணமலையைச் சேர்ந்தவரும், மதுரைச் தமிழ்ச் சங்க உறுப்பினருமான செய்கு மதார் புலவர், துற்றதுல் மபாஹிர் இயற்றிய கொழும்பு முகம்மது அசன், மங்கள வாழ்த்து இயற்றிய தெல்தொட்டை கே எஸ். முகம்மது முகைதீன். ஞானந்தரத்தினம் இயற்றிய கொழும்பு கா. அ. அப்துல் கனி சாய்பு, நாச்சியார் பதிகம் இயற்றிய நாவலப்பிட்டி அப்துற் றஹ்மான் ஆராய்ச்சியார், சன்மார்க்க வினுவிடை இயற்றிய கலகெதரை நூர்முகம்மது, மெய்ஞ்ஞான பரிபூரணக் களஞ்சியம் முதலியன இயற்றிய கண்டி சாது கா. பீர்பாவா (சூபி), கலிமாத் திறவுகோல் முதலியன இயற்றிய காத்தான்குடி எம். ஏ. ஹாமிது லெவ்வை ஆலிம், மெய்ஞ்ஞான ரத்தினவலங்காரக் கீர்த்தனம் இயற்றிய கொழும்பு ஹம்ஸா லெவ்வைப் புலவர், மின்ஹதுல் அத்பால் முதலிய அறபுத் தமிழ் நூல்கள் இயற்றிய ‘கொழும்பு ஆலிம்’ என்றழைக்கப்படும் செய்யிது முகம்மது ஹஸரத்து, நவரத்தின புராணம் இயற்றிய மூதூர் முகைதீன் பிச்சைப் புலவர், மணமங்கள மாலை இயற்றிய அட்டாளைச்சேனை அப்புதுற் றஹ்மான் லெவ்வை ஆலிம் புலவர், ஒருபாவொரு பஃது முதலியன இயற்றிய அக்கரைப்பற்று வரகவி செய்கு மதார் புலவர், ஒப்பாரி பாடிய அக்கரைப்பற்று முகமது ரூவிப் புலவர், கைப்புட் பச்சிசுமாலை இயற்றிய அக்கரைப்பற்று உமர் லெவ்வைப் புலவர், ரசூல் நாமா முதலிய அறபுத் தமிழ் நூல்களியற்றிய தெல்தொட்டை, கதீப் எ. அ. ஆதம் லெவ்வை, மனோரஞ்சிதத் தெம்மாங்கு இயற்றிய ராகலை, துவான் கிச்சில் ஜப்பார், சுகிர்ந்த மெய்ஞ்ஞானக் கீர்த்தம் இயற்றிய மன்சூர் அப்துல் காதர் புலவர், முபாரக்மாலை இயற்றிய காலி சம்சுதீன் புலவர். வேதவிளக்க ஆராட்டு முகலிய அறபுத்தமிழ் நூல்கள் இயற்றிய கொழும்பு, செய்கு அப்துற் றஹ்மான் ஆலிம், துன்பம் தவிர்கரும் இன்பப் பிரார்த்தனை இயற்றிய கொழும்பு, அப்ஸலுல் உலமா பி கே. எம். அப்துல் காதிர் பாகவி, ஆசாரக் கோவை இயற்றிய கற்பிட்டி அப்துல் மஜீது புலவர், வேதாந்த விளக்கம் முதலியன இயற்றிய மாத்தளை செய்கு சுலைமானுல் காதிரி, தன்பீஹுஸ் ஸாலிகீன் இயற்றிய ஹபீபு முகம்மது ஆலிம், இறுதி உபதேசமாலை முதலியன இயற்

எமது மீலாத் வாழ்த்துக்கள்!

# யானை பீடி

தரத்தில் தன்னிகரற்று
தரணியெங்கும் புகழ்பெற்று
அனைவரும் புகைக்கும்
பீடியாக விளங்குவது
**யானை பீடியே.**

★

தெரிவு செய்யப்பட்ட புகையிலை,
சிறந்த தொழிலாளர்களின் நிபுணத்துவம்
ஆகிய அனைத்தும்
ஒருங்கே அமையப்பெற்றது.

## யானை பீடி கம்பனி

ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

தொலைபேசி: **31651**

றிய மௌலானா செய்னுல் ஆப்தீன் வலியுல்லாஹ், அரு மறைச் சிறப்பும ஆநந்தக் களிப்பும் இயற்றிய காததான குடி செய்யிது ஸக்காபு பாறுல் அலவி மௌலானா, காரண ரஞ்சித மஞ்சரி முதலிய தமிழ் நூல்களியற்றிய கொழும்பு ஹக்கீம் ம. அ. கா. அப்துற்றஹ்மான், மழைக் கவிகளும தனிப்பாடல்களும் இயற்றிய சம்மாந்துறை இஸ்மா லெவ் வைப் புலவர், நவவண்ணக் கீர்த்தனம் இயற்றிய புத்தளம் -கரைதீவு செய்கு அலாவுத்தீன் புலவர், அஸ்ரப் ஒலிக் கும்மி இயற்றிய வேருவலை அகமது லெவ்வை மரைக்கார், ஆஷிக்கு அவதார மாலை இயற்றிய ஒலுவில் தா. ம. செய்கு இப்றுஹிம் மௌலானா, உம்ததுல் இஸ்லாம் எழுதிய காத்தான்குடி முகம்மது காசிம் ஆலிம், நல்வழிக் கவிதைகள் முதலியன இயற்றிய அப்துல்லா புலவர், மழைக்காவியங்கள் பாடிய பொத்துவில் மீரா லெவ்வை, தோத்திர புஞ்சம் இயற்றிய மக்கோனா அப்துல் ஹமீது புலவர் ஆகியோர் தொண்டாற்றினார்கள்.'

இரசிகமணியின் பட்டியலைத் தொடர்ந்து வேறு சில முஸ் லிம் கவிஞர்களுடைய இலக்கியத் தொண்டினை இங்கு விசேட மாகக் குறிப்பிட வேண்டி இருக்கின்றது. அவர்களுள் ஒருவர், இன்று அரசாங்க சேவை ஆணையாளர்களுள் ஒருவராக இருக் கும் எ. எம். எ. அஸீஸ் அவர்களுடைய பாட்டனாரான சு. மு. அசனாலெப்பைப் புலவர். இவர் யாழ்ப்பாணத்திலே வசித்தவர். 'புகழ்ப்பாவணி' என்ற நூலை இயற்றிப் புகழெய்தினார்.

மாத்தறையில் வாழ்ந்த முகம்மது காசிம் புலவர் மும்மொ ழிப் பண்டிதராக விளங்கினார். இவர் ஏழு கவிதை நூல்களைத் தமிழில் இயற்றியுள்ளதுடன், அரபு இலக்கியம் ஒன்றினை 'கவிப் பரிவட்டம்' என்னும் மகுடத்தில் தமிழாக்கியுள்ளார். இவரு டைய சிங்கள மொழிப் புலமைக்கு 'ஒட்ருன்ன சக சிங்காசனய' என்ற சிங்கள நூல் சான்று பகருகின்றது.

கவிதை முயற்சிகளுக்கு, ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலப் பரிசில் பெற்ற ஒரேயொரு முஸ்லிம் கவிஞராக உயர்ந்து நிற் பவர் அப்துல் காதிர் லெப்பை. 'ரூபாயத்' என்ற அவரது கவிதை நூலே அத்தகைய மகிமைக்கு உள்ளாகியது 'இக்பால் இதயம்', 'செய்னம்பு நாச்சியார் மான்மியம்' ஆகியன இயற்றி வெளிவந்துள்ள பிற கவிதை நூல்களாகும்.

அப்துல் காதிர் லெப்பையை ஆதர்ஷ குருவாக வரித்துக் கவிதைத் தொண்டிலே ஈடுபட்டிருப்பவர் எம். சி. எம். சுபைர் ஆவர். இவர் 'குறிஞ்சிக் குயில்' என்ற புனைபெயரிலும் கவிதை கள் புனைவார். 'மலர்ந்த வாழ்வு' என்னும் சிறுகாவியத்தை நூலுருவில் தந்துள்ளார். இப்பொழுது இவர் சிறுவருக்கான அபிநயப் பாடல்கள் இயற்றுவதில் முழுக் கவனத்தையும் செலுத்தி வருவதாகத் தோன்றுகின்றது. இதன் பயனாக 'மலரும் மண மும்' என்ற நல்ல கவிதை நூலொன்றைத் தந்துள்ளார்.

பாரதி சாகாப்தத்தின் பாதிப்பினாலும், இலக்கிய நெறியி னாலும் உந்தப்பட்டு சாலிஹ் என்னும் பெயர்படைத்த இருவர்

கவிதைத் துறைக்கு வந்தார்கள். ஏறுவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட எம். எம். சாலிஹ் 'புரட்சிக்கமால்' என்ற புனை பெயரைப் பூண்டு கவிதைகள் புனைந்தார். அவருடைய கவிதைகள் அடங்கிய 'புரட்சிக் கமால் கவிதைகள்' என்னும் நூல் வெளிவந்துள்ளது. தமிழார்வம்-சீர்திருத்தம் ஆகியன இவருடைய கவிதைகளுக்கு உயிர்ப்பொருளாக அமைந்தன.

பெரிய கிண்ணியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட எம். எஸ். எம். சாலிஹ், 'அண்ணல்' என்னும் புனைபெயர் பூண்டு கவிதைகள் இயற்றினர். அவருடைய கவிதைகள் சில தொகுக்கப் பெற்று 'அண்ணல் கவிதைகள்' என்னும் நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது. இவர் பல்வகைத்தான பொருள்களைப் பற்றிக் கவிதை புனைந்திருந்தாலும், ஓசை நயமும்—உணர்ச்சியும் மிக்க காதல் கவிதைகள் புனைந்து, 'காதற் கவிதைகளுக்கு இவன் ஒருவன்' எனப் புகழ் பெற்றார். இப்பொழுது, இவர் தமது கவிதையின் போக்குகளை மாற்றி, தத்துவக் கவிதைகள் இயற்றுவதில் நாட்டங் கொண்டுழைத்து வருவதாகத் தெரிகின்றது.

'கள்ளத் தோணிக்குத் தீர்ப்பு' என்னும் நூலைத் தந்த விடத்தல்தீவு முகம்மது காசீம் ஒரு காலத்தில் நல்ல கவிதைகளை எழுதினர். இசையுடன் பாடுவதற்கு ஏற்ற பாடல்கள் அடங்கிய 'இசைத் தேன்' என்னும் நூலை வெளியிட்டுக் கவிஞர் வரிசையில் இடம் பெற்றார். நாவலப்பிட்டியிலிருந்து மார்க்க பக்தியுடன் நல்ல கவிதைகளை 'வழுத்தூர் ஒளியேந்தி' என்பவர் இயற்றிக் கொண்டிருந்தார். பதுளையை வசிப்பிடமாகக் கொண்ட கவிஞர் சாரணாகையும் குழந்தை இலக்கியத் துறையிலும் ஈடுபாடுடையவர் என்பதற்குச் சான்றாக 'குழந்தை இலக்கியம்' என்னும் கவிதை நூலை வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்புப் பகுதியை நினைத்ததும் பாடும் மீனைப் பற்றிய நினைவு வருதல் தவிர்க்க முடியாததாகும். அத்துடன், அப்பகுதியிலே பொலிந்துள்ள நாட்டார் பாடல்களும் நினைவுக்கு வருதல் தவிர்க்க முடியாததாகும். மழைக்குக்கூடப் பாடசாலையில் ஒதுங்காத, முக்காட்டுடன் வாழும் முஸ்லிம் பெண்கள், புலவர்களைக்கூட ஆச்சரியத்தில் மூழ்கடிக்கும் வகையில் கவிதை புனைய வல்லவர்களாம். இதனை இயற்கையின் கொடை என்றே கூறுதல் வேண்டும். எனவே, இப்பகுதியிலே பெருந்தொகையான முஸ்லிம் கவிஞர்கள் தோன்றுதல் மிக இயல்பானதாகும்.

பொத்துவில் எம். ஏ. கபூர் 'யுவன்' என்னும் புனைபெயர் பூண்டு கதை—கவிதை ஆகிய இரு துறைகளிலும் ஈடுபாடு கொண்டு எழுதினர்; எழுதுகின்றார். இருப்பினும், கவிதைத் துறையிலேதான் 'யுவன்' சிறந்த இடத்தைப் பெற்றுள்ளார். இவருடைய கவிதையின் உயிர் உணர்ச்சியாகும். இலங்கை வானொலி நடத்திய கவியரங்கம் ஒன்றில், 'பாட்டுத் திறத்தாலே... ' என்ற தலைப்பிலே பாடி மற்றய கவிஞர்களுடைய பாராட்டுதலையும் பெற்றார்.

சம்மான்துறை யக்கீர்த்தம்பி 'ஈழமேகம்' என்ற புனைப் பெயரில் நீண்ட காலமாகக் கவிதைகள் புனைந்து வருகின்றார்.

Meelad Greetings

★

Smoke Always

**SAHIDAN BEEDIES &**

**S. J. SPECIAL BEEDIES**

# SAHIDAN STORES,

15, STEUART STREET,

**COLOMBO-2.**



நல்ல கோழிகள் —

வான் கோழிகள் —

கின்னிக் கோழிகள்

சகாய விலைக்குக் கிடைக்கும்.

கொழும்பில் கோழி வியாபாரத்தில்
முதன்மையும் சிறப்பும் பெற்றவர்கள்

**யூசுப் அன் சன்ஸ்**

6 , சென்ட் ஜோன்ஸ் வீதி,

கொழும்பு-11.

தொலைபேசி: **26358**

கோழி வியாபாரிகள் நல்ல விலை பெற
வேண்டுமானால் நம்மிடம்
தொடர்பு கொள்ளலாம்.

எமது வாடிக்கையாளருக்கும், அபிமானி
களுக்கும் மீலாத் வாழ்த்துக்கள்!

★

# தங்க மாளிகை

*69, கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்*

Cable: **Jewellers** Dial: **281**

# GOLD HOUSE

JAFFNA

எப்பொழுதும் சுதேச உற்பத்தியாளரான
எம்மை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்



ஆரம்ப காலத்தில், வெறும் எதுகை மோனைக்காகவே இயற்றப்பட்டன போன்று இவருடைய கவிதைகள் விளங்கின. மிக சமீப காலத்தில் இவருடைய கவிதைகள் மெருகுடன் திகழ்வது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

எம். ஏ. நுஃமான், மருதூர்க்கனி, மருதூர்க்கையாம், மருதூர்க் கொத்தன், அன்பு முகைதீன், யூ. எல். ஏ. மஜீத் ஆகிய ஆறு இளம் முஸ்லிம் கவிஞர்கள் ஏறத்தாழச் சம காலத்திலேயே கவிதைத் துறைக்குள் நுழைந்தவர்கள். ஒரே சூழலில் வசிப்பவர்கள். எம். ஏ. நுஃமானைத் தவிர்ந்த ஏனைய கவிஞர்களுடைய கவிதைகளைத் தற்போதைக்கு மதிப்பீடு செய்வது முறையன்று. அவர்கள் இப்பொழுதுதான் வளர்ந்து வருகின்றார்கள் அவர்களுள் ஒரிருவராவது நல்ல கவிஞர்களாக மலருதல். சாத்தியமானதே.

எம். ஏ. நுஃமான் வெகுவேகமாக வளர்ந்து, ஈழத்துக்கவிஞர் வரிசையில் தமக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளார். கற்பனை வளம், இலேசான நகைச் சுவை ஆகியன இவருடைய கவிதைகளிற் சிறப்பாக அமைந்துள்ளன. இவர் ஈழத்தின் மூத்த கவிஞரான 'மஹாகவி'யை குருவாக வரித்து, ஏகலைவன் நோன்புடன் கவிதை இயற்றுவதாகத் தெரிகின்றது. ஈழத்துக் கவிதா வளத்தைச் சுவைஞர்கள் தக்கபடி நுகருதல் வேண்டும் என்பதை மனத்திற் கொண்டு 'கவிஞன்' என்னும் பத்திரிகையைப் பிரசுரித்து வருகின்றார். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மலரும் 'கவிஞன்' என்ற சஞ்சிகை முயற்சி நிரம்பிய நம்பிக்கையைத் தருகின்றது.

அக்கரைப்பற்று ஏ. இக்பால், சம்மான்துறை பஸீல் ஏ காரியப்பர் ஆகிய இளங்கவிஞர் இருவர், விளக்கமில்லாத சில இலக்கியக் கருத்துக்களைக் காமித்து, 'வசன கவிதை' இயற்றுவதில் ஈடுபாடு காட்டி வந்தார்கள். இவர்களுடைய 'கவிதைகள்' கவிதைகளேயல்ல என்பது என் அபிப்பிராயமாகும்.

ஏறாவூர் யூசுப் (அவைவேந்து), காத்தான்குடி மருதமைந்தன் ஆகிய கவிஞர் இருவரும் மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள கவிதைகளை இயற்றியுள்ளார்கள். கவிஞனின் தரத்தை நிர்ணயிப்பது எண்ணிக்கையல்ல என்ற போதிலும், சில தரம் மிக்க கவிதைகளை ஆக்கித் தந்துள்ள இவ்விருவரும், மேலும் பல கவிதைகள் புனைய முன்வருதல் விரும்பத்தக்கது. மற்றும் நாகூர் ஏ. பாவா, பொத்துவில் மு. ஆதம் லெப்பை ஆகியோரும் கவிதைத் துறையிலே ஆர்வங் காட்டும் இளம் கவிஞர்களாகத் திகழ்கின்றார்கள்.

ஈழத்து முஸ்லிம் இளங்கவிஞர்கள் பொதுவாக ஆற்றல் மிக்கவர்கள்; ஆர்வம் மிக்கவர்கள். இவர்கள் எதிர்காலத்தில் நல்ல கவிதை நூல்களைத் தந்து ஈழத்துக் கவிதா சோலையை மணமூட்டுவார்கள் என்ற நம்பிக்கையைத் தருகின்றார்கள்.

# ஈழத்து முஸ்லிம் பத்திரிகையாளர்

—ரகுராமன்

இச் சிறு கட்டுரையிலே, ஈழத்து முஸ்லிம் பத்திரிகையாளருடைய இலக்கியப் பங்களிப்பினை விரிவாக விமர்சனஞ் செய்து மதிப்பிடுவதை நான் புத்தி பூர்வமாகத் தவிர்த்துக் கொள்ள விரும்புகின்றேன். ஏனெனில், இதற்கான காரணிகள் பல. 'கல்கி' தென்னகத்துப் பத்திரிகையாளராக இருந்த அதே சமயத்தில், சக்தி மிக்க எழுத்தாளராகவும், இலக்கியச் சுவைஞராகவும் விளங்கினர். இதனுல், தமிழருடைய வாசிப்புப் பழக்கத்தினை அவர் மாற்றியமைத்தார். இஃது அற்புதமானதோர் இலக்கியச் சாதனையாகும் அவர் கருவியாகவும், கர்த்தாவாகவும் ஏக காலத்தில் விளங்கினர். பேனுவின் சக்தியில் நம்பிக்கை வைத்து எழுத்தாளராகவே பத்திராதிபர் பீடத்தில் அமர்ந்தார். எனவே, அவருடைய வெற்றி - தோல்விகளை விமர்சன ரீதியில் மதிப்பீடு செய்தல் வித்துவஞ் சார்ந்த இலக்கிய விசாரணையாகும். அஃது இன்பந் தர வல்லது. ஈழத்தில், இன்று அதிகம் விற்பனையாகும் பத்திரிகைகளின் ஆசிரியர் பீடங்களை அலங்கரிப்பவர்கள் கூட கத்திரிக்கையை நம்பி வாழ்கின்ருர்கள். பிறமொழிகளிலே வரும் செய்திகள்-படங்கள்-துணுக்குகள் ஆகியவற்றைக் கத்திரிக்கையால் வெட்டி, உரிய 'சிதைவுகள்' செய்வித்து. அதனைத் தமிழாக்கம் என நம்பி, பத்திரிகைகள் நடத்துகிருர்கள்! இவர்கள் வெறும் கருவிகள்; கர்த்தாக்கள் நிலைக்கு உயர முடிவதில்லை. இதனுல், ஆற்றல் மிகுந்த இலக்கிய கர்த்தாக்களுக்கு உரிய இடமும் மதிப்பும் கொடுக்கத் தவறுகிருர்கள். இத்தகைய பத்திரிகையாளருடைய இலக்கியத் தொண்டினை விமர்சன ரீதியில் மதிப்பீடு செய்தல் முடியாதல்லவா? உண்மை இவ்வாறு தெளிவாக இருக்க, முஸ்லிம் பத்திரிகையாளருடைய இலக்கியத் தொண்டினை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்யலாம் என முனைதல், என்னையும் உங்களையும் ஏமாற்றும் காரியமாகவே அமையும். இருப்பினும், முஸ்லிம் பத்திரிகையாளரைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர்களுடைய சேவையைக் கோடி காட்டுதல் தவிர்க்க முடியாததாகும். இந்த உபாயத்தினை மேற்படி பத்திரிகையாளரை இனங்காணுவதற்காகக் கையாள வேண்டியிருக்கின்றது. இந்த உண்மையின் தளத்தில் நின்று இக்கட்டுரையை வாசிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பத்திரிகையாளர் என்ற ஓர் இனம் அச்சரக்கன் தோற்றுவித்த விபத்தின் அறுவடை எனக் கூறலாம் இலங்கைக்கு கிறிஸ்

தவ மிஷனரிமாரே முதன் முதலில் அச்சு இயந்திரங்களைக் கொண்டு வந்தார்கள். எனவே, அவர்கள் மத்தியிலேதான் ஆரம்பகாலப் பத்திரிகையாளார் தோன்றுதல் இயல்பாக அமைந்தது. தமிழர்களை மிஷனரிமார் மதம் மாற்றிய பொழுது, இதனைத் தடுத்து நிறுத்தி, சைவத்தின் மேன்மையை நிலை நாட்ட வேண்டுமென்ற எழுச்சி இந்துக்கள் மத்தியிலே தோன்றியது. கிறிஸ்தவர்கள் கையாண்ட பிரசார கருவிகளையே இந்துக்களும் கையாளத் தலைப்பட்டனர். எனவே, அவர்கள் மத்தியிலும் பத்திரிகையாளர் தோன்றலாயினர். முஸ்லிம்கள் மத மாற்ற வாதப் பிரதிவாதங்களுக்கிடையிலே சிக்கிக் சொள்ள வில்லை. இருப்பினும்கூட, ஈழத்துப் பத்திரிகையாளர் இனத்திற்குப் பல துறைகளிலே முஸ்லிம் பத்திராபதிபர் முன்னோடிகளாக அமர்ந்தனர் என்பது வரலாற்று உண்மையாகும். ஈழத்தில் இன்று ஆறு தமிழ்த் தினசரிகள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. இவற்றுள் வயதால் மூத்தது 'வீரகேசரி'யே. அது கடந்த 38 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக ஈழத்தில் வெளியான முதலாவது தமிழ்த் தினசரி 'வீரகேசரி'யே என்ற பிழையான தகவலைப் பலர் நிசமென நம்பிக் கொண்டிருக்கிறார்கள். வீரகேசரி வெளிவருவதற்கும் சுமார் நாற்பது ஆண்களுக்கு முன்னர், அதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தமிழ்த் தினசரி ஒன்றினை வெளியிட்ட பெருமை முஸ்லிம் பத்திரிகையாளருக்கு உண்டு.

ஈழத்தில் வெளியான முதல் தினசரியின் பெயர் 'இஸ்லாம் மித்திரன்' என்பதாகும். இது 1893-ஆம் ஆண்டில் வெளியாயிற்று. இதன் தாபக ஆசிரியர் எல். எம். உதுமான் அவர்களாவர். நீண்ட காலத்திற்கு 'இஸ்லாம் மித்திரன்' தினசரியாக வெளிவரவில்லை. 1947 இல் வெளியான சுதந்திரன் என்னும் தினசரி, சீக்கிரமே வார சஞ்சிகையாக மாறியது போலவே, 'இஸ்லாம் மித்திரன்' வார சஞ்சிகையாக வெளிவரத் தொடங்கிற்று. சுமார் நாற்பது நீண்ட ஆண்டுகள் எல். எம். உதுமான் பத்திரிகையாளராகப் பணி புரிந்து, 1932-ஆம் ஆண்டிற் காலமானார். அவருடைய மரணத்துடன் 'இஸ்லாம் மித்திரன்' நின்று விடவில்லை.

உதுமான் அவர்களுடைய புத்திரர்களான சுக்ரி, ரஸீன் ஆகிய இருவரும் பத்திரிகையாளர் பொறுப்புக்களை ஏற்று 'இஸ்லாம் மித்திரன்' என்ற சஞ்சிகையை 1915-ஆம் ஆண்டு வரையிலும் நடத்தினார்கள். இவர்களிருவரும் பிறிதொரு புதுமையைப் பத்திரிகை உலகில் இயற்றிக் காட்டினார்கள். 'ஒரு சதத்திற்கு ஒரு பத்திரிகை' என்ற கொள்கையைச் செயலாக்க, 'முஸ்லிம்' என்ற பத்திரிகையையும் வெளியிட்டார்கள். 'முஸ்லிம்' என்ற பத்திரிகை ஆங்கில மொழியிலே பிரசுரிக்கப்பட்டது என்பது கவனத்திற்குரியது.

இத்தனையையும் உதுமானும், அவர்தம் புத்திரர்களும் சாதனையாக்கிக் காட்டிய போதிலும், ஈழத்து முஸ்லிம் பத்திரிகையாளரின் தலைமகன் கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட

எமது

வாடிக்கையாளர்களுக்கும்

அபிமானிகளுக்கும்

மீலாத் வாழ்த்துக்கள்!

சிறந்த புகையின்பம் பருக

# சிங்கர் பீடி

# சுஹரா பீடி

புகையுங்கள்!

தயாரிப்பாளர்:

## சிங்கர் பீடி கம்பெனி,

கெக்குன கொல்ல,

அலஹிடியாவ.

முகமது காசிம் சித்திலெப்பை என்பது மறப்பதற்கில்லை. இவர் தொழிலால் நியாயதுரந்தரர்; ஊழியத்தால் சமூக சேவையாளர். இவர் 1883 இல் வெளியிட்ட 'முஸ்லிம் நேசன்' என்ற பத்திரிகையே ஈழத்தில் வெளியான முதலாவது முஸ்லிம் பத்திரிகையாகும். இலக்கியத்திற்கு அப்பாற்பட்ட சமுதாய நலன் கருதியே பத்திரிகையை நடத்தினர். தமது கருத்தினை முஸ்லிம்கள் இலகுவில் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக இவர் அரபுச் சொற்களையும், பேச்சு வழக்குகளையும் தாராளமாகக் கையாண்டார்.

'முஸ்லிம் நேசன்' வெளிவருவது 1945-இல் தடைபட்டது. பத்திரிகையுலகிலே செய்யப்பட்ட இத்தனை சாதனைக்கும் சான்ருக இன்றும் குமாரவீதியிலே 'இஸ்லாம் மித்திரன்' அச்சகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. முஸ்லிம்களுக்கு என்று ஒரு பத்திரிகை தேவை என்பதை மனத்திற் கொண்டு மறு ஆண்டிலேயே, அதாவது 1946 இல், 'இஸ்லாமிய தாரகை' என்ற வார சஞ்சிகை வெளிவரலாயிற்று. ஈழத்து முஸ்லிம் எழுத்தாளர் மத்தியிலே இது புதிய விழிப்புணர்ச்சியையும், மறுமலர்ச்சிப் போக்கினையும் உருவாக்கியது. கே. எம். முகம்மது சாலிஹ், ஒ. கே. மொஹிதீன் ஆகிய இருவரும் ஆசிரியர்களாக அமர்ந்து இதனை நடத்தினர்கள். ஒரு கட்டத்தில். வாராவாரம் இப்பத்திரிகையின் இருபதினுயிரம் பிரதிகள் விற்பனையாகியதாகச் சொல்லப்படுகின்றது. இதிலிருந்து இப்பத்திரிகை அடைந்திருந்த செல்வாக்கினை ஊகித்துக் கொள்ளலாம். ஆனல், இப்பத்திரிகை ஐந்து ஆண்டுகளில் இயற்கை எய்தியது. 'இஸ்லாமிய தாரகை' நின்ற பின்னரும், பத்திரிகையாளரான சாலிஹ் சோம்பிக் கிடக்கவில்லை. அவர் பெரிதும் முயன்று 1953-ஆம் ஆண்டிலிருந்து 'தாரகை'யை வெளியிடத் தொடங்கினர். இப்பத்திரிகை பிற்கால எழுத்தாளர் பலரை உருவாக்கிய பண்ணையாகத் திகழ்ந்தது.

'தாரகை' என்னும் பத்திரிகையுடன் தொடர்பு கொண்ட எச். எம். பி. முஹிதீன் அரசியல் விமர்சனக் கட்டுரைகளை எழுதவல்ல பத்திரிகையாளராகத் தேறினர். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தியோக ரீதியான தமிழ் வாராந்திரியாக வெளிவரும் 'தேசாபிமானி'யின் ஆசிரியராகப் பல காலம் தொண்டாற்றினர். கம்யூனிஸ்ட் கட்சி மாஸ்கோ சார்பு-சீனச் சார்பு என இரண்டாகப் பிளவு பட்டதும், சீனச் சார்புக் குழுவினரின் பத்திரிகையான 'தொழிலாளி'யின் ஆசிரியராகப் பணியாற்றினர். இப்பொழுது கட்சி அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் போலத் தோன்றுகின்றது.

தாரகையுடன் தொடர்பு கொண்ட பிறிதொரு பத்திரிகையாளரான டி. எம். பீர் முகம்மது மலையகத்திலிருந்து காலத்திற்குக் காலம் வெளியான சஞ்சிகை சிலவற்றிலே பத்திரிகையாளராகக் கடமையாற்றியுள்ளார். மற்றும் எம். எச். எம். இப்ருஹிம் 'சுதந்திரன்', 'வீரகேசரி' ஆகிய பத்திரிகைகளிலேயும் உதவி ஆசிரியராகப் பத்திரிகையாளராகப் பணியாற்

றினர். 'லங்கா ஜோதி' என்ற பத்திரிகையின் ஆசிரியராக அமர்ந்து சில காலம் எஸ். எம். மொஹிதீன் பத்திரிகையாளராகப் பணி புரிந்தார்.

ஏ. எல். எம். கியாஸ், எம். கே. எம் அபூபக்கர், செயினுல் ஹுசைன், ஏ. எச். அபூஉபைதா, எஸ். எம். ஹனீபா ஆகியோர் தினகரன் பத்திரிகையிலே கடமையாற்றிப் பத்திரிகையாளராக உயர்ந்தனர். இவர்கள் ஐவரும் பண்பட்ட கட்டுரையாளராகவும் விளங்குகின்றார்கள்.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் காலமான அல்ஹாஜ் வி. எம் ஷம்சுத்தீன் பழம்பெரும் பத்திரிகையாளராவர். சுப்பிரமணிய பாரதியாருடன் நேரில் பழகும் வாய்ப்புப் பெற்ற தகைமையாளர். அவருடைய இலக்கியப் பற்றினைப் பாராட்டும் முகமாக, சென்னையிலிருந்து வெளிவரும் 'முஸ்லிம் முரசு' சில காலம் இவருடைய பெயரைக் கௌரவ ஆசிரியராகப் பொறித்து மகிழ்ந்தது.

இன்றும் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டு சமூகப் பணி இயற்றும் அன்பர் பூபதிதாஸர் ஞானக்கடல் என்ற பத்திரிகையை நடத்தினர். பின்னர் வீரகேசரியிலே வெளியான 'இஸ்லாமிய உலக மலர்' என்ற பகுதியை, ஆசிரியராக அமர்ந்து வெளியிட்டார்.

முஸ்லிம் மக்கள் மத்தியிலே விற்பனையைப் பெருக்க வேண்டும், இஸ்லாமியப் பண்டிகை சமயங்களிலே முஸ்லிம் வர்த்தகருடைய விளம்பரங்கள் பெறல் வேண்டும் என்பதற்காக, தமிழ்த் தினசரிகளிலே வெளியாகும் 'இஸ்லாமிய பூங்கா', 'முஸ்லிம் சுடர்' ஆகிய பகுதிகளுக்குப் பொறுப்பாக இருப்பவர்களைப் பத்திரிகையாளர் வரிசையிலே சேர்க்க என் மனச்சாட்சி ஒப்பவில்லை.

ஆங்கில மொழி மூலம் பத்திரிகையாளராக உழைத்தவர்களும் - உழைப்பவர்களும் இருக்கிறார்கள். தமிழ்ப் பத்திரிகையாளராக வாழ்ந்த முஸ்லிம்கள் என்பதை இக்கட்டுரை எல்லையாகக் கொண்டிருப்பதால், இவர்களைப் பற்றி ஈண்டு பிரஸ்தாபிப்பதைத் தவிர்க்கின்றேன்.

தென்னகத்தில் 'பால்யன்' என்ற பத்திரிகை நடத்திய ஹனிபா ஈழத்திலிருந்த காலத்தில் நவயுகம் என்ற சஞ்சிகையையும், அவ்வாறே வி நூர் முகம்மது என்பவர் தோழன் என்ற சஞ்சிகையையும் வெளியிட்டார்கள். "'தோழன்' இலக்கியத் தரமுள்ள பத்திரிகையாக மாதந்தோறும் வெளிவந்தது" என இலக்கியச் சுவைஞர்கள் பாராட்டத்தக்க வகையில் அமைந்தது.

'அருள் ஜோதி'யை எம். ஏ. சி. ஜெயிலானியும், 'தீனுல் இஸ்லா'மை மௌலவி எம். கே. எம். மன்சூர் நூரியும், 'நேர்

வழி'யை மௌலவி எம். ஐ. அப்துல் ஹமீது நூரியும், 'சமுதாய'த்தை எஸ். எம். ஹனீபாவும் சில காலம் மாதப் பத்திரிகைகளாக வெளியிட்டுப் பத்திரிகையாளராயினர்.

மாணுக்கருக்கான பத்திரிகைகளான 'மாணவ முரசு', 'மணிக்குரல்', 'மாணவன் குரல்' ஆகிய சிறிய மாத சஞ்சிகைகளை முறையே எம். எம். ஹனிபா, எம். ஸி. எம்.சுபைர், எம். பி. எம். மாஹிர் ஆகியோர் காலத்திற்குக் காலம் வெளியிட்டுப் பத்திரிகையாளர் வரிசையிலே சேர்ந்தார்கள்.

எம். எம். மக்கீன், ஏ. எச். எம். அஸ்வர் ஆகிய இருவரும் தாங்களும் பத்திரிகையாளர் என்ற நினைப்பிலே தங்களையும், முஸ்லிம் சமுதாயத்தையும் ஏமாற்றி வருகின்றார்கள். முன்னவர் சினிமாத் துணுக்குகளைச் சேகரித்து, அவற்றைப் பிரசுரிப்பதே 'அரிய இலக்கிய'த் தொண்டு எனக் காலங் கடத்தி வருகின்றார். பின்னர், குறிப்பிட்ட அரசியல்வாதிகளுக்குக் கூஜா தூக்கி, அவர்களைப் பற்றிய செய்திகளை வெளிவரச் செய்து, 'கொமிஷன்' பெறுவதையே பத்திரிகையாளர் பணி என நினைக்கிறார் போலும். இத்தகைய 'பத்திரிகையாளர்' முஸ்லிம் இனத்தில் 'அவதரி'க்காமல் இருப்பதே சேமமான காரியமாகத் தோன்றுகின்றது.


மீலாத் வாழ்த்துக்கள்!

டி. கே. எம். ஸ்பெஷல்
பீடிகள் உற்சாகத்திற்கும்
ஊக்கத்திற்கும் சிறந்தவை!

இன்றே புகைத்து மகிழுங்கள்!

டி. கே. எம். பீடி கம்பெனி,
199, மெயின் வீதி,
மாவனல்லை.

Best wishes to
Ilampirai

from
The Manufacturers of
**ROSE BRAND**
SWEETS & TOFFIES

With the best Compliments
of

**ROTARY PRINTING SERVICE CO.**
44, General's Lake Road,
**COLOMBO-2.**

தரமான இலக்கிய விடயங்களைத் தாங்கி மாதப்பத்திரிகை ஒன்றினை வெளியிடல் வேண்டுமென்ற எழுச்சியின் காரணமாக இளங்கீரன் 'மரகதம்' என்ற மாசிகையைத் தொடங்கினார். மரகதம் முஸ்லிம் நலனுக்காக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையல்ல. ஆனால், இளங்கீரன் முஸ்லிம் என்றபடியால், அவர் சார்ந்த கொள்கைகளையும் ஆராயாது, முஸ்லிம் மக்கள் நல்கிய ஆதரவு அவரை மலைப்பிற்குள்ளாக்கியது. முஸ்லிம்களுக்காகவும் ஏதாவது பகுதிகள் சேர்க்கப்படல் வேண்டுமென்ற அவதிக்குள்ளாக்கப்பட்டார். அரசியல் - இனம் என்ற போராட்டத்தின் விரக்தியினாலும், 'சந்தாபலம்-வாசகர் கூட்டம்-எழுத்தாளர் உதவி' ஆகியனவற்றின் தளத்திலே நிறுவப்பட்டதாக முரசறையப்பட்ட 'மரகதம்' ஆறு மாதங்களுக்கிடையில் மாண்டது. பின்னர், சில காலம் சீனச்சாப்பு வாராந்திரியான 'தொழிலாளி' யின் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

ஸைபுல்லா ஹுஸைன் பத்திரிகையாளராக அமர்ந்து அல் மதினா என்ற மாசிகையை வெளியிட்டார். இதுவும் சுமார் ஓர் ஆண்டு காலத்திற்குத்தான் வெளியாகிக் கொண்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியலை முஸ்லிம்கள் மத்தியிலே பரப்புவதற்காக ஏ. எம். நஸீர் 'ஜிஹாத்' என்ற வாரப் பத்திரிகையை வெளியிட்டார். சில மாதங்களுக்குள் அப்பத்திரிகை இயற்கை எய்தியது. அதே கால கட்டத்தில், கூட்டாட்சிக் கட்சிகளின் அரசியலைப் பிரசாரம் செய்வதற்கு வெளியான இன்ஸான் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. அதனை நடாத்தும் பத்திரிகையாளர் எம். எஸ். எம். வதூத் ஆவர். மனிதனை மனிதனாக நேசிக்க வேண்டும் என்ற ஒரு போக்கினை இளைஞர் மத்தியிலே பரப்பிக் கொண்டிருக்கும் இப்பத்திரிகையில் அவ்வப்போது இலக்கிய நயமான அம்சங்களும் பிரசுரமாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. 'உரிமைக் குரல்' என்ற மாசிகை கடந்த நான்கு ஆண்டு காலமாக மஜ்லிஸே இஸ்லாமி பிரசுர சபையினால் வெளியிடப்படுகின்றது. இதனை நடாத்தும் பத்திரிகையாளருடைய விபரம் தெரியவில்லை. கவிஞன் என்னும் காலாட்டைச் சஞ்சிகையின் முதலாவது இதழை வெளியிட்டதின் மூலம் எம். ஏ. நுஃமானும் பத்திரிகையாளர் வரிசையிலே சேர்ந்துள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டு காலமாக 'இளம்பிறை' என்னும் தரமான மாசிகையை எம். ஏ. ரஹ்மான் நிர்வாக ஆசிரியராக அமர்ந்து வெளியிட்டு வருகின்றார். கொல்லன் தெருவில் ஊசி விற்கும் அலுவலில் நான் இறங்க விரும்பவில்லை. 'இளம்பிறை' யின் அமைப்பு-தரம் முதலியன பற்றியும், அதனை வெளியிடும் பத்திரிகையாளரான ரஹ்மானின் கலை-இலக்கியப் பணிகள் பற்றியும் வாசகராகிய நீங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கிடையில் உரிய முறையில் மதிப்பீடு செய்திருப்பீர்களென்பது என் நம்பிக்கை. இஸ்லாமியரின் இலக்கிய முயற்சிகளின் இன்றைய கலங்கரை விளக்கம் இளம்பிறையே என்பது எனது தெளிவான அபிப்பிராயமாகும்.



இளம்பிறையின் ஆசிரியர் தலையங் கங்களைப் படிக்கும் பொழுது உண்மையான சமூகாபிமானத்தையும், தேசப்பற்றையும், நடுநிலைமாருத சத்தியப் போக்கையும், எந்தச்சக்திக்கும் அஞ்சித் தலை குனியாத உறுதியான நிலையையும் கண்டு களிபேரு வகை யடைகிறேன்.

'உண்மை சுடும்' என்ற தலையங்கத்தில் நீங்கள் தீட்டியிருந்த கருத்துக்கள் வரவேற் கத்தக்கன. மாபெரும் சாம்ராச்சிய மொன் றையும் உருவாக்கிய முஸ்லிம் சமூகம் இருள் மயமானதற்குக் காரணம் முஸ்லிம் தலைவர்கள் மனச்சாட்சிக்கு ஒவ்வாமல் நடந்ததேயாகும். இஸ்லாமிய சமூகத்தைச் சுய நலத்துக்காகப் பலியிட்ட அன்றைய சுரண்டற் பேர்வளி களுக்கும், ஜனுப் அஸ்வர் போன்ற இன்றைய சமூகத் துரோகிகளுக்கும் வித்தியாசமே இல்லை. இன்றைய இஸ்லாமிய உலகம் மறுமலர்ச்சிப் பாதையில் செல்ல, உங்களைப்போன்ற எஃகு இதயம் வாய்ந்தவர்களின் எழுதுகோலே போதுமானது.

*10, கொஸல ஒழுங்கை,*
*கொழும்பு-11*


ஏ. எம். மொயீன்
பிரதான காரியதரி,
**அகில இலங்கை முஸ்லீம் மாணவ - ஆசிரியர் சங்கம்.**

---

ஐயா,

தெளிவு - சத்தியம் - துணிவு ஆகியவற்றை எங்கே பெறலாம் என்பதை அறியத் தருவீர்களா? 'இளம்பிறை' ஆசிரியரிடம் இருக்கும் இந்தப் பண்புகள் வேறு சில 'பெரிய' பத்திரிகை ஆசிரியருக்கு இல்லையே என்பதி ஞல் கேட்டேன். அஸ்வர் பற்றிய இரு செய்திகளும் எழுத்து வன்மைக்கு மாணிக்கம். அஸ்வரின் படத்தைச் சுற்றி சிவப்பு மை அடித்திருந்தால் வடிவாகவும், பொருத்தமானதாகவும் இருந்திருக்கும். 'டேன்ஜ'ரைக் காட்டும் நிறம் சிவப்பல்லவா?

**வி. நடராஜன்**



---

சொல்லே உருவாகிச் சோதியொளி வீசிடுவான்
வில்லே இளம்பிறையைக் கண்டனையோ — வல்லே
வருமோ உளங் குளிர்ந்து வாழ்த்துரைக்க — நாமே
தருமோ தரிசனமும் தான்.

**ஜே. எம். எம். அப்துல் காதிர்**

# காலிப் நூற்றாண்டு

## ஒரு மலர் வளையம்



இயற் பெயர்:
**மிர்ஸா அசதுல்லாஹ்கான்**

பிறப்பிடம்:
**ஆக்ரா**

பிறந்த நாள்:
**27-12-1797**

திருமணம்:
**1810**

துணைவி பெயர்:
**உம்ரா பேகம்**

கவிப் பெயர்கள்:
**'அஸத்'**
**'காலிப்'**

மரணம்:
**15-2-1869**

இவ்வாண்டின் பிப்ரவரி மாதம முதல் ஓராண்டு காலத்திற்கு காலிப் நூற்றாண்டு விழா இந்தியாவிலும், உலக நாடுகள் பலவற்றிலும் கொண்டாடப் படுகின்றது. மஹாகவி காலிப் இந்தோ-பாரசீக இலக்கிய மரபுகளின் கடைசிக் கொழுந்து-தலைமைக் கவிஞன்.

பொருட்காட்சிகள், கருத்தரங்குகள். நடன நாடகங்கள், முஷாயிருக்கள் ஆகியன அவர் நினைவாக நடத்தப்படுகின்றது.

இந்திய நாட்டில் மட்டுமல்ல, ஐக்கிய அமெரிக்கா, ருஷியா, இங்கிலாந்து, இத்தாலி, செக்கோஸ்லோவாக்கியா, ஈரான், ஆப்கானிஸதான் முதலிய நாடுகளிலும் மஹாகவி காலிப் பற்றிய சர்வதேசக கருத்தரங்கங்களும் நடைபெற இருக்கின்றன. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபைக் கல்வித்தாபனம் காலிப்பினுடைய தேர்ந்தெடுத்த இலக்கியப் படைப்புகளை ஒரு நூலாகப் பிரசுரிக்கின்றது.

இத்தகைய புகழ் படைத்த மஹாகவி காலிப்பின் நூற்றாண்டு விழா நினைவாக 'அல்ஹிலால்' எழுதிய 'காலிப்; கவிவளம்' என்ற கட்டுரையை இங்கு பிரசுரிக்கின்றோம்.

# கமலம்ஸ்

சரக்காணைப் பிரதிநிதிகள் உற்பத்தியாளர்கள் பிரதிநிதிகள்
இறக்குமதி ஏற்றுமதியாளர்கள்

卐 புகழ்பெற்ற கமலா பீடிகள்
卐 குட்மோணிங் தேயிலை
卐 கமலம்ஸ் தேயிலை
卐 கமலம்ஸ் சீஸ்
卐 கமலம்ஸ் கொக்கோ
卐 கமலம்ஸ் காப்பி

ஆகியவற்றின் விநியோகஸ்தர்கள்

சகல உள்ளூர் உற்பத்திகளின் ஏற்றுமதிக்கும் சகல அந்நிய தயாரிப்புகளின் இறக்குமதிக்கும் உரிய உலகளாவிய விளம்பரத் தொடர்புடையவர்கள்.

உள்ளூர் உற்பத்தியாளர்களே உங்கள் உற்பத்திப் பொருளின் விநியோகத்திற்கும் விளம்பரத்திற்கும் அவதிப்படுகிறீர்களா? எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்! நாம் உதவுவோம்.

எங்கள் கட்டுப்பாட்டில் அனுபவமும் திறமையும் உள்ள விற்பனையாளர்களைக் கொண்ட பெரும் விநியோக வான் சேவை உள்ளது.

# கமலம்ஸ்

180, சென்றல் வீதி, கொழும்பு-12

தந்தி: "கமலம்ஸ்" தொலைபேசி: 23597

# காலிப்:
# கவி வளம்

—அல் ஹிலால்

'இளம்பிறை' ஆசிரியர்
எம். ஏ. ரஹ்மான்
எழுதிய
மஹாகவி மிர்ஸா காலிப்
என்னும் உரைச் சித்திரத்தை
எம். எச். குத்தூஸ்
தயாரித்தளித்து
9 7-69 இல்
இரவு 8-10 — 8-35 மணிக்கு
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில்
ஒலிபரப்பாகும்.

காலிப் மறைந்து ஒரு நூற்றாண்டாகி விட்டது. இதன் நினைவாஞ்சலியாக பாரத நாடு தபால் தலை ஒன்றினை வெளியிட்டுள்ளது. அத்துடன், அவர்தம் நினைவாக நினைவு நிலையங்கள் நிறுவவும், அவருடைய கவிதைகளைப் பல மொழிகளிலே பெயர்த்து வெளியிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மஹாகவி காலிப்பின் நினைவு நூற்றாண்டைக் கொண்டாட அமெரிக்கா, ருஷியா, பிரித்தானியா, இத்தாலி, செக்கோஸ்லோவாகியா, ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய பல நாடுகளும் முன்வந்துள்ளன. அத்தகைய உலகப் புகழ் பெற்ற உலக மஹா கவிஞரான காலிப்பின் நினைவாஞ்சலியாக, இங்கு அவருடைய கவி வளத்தின் சிறப்பியல்புகள் சிலவற்றைப் பார்ப்போம்.

ஆரம்பத்தில் கவிஞர் காலிப் தமது கவிதைகளைப் பாரசீக மொழியிலேயே எழுதினார். 'பேதில்' என்ற பாரசீகக் கவிஞருடைய கவிதைகளிலே மிக்க ஈடுபாடு கொண்டு, அவருடைய நடையையும்–பாணியையும் பின்பற்றினார். இந்த ஆதர்ஷத்திற்குப் பிறிதொரு காரணியும் இருந்தது. மற்றும் பாரசீகக் கவிஞர்களைப் போல வித்துவ அணிகளிலும், ஆடம்பரச் சொற்சிலம்பங்களிலும் 'பேதில்' ஈடுபடாது, தமது கவிதைகளிலே ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களைப் புகுத்தினார். அவ்வாறே காலிப்பும் தமது பாரசீகக் கவிதைகளை ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களினாற் பட்டை தீட்டினார். இதன் காரணமாக அவருடைய கவிதைகள் புரிந்து கொள்வதற்குக் கடினமானவை எனச் சிலர் குறைபட்டுக் கொண்டார்கள்.

உர்து மொழியிலே கவிதைகள் புனையும் நாட்டம் காலிப்பிற்குச் சிறிது சிறிதாக ஏற்பட்டது. அவர் உர்து மொழியிலே கவிதைகளை இயற்றத் தொடங்கிய காலத்தில், அம்மொழி பாரசீக மொழியைப் போன்று வளம் பெற்றிருக்கவில்லை. உர்து மொழியின் வறுமையைப் போக்குதல் வேண்டும் என்ற எழுச்சி காலிப்பின் மனத்திலே துளிர்த்தது. பாரசீக மொழியிலிருந்த சொற்களைக் கையாண்டு, தமது கருத்தினைப் புலப்படுத்த வல்ல புதிய சொற்களை உருவாக்கினார். அத்துடன், தந்தக் கோபுரத்

திலே குந்தியிருந்த சவிதா மர புக்கு எதிராகக் கிளர்த்தெழுந் தார். தலைமைக் கலைஞனின் வேலை நுணுக்கங்களுடன், உர்துக் கவி தையை நிலத்திற்கு இறக்கினர். ஒவ்வொரு சொல்லையும் எல்லா உள்ளங்களையும் பிரதிபலிப்பதா கத் தேர்ந்தெடுத்து அமைத்தார். காலிப் ஆரம்பித்து வைத்த இந்த மறுமலர்ச்சி இயக்கத்தைக் கவி ஞர்கள் மௌலானு அபுல் கலாம் ஆஸாத், அல்தாப் ஹுசைன் ஹாலி ஆகியோர் பின்பற்றினர்கள். இவ்வியக்கத்தின் பூரண மலராக பிற்காலத்தில் கவிஞர் அல்லாமா முஹம்மது இக்பால் மலர்ந்தார்.

யாரிந்த காலிப் பென்று யார்
யாரோ கேட்கின்றுர்
யாரென்று சொல்வதென
யாரேனும் சொல்வீரே!

—காலிப்

முற்கட்டத்தில் காலிப்பினுடைய கவிதை நடை சற்றே வித்துவஞ் செறிந்ததாகவும், கடினமானதாகவும் விளங்கியது. பின்னர், தமது நடையை எளிமையாக்கிக் கொண்டார். கட்டித்த தத்துவங்கள் அவர் கையாண்ட புதிய நடையிலே பட்டை தீட்டிய வைரங்களாகப் பிரகாசித்தன.

பாரசீக இலக்கியம் மரபு வழியாகக் காதலையும் மதுவையுமே விரிவாகப் பிரஸ்தாபித்து வந்தது. சூபித் தத்துவங்களும் விரவிக் கிடந்தன. அக்கவிதைகளுக்கும் வாழ்க்கையின் யதார்த்த நிலைகளுக்கும் எவ்வித தொடர்புகளும் இருக்கவில்லை என்பது ஒருசாரார் கருத்தாகும். பாரசீக மொழிப் பயிற்சி பெற்றிருந்த ஆரம்ப கால உர்துக் கவிஞர்கள் இத்தகைய மரபுகளை உர்துக் கவிதைகளிலே திணித்தார்கள். அந்தப் போலி மரபுகளை தகர்த்தெறிந்தவரும் மஹாகவி காலிப்பே யாவர்.

காலிப் தமது கவிதைகளிலே படைத்துள்ள உயந்த கற்பனைச் சித்திரங்களை உய்த்துணருவதற்குச் செறிந்த சிந்தனையும், தொடுத்த வினையுந் தேவைப்படும். அவர் மிகவும் விநோதமான, முற்றிலும் புதுமையான உவமைகளைக் கையாண்டார். இதனுல், அவருடைய கவிதைகள் மேலும் பொலிவும் அழகும் பெற்றன. கவிஞர்கள் குழந்தையுள்ளம் படைத்தவர்கள். மெல்லிய உணர்ச்சிகளினுலேகூட பாதிக்கப்படுபவர்கள். இயற்கையிலே தணியாத ஈடுபாடு கொண்டவர்கள். இத்தனை இயல்புகளும் மஹாகவி காலிப்பிடம் இருந்தன. இருப்பினும், 'இயற்கை அழகைச் சொற்களிலே வடிப்பதுதான் கவிதை' எனக் காலிப் தம்முடைய கொள்கையை வரையறுத்துக் கொள்ளவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாகக் காலிப்பின் கவிதைகளிலே மனிதாபிமானம் வீறு கொண்டு நின்றது.

எத்தனையோ கவிஞர்கள்
இறந்தபின் பிறந்தனர்
தத்தம் கண்களை மூடிப்
பிறர் கண்களைத் திறந்தனர்

—காலிப்

காலிப் மனிதனை மனிதனுக நேசித்தார். மனிதன் பூரணன் அல்லன், அவனிடம் அருங் குணங்கள் இருப்பதைப் போலவே, சிறுமைக் குணங்களும் பிணைந்து கிடக்கின்றன. இந்தச் சிறுமைக் குணங்களுடன் இணைந்த பலஹீனனுன மனிதனை முற்றிலும் மனிதனுகவே நேசித்த முதலாவது உலக மஹாகவியாகவும் காலிப் உயர்ந்து நிற்கின்ருர்! 'மிகவும் எளிதான காரியங்கூட எவ்வளவு கடினமாக இருக்கும் என்பதைச் சில சமயங்களிற் காணமுடிகின்றது. மனிதன் மனிதத் தன்மையோடு வாழ்வது எவ்வளவு கடினம் என்பது அதில் ஒன்று' எனக் காலிப் ஒரு சந்தர்ப்பத்தில் அழகாகச் சுட்டிக் காட்டினுர். 'நீயும் பருக முடியாத, மற்ருேர்க்கும் பருகக் கொடுக்க முடியாத மதுவினுல் இப்பொழுது என்ன பயன்' எனப் பிறிதோர் இடத்திற் காலிப் கேட்டார். மதுவென்பது உருவகம். இதனுல் அவர் சுட்டியது சொர்க்கத்தையே.

சொர்க்கத்தைப் பற்றிய நினைவுகள் இனியனவே. உண்மைதான். ஆனுல், சொர்க்கம் என்னும் இன்பத்தை இவ்வுலக வாழ்க்கையில் அநுபவித்து விடமுடியுமா? சொர்க்கம் பற்றிய நினைவுகள்

> கற்பனைப் பறவை இந்த உயரம் வரைதான் எட்டமுடியும் என்ருேர் எல்லையில்லை என்பது, காலிபே நீர் பிறந்த பிறகே மனிதனின் சிந்தனைக்கு எட்டியது.
>
> —இக்பால்

மனிதனின் அன்ருடப் பசியைப் போக்கிட வல்லனவா? இதன் மூலம், உழைப்பே உயர்வானது எனப் பூடகமாக நமக்கு உணர்த்துகின்ருர்.

> அன்று மலக்குகளில் ஒருவன் எமக்கு மரியாதை செய்யாது அகம்பாவத்தோடு நடந்ததற்காக அவனைத் தண்டித்து எமது மானத்தை, இறைவா, நீ காப்பாற்னுய்!
> இப்போது மட்டும் ஏன் இவ்வாறு தாழச் செய்துவிட்டாய்?

எனப் பொருள் பொதித்த பாடல் ஒன்றைக் காலிப் பாடியுள்ளார். இஃது அவர் எவ்வளவு தூரம் மனிதனை நேசித்தார் என்பதை நிறுவவே உதவுகின்றது.

மஹாகவி காலிப் புதிய உவமைகளை நேசித்துக் கையாண்டார். அதே சமயம் தமது கருத்துக்களை உருவகங்களாக வெளியிடுவதிலேயும் அதிக ஈடுபாடு காட்டினுர்.

கவிஞன் தன் நாட்டிலும், சம காலத்திலும் மதிக்கப்படுவதில்லை என்பது பொதுவான ஒரு விதியாகும். அதேபோன்று மஹாகவி காலிப்பின் கவிதைகள் அவர் உயிர் வாழ்ந்த காலத்தில் உரிய முறைப்படி மதிக்கப்படவில்லை. இதனை உணர்ந்த காலிப் பின்வரும் இரண்டு கவிதைகளையும் தீர்க்கதர்சனமாக இயற்றி வைத்துச் சென்றுள்ளார்.

Meelad Greetings
from

**HIRANI INDUSTRIAL WORKS,**

180, PRINCE STREET,
COLOMBO-11.

*மீலாத் வாழ்த்துக்கள்!*

சப்பாத்துத் தயாரிப்பாளர்களுக்குத் தேவையான
தோல் வகைகளும், சூட் கேஸ்
தயாரிப்பாளர்களுக்குத் தேவையான சகல
சாமான்களும் எம்மிடம் சகாய விலையில் பெறலாம்.

**M. A. முகம்மது முகியித்தீன்,**

*112, 110/2, குமார வீதி, கொழும்பு-11.*

தொலைபேசி: **24744**


(காலிபே!)

உன் நாவன்மை கண்டு மொழியே கர்வமடைந்தது!
உம் கற்பனை தன்னருகிலும் சிறகடிப்பதைக் கண்ட
செவ்வாய் கோள்கூட அதிசயத்தில் ஆழ்ந்துவிட்டது!

—இக்பால்

என் கவிதை மதுவை யாரும்
இப்பொழுது வாங்க முன்வரவில்லை
அஃது இன்னும் நன்ருகப் புளிப்பேறட்டும்!
அப்பொழுதுதான் அது தரும் போதை வருங்காலத்தவரின்
தலையைக் கிறுகிறுக்க வைக்கும்.
நான் பிறக்கு முன்பே என் நட்சத்திரம் அதன்
உச்சத்தை எட்டிவிட்டது
நான் மறைந்த பிறகு என் கவியை
உலகமே போற்றிப் புகழும்!

மஹாகவி காலிப்பின் வார்த்தைகள் இன்று மெய்யாகி விட்டன. உலக மக்கள் காலிப்பின் நூற்ருண்டு விழாவில் அஞ்சலி செலுத்துகின்ருர்கள். இதில் இளம்பிறையும் சேர்ந்து கொள்ளுகின்றது. மஹாகவி காலிப்பின் நினைவாஞ்சலியிலே தன்னைப் பிணைத்துக் கொள்வதில் 'இளம்பிறை' மகிழ்கின்றது.




தில்லியிலுள்ள நிஸாமுத்தீன் பகுதியிலே அமைந்துள்ள
மஹாகவி காலிப்பின் சமாதி.

# ஸ்டீம் பீடி

வழங்கும்

## ரூபாய் 10,000 க்கும்

மேற்பட்ட பரிசுகள்!




25 ரூபாய் கொண்ட

100 பரிசுகள்

10 ரூபாய் கொண்ட

250 பரிசுகள்

எண்ணிக்கையற்ற

## விசேட 100 ரூபாய் பரிசுகள்!

*விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் பத்திரம் எல்லா ஸ்டீம் பீடி வியாபாரிகளிடமும் பெறலாம்.*

ஸ்டீம் பீடியின் சிறந்த புகை இன்பத்தைப் பருகுவதோடு நிறைந்த பரிசுகளும் பெறுங்கள்.

*தயாரிப்பாளர்:* *தொலைபேசி:* **34580**

**என். பி. அப்துல் கபூர்,**

*102/2, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13.*

# அரசியல்

தமிழ் நாட்டில் நடந்தேறிய நகர மன்றத் தேர்தல்களின் புள்ளி விபரங்களைக் கொண்டு, தமிழ்நாடு முஸ்லிம் லீக் விவகாரங்களை அந்தரங்க சுத்தியுடன் விமர்சனஞ் செய்து, முஸ்லிம் சமுதாயத்தின் நலன் கருதி 'இளம்பிறை' சில ஆலோசனைகளை முன் வைக்கின்றது.

# சந்திப்பு

ஈழத்திலும், தென்னிந்தியாவிலும் பெரும் தொழில் அதிபராக விளங்கும் அல்ஹாஜ் அப்துல் காதிர் சாஹிபை 'இளம்பிறை' ஆசிரியர் சந்தித்த வர்த்தமானம்.

# வர்த்தகம்

நிர்வாகம்

தொழில்

முதல்

இன்று பீடித் தொழிலிலும், அச்சுத் தொழிலிலும் சிறந்து விளங்கும் ராஜ பீடி நிறுவனம், ராஜ லித்தோ அச்சகம் ஆகிய இரட்டை நிறுவனங்களின் வளர்ச்சி குறித்துச் சில சுவையான தகவல்கள்.

# அரசியல்

'இளம்பிறை' ஏப்ரல் இதழில், 'பொருளாளர் நிலை என்ன?' என்ற மகுடத்தின் கீழ், தமிழ்நாடு முஸ்லிம் லீக் விவகாரங்கள் குறித்து விரிவான விமர்சனம் ஒன்று வெளியாகியிருந்தது. அக்கட்டுரையில், ஓர் இடத்தில் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

தமிழ் நாடு முஸ்லிம் லீக் இப்பொழுது இறங்கு துறையை நோக்கி அடியெடுத்து வைத்துவிட்டது என்பது தெளிவாகியுள்ளது. பிளவுக்குப் பின் நடைபெற்ற சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில் லீக் வேட்பாளர்கள் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றிருந்தாலும், கரைக்கால்-புதுவை தேர்தலில் லீக் நூற்றுக்கு நூறு வீதம் தோல்வி கண்டுள்ளது என்பதையும் நாம் மறைத்துவிட முடியாது. புதுவை சட்டசபையில் லீக் வைத்திருந்த தொகுதியையும் கோட்டை விட்டுவிட்டது. இனி நடைபெறவிருக்கும் தமிழ்நாடு மாநகரசபைத் தேர்தல்களில் இன்று லீக் உறுப்பினர்களாக இருப்பவர்கள் பலர் சுயேச்சையாகப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்கள். இந்நிலை நீடிக்குமாயின் நாளை தமிழ் நாட்டில் முஸ்லிம் லீக் என்று ஒரு ஸ்தாபனம் இயங்குமா என்பது கேள்விக்குரியதே!

இரண்டே இரண்டு மாதங்களுக்கு முன்னர் 'இளம்பிறை' தெரிவித்த அச்சம், உண்மையாகிவிடும் போலத் தோன்றுகின்றது. 'நமது ஆருடம் சரியாக அமைந்தது' என்று பெருமை பாராட்டுவதைப் பார்க்கிலும், நிலைமைகள் இவ்வாறு அதல பாதாளத்தில் இறங்கிக் கொண்டிருக்கின்றதே என்பது நமக்கு வியாகூலத்தை அதிகமாகத் தருகின்றது. இந்த வியாகூலம் நீலிக் கண்ணீருமல்ல; பொய்மையைத் தளமாகக் கொண்டதுமல்ல. தமிழ்நாட்டில், அண்மையில் நடந்து முடிந்துள்ள நகரமன்றத் தேர்தல் முடிவுகள், முஸ்லிம் லீக் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை'யைத் துலக்கமாகவும் - துல்லியமாகவும் தெரிவிக்கின்றன.

இதனை விளக்க மாவட்ட ரீதியாகவும் இங்கு சில புள்ளி விபரங்களைத் தருதல் பொருத்தமானது.

## திருச்சி மாவட்டம்:

புதுக்கோட்டையில் லீக் சார்பாக மூவர் போட்டியிட்டனர். அவர்களுக்கு எதிராக தி. மு. க. மூன்று அபேட்சகர்களை நிறுத்தி மூன்று லீக்கர்களையும் தோற்கடித்தது. அதே சமயம் இங்கு காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்ட முஸ்லிம் ஒருவரும் வெற்றியீட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தஞ்சாவூர் மாவட்டம்:

தஞ்சை நகரமன்றத்திற்கு தி. மு. க. சார்பில் மூன்று முஸ்லிம்களும், காங்கிரஸ் சார்பில் இரண்டு முஸ்லிம்களும் போட்டியிட்டு ஐவரும் வெற்றி பெற்றுள்ளார்கள். முஸ்லிம்

லீக் சார்பிலே போட்டியிட்ட அனைவரும் படுதோல்வி அடைந்தனர்.

திருவாரூரில் முஸ்லிம் லீக் மிகுந்த பிரயாசையுடன் இரண்டு வார்டுகளைக் கைப் பற்றியுள்ளது. ஆனுல், இங்கு தி. மு. க. சார்பிலே போட்டியிட்ட மூன்று முஸ்லிம்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள் என்பது கவனத்திற்குரியது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் தி. மு. க சார்பில் ஒன்பது முஸ்லிம்களும், காங்கிரஸ் சார்பில் இரண்டு முஸ்லிம்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள். இந்த 11 பேருக்கு எதிராக இரண்டே இரண்டு லீக்கர்களே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்க்ள்!

## தென்ஞற்காடு மாவட்டம்:

தென்ஞற்ககாடு மாவட்டத்தில், நெல்லிகுப்பம் நகரில் மட்டுமே லீக் சார்பாகப் போட்டியிட்ட ஐவரும் வெற்றியீட்டி, லீக்கின் மானத்தை ஓரளவு காப்பாற்றியிருக்கின்றுர்கள். ஆனுலும், தலைவர் பதவி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஹாஜி அப்துல் ஹமீதுக்குச் சென்றிருக்கின்றது என்பது கவனத்திற்குறியது.

## வட ஆற்காடு மாவட்டம்:

திருப்பத்தூர் நகரத்திற்கு லீக் சார்பில் போட்டியிட்ட எழுவரும் வெற்றி பெற்றதை ஒரு 'சாதனை' எனலாம். ஆனுல், இங்கு வேறு கட்சிகள் சார்பில் முஸ்லிம் வேட்பாளர் நிறுத்தப்படவில்லை என்பது கவனத்திற்குரியது.

ஆம்பூரில் லீக் சார்பில் எழுவர் போட்டியிட்டு ஐவரே வெற்றியீட்டினர். அதேசமயம் தி. மு. க. சார்பில் ஒருவரும், காங்கிரஸ் - கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளில் இவ்விருவருமான லீக் அல்லாத ஐந்து முஸ்லிம்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள் என்பது கவனத்திற்குரியது! (கம்யூனிஸ்ட் சார்பில் ஆயிஷாபீபி என்ற பெண்மணி வெற்றியீட்டியுள்ளார்.) இந்த நகரத்திற்கு ஒரு தடவை முஸ்லிமும், மறுதடவை இந்துவும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவது சம்பிரதாயமாகும். தேர்தலிலே நட்புரிமை பாராட்டிய தி. மு. க. தன் ஏக முஸ்லிம் பிரதிநிதியான என். எம். ஸலாவுத்தீனைத் தலைவராக்கியிருக்கின்றது.

குடியாத்தம் நகருக்கு லீக்கர் இருவரும், லீக்கரல்லாத மூவரும தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள். குடியாத்தம் தொகுதியிலே லீக்கர்களும் கூட்டணியினரும் கடைப்பிடித்த விவேகமற்ற போக்கு இந்நகரைக் காங்கிரஸுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தது! அரக்கோணத்தில் தி. மு. க. முஸ்லிம்கள் இருவருக்குப் பதிலாக லீக்கர் ஒருவரே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வேலூரில் லீக் சார்பில் போட்டியிட்ட எழுவரில், ஐவர் வெற்றியீட்டியுள்ளார்கள். இந்த வெற்றி பிறிதொரு தோல்வியினுல் எடுபடவில்லை. வட ஆற்காடு முஸ்லிம் லீக் செயலாளரும், முன்னர் மூன்று தவணைகளிலே வேலூர் நகர சபைத் துணைத் தலைவராக இருந்தவருமான ஹபீபுல்லா சாஹிப், சுயேச்சை வேட்பாளரிடம் தோல்வியடைந்தார். இச்சுயேச்சையாளரை தி. மு.

க. ஆதரித்தது என்பது நமது கவனத்திற்கும் சிந்தனைக்கும் உரியது. ராணிப் பேட்டையில் தி. மு. க. சார்பிலும் லீக் சார்பிலும் முஸ்லிம்கள் சம பலத்துடன் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆலந்தூர் நகரசபைக்கு மட்டும் இரண்டு லீக்கர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். அதே சமயம், இந்த மாவட்டத்தில் தி. மு. க. சார்பில் நான்கு முஸ்லிம்கள் நகர சபை அங்கத்தவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

## கோவை மாவட்டம்:

இந்த மாவட்டத்தில் தாராபுரம் நகர மன்றத்திற்கு இருவரும், மேட்டுப்பாளையம் நகர மன்றத்திற்கு இருவருமாக நான்கு லீக்கர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். ஆனால் இந்த மாவட்டத்தில் தி. மு. க. சார்பில் ஒன்பது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது கவனத்திற்குரியது. அத்துடன், மேட்டுப் பாளையம் நகர சபைக்கு எம். அப்துல் ரஜாக் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இந்நகர சபையில் முஸ்லிம் அல்லாத தி. மு. க. அங்கத்தவர்களுடைய எண்ணிக்கை 18 என்பது கவனத்திற்குரியது.

## நீலகிரி மாவட்டம்:

நீலகிரி மாவட்டத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஐந்து முஸ்லிம் அங்கத்தவர்களுள் நால்வர் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள்; ஒருவர் காங்கிரஸ்வாதி.

## சேலம் மாவட்டம்:

சேலம் மாவட்டத்திலே தி. மு. க. சார்பில் முஸ்லிம் எவரும் போட்டியிடவில்லையாயினும்; போட்டியிட்ட ஏழு லீக்கர்களுள் நால்வரே வெற்றியீட்டியுள்ளனர். ஜின்னா சாகிப்பினால் அக்காலத்திலேயே காரியக் கமிட்டி அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பழம்பெரும் லீக்கரான சேலம் பாஸித் ஸாகிப் லீக் தலைமைப் பீடத்தினால் வேட்பாளராக நிறுத்தப்படவில்லை. இதுவும் லீக்கரின் தோல்விக்குக் காரணமாக இருந்ததோ என ஊகிக்க இடமுண்டு.

## மதுரை மாவட்டம்:

மதுரை மாநகரசபைக்கு வேட்பாளர்களை நிறுத்துவதில் தி. மு. க. வுக்கும் - லீக்கிற்குமிடையில் இணக்கம் ஏற்படவில்லை. எனவே, தி. மு. க, லீக்கர்கள் போட்டியிட்ட நான்கு வார்டுகளிலும் எதிர்த்துப் போட்டியிட்டு, லீக்கர்களை மண் கவ்வச் செய்தது. தமிழ் நாடு முஸ்லிம் லீக்கின் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரான எஸ். எம். ஷரீப் மதுரைவாசி. இத்தேர்தலிலே அவருடைய செல்வாக்கு உபயோகப் படுத்தப்படவில்லையா என்பது கேள்வி. இன்று மதுரை மாநகரசபையில் மூன்று முஸ்லிம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் இருவர் கழகத்தைச் சேர்ந்தவர்கள்; மூன்றாமவர் காங்கிரஸ்வாதி.

இதன் எதிரொலி பழனியிலும் கேட்டது. முதலில் நான்கு வார்டுகளில் போட்டியிடுவதாக லீக் அறிவித்தது. ஈற்றில் ஒரு வார்டில் மட்டுமே லீக்கர் போட்டியிட்டு, தி. மு.

க. முஸ்லிமிடம் 'வெற்றிகர மாக'த் தோல்வியடைந்தார்!

மதுரை மாவட்டத்தில் 10 இடங்களிலே லீக்கர் போட்டியிட்டும் நான்கு இடங் களில் மட்டுமே வெற்றியீட்டி யுள்ளார்கள். ஆனால், ஏழு இடங்களிலே வேட்பாளராக நிறுத்தப்பட்ட தி. மு. க. முஸ் லிம்கள் நூற்றுக்கு நூறு சத வீதம் வெற்றி பெற்றனர்.

## இராமநாதபுரம் மாவட்டம்:

இராமநாதபுரம் நகர மன் றத்திலே நான்கு லீக்கர்கள் அங்கம் வகித்தனர். இவர்க ளுள் ஓரேயொருவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இரண்டு இடங்களிலே சுயேட் சையாளர் இருவரும், தி .மு. க. ஒருவரும் வெற்றி பெற்று ள்ளார்கள். தேவகோட் டையிலே லீக்கர் போட்டியிட்ட இரண்டு வார்டுகளிலும், தி. மு. க. தமது வேட்பாளரை நிறுத்தி வெற்றியைச் சுவீகரித் துள்ளது.

## நெல்லை மாவட்டம்:

திருநெல்வேலி நகர மன்றத்திலும் லீக் மகத்தான கோட்டை விட்டு விட்டது. இந்நகர மன்றத்திற்குத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள ஐந்து முஸ் லிம்களுள் ஒருவர் மட்டுமே லீக் கராவர். மூவர் தி. மு. க. ; ஒரு வர் சுதந்திரா. இதில் வேடிக்கை என்னவென்றால், கூட்டுக் கட்சி யாக லீக்கினை தி. மு. க. ஏற்றுக் கொண்ட போதிலும், மூன்றாம் வார்டில் தி. மு. க. தனது முஸ் லிம் வேட்பாளரை நிறுத்தி லீக் கரைத் தோற்கடித்தது.

மேலப்பாளையத்தில் மட் டும் போட்டியிட்ட பதின் மூன்று லீக்கர்களும் வெற்றி யீட்டினர். லீக்கராக ஓர் இந் துவும் இங்கு போட்டியிட்டு வெற்றி பெற்றார். இத்தனை தோல்விகளுக்கு மத்தியிலும் 'லீக்' இங்குதான் மகத்தான சாதனையை நிலை நாட்டி யுள்ளது.

தூத்துக்குடியில் லீக்கர்கள் இருவரும், தி. மு. க. முஸ்லிம் கள் இருவருமாகச் சம பலம் பெற்றிருக்கிறார்கள். புளியங் குடியிலும், தென்காசியிலும் லீக் தன்னுடைய நிலையைப் பெருமையுடன் நிலைநாட்டியுள் ளது. புளியங்குடியில் தேர்ந் தெடுக்கப்பட்ட நான்கு முஸ் லிம்களும் லீக்கர்களே. அவ் வாறே தென்காசியிலும் தேர்ந் தெடுக்கப்பட்ட ஏழு முஸ்லிம் களும் லீக்கர்களே.

'தென்மதீனா' என்று சிறப் பிக்கப்படும் கடையநல்லூரில் லீக்கர்கள் ஒன்பது இடங் களிலே போட்டியிட்டு மூன்று இடங்களையே கைப்பற்றினர். இரண்டு இடங்களில் காங்கிரஸ் வெற்றியீட்டியது. லீக்கின் தலை மைப் பீடத்தின் போக்கினால் வெறுப்புற்றுச் சுயேச்சை களாகப் போட்டியிட்ட ஐவர் இங்கு வெற்றியீட்டியுள்ளார் கள். செங்கோட்டையில் லீக் கர்கள் இருவரும் தோல்வி யடைந்தார்கள். செங்கோட் டையில் தி. மு. க. வேட்பாளர் காஜா மொய்தீன் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றார். அண்மையில் நடைபெற்ற உப தேர்தல் ஒன் றில் தி. மு. க. வேட்பாளராக நின்று வெற்றியீட்டிய 'கதி ரவன்' என்றழைக்கப்படும் ஷம்சுத்தீனின் மாமனார் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கன்னியாகுமரி மாவட் டத்தில் லீக் போட்டியிடவில்லை.

எனவே, ஏனைய கட்சிகளின் சார்பிற் போட்டியிட்டு வெற்றி பெற்ற முஸ்லிம்களுடைய வெற்றிகளை ஈண்டு பிரஸ்தா பிக்காமல் விடுகின்றோம்.

இனி, ஒட்டுமொத்தமாக, தமிழ்நாடு நகரமன்றங்களிலே. முஸ்லிம் அங்கத்தவர்களுடைய நிலையை என்னவென்று பார்ப் போம். இம்முறை மொத்தம் 177 முஸ்லிம்கள் நகர மன்ற அங்கத்தவர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டுடிருக்கிறார்கள். இனப்பற்றுடன் பார்க்கப் போனால், கலைக்கப்பட்ட நகர மன்றங்களிலிருந்த அங்கத்தவர் களிலும்பார்க்க இந்த எண்ணிக் கை கூடுதலானதாகும். இதனை யிட்டு அடையக்கூடிய மகிழ்ச்சி அற்ப ஆயுள் உள்ளதாகவே இருக்கின்றது.

கட்சி ரீதியாக முஸ்லிம் அங்கத்தவர்கள் வருமாறு சிதறிக்கிடக்கிறார்கள்:

| | | |
|---|---|---|
| முஸ்லிம் லீக் | ... ... | 82 |
| தி. மு. க. | ... ... | 63 |
| காங்கிரஸ் | ... ... | 16 |
| சுயேச்சை | ... ... | 11 |
| கம்யூனிஸ்ட் | ... ... | 4 |
| சுதந்திரா | .. ... | 1 |
| | | 177 |

தெரிவு செய்யப்பட்ட அங் கத்தவர்களிலே 82 முஸ்லிம் களே லீக்கர்கள். அதாவது லீக் 46 சதவீதமான முஸ்லிம்க ளையே பிரதிநிதித்துவப்படுத்து கின்றது. 54 சதவீதமான முஸ் லிம்களின் பிரதிநிதிகளாக லீக் கர்களல்லாதவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இது லீக்கிற்கும், முஸ்லிம் இனத்திற்கும் உவப்பான செய் திகளல்ல. லீக்கர்கள் தமது கொள்கையைப் புனராலோ சனை செய்து, உட்கட்சிப் போராட்டத்திற்கு சுமுகமான தும் தீர்க்கமானதுமான முடிவு எடுத்து, செப்பனிட்டாற்றான் முஸ்லிம்கள் தமிழ் நாட்டின் ஓர் அங்கமாகத் தலை நிமிர்ந்து வாழலாம்.

கடந்த ஓராண்டு காலமா கத்தான் 'இளம்பிறை' முஸ் லிம் லீக் விவகாரத்தினைப் பற் றிக் கருத்துக்கள் வெளியிட்டு வருகின்றது. இதற்குக் கார ணம் கலங்கிய குட்டையிலே மீன் வேட்டையாடுவதோ, பற்றி எரியும் வீட்டிலே பிடுங் கியது ஆதாயம் என்பதுவோ அல்ல. சகோதரன் ஒருவனின் அவலத்திற்கு உதவ வேண்டும் என்ற பாசமே. இஸ்லாம் நாட் டின் எல்லைகளைக் கடந்த சகோ தரத்துவ நெறியையும் ஊட்டி யுள்ளது. அந்தச் சகோதரத் துவத் துடிப்பின் உயிர்ப்பா கவே அபிப்பிராயம் தெரிவிக்க முன் வந்தோம்.

மிட்டாய் இனிப்பு. குழந் தைகளுக்குப் பிரீதியானது. குழந்தை விரும்புகின்றது என் பதற்காக மிட்டாய் கொடுத் துக் கொண்டேயிருந்தால் குழந் தைக்கு நல்லதல்ல. மருந்து கசப்பானது. நோயைக் குணப் படுத்த வேண்டுமானால், அத னைக் கொடுத்துத்தானாக வேண் டும். 'மருந்து கசப்பாக இருக் கின்றது' என்பதற்காக வைத் தியனைக் கோபித்தல் விவேக மான செயலாக மாட்டாது. 'இளம்பிறை' வைத்தியனைப் போன்று, லீக்கர்களுடைய சிந்தனைக்குக் கசப்பான மருந் தினையே அளித்து வந்துள்ளது. இதனை நாம் செய்வதற்கு ஒரேயொரு அந்தரங்க சுத்தி யான காரணமே இருந்தது. லீக் முஸ்லிம்களுடைய ஏகப் பிரதிநிதியாக இயங்கிக் கொண் டிருக்கும் வரைதான் முஸ்லிம்

களுடைய உரிமைகள் உரிய முறையிலே பாதுகாக்கப்படும். இந்தக் கூற்று குறுகிய இனப் பற்று ஆகமாட்டாது என்பதைப் பிறிதோர் இடத்திலே நிறுவுவோம்.

இதனைப் பிறிதொரு வகையாலும் கூறலாம்.

''நகுதற் பொருட்டன்று
நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற்
பொருட்டு''

என்பது குறள். தி. மு. க., லீக்குடன் நட்புப் பூண்டு, முகம் நகைத்து, ஆதாயம் தேடுகின்றது. லீக்கின் சேமத்திலே 'இளம்பிறை'க்கு அக்கறை இருக்கின்ற காரணம் பற்றியே, சில விடயங்களை இடித்துக் காட்ட முன் வந்திருக்கின்றது.

தி. மு. க. முகம் நக நட்பினையே லீக்குடன் கொண்டிருக்கின்றது என்பதற்கு நடந்தேறிய நகர மன்றத் தேர்தல்கள் காட்டுகின்றன. கலைக்கப்பட்ட நகர மன்றங்களிலே சுமார் 15 முஸ்லிம்களே தி. மு. க. அங்கத்தவர்களாக இருந்தார்கள். நடந்தேறிய தேர்தலில் லீக் இருபது சத வீத அங்கத்துவத்தை இழந்து பலவீன முற்றிருக்கின்றது. அதே சமயம், தி. மு. க. நானூறு சதவீதம் தன்னுடைய முஸ்லிம் அங்கத்துவ பலத்தை அதிகரித்துள்ளது.

'லீக்கில் நடைபெறும் உட்கட்சிப் போராட்டம் பதவி சம்பந்தமானது லீக்கின் தலைவரைச் சுற்றி நிற்கும் ஒரு சிறு கோஷ்டி சகல பதவிகளையும் பெற்று இன்புற விழைந்ததால் வந்த வினை' என்று மாற்றார் இழிவாகப் பேசும் நிலை லீக்கினால் உருவாகியுள்ளது. கட்சியின் தொண்டர்களுக்கும், கடும் ஊழியர்களுக்கும், பதவிகள் வழங்கப்படல் வேண்டும். இது நியாயமானது; தர்மமானது. தொண்டின் முதிர்ச்சியும், சேவையின் செறிவும் அளவுகோல்களாக இருத்தல் வேண்டும்; உறவின் கனிவு இதன் அடிப்படையாக இருத்தல் தகாது. [முஹம்மது நபி (ஸல்) அவர்களின் ஒரே மகள் பாத்திமா நாயகியாரை மணந்து, மருகராகவும் இனியராகவும் அலி (ரலி) அவர்கள் இருந்தார்கள். ஆனால், நாயகம் அவர்களின் மறைவுக்குப் பின்னர் அபூபக்கர் (ரலி), உமர் (ரலி), உதுமான் (ரலி) ஆகிய மூவருக்கும் பின்னர் அலி (ரலி) நான்காவது கலிபாவாகவே பதவியேற்றார். இந்த முறை லீக்கர்களுடைய கண்களைத் திறக்க வேண்டும்.]

சென்னை அமைச்சரவையில் சாதிக் பாட்சா என்ற முஸ்லிம் தி. மு. க. பிரதிநிதியாக அங்கம் வகிக்கின்றார். புதுவையின் முதலமைச்சரான பாரூக் மரைக்கார் முஸ்லிம். ஆம்பூர், மேட்டுப்பாளையம், செங்கோட்டை, திருவாரூர் ஆகிய நான்கு நகரமன்றங்களுக்கு தி. மு. க. வினர் முஸ்லிம்களைத் தலைவர்களாக்கியிருக்கிறார்கள். ஆம்பூர் தவிர்ந்த வேறு நகரங்களிலே முஸ்லிம் ஒருவரைத் தலைவராக்க வேண்டுமென்ற சட்ட நிர்ப்பந்தம் எதுவும் தி. மு. க. வுக்கு இருக்கவில்லை. இவை எல்லாம் எதனைக் காட்டுகின்றன?

தி. மு. க. திட்டமிட்டு இடைத்தட்டில், லீக்கிற்கு விரோதமான, தனக்குச் சாதகமாக முஸ்லிம் தலைமைப்பீடம் ஒன்றினை உருவாக்கி வருகின்றது. 'அரசியற் பதவிகள் தேவை

யா? நமது கட்சியில் சேருங்கள்' என்று மறைமுகமாகக் கவர்ந்திழுக்கும் வாய்ப்புகளும் இருக்கின்றன. அத்துடன், இன்றைய லீக்கின் தலைமைப்பீடம் கடந்த சில ஆண்டுகளாக இளைஞர்களைக் கவர்ந்திழுக்கவும் தவறிவிட்டது.

கடந்த தேர்தலில் தி. மு. க., சுதந்திரா-லீக்- கம்யூனிஸ்ட் ஆகிய மூன்று கட்சிகளையும் தோழமைக் கட்சிகளாகச் சேர்த்தது. தேர்தலுக்கிடையில் லீக் - சுதந்திரா ஆகிய இரண்டு தோழமைக் கட்சிகளுடைய ஒத்துழைப்பும் தேவையில்லை என தி. மு. க. அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த நிலை வந்தபிற்பாடுதான் லீக் தலைமைப்பீடம் சிந்தித்துச் செயற்படப்போகின்றது. இந்த அவல நிலை ஏற்படுவதற்கு முன்னர் விழிப்பாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் லீக்கர்களுக்குச் சில உண்மைகளை இடித்துச் சொல்ல 'இளம்பிறை' எப்பொழுதும் முந்தி நிற்கின்றது என்பதை நமது வாசகர்களுக்குத் தெளிவு படுத்த விரும்புகின்றோம்.

ஈ. வே. ராவும், தி. மு. க. வினரும் இடைவிடாது செய்து வந்த பிரசாரத்தின் பயனாகவும், காமராஜர் என்னும் 'பச்சைத் தமிழர்' சென்னை மாநில முதல் அமைச்சரானார். படிப்படியாகச் செல்வாக்கிழந்த பிராமண ஆதிக்கம் தி. மு. க. ஆட்சியிலே முற்றாகச் செயலிழந்துவிட்டது. கீழ் மட்டத்திலிருந்த ஜாதிகள் பெருமைப்படத் தக்கதாக தி. மு. க. அமைச்சரவை அமைந்தது. 'வடக்கு வளர்கிறது; தெற்குத் தேய்கிறது. பிராமணர் வாழ்கிறார்கள்; திராவிடர் மாழ்கிறார்கள்' என்ற பிரிவினைக் கோஷங்களையும், ஜாதிப் பற்றையும் முன்வைத்துத்தான் தி. மு. க. தன் செல்வாக்கினை வளர்த்தது. ஆனால், முஸ்லிம்கள் தமிழருடைய ஒரு கிளைச் சாதியல்ல. அது முழுமையான ஓர் இனம். இதன் காரணமாக, முஸ்லிம்களுடைய நலனைப் பேணும் வகையிலும், முஸ்லிம்களை முழுமையாக பிரதிநிதித்துப் படுத்தும் வகையிலும் முஸ்லிம் லீக் கட்டி வளர்க்கப்படல் வேண்டுமென 'இளம்பிறை' விரும்புகின்றது. முஸ்லிம்கள் தமிழ் நாட்டில் சிறுபான்மை இனமாக வாழ்ந்து வருவதினால், முஸ்லிம் இனம் ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும், ஒரே உடம்பாகவும் மூச்சாகவும், ஒரே சிந்தனையும் செயலாகவும், அப்பழுக்கற்ற ஒரே தலைமைப்பீடத்தை ஏற்றதாகவும் தமிழ்நாடு லீக் புதிய வீறுடனும் வேகத்துடன் கட்டி வளர்க்கப்படல் வேண்டும். முஸ்லிம்களுடைய நலனுக்காகப் பேசவும், அவசியம் ஏற்படின் போராடவும் முஸ்லிம் லீக்கே ஏக நிறுவனம் என முஸ்லிம்களும், அல்லாதவர்களும் ஒரு முகமாக ஏற்றுக் கொள்ளும் வகையில் லீக் பண்பும், பலமும் பெறல் வேண்டும். இதனை அந்தரங்க சுத்தியாக நேசிப்பதினாலேதான் 'இளம்பிறை' லீக் அரசியல் சம்பந்தமாகச் சில கருத்துக்களைத் துணிவாகக் கூற முன்வந்தது.

காங்கிரஸ் ஆட்சிப் பீடம் முஸ்லிம்களை இரண்டாந்தரக் குடிமக்கள் என நடத்தியது. இந்தியாவின் பிரிவினைக்கு முன்னிருந்த அரசியல் நிலைகளை மனத்திலே வைத்துக் கொண்டு செயலாற்றியது போலும். எனவே, காங்சிரஸை முறியடிக்க, அண்ணாவின் தலைமையில் தி. மு. க. வுடன் லீக்

தோழமை பூண்டது. காரிய சித்தியும் கண்டது. அண்ணு அன்புடன் அணைத்துச் செல்லும் பண்பாளர். அரசியல் மேதை. எனவேதான், 'முஸ்லிம்களே! உங்களுடைய ஸ்தாபனம் முஸ்லிம் லீக்தான். முஸ்லிம்கள் எல்லோரும் லீக்கிலே சேர்ந்து, உங்களுடைய லீக் தலைவருடைய கைகளைப் பலப்படுத்துங்கள்!' என அறிஞர் அண்ணு அடிக்கடி அறிவுரை வழங்கினுர். ஆனுல், இன்று தி. மு. க. வில் 63 முஸ்லிம் நகரமன்ற உறுப்பினர்கள் இருக்கிருர்கள். காங்கிரஸ் ஆட்சியிலே, 'வக்பு போர்ட்' சபை முஸ்லிம்களைக் கொண்டே முறைப்பட செயறப்பட்டது. ஆனுல், இன்று 'வக்பு போர்ட்' சபை கலைக்கப்பட்டு, கமிஷனருடைய ஆணையின் கீழ் இயங்குகின்றது. ஏன் இந்த அவல நிலை?

இந்நிலையில் முஸ்லிம் லீக் தக்க பலத்துடன் தன்னைப் பலப்படுத்திக் கொள்ள 'இளம் பிறை' பின்வரும் யோசனைகளை அந்தரங்க சுத்தியுடன் முன் வைக்கின்றது.

★★★★★ லீக்கிலே கடந்த ஓராண்டு காலமாக இருந்துவரும் மனக் கசப்புக் களையப்படல் வேண்டும். லீக்கிலிருந்து விலக்கப்பட்ட டாக்டர் ஹபிபுல்லா பேக், கீழக்கரை தை. அ. செய்யிது அப்துல் காதர், திருச்சி ஏ. எம். யூசுப், முழக்கம் கே. பி. செய்குத்தம்பி, பஷீர் அகமது, அகமது ஜமால், ஏ. கே. ஜமாலி ஆகிய எழுவர் மீதும் தலைமைப்பீடம் இற்றைவரை எந்தவொரு குற்றச்சாட்டையும் நிரூபிக்கவில்லை. எனவே, செயல் திறன்மிக்க இந்த ஏழு மாணிக்கங்களையும் மீண்டும் லீக்கிலே சேர்த்துக் கொள்ள வேண்டும். நேரு மந்திரி சபையிலிருந்து விலக்கப்பட்ட தேசாய் இன்று பாரத உதவிப் பிரதமராக இல்லையா? தமிழ்நாட்டு அரசியலிலிருந்து 'துரத்த'ப்பட்ட சுப்பிரமணியம் இன்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இல்லையா? ரணடே காலத்தில் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட ப. ஜீவானந்தத்தைக் கம்யூனிஸ்டுகள் மீண்டும் சேர்த்துக் கொள்ளவில்லையா? மனக்கசப்புகளை ஒழித்துவிட்டு தி. மு. க. வில் கலைஞரும், புரட்சி நடிகரும் ஒன்றுபட்டுச் செயலாற்றவில்லையா? எனவே, லீக்கர்கள் மீண்டும் ஒன்றிணைந்து செயலாற்றுவது சாத்தியமே. மனிதன் பலவீனன்; தவறு செய்யாத மனிதனே இல்லையெனலாம். தவறுகளை இருசாராரும் பெரிது படுத்திக் கொண்டிருந்தால் ஐக்கியம் சாத்தியமில்லை. தவறுகளை திருத்தி நடப்பதும்; நடந்த குற்றங்களை மன்னிப்பதும் மனிதனுக்கு அமைந்துள்ள பெருங்குணங்கள்.

★★★★★ தமிழ்நாடு முஸ்லிம் லீக்கினுடைய வருடாந்த மாநாடு கூட்டப்பட்டு புதிய உத்தியோகத்தர்களும் ஆட்சிக் குழுவும் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்

**SCI**

# இந்திய இலங்கை

கப்பற் சேவையை
இரு நாடுகளுக்குமிடையிலுள்ள
இணைப்புப் பாலமாக

சீருடனும் – சிறப்புடனும்
நாம் நடாத்துகின்றோம்.

உங்கள் வசதிகளிலும் சௌகரியங்களிலும்
நாம் அதிக அக்கறை செலுத்துவதினால்
உங்களுக்கு மன நிறைவான பிரயாணம்
கிடைக்கின்றது.

**ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஒப் இந்தியா**
**லிமிட்டெட்**

ஏஜண்டுகள்:

## நரோட்டம் அன் பெரைரா லிமிட்டெட்,

கொழும்பு-1

த. பெ. இல: **379** தொலைபேசி: **25333-34**

கப்படல் வேண்டும். ஒவ்வொரு கட்சியும் இவ்வாறுதான் செயற்படுகின்றன. மாநாடுகள் ஒழுங்காக நடத்தப்பட்டாற்ருன் கட்சிக்குள் மக்கள் பூரண நம்பிக்கை வைக்க வழி அமையும்.

★★★☆★ தி. மு. க. வுடன் லீக் கொண்டுள்ள தோழமை புனராலோசனை செய்யப்படல் வேண்டும். தி. மு. க. லீக்கினை வேண்டாப் பெண்டாட்டியாக நடத்துகின்றதா? அது திட்டமிட்ட வகையில் முஸ்லிம் வாக்காளருக்கிடையில் ஊடுருவல் செய்கின்றதா? என்பனவற்றையும் மேலிடம் அலசி ஆராய வேண்டும்.

★★★★★ இளைஞர்களையும், மாற்றுக் கட்சிகளிலே கவர்ச்சி கொண்டு சென்றவர்களையும் லீக் தன் அணியிலே சேர்த்துக் கொள்ள பிரசார சாதனத்தைப் பலப்படுத்துதல் வேண்டும்.

★★★★★ இவற்றைக் காரிய சாதனையாக்க லீக்கர்கள் ஒன்றுபட்டுச் செயலாற்ற முன் வருவார்களாயின், 'இளம் பிறை'க்கு இதனைப் பார்க்கிலும் மகிழ்ச்சி தரும் செய்தி பிறிதொன்று இருக்க முடியாது.

பிற்குறிப்பு:

'இளம்பிறை' கடந்த சில இதழ்களிலே முஸ்லிம் லீக் சம்பந்தமாக வெளியிட்ட கருத்துக்கள் பற்றி, சில வட்டாரத்திலே தப்பான அபிப்பிராயம் ஒன்று நிலவி வருவதாக அறிய முடிகின்றது. அடக்கம்-நேர்மை-நிதானம்-எதையும் சீர்தூக்கிப் பார்த்து நிறுத்துப் பேசும் இயல்பு, இத்தனை பண்புகளும் அமைந்த தொழில் அதிபர் ஒருவருடன் அண்மையில் உரையாட நேர்ந்தது. 'லீக்கிலே நிரந்தரப் பிளவினை ஏற்படுத்தும் வித்துக்கள் 'இளம்பிறை'க் கட்டுரைகளிலே இருக்கின்றன!' இத்தனை வார்த்தைகளில், இத்தனை அழுத்தமாக அந்தப் பண்பாளர் கூறவில்லை. முஸ்லிம் இனத்திலே தோன்றக் கூடாத ஒரு வெடிப்புத் தோன்றிவிட்டதே, அதனைப் பத்திரிகை ஆசிரியர்கள் பெரிது படுத்துகின்ருர்களே என்ற சோகம் அவருடைய பேச்சிலே விரவிக் கிடந்ததை அவதானிக்க முடிந்தது. இவ்வாறே வேறு சிலரும் வியாகூலம் அடைந்தவர்களாக இருக்கலாம் என ஊகிப்பதற்கும் இடமுண்டு. அத்தகையவர்களுடைய மெல்லிய உணர்ச்சிகளை

நான் பெரிதும் மதிக்கின்றேன். இதன் காரணமாக, நடந்தேறிய நகர மன்றத் தேர்தல்கள் பற்றிய இக்கட்டுரையை, 'இளம்பிறை'யின் நிர்வாக ஆசிரியன் என்ற பொறுப்புணர்ச்சியுடன் நானே எழுத நேர்ந்தது.

இன்னும் ஒன்றையும் தெளிவு படுத்த விரும்புகின்றேன். லீக்கிலே ஏற்பட்டுள்ள புண்ணைப் பூதாகாரமாகப் பெரிது படுத்திக் காட்டி, அப்பிளவினை அகலித்தலோ, நிரந்தரப் படுத்துவதோ 'இளம்பிறை'யின் நோக்கமல்ல. இஸ்லாத்தில் ஈமான் கொண்டு, சகோதர தத்துவத்தை வாழ்க்கை நெறியாகப் பயிலும் எந்த முஸ்லிமும் இந்த இழிசெயலை இயற்ற ஒப்பான். புண்ணை ரண சிகிச்சை செய்தாவது சீக்கரமே குணப்படுத்த வேண்டுமென்ற மருத்துவனின் மனப்பாங்கு 'இளம்பிறை'க்கு இருக்கின்றது. குறையோ-நிறையோ, பலமோ-பலவீனமோ இதனை ஒப்புக் கொள்ள நான் தயங்கவில்லை. 'கண்டது செப்பாது, காமம் செய்புதல்' இளம்பிறைக்கு அந்நியமானது. கோஷ்டிச் சண்டைகளிலே பக்கச் சாய்வான கருத்துக்களைத் தெரிவித்து, சிலருக்கு வக்காலத்து வாங்கும் 'அடிமை'த் தொண்டினை 'இளம்பிறை' இயற்றமாட்டாது. நியாயத்தை எடுத்துச் சொல்லும் பொழுது, அஃது அநியாயமியற்றுவோர்களுக்கு எதிராக அமைதல் தவிர்க்க முடியாததாகும். அஸ்வர் பற்றிய விவகாரம் இதற்கு எடுத்துக் காட்டு!

நியாயம்-கடமை, இலக்கியம்-சமுதாய உணர்வு, தர்மம்-சத்தியம் ஆகிய தண்டவாளங்களிலே 'இளம்பிறை' தடம்புரளாது பயணம் பயில இணைதுணையற்றவன் துணை நிற்பான் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

எம் ஏ ரஹ்மான்

**முராது பே தம்பதிகளை வாழ்த்துகின்றோம்!**

இலட்சியப் பிடிமானத்துடன், திருச்சியிலிருந்து 'மறுமலர்ச்சி' என்னும் வாராந்திரியை நடத்தி வரும் ஏ. எம். யூசுப் அவர்களின் மகளாரான ஜீனத்துன்னிஸா அவர்களுக்கு, கொழும்பு துறைமுகத்தில் கார்கோ மேற்பார்வையாளராகக் கடமை பார்த்த எம். முஹம்மது ஷரீப் பே அவர்களின் புத்திரன் முராது பே அவர்களுக்கும், நாகூரில், 17-4-69 இல் திருமணம் சிறப்புடன் நடந்தேறியது. முராது பே தம்பதிகளுக்கு 'இளம்பிறை' மண மங்கல வாழ்த்துக்களை அனுப்புவதில் மகிழ்கின்றது.

சந்திப்பு - பேட்டிக் கட்டுரை

# தொழிலதிபரின் ஈழ விஜயம்


ஏப்ரல் மாதத்தின் கடைசிவாரத்தில் விடிந்த ஒரு நாள். கவிஞராக விளங்கும் என் நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன். நமது உரையாடல் 'பலதையும் பத்தையும்' சுற்றி வளைந்தது. இடையில், 'முஸ்லிம் தனவான் ஒருவர் தற்பொழுது ஈழம் வந்துள்ளார். பெயருக்கோ, விளம்பரத்திற்கோ அல்லாது சமூகத்திற்கும் இனத்திற்கும் வாரி வழங்கும் வள்ளலாக விளங்குகின்றார். இளம்பிறையின் சார்பில் அவரைச் சந்தித்தால் என்ன?' என உசாவினர். 'பணம் படைத்தவர் மனம் படைத்தவராகவும் விளங்குவதினல், அவரைச் சந்திக்க விருப்பமே' என்றேன். கவிஞரே இருவரின் சந்திப்புக்கும் ஏற்பாடு செய்தார்.

நான் அவரைச் சந்திக்கச் சென்றது காலை நேரத்தில். பல அலுவல்களிலே மூழ்கியிருந்த அப்துல் காதிர் ஸாகிப் என்னைக் கண்டதும் வரவேற்று, தமது அலுவல்களை ஒத்தி வைத்து, என்னுடன் வந்தமர்ந்தார். ஆரம்பத்தில், நான் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லத் தயங்கினர். 'நான் பெரியாரல்லர்; சாதாரணமானவன். என்னைப் புகழ்ந்து எழுதி விடாதீர்கள்' எனவும் கேட்டுக் கொண்டார். தர்ம சங்கடமான நிலையைச் சுதாரித்துக் கொண்டேன். இஸ்லாமிய கல்வி-சமய விவகாரங்கள் பற்றியும், கேரளாவிலும் இலங்கையிலுமுள்ள முஸ்லிம்கள் ஆசாரங்கள் பற்றியும் நமது உரையாடல் திசை திரும்பியது. சுமூகமான சிநேகச் சூழலும் மலர்ந்தது. நான் ஆரம்பத்திலே கேட்ட கேள்விகளுக்கான பதில்கள் இயல்பாகவே இடையிடையே புகுந்து கொண்டன.

இளம் பிராயத்திலே, தான் பீடி சுற்றும் ஒரு தொழிலாளியாகக் கேரளத்திலே வாழ்க்கையை ஆரம்பித்ததாகவும், நல்ல தொழில் ஒன்று தேடி 1922-ஆம் ஆண்டளவில் ஈழம் வந்ததாகவும் ஒளிவு மறைவின்றிக் கூறினர். 'எனது சகோதரர் சொத்தை விற்று, ஈழம் வந்து தையற் தொழிலில் ஈடுபட்டார். அவரிடம் நான் பொருளுதவி நாடிச் சென்றேன். அப்பொழுது எனக்கு ஐந்து ரூபாய் தந்து, 'இதை வைத்துப் பிழைத்துப் போ' என்ருர். அன்று முழுவதும் கொழும்பை ஊர் சுற்றிப் பார்த்துவிட்டு, இரவானதும் ஐந்து லாம்புச் சந்தியிலிருந்த ஆலமரத்தடியிற் படுத்துக் கொண்டு யோசித்தேன். இக்காலத்தில் ஐந்து லாம்புச் சந்தியாக மாறியிருக்கும் இடம், அக்காலத்தில் விசாலமான ஆலமரத்தடியாக இருந்தது. அத்துடன், அதுவே ஏழைகள் பலருக்கு தங்கும் மடமாகவும் வாய்த்தது. அடுத்த நாட் காலை. எதிரில் டாக்டர் பில்லிமோரியா வீடு இருப்பதைக் கண்டேன். அவர் எப்பொழுதோ பீடி இலைகள் இறக்குமதி செய்ததாகவும், அவை பயனற்றுக் கிடப்பதாகவும் அறிய

லானேன். அதனை எனக்குப் பகுதி பகுதியாக விற்க முடியுமா என அவரிடம் விசாரித்தேன். அவர் மிக மன மகிழ்ச்சியுடன் குறைந்த விலைக்கு விற்க இசைவு தந்தார். நானே பீடி சுற்றி, நானே அவற்றைப் பொட்டலமாகத் தலையிற் சுமந்து விற்கலானேன். இப்படித்தான் என் பீடித் தொழில் ஆரம்பமாகியது' என வர்த்தமானத்தைக் கூச்சமின்றிக் கூறினர்.

ஆரம்பம் ஏழ்மையாக இருந்தாலும், இவ்வாறு தான், இன்று ஈழத்தின் முக்கிய தொழில்களுள் ஒன்ருக விளங்கும் பீடித்தொழில், அன்று முதன் முதலாக ஈழத்திற்கு அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டது. அதுவரையில் இலங்கையில் விற்பனையான சகல பீடிகளும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பது கவனத்திற்குரியது. ஐந்து ரூபாய்க்கும் குறைந்த மூலதனத்துடன் ஆரம்பமான தொழில் பத்துப் பன்னிரண்டு வருடங்களிலே படிப்படியாக வளர்ந்து முந்நூறு தொழிலாளர்களை வாழவைக்கும் நிறுவனமாக உயர்ந்தது.



அல்ஹாஜ் அ. ஐ. அப்துல் காதிர் ஸாகிப்

எங்களுடைய உரையாடல் தொடர்ந்து கொண்டிருந்த பொழுது ராஜ பீடி கம்பனியின் பிரதம நிர்வாகி J. M. ஆரியரத்தின அவர்களையும் ராஜ லித்தோ பிரிண்டர்ஸ் நிர்வாகி W. P. பீரிஸ் அவர்களையும் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். 'இவர்கள் இருவரும் மிக இளம் வயதில், என்னை நம்பி, என்னிடம் வேலைக்குச் சேர்ந்தவர்கள். இவர்களை நான் தொழிலாளராகக். கருதியதே இல்லை. என் குழந்தைகளாகவே மதிக்கின்றேன். விசுவாசமான உழைப்பினல், இன்று பொறுப்பு மிகுந்த பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள். இவர்களுக்குக் கீழே படித்தவர்களும், பட்டதாரிகளும் வேலை பார்க்கின்றார்கள்' எனக் கூறிய பொழுது அவருடைய குரலிலே அடக்கமும், அதே சமயம் பெருமிதமும் தொனித்தன.

இன்று ஈழத்தில் மட்டுமல்ல, இந்தியாவில், கேரளா-தமிழ் நாடு-கன்னடம் ஆகிய மாநிலங்களிலும் காதிர் ஸாஹிபின் பல

எங்கள் அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எங்கள்
மீலாத் நல் வாழ்த்துக்கள்!

# ஏ. கே. எஸ்.
# ஜுவல்லர்ஸ்

யாழ்ப்பாணம்

A. K. S. & SONS
JEWEL HOUSE
JAFFNA

தொழில் நிறுவனங்கள் வளத்துடன் இயங்கி வருகின்றன. திருநெல்வேலியிலுள்ள பீடித் தொழிற்சாலையில் மட்டும் 5500 முஸ்லிம்கள் உட்பட 7000 தொழிலாளர் வேலை செய்கின்றனர்கள் என்றால் கற்பனை செய்து பாருங்கள். பீடித் தொழில் மட்டுமல்ல, ஓட்டுத் தொழிற்சாலை, தேயிலை-ரப்பர் தோட்டங்கள் எனப் பல்வேறு தொழில் துறைகளிலும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளருக்கு வேலை வாய்ப்பினை வழங்கியுள்ளார்.

அல்ஹாஜ் அப்துல் காதிர் ஸாஹிப் மத ஆசார சீலராகக் காணப்படுகின்றார். ஆனால், கந்தூரி போன்ற வெளி ஆடம்பரச் சடங்குகளிலே அவருக்கு ஆர்வமில்லை. அவர் இயற்றும் தான தர்மத்தின் பெரும் பகுதி அரபு மத்ரஸாக்களுக்கே சேர்கின்றது. கேரளாவிலுள்ள 75 சத வீதமான மத்ரஸாக்களுக்கு இவருடைய நன்கொடையும், ஆதரவும் உண்டு. கூட்டம் போட்டு, கியூவில் மக்களை நிறுத்தி ஸக்காத் கொடுப்பதை இவர் ஆதரிக்கவில்லை. தர்மம் கொடுக்க விரும்புகிறவர்களுக்கு, அதனை அவர்களுடைய வீடுகளுக்கே அனுப்பி வைப்பது இவருடைய பண்பாகும்.

ஈழத்து முஸ்லிம் மகளிருக்கான ஒரேயொரு அரபுக் கலாசாலை கல்-எலியாவில் அமைந்துள்ளது. இக்கலாசாலை ஆரம்பித்த காலத்திலிருந்தே பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை அதன் வளர்ச்சி குறித்து வழங்கியிருக்கின்றார். அதனை நிறுவ முதல் மனிதராக இவர் 15,000 ரூபாய் ரொக்கமாக வழங்கினார். தனி மனித நன்கொடையில் இதுவே அதிகம் கூடுதலான தொகையாகும். இக் கலாசாலையின் பரிபாலன சபையின் செயற்குழு உறுப்பினராகவும், அனாதை இல்ல உதவிக் குழு உறுப்பினராகவும் அமர்ந்து இக்கலாசாலையின் வளர்ச்சியினைக் கண்ணுங் கருத்துமாகப் பேணி வருகின்றார்.

அவரைச் சந்திப்பதும், அவருடன் உரையாடுவதும் இனிய அநுபவமாக அமைந்தது. 'தொழிலில் நீங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இளம்பிறை வாசகருக்கு ஏதாவது செய்தி தர விரும்புகின்றீர்களா?' எனக் கேட்டேன். முறுவலித்த பின்னர், வருமாறு தெரிவித்தார்:

'தொழிலில் விசுவாசமிக்க தொழிலாளர்களை நாமும் மிகவும் நம்பி நேசித்து, அவர்களை நிர்வாகப் பொறுப்புகளிலே பயிற்றுவித்து, அத்தகைய பொறுப்புகளை ஏற்று நடத்தப் போதிய வசதியும் ஊக்கமும் அளிப்போமானால், தொழில் தானாகப் பல்கிப் பெருகும். நாம் இறந்தாலும், தொழில் இறக்காது. நம்முடைய பார்வையிலேயே அனைத்தையும் நடத்த வேண்டுமென்று விரும்பினால், தொழில் எல்லைக் கட்டுடையதாக அமைவதுடன், நம்முடைய மரணத்துடன் தொழிலும் மடிந்து விடுகின்றது ..'

# தொழில் வளம்

இலங்கையில் பிரசித்தி பெற்ற தொழில்களுள் ஒன்ருகவும், மிகவுந் தேவைப்படும் அந்நிய செலாவணியைச் சேமிக்கும் வர்த்தகமாகவும் விளங்குவது பீடித் தொழில். ஏழைகளின் புகைபிடி இன்பத்தைப் பூர்த்தி செய்யும் இத் தொழில் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புகளும் அளித்துள்ளது.



சுமார் அரை நூற்ருண்டிற்கு முன்னர் பீடித் தொழில் இலங்கைக்கு அந்நியமானது. இந்திய பீடிகளே இலங்கைச் சந்தைகளிலே நிரம்பி வழிந்தன. பீடி உற்பத்தித் தொழிலை இந்நாட்டிலே ஆரம்பித்துத் தொழில் வளத்தைப் பெருக்கலாம் என யாருமே கற்பனை செய்யாத காலம். இத்தகைய ஒரு காலத்திலேதான், சரியாக 1922-ஆம் ஆண்டில், மிகமிக ஏழ்மைச் சூழலில், முதன் முதலில் ஒருவர் பீடி உற்பத்தித் தொழிலில் இறங்கினுர். அவரே ஹாஜி அப்துல் காதிர் சாஹிப் அவர்களாவர். அவரே தொழிலாளி-முதலாளி-நிர்வாகம் ஆகிய மூன்றுமாக இயங்கினுர். ஆனுல், இன்று ராஜ பீடி நிறுவனம் 10,000 க்கும் அதிகமானேருக்கு சீவனம் அளிக்கும் வளம் பொருந்திய தொழில் நிறுவனமாகத் திகழுகின்றது.



முதலாளிக்கும் தொழிலாளர்களுக்கு மிடையிலே மிக நேச உறவுகளை வளர்த்து விடா முயற்சியும், ஊக்கமும் உள்ள தொழிலாளர்கள் நிர்வாகிகளாக உயர்ச்சி பெற்று வாழக் கூடிய ஏற்பாடுகளையும்-வசதிகளையும் ஏற்படுத்தியவர் காலஞ் சென்ற ஸி. வி. செபஸ்தியாஞுவர். இவரைப் பற்றி இன்றும் பலரும் நன்றியறிதலுடன் பேசிக் கொள்வதைக் கேட்கும் பொழுது மனம் புளகாங்கிதம் அடைகின்றது. 1937-ஆம் ஆண்டளவில் அவருக்கும் ராஜ பீடி உற்பத்தியாளருக்கு மிடையிலே தொடர்பு ஏற்பட்டது. இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது, கொழும்பு நகரம் எப்பொழுதும் தாக்கப்படலாம் என்ற காலத்திலேகூட, ராஜ பீடி நிறுவனத்தின் நிர்வாகியாக அமர்ந்து நடத்திய பெருமை இவருக்கே உண்டு. 1946-ஆம் ஆண்டில் ராஜ கொம்பனி என்ற பெயரில் கூட்டு நிறுவனம் நிறுவப்பட்டது.

தமிழ்த் தொண்டும்
சமுதாயப் பணியும்
இயற்றும்
இளம்பிறையின்
ஐந்தாம் ஆண்டு விழாவுக்கு
என் வாழ்த்துக்கள்!

தமிழன்பன்

Advt. K. N.

இளம்பிறையின்
ஐந்தாண்டு
நிறைவுக்கு
நம் வாழ்த்துக்கள்.
அதன் நீடித்த
ஆயுளுக்கு
மெய்கண்டான் ஆசிகள்.

THE MEIHANDAN PRESS LTD.,

161, Sea Street, Colombo-11.

Phone: **29345**

இன்று ராஜ பீடி நிறுவனம், ராஜ லித்தோ அச்சகம் ஆகிய இரண்டும் தனித்தியங்கும் முழுத்துவமுள்ள தொழிலகங்களாகச் செயற்படுகின்றன.

## ராஜ பீடி நிறுவனம் :



இன்று ராஜ பீடி நிறுவனத்தின் நிர்வாகியாக இருப்பவர் ஜயசிங்க முதலிகே ஆரிய ரத்தின ஆவர். 51 வயதினரான இவர், 1929-ஆம் ஆண்டில் ராஜபீடியுடன் தொடர்பு பூண்டார். அப்பொழுது இவருக்கு $10\frac{1}{2}$ வயது தான். இன்று சிங்களம்-மலையாளம்-தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் சரளமாகப் பேசும் இவர் மூன்று ஆண்களுக்கும், ஒரு பெண்ணுக்கும் தந்தையாக அமர்ந்து இனிதே குடும்பம் நடத்துகின்றார். தான் தன் வாழ்க்கையிலே அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து அமைதியாகப் பெருமைப்படும் இவர் தமது முன்னேற்றம் குறித்து வருமாறு கூறுகின்றார்:

'விடா முயற்சி-நீடித்த ஊக்கம்-நம்பிக்கை ஆகியவற்றுடன் எப்பொழுதும் முதலாளிக்கு விசுவாசமாக உழைத்து வந்தால் வாழ்க்கையில் முன்னேறலாம்.'



தமிழ் - மலையாளம் - சிங்களம் ஆகிய மும்மொழிப் பயிற்சியுள்ள கணபதிப்பிள்ளை மாணிக்கம் ராஜ பீடி நிறுவனத்தின் விற்பனை நிருவாகியாகக் கடமையாற்றுகின்றார். இவர் பத்தொன்பது வயதுப் பாலியப் பருவத்தில், 1940-ஆம் ஆண்டில் இந்நிறுவனத்துடன் தொடர்பு பூண்டார். மூன்று ஆண்களுக்கும், 5 பெண்களுக்கும் தந்தையாக அமர்ந்து பெரு வாழ்வு வாழும் 48 வயது நிரம்பப் பெற்ற இவர், எளிய தோற்றத்துடன் தொழிலாளருடன் தொழிலாளராகக் கலந்து உழைக்கும் இனிய சுபாவத்தினர்.

ராஜ பீடி நிறுவனத்தைப் பல வகையிலும் விஸ்தரிக்க முன் யோசனையுடன் உழைத்தவர் செபஸ்தியனுவர். இவருடைய தீர்க்க தரிசனத்தினுல் 1960-இல் கலேவெல என்னும் பகுதியில் பீடிப் புகையிலை நடுகை செய்யப்பட்டது. இத்துறையில் இதுவே முதல் முயற்சியாகும். இவர் ஆரம்பித்த பீடிப் புகையிலை உற்பத்தி விரிவடைந்தது. பிற பீடிக் கம்பேனிகளும் இதைப் பின்பற்றின. 1965-ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து பீடிப் புகையிலை இறக்குமதி நிறுத்தப்பட்டு, அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்த இது உதவியது.

## ராஜ லித்தோ அச்சகம் :

பிறிதொரு வகையிலும் செபஸ்தியன் அவர்கள் தீர்க்கதரி சனத்துடன் உழைத்தார். இலங்கையின் முதலாவது லித்தோ அச்சகத்தை, 1947-இல், ஹாஜி அப்துல் காதிர் சாகிப் அவர்களுடைய பொருள் உதவியுடன் நிறுவினர். இதற்கான இயந்திரங்கள் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. ஆரம்பத்தில், தமிழ் நாட்டிலுள்ள சிவகாசியிலிருந்து தொழிலா ளர் தருவிக்கப்பட்டனர். ஆனல், காலப் போக்கில், இலங்கை யர் இத்துறையில் பயிற்றப்பட்டார்கள். இன்று சுமார் 130 பேர் இத்தொழிலில் வேலை செய்கிறார்கள்.

ராஜ லித்தோ அச்சகம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமாக இயங்குகின்றது. இந்நிறுவனம் எடுத்த ஆரம்ப நடவடிக்கையினுல், இதுவரை காலமும் தென்னிந்தியா விலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'லேபல்கள்' தடை செய் யப்பட்டன. இதன் மூலம் மிகவுந் தேவைப்பட்ட அந்நியச் செலாவணி சேமிக்கப்பட்டது. 'லித்தோ' அச்சுத் தொழிலில் இப்பொழுது பிறரும் ஈடுபட்டுள்ள போதிலும், ராஜ லித்தோ அச்சகம் இத்தொழிலில் தலைமை வகித்தது என்பது நினைவில் இருக்கத் தக்கது.

இத்தடையினுல், நமது பொட்டண அமைப்புத் தொழில் எவ்விதமும் பாதிக்கப்படவில்லை. இன்று சந்தையிலே கிடைக் கும் பொட்டணங்கள் நமது நாடு இத் தொழிற் துறையில் எவ் வளவு தூரம் முன்னேறியுள்ளது என்பதற்குச் சான்று பகருகின்றன.

1943-ஆம் ஆண்டில் ராஜ கம்பனியிலே தொடர்புகொண் டுழைத்த எஸ். ஜே. பஸ்தியாம்பிள்ளை அவர்கள், மூன்றுண்டு களிலே அக் கம்பனியின் நிர்வாகச் செயலாளரானுர். 52 வய துள்ள இவர் நிர்வாகச் செயற் திறமை மிக்கவர். ராஜ லித்தோ அச்சகத்தின் சிரேஷ்ட இலங்கைப் பங்காளியாக விளங்கும் இவர் கடின உழைப்பாளர். இவர், 'இத்தொழிலின் முன்னேற் றத்திற்கு நிபுணர்-தொழிலாளர் ஆகியோருடைய கடின உழைப் பும், ஒத்துழைப்பும் ஒரு பக்கலிலும், நிர்வாகத்தின் திறமை மறு பக்கலிலும் உதவுதல் வேண்டும்' என மிக அமைதியாகக் கூறுகின்றுர்.

ராஜ லித்தோ அச்சகத்தில் நிர்வாகப் பணிப்பாளராக டபிள்யூ. பி. பீரிஸ் அவர்கள் கடமை பார்க்கின்றுர். 31 வயது இளைஞரான இவருக்கு ஓர் ஆண் குழந்தையும், ஒரு பெண் குழந்தையுமிருக்கிறுர்கள். இவர் இந்த நிறுவனத்தில் 13 வயதுச் சிறுவனுக இருக்கும் பொழுது, 1951-ஆம் ஆண்டிலே தொடர்பு கொண்டார். கடும் உழைப்பு-விசுவாசம் ஆகியவற்றை ஏணிக ளாகக் கொண்டு, உழைப்பால் உயர்ந்து இன்றைய நிலையை அடைந்துள்ளார். தமிழ்-மலையாளம்-ஆங்கிலம்-சிங்களம் ஆகிய நான்கு மொழிகளிலும் பயிற்சியுள்ளவர். தொழிலாளியாகச்

# REX-ROTARY 300

...the versatile machine for any minor duplicating job...a lightweight machine that will pass from hand to hand, from one office to the other — because it is truly portable, easy to operate — and easy on the budget.

**REX-ROTARY 300** is a quality product that will give you economical and efficient service for many years.

It is a good idea to have the handy and elegant **REX-ROTARY 300** within reach — always! It serves a lot of purposes and it saves a lot of money.

Sole Agents:

OFFICE EQUIPMENT LIMITED,

55, Iceland Buildings,

Colombo 3.

Telephone: **27659**

சேர்ந்து, இன்று ராஜ லித்தோ அச்சகத்தின் பங்காளியாகவும், நிர்வாகியாகவும் விளங்கி, உழைப்பின் உயர்வுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றார்.



ஹாஜி அப்துல் காதர் சாஹிப் அவர்களுடைய தொழில்கள் இந்தியாவிலும் மிகவும் விரிந்துள்ளன. அவற்றையும் அவர் நிர்வகிக்க வேண்டியிருக்கின்றது. இலங்கை - இந்தியத் தொடர்புகளின் இனிய பாலமாகத் திகழ்கின்றார் பி. கே. சாகுல் ஹமீது அவர்கள். இவருடன் பழகும் பொழுது இவர் ஒரு பட்டதாரி, முதலாளியின் உறவினர் என்ற விஷயங்களை ஊகிக்கவே முடியாது. தொழிலாளியைப் போன்றே பணி புரிகின்றார். தமிழ்-மலையாளம் ஆங்கிலம்- சிங்களம்- உர்து- அரபி ஆகிய ஆறு மொழிகள் அறிந்த இந்தப் பன்மொழிப் புலவர் எளிமைக்கும், அடக்கத்திற்கும், சுறு சுறுப்புக்கும் உறைவிடமாகத் திகழ்கின்றார். 42 வயதுடைய இவர் 2 ஆண் குழந்தைகளுக்கும் ஒரு பெண் குழந்தைக்கும் தந்தையாக விளங்குகின்றார்.

பம்பாய்க்கு அருகிலுள்ள பூனாவில் 'ஓறியண்டல் வோட்ச்மன் பப்ளிஸிங் ஹவு' ஸிலே பயிற்சி பெற்ற ஜே. எஸ். ராஜா அவர்கள் தலைமை நிபுணராகவும், தொழில் நிர்வாகியாகவுந் திகழுகின்றார்.



இத்தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு வைத்தும், தொடர்பு வைக்காதவர் போலக் கடமை வீரராக ராம்கனத் என்ற ஓவியர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். மஹாகவி தாகூரினால் நிறுவப்பட்ட சாந்திநிகேதன் என்ற கலைக்கூடத்திலே பயிற்சி பெற்றவர் இவர். ஓவியக் கலைக்குத் தம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள இவரைச் சகலரும் அன்பு கனிய 'மாஷ்டர்' என்றழைக்கின்றனர். தனக்கென வாழாது பிறர் நலங்களுக்காக வாழும் சீர்மையாளர், வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியாத பண்பாளர். பொட்டணம் சுற்றிகளுக்கு ஏற்ற படங்கள் வரைவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராக வாழ்ந்து வருகின்றார்.


(S. J. பஸ்தியாம்பிள்ளை, W. P. பீரிஸ் ஆகியோரின் புகைப் படங்கள் உரிய காலத்திற் கிடைக்காமையினால், அவை ஈண்டு பிரசுரமாகவில்லை.)

Hearty Greetings
to
Ilampirai
on its
Fifth Anniversary

★

RAINBOW PRINTERS
COLOMBO-13.
Cable: ARASU

# தத்துவம்



'தீபம்' வெளியிட்ட ஈழத்து இலக்கிய மலரில், எம். ஏ. ரஹ்மான் எழுதிய 'தத்துவம்' என்ற உருவகக் கதை பிரசுரமாகியிருந்தது. அஃது ஈழத்தின் முதலாவது உருவகக் கதைத் தொகுதியான 'மரபு' தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது. 'தத்துவம்' என்னும் இக்கதை, அவர் எழுதியுள்ள இரண்டாவது உருவகக் கதைத் தொகுதியான 'தீபன்' தொகுதியில் இடம் பெற்றுள்ளது.

ஒரு சமயம் எல்லோரும் பிரமன் முன்பாகக் கூடி நின்றார்கள்:

தேவர் - இராக்கதர் - மானிடர் ஆகிய சகலருமே.

விழி திறந்த பிரமன் எல்லோருக்கும் அ என்ற அட்சரத்தை அளித்தான்.

''தேவர்களாகிய நாம் மிகுந்த சுகபோகிகளாக வாழ்வதில் அதிக ஈடுபாடுள்ளவர்களாக வாழ்கின்றோம். 'அடக்குக; காமத்தை அடக்குக' என்ற உபதேசத்தைத் தான் பிரமன் தந்திருக்கிறான்'' எனத் தேவர்கள் விளக்கினார்கள்.

''இராக்கதர்களாகிய நாங்கள் அதிகமாகக் கோபாவேசப் படுகின்றோம். இதன் காரணமாகத் தயை தாட்சண்யமற்று மற்றைய உயிர்களுக்கு அதிக இம்சை விளைவிக்கின்றோம். எனவே, 'அன்பாக இரு; சினந்தவிர்த்து அன்பாக இரு' என்றுதான் பிரமன் உபதேசித்திருக்கின்றான்'' என இராக்கதர் விளங்கிக் கொண்டார்கள்.

இளம்பிறை

இம் மலரினை
சிறப்புடன் வெளியிடப்
பல்வேறு வகைகளிலும்
ஒத்துழைப்பு நல்கிய
சகலருக்கும்
'இளம்பிறை'யின்
நன்றியும்
வாழ்த்துக்களும்
உரியன.

''மானிடர்களாகிய நாங்கள் தற்பற்று மிக்கவர்களாகப் பணமே சகலதும் எனக் கொண்டாடித் திரிகின்றோம். இதனால் உலோபிகளானோம். எனவே, 'அறஞ் செய விரும்பு; அறம் இயற்று' என்றுதான் பிரமன் போதித்திருக்கின்றான்'' என மானிடர் பாராட்டினார்கள்.

பிரமன் மூன்று பகுதியினரும் கற்பித்துக் கொண்ட விளக்கங்களையும் சரியென ஏற்றுக் கொண்டான்.

''பிரமா! ஒரே அட்சரத்திற்கு மூன்று வேறுபட்ட விளக்கங்கள் எவ்வாறு பொருந்தும்?'' என நாரதர் கேட்டார்.

''எல்லோரும் அவரவர் அநுபவத்திற்கும் பக்குவத்திற்கும் ஏற்பவே பொருள் விரித்துக் கூறியிருக்கிறார்கள். பக்குவத்தின் தளத்திற்குப் பொருந்துவதுதான் அர்த்தமும்'' என்றான் பிரமன்.


[ஆச்சாரிய விநோபாபாவே கையாண்ட கதையின் கூடு ஒன்று இக்கதை அமைப்பிற்கு அருட்டுணர்வாக அமைந்தது.]

Edited Printed and Published by M. A. Rahman and Printed at Rainbow Printers, 231, Wolfendhal Street, Colombo-13.

நீர்ப்பாசனத்திற்கும் கைத்தொழிலுக்கும்

# வாக்கர்-வில்கோ

2" பெட்ரோல் / மண்ணெண்ணை
பம்புகளே!




ரூபா
**1395/-**

- மணிக்கு 6000 கலன்கள் வீதம்
- 25 அடிவரை தானாக உறிஞ்சும் தன்மையுடையது
- இயக்கும் செலவு குறைவு

அமெரிக்காவின் மிக உயர்தரமான
டகுமெஷ் - அஸ்பேரா 3½ H. P.
காற்றுக் குளிர் அமைந்த பெட்ரோல் / மண்ணெண்ணை
எந்திரத்தினால் இயக்கப்படுவது.

வாக்கர் கைத்தொழில் உற்பத்திகளுள் ஒன்று

## வாக்கர் சன்ஸ் & கோ லிமிட்.,

கொழும்பு & கிளைகள்

விரைவும் திறமையும் மிக்க பராமரிப்பையும் சேவையையும் தருகின்றன

AMP.KAI – FIFTH ANNIVERSARY NUMBER – JUNE 1969.
REGISTERED AS A NEWSPAPER IN CEYLON

With the compliments of

CEYLON TOBACCO COMPANY LIMITED

Manufacturers of




3 ROSES

Ceylon's Favourite Cigarette

Printed at Rainbow Printers, 231, Wolfendhal Street, Colombo-13.